ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ப்ரபந்நஜந கூடஸ்தரான நம்மாழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

திருவாய்மொழி

இரண்டாம்பத்து.

இதற்கு

தெள்ளாரும் ஞானத்திருக்குருகைப்பிரான் பிள்ளான்

அருளிச்செய்த ஆறாயிரப்படியும்,

அன்போடழகிய மணவாளச்சீயரருளிச் செய்த

பன்னீராயிரப்படி உரையும்

தெள்ளியதா நம்பிள்ளை செப்புநெறி தன்னை

வள்ளல் வடக்குத்திருவீதிப் பிள்ளை அருளிச்செய்த

ஈடு ப்ரதி திருவாய்

மொழியின் ப்ரவேசங்களும் நிகமநங்களும்

ப்ரதி பாசுரங்களின் அவதாரிகைகளும்

ஸபாபண்டிதரான

ஸ்ரீமான், புதுப்பட்டு-திருவேங்கடாசார்யரால்

பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீவைஷ்ணவ கிரந்த முத்ராபக சபையாரால்

சென்னை:

ஸ்ரீநிகேதன முத்ராக்ஷர சாலையில்

அச்சிட்டு ப்ரசுரம் செய்யப்பட்டது.

குரோதன ஃ

1925.

இச்சபையில் தமிழ் லிபியில் அச்சிட்ட

க்ரந்தங்கள்.

1	பராசரவிசிஷ்ட பரமதர்ம சாஸ்த்ரம் தாத்பர்யஸஹிதம் ...	0	2	6
2	துஷ்கரஸ்லோக டிப்பணி ...	0	1	0
3	ஷண்மததர்பிரி ...	0	0	6
4	யதிதர்மஸமுச்சயம் ...	0	3	0
5	இராமாநுச நூற்றந்தாதி (உரையுடன்) ...	0	3	0
6	முதல் திருவந்தாதி வ்யாக்யாநம் (அரும்பத ப்ரதிபதிஸஹிதம்	0	4	0
7	இரண்டாம் திருவந்தாதி வ்யாக்யாநம் ...	0	3	0
8	மூன்றும் திருவந்தாதி வ்யாக்யாநம் ...	0	3	0
9	நான்முகன் திருவந்தாதி வ்யாக்யாநம் ...	0	3	6
10	திருவிருத்தம் வ்யாக்யாநம் (அரும்பத ப்ரதிபத தாத்பர்யம் ...	0	15	0
11	திருவாசிரியம் வ்யாக்யாநம் ...	0	1	6
12	பெரியதிருவந்தாதி வ்யாக்யாநம் (ப்ரதிபத ஸஹிதம்) ..	0	3	0
13	சிறியதிருமடல் வ்யாக்யாநம் ...	0	2	3
14	பெரியதிருமடல் வ்யாக்யாநம் ...	0	2	6
15	திருவெழுகூற்றிருக்கை வ்யாக்யாநம் ...	0	1	6
16	திருக்குறுந்தாண்டகம் வ்யாக்யாநம் ...	0	1	3
17	திருநெடுந்தாண்டகம் வ்யாக்யாநம் ...	0	8	0
18	பெரியதிருமொழி வ்யாக்யாநம் 1 முதல் 11 பத்துக்கள் ...	4	0	0
19	ராமசரஸ்லோகம் ...	0	1	6
20	பாரகாதி தனிஸ்லோகம் ...	0	2	6
21	திருச்சந்தவிருத்தம் வ்யாக்யாநம் ...	1	6	0
22	திருப்பல்லாண்டு ...	0	7	0
23	ஸ்ரீவைஷ்ணவ ஸமயாஸார நிஷ்கர்ஷம் ...	2	5	0
24	பெரியாழ்வார் திருமொழி ஸவ்யாக்யாநம் 1 முதல் 5 பத்துகள்	5	5	6
25	* திருமாலை ஸவ்யாக்யாநம் ...	0	14	0
26	அமலனாதிபிரான் ..	0	7	6
27	திருப்பள்ளியெழுச்சி ...	0	3	0
28	உபதேசரத்தினமாலை ...	1	0	0
29	ஞானசாரம் ப்ரமேயஸாரம் ஸவ்யாக்யாநம் ...	0	8	0
30	திருவாய்மொழி நூற்றந்தாதி ...	0	15	0
31	ஸப்தகாதை ...	0	3	6
32	ரகஸ்யார்த்த ப்ரதீபிகையென்கிற பரகாலநல்லான்ரகஸ்யம்	1	3	6
33	* ஆர்த்திபிரபந்த வ்யாக்யாநம் ...	0	6	0
34	தத்வத்ரய வ்யாக்யாநம் ...	0	12	0
35	நாச்சியார் திருமொழி ...	1	6	0
36	கண்ணிநுண்சிறுத்தாம்பு ...	0	15	0
37	பெருமாள் திருமொழி ...	0	10	0
38	திருவாய்மொழி 1 பத்து ...	0	13	0
39	,, 2 பத்து ...	0	9	0

N. B. பயிண்டு சார்ஜ் பிரத்தியேகம்.

* இந்த க்ரந்தங்கள் இல்லை.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி.

இரண்டாம்பத்து.

முதற்றிருவாய்மொழியின் ப்ரவேசம்.

ஆறு ;—(வாயுந்திரை) இப்படி நிரவதிக ஸௌந்தர்யாதி கல்யாணகுணகண பரிபூர்ணனாயிருந்த வெம்பெருமானை ப்ரத்யக்ஷித்தாப்போலே தம்முடைய திருவுள்ளத்தாலே யநுபவித்து, பாஹ்ய ஸம்ஸ்லேஷத்திலுள்ள வபேக்ஷையாலே அதிலே ப்ரவ்ருத்தராய், அது கைவாராமையாலே அத்யந்தமவஸந்நராய் அந்யாபதேஸத்தாலே ஸ்வதஸையைப் பேசுகிறார்.

பகவத்ஸம்ஸ்லேஷ வியோகைக ஸுகது:கையாய், தத்விஸ்லேஷத்தினாலே அத்யந்த மவஸந்நையா யிருந்தா ளொருபிராட்டி, ஸ்வத்ருஷ்டிகோசரமான பதார்த்தங்களினுடைய ப்ரவ்ருத்திவிஸேஷங்களை பகவத்விஸ்லேஷஜநித து:கஹேதுகமாக ஸ்வாத்மாநுஸந்தாநத்தாலே யநுஸந்தித்து, அந்த சேதநாசேதந பதார்த்தங்களைக்குறித்து, நீங்களும் நான் பட்டது பட்டீர்களாகாதே யென்கிறாள். *

ப ;—இரண்டாம்பத்தில். இப்படி பரத்வாதிகுணங்களாலே பரமேஷ்டியான ஸர்வேஸ்வரனுடைய ஸர்வரக்ஷகத்வ ப்ரயுக்தமான உபாயத்வத்தை ப்ரதிபாதித்து, அநந்தரம் இப்பத்தாலே - உபேயத்வோபயுக்தமான அவனுடைய நிரதிசயபோக்யதையை யருளிச்செய்வதாக, அந்த போக்யதாதிசய ஸூசகமான, அல்பகாலவிஸ்லேஷத்திலு மதிக்லேஸாவஹத்வத்தையும், ஆஸ்சர்யரூபமான உத்துங்க லலிதத்வத்தையும், ஸர்வஸாரஸ்ய ஸமவாயரூப திவ்ய போக்யதையையும், போகாலாபத்தில்வந்த ஆர்த்தியைப்போக்கி ரக்ஷிப்பானவனே யென்னுமிடத்தையும், ஆர்த்திதீரும்படி கிட்டினவனுடைய ஹர்ஷகாரிதமான ஸௌந்தர்யாதிஸயத்தையும், ஆஸ்ரித ஸம்ஸ்லேஷ ப்ரீதனுடைய தத்விஸ்லேஷ பீருத்வத்தையும், ஸம்ஸ்ரித ஸம்பந்தி குலஸந்தானபர்யந்த ஸம்ரக்ஷ

ணத்தையும், ரக்ஷணகாஷ்ட்டையான மோக்ஷப்ரதத்வத்தையும், மோக்ஷதாத்பர்யமான பாரதந்த்ர்யத்தையும், போகப்ரதிஸம்ந்திதயா ஸாந்நித்யத்தையுமருளிச்செய்து போக்யதையை உபபாதித்தருளுகிறார்.

அதில், முதல்திருவாய்மொழியில் க்ஷணவிளம்பத்திலும் க்லேஶாதிஶய ஜநகமான ஈஶ்வரனுடைய போக்யதையை அருளிச்செய்வதாக, ததுபபாதகமான அவனுடைய ஶ்ரிய:பதித்வத்தையும், ஶேஷஶாயித்வத்தையும், அநிஷ்ட்டநிவர்த்தகத்வத்தையும், நிவர்த்தந பரிகரவத்வத்தையும், ஶக்தியோகத்தையும், ஸத்யவாதித்வத்தையும், ஸம்பந்தவிஶேஷவத்வத்தையும், காருணிகத்வத்தையும், கமநீயவிக்ரஹயோகத்தையும், காரணத்வத்தையும் அநுஸந்தித்து, ஏவம்விதபோக்யபூதனுடைய அல்பகாலவிளம்பத்தி லாற்றாமையாலே அசேதநபதார்த்தங்களும் தம்மைப்போலே அவனைப்பிரிந்து நோவுபடுகிறனவாக அபிஸந்தி பண்ணும்படி கலங்கினப்ரகாரத்தை, நாயகனான ஈஶ்வரனைப் பிரிந்தாளொரு நாயகி, ஸகலபதார்த்தங்களும் தன்னைப்போலே தத்விரஹதுக்கத்தாலே யீடுபடுகிறனவாக நினைத்துப் போலிமைக்கிரங்கி யுரைத்தபாசுரத்தாலே யருளிச்செய்கிறார். "இது தன்னுட்கையா றெய்திடுகிளவி" என்பர். *

ஈடு ; அவ ;—கீழ்த்திருவாய்மொழியிலே "மணியைவானவர் கண்ணனைத்தன்னதோரணியை" என்று - ஸௌலப்யத்தையும் மேன்மையையும், வடிவழகையும் சொல்லிற்று; இவையோரொன்றே போருமிறே மேல்விழப்பண்ணுகைக்கு; இங்ஙனன்றிக்கே, இவை மூன்றும் குறைவற்றவிஷயமானால்அநுபவியாதிருக்கப்போகாதிறே; "இவ்விஷயத்தை யிப்போதே யநுபவிக்கவேணும்" என்று பாஹ்ய ஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்தது ; அப்போதே நினைத்த பரிமாற்றம் பெறாமையாலே பிறந்த அவஸாதாதிஶயத்தை; எம்பெருமானோடே கலந்து பிரிந்து ஆற்றாமையாலே நோவுபடுகிறாளொருபிராட்டி' ஆற்றாமை கைகொடுக்க லீலோத்யாநத்திலே புறப்பட்டு, அங்கே வர்த்திக்கிற பதார்த்தங்களைக்கண்டு, அவையுமெல்லாம் பகவதலாபத்தாலே நோவுபடுகிறனவாகக்கொண்டு, அவற்றுக்குமாகத்தான் நோவுபடுகிற பாசுரத்தாலே பேசுகிறார்.

* அஞ்சிறையமடநாரையிலும் இதுக்காற்றாமை கரைபுரண்டிருக்கும். அதுக்கடியென்னென்னில் ; "பெருநிலங்கடந்தநல்லடிப் போதயர்ப்பிலனலற்றுவன்" என்று-அவதாரத்திலே யநுபவிக்கக் கோலிப் பெறுததாகையாலே, "அதொருகாலத்திலே, நாம்பிற்பாடரானை" என்றுறலாம் ; இதங்ஙனன்றிக்கே, அவதாரத்தில் பிற்பாடர்க்கு மிழக்கவேண்டாதபடி முகங்கொடுக்கைக்கு நிற்கிற

விடமிறே உகந்தருளின நிலங்கள்; “நம்பியைத்தென்குறுங்குடி நின்ற” என்று - உகந்தருளினநிலத்திலே அநுபவிக்க ஆசைப்பட்டுப் பெறாமையாலே வந்த ஆற்றாமையாகையாலே இது கனத்திருக்கும். அஞ்சிறைய மடநாரையில் - தூதுவிடுகைக்குத் தரிப்புண்டாயிற்று; இதில் - அங்குத் தூதுவிட்டவையும் நோவுபடுகிறனவாக அவற்றுக்குமாகத்தாம் நோவுபடுகிறார். அநுபவிக்கிற இவர் தம்படியாலும் இத்திருவாய்மொழிக் காற்றாமை கனத்திருக்கும்; பத்துடையடியவர்க்குமுன்பு அவ்விஷயத்தை யநுபவித்துப் பிரிந்தவளவாலுள்ள ஆற்றாமையிறே அதிலுள்ளது; அஞ்சிறையமடநாரைக்குப் பின்பிவ்வளவும்வர அவனுடையகுணங்களை யநுபவித்துப் பிரிந்த பிரிவாகையாலே ஆற்றாமை மிகவுங் கனத்திருக்குமிதில்; * பயிலப்பயிலவிறே இனிதாயிருப்பது இவ்விஷயம்.

நாரையாகில் வெளுத்திருக்கையும், அன்றிலாகில் வாயலகு நெகிழ்த்தவாறே கதறுகையும், கடலாகில் எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி கூப்பிடுகையும், காற்றாகில் ஸததகதியாய்த் திரிகையும், மேகமாகில் நீராயிற்றிற்றுவிழுகையும், சந்த்ரனாகில் தேய்வதுவளருவதாகக்கடவதென்றும், தமஸ்ஸாகில் பதார்த்ததர்ஸநம்பண்ணவொட்டாதென்றும், கழியாகில் அலைவாய்முகமாய் எறுவது வடிவதாகக்கடவதென்றும், விளக்காகில் இற்றிற்றெரியக்கடவதென்றும், இவற்றுக்கிவை நியதஸ்வபாவமென்றறியாதே, இவையெல்லாம் தம்மைப்போலே பகவத்விஸ்லேஷத்தாலே வ்யஸநப்படுகிறனவாகக்கொண்டு, அவற்றுக்குமாகத்தாமநுஸோகிக்கிறார்.

இத்திருவாய்மொழியால் - இளையபெருமாளிற்காட்டில் இவர்க்குண்டான வ்யாவ்ருத்திசொல்லுகிறது. எங்ஙனே யென்னில்; மத்ஸ்யத்துக்கு ஜலம் தாரகமாகவறுதியிட்டாரவர்; இவர் அந்த மத்ஸ்யத்தோடு ஜலத்தோடு தம்மோடு வாசியற பகவத்குணங்களே தாரகமென்றிருக்கிறார். ஆகையாலே, து:கிகளாயிருப்பார் தங்களோடு ஸமது:கிகளைக்கழுத்தைக் கட்டிக்கொண்டு கிடந்துகூப்பிட்டு ஆற்றாமைக்குப் போக்குவிட்டு தரிக்குமாபோலே, இவளும் கண்ணுக்கிலக்கான பதார்த்தங்களெல்லாவற்றோடும் கழுத்தைக் கட்டிக்கொண்டுகிடந்து “நீபட்டதோ, நான் பட்டதோ” என்று கூப்பிடு

கிறுளா யிருக்கிறது; (௧) “𑌅𑌪𑌿 𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌃 𑌪𑌰𑌿𑌮𑍍𑌲𑌾𑌨𑌾𑌃 - அபிவ்ருக்ஷா:பரிம்லாநா:” என்னுமாபோலே - சேதநாசேதந விபாகமற நோவுபடுத்தவற்றுயிறே இவள் பிரிந்தவிஷயந்தா னிருப்பது.

(௨) [𑌉𑌪𑌤𑌪𑍍𑌤𑍋𑌦𑌕𑌾 𑌨𑌦𑍍𑌯𑌃 𑌪𑌲𑍍𑌵𑌲𑌾𑌨𑌿 𑌸𑌰𑌾𑌂𑌸𑌿 𑌚 - உபதப்தோதகாநத்ய:பல்வலாநிஸராம்ஸிச] என்று-ஆறுகளோடு சிறுகுழிகளோடு பெருங்குழிகளோடு வாசியற கரையருகுஞ் சென்று கிட்டவொண்ணுதபடி ராமவிரஹத்தாலே கொதித்ததிறே. (௨) [𑌪𑌰𑌿𑌶𑍁𑌷𑍍𑌕𑌪𑌲𑌾𑌶𑌾𑌨𑌿 𑌵𑌨𑌾𑌨𑍍𑌯𑍁𑌪𑌵𑌨𑌾𑌨𑌿 𑌚 - பரிஶுஷ்கபலாஶாநிவநாந்யுபவநாநிச] என்று சிறுகாட்டோடு பெருங்காட்டோடு வாசியற விரஹாக்நி கொள்ளுத்திற்று. பெருமாள் (௩) “𑌸𑍀𑌤𑍇 𑌮𑍃𑌤𑌸𑍍𑌤𑍇 𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑌃 𑌪𑌿𑌤𑍍𑌰𑌾 𑌹𑍀𑌨𑍋𑌽𑌸𑌿 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣 - ஸீதேம்ருதஸ்தேஶ்வஶுர:பித்ராஹீநோஸிலக்ஷ்மண” என்று ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு கிடந்து கூப்பிட்டாற்போலே கூப்பிடுகிறுரிங்கு.

(௧) ரா - அயோ - ௫௯ - ௪. (௨) ரா - அயோ - ௫௯ - ௫.
(௩) ரா - அயோ - ௧0௩ - ௧௫.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

திருவாய்மொழி.

இரண்டாம்பத்து.

முதற்றிருவாய்மொழி முதற்பாட்டு

ஈடு; அவ;—(முதற்பாட்டு) பிரிந்தாரிரங்குவது நெய்தல்நிலத்திலேயாகையாலே, கடற்கரைச்சோலையைப்பற்ற இவள் பிரிவுக்கிரங்கி யிருக்கச்செய்தே, அங்கே ஆமிஷார்த்தமாக அவதானம்பண்ணிக்கொண்டிருக்கிறதொருநாரை கண்ணுக்கிலக்காக, அதினுடம்பில் வெளுப்பைக்கண்டு, அதுவும் தன்னைப்போலே பிரிவாற்றாமையாலே வந்த வைவர்ண்யத்தோடே யிருக்கிறதாகக்கொண்டு, பாவியேன், நீயும்நானகப்பட்ட விஷயத்திலே யகப்பட்டு நெஞ்சுபறியுண்டாயாகாதே யென்கிறாள்.

வாயுந்திரையுகளுங் கானல்மடநாராய்
ஆயுமமருலகுந் துஞ்சிலும்நீ துஞ்சாயால்
நோயும்பயலைமையும் மீதூரவெம்மேபோல்
நீயுந்திருமாலால் நெஞ்சங்கோட்பட்டாயே. (க)

ப;—முதற்பாட்டில், "மணியைவானவர் கண்ணனை" என்று - கீழ்ப்ரஸ்துதமான போக்யதாதிசயத்துக்கு வர்த்தகமாயுள்ள லக்ஷ்மீஸம்ஶ்லேஷத்தை யநுஸந்தித்தீடுபட்டநாயகி, கடற்கரைக்கருகான தன்னுத்யாநத்திலே யிருந்ததொரு நாரையைப்பார்த்து, நீயுமவனாலே நெஞ்சு பறியுண்டாயோவென்கிறாள்.

வாயும்—மேல்மேலுங்கிட்டுகிற
திரை—திரையிலே
உகளும்—அமுக்கிநடப்பதாய்
கானல்—கடற்கரையிலே
மடம் — உன்னினைவு கைவருந்தனையு மோங்கியிருக்கிற
நாராய்—நாராய்!

ஆயும்—உறக்கமில்லாததாயும்
அமருலகும் — உறங்காமை நித்யமான தேவலோகமும்
துஞ்சிலும்—உறங்கிலும்
நீ—நீ
துஞ்சாய்—உறங்குகிறிலை;
ஆல்—:

நோயும்—உள்ளே நோவுமுண்டாய்
பயலைமையும்-அதின்கார்யமான பயலைமையாகிற உடம்பில் வெளுப்பும்
மீதூர—மேலிட்டுவர,
எம்மேபோல்—அபிமதவிஷயமா யகப்பட்ட வெங்களைப்போலே
நீயும்—அதுக்கடைவற்றிருக்கிற நீயும் (ஆஸத்திமாத்ரமே ஹேதுவாக)
திருமாலால்—ஸ்ரியஃபதியாலே
நெஞ்சம்—நெஞ்சு
கோட்பட்டாயே - பறித்துக்கொள்ளப் பட்டாயே.

ஏ என்னுமசை - வினு, இத்தால் - ஸாம்ஸாரிக கல்லோலத்தை மதியா திருப்பார்க்கு முறங்காமையும் ரூபவிபர்யாஸமும் பகவத்விஶ்லேஷ ஜநித மென்றிருக்கை. (க)

ஆறு ;—(வாயும்) வாயும்திரைகளுகளுகிற கழியிலே வர்த்திக் கிறமடநாராய், நீயுறங்கிலு முறங்காத வுன்னுடைய தாய்மாரும் ஸ்வபாவத ஏவ உறங்காத தேவலோகமுமுறங்கிலும் நீயுறங்கு கிறிலே; ஆதலால், விரஹவ்யஸந வைவர்ண்யத்தாலே அபிபூதையான வென்னைப்போலே நீயுமெம்பெருமானை யாசைப்பட்டா யாகாதே யென்கிறாள். ... ... (க)

ஈடு; அவ ;—(இரண்டாம் பாட்டு) இப்படி நாரையைப்பார்த்து வார்த்தை சொல்லாநிற்கச்செய்தே, அருகே நின்றபனையிலேதங்கின அன்றிலானது வாயலகு நெகிழ்த்தவாறே கூப்பிட்டது; இதினு டைய ஆர்த்தத்வநியைக் கேட்டு, பாவியேன், நீயுமென்னைப்போலே யகப்பட்டா யாகாதேயென்கிறாள்.

கோட்பட்டசிந்தையையாய்க் கூர்வாயவன்றிலே
சேட்பட்டயாமங்கள் சேராதிரங்குதிபால்
ஆட்பட்டவெம்மேபோல் நீயுமரவணையான்
தாள்பட்டதண்டுழாய்த் தாமங்காமுற்றாயே. (உ)

ப ;—அநந்தரம், அன்றிலைப்பார்த்து, நீயும் ஶேஷஶாயியான அவன் திருவடிகளில் திருத்துழாயை யாசைப்பட்டாயோ வென்கிறாள்.

கோட்பட்ட—பறியுண்ட
சிந்தையையாய்—நெஞ்சை யுடையை யாய்க்கொண்டு
கூர்வாய—அந்தவார்த்தியடியாக கத்கத மாகையாலே செறிந்தகுரலை யுடைத்தான
அன்றிலே—அன்றிலே!
சேட்பட்ட—நெடிதான
யாமங்கள்—யாமங்கள்
சேராது—சேக்கையிற்சேராதே
இரங்குதி—துஃகியாநின்றாய்;
ஆல்—ஆதலால்

ஆட்பட்ட—அடிமைப்பட்ட	தாள்—திருவடிகளிலே
எம்மேபோல்—எங்களைப்போலே	பட்ட—போகத்தையிலே மிதியுண்ட
நீயும் — பிரிவாற்றாமை தோற்றியிருக்கிற நீயும்	தண்—செவ்வியையுடைய
அரவணையான் — திருவரவணையைத் தனக்கு நிரூபகமாகவுடையவனுடைய	துழாய்த்தாமம்—திருத்துழாய் மாலையை
	காமுற்றாயே—ஆசைப்பட்டாயோ.

வாயென்று - வாய்மையாய், குரலைச்சொல்லுகிறது. கூர்தல் - செறிவு. அன்றியே, கூர்த்தவாயென்று - பிரிந்தாரை யீருங்குரலென்றுமாம். இத்தால் - ஆர்த்தத்வநியுடையார் அவனைப்பிரிந்து கூப்பிடுகிறார்களென்றிருக்கை. (உ)

ஆறு ;—(கோட்பட்ட) கூர்வாயவன்றிலே, அபஹ்ருதமான நெஞ்சையுடையையாய் நீளியவானராத்ரிகளிலுறங்காதே யிரங்காநின்றாய்; நீயுமென்னைப்போலே பெரியபெருமாள் திருவடிகளில் திருத்துழாயை யாசைப்பட்டாயாகாதே யென்கிறாள். (உ)

ஈடு ; அவ ;—(மூன்றாம்பாட்டு) அன்றிலினுடைய த்வநிக்கு இடைந்திருக்கிற வளவிலே; கடலென்றொரு மஹாதத்த்வமாய் அது தன் காம்பீர்யமெல்லா மிழந்து கரையிலே வருவது கரையேறமாட்டாதேயுள்ளே விழுவதாய், எழுத்துஞ்சொல்லும் பொருளுந் தெரியாதபடி ஊமைக்கூறனுக் கூப்பிடுவதாகிறபடியைக்கண்டு, பாவியேன், நீயும் ராமகுணத்திலகப்பட்டு நான்பட்டது பட்டாயாகாதே யென்கிறாள்.

> காமுற்றகையறவோ டெல்லேயிராப்பகல்
> நீமுற்றக்கண்டுயிலாய் நெஞ்சுருகியேங்குதியால்
> தீமுற்றத்தென்னிலங்கையூட்டினான் தாள்நயந்த
> யாமுற்றதுற்றாயோ வாழிகனைகடலே. (ங)

அநந்தரம், கத்துகிறகடலைப்பார்த்து, விரோதிநிவர்த்தகனை அவனுடைய திருவடிகளை யாசைப்பட்ட வென்னைப்போலானாயோ வென்று சொல்லுகிறாள்.

காமுற்ற—காமிக்கப்பட்டபோகங்கள்	கண்டுயிலாய்—கண்ணுறங்குகிறிலை;
கையறவோடு—கைப்படாத விழவோடே கூடினாற்போலே	நெஞ்சு—அகவாயும்
நீ—நீ	உருகி—நீராய்
இராப்பகல்—இராப்பகல்	ஏங்குதி—ஏங்கினகுரலிரங்காமல் முழுக்கக்கூப்பிடாநின்றாய்;
முற்ற—முழுக்க	ஆல்—ஆதலால்

தென்னிலங்கை-தென்னிலங்கையை	உற்றது—பட்டது
முற்ற—முற்ற	உற்றாயோ—பட்டாயோ?
தீயூட்டினான்—தீயூட்டினவன்	கனை—இரைக்கிற
தாள்—திருவடிகளை	கடலே—கடலே!
நயந்த—ஆசைப்பட்ட	வாழி — உன்க்லேஶந்தீர்ந்து வாழ்வாயாக
யாம்—நாங்கள்	

எல்லே என்று - கடலுக்கு ஸம்புத்தியாதல், என்னே என்னும் வெறுப்பாதல். இத்தால் - மஹத்தையையுடையார் வாய்விட்டலறுவது அவனைப் பிரிந்தாலென்றிருக்கை. (ங)

ஆறு ;—(காமுற்ற) எம்பெருமானை யாசைப்பட்டுப்பெருமையாலே நீயிரவுபகலெல்லாங்கண்டுயிலாதே நெஞ்சுருகியேங்காநின்றாய் ; தீமுற்றத்தென்னிலங்கையூட்டினவன் திருவடிகளை யாசைப்பட்ட நான் பட்டது பட்டாயாகாதே, ஐயோ ! கடலேயென்கிறாள்

ஈடு ; அவ ;—(நாலாம்பாட்டு) காற்றென்று ஒருவ்யாபகதத்வமாய், அதுதான் அபிமதவிரஹவ்யஸநத்தாலே யிருந்தவிடத்தி லிருக்கமாட்டாதே, மடலூருவாரைப்போலே யுடம்பிலேபுழுதியை யேறிட்டுக்கொண்டு வடிவுதெரியாதபடியாய், ஜ்வரஸந்நிபதிதரைப் போலே குளிர்ந்திருந்தது ; அத்தைப்பார்த்து, நீயும் நான்பட்டது பட்டாயாகாதே யென்கிறாள்.

கடலும்மலையும்விசும்புந் துழாயெம்போல்
சுடர்கொளிராப்பகல் துஞ்சாயால்தண்வாடாய்
அடல்கொள்படையாழி யம்மானைக்காண்பான்நீ
உடலம்நோயுற்றாயோ வூழிதோறூழியே. (ச)

ப ;— அநந்தரம் "விரோதிநிரஸநபரிகரத்தை யுடையவனைக்காணவேணும்" என்னும் வ்யஸநத்தை நீயுற்றனையோவென்று ஒருவாடையைப்பார்த்துச்சொல்லுகிறாள்.

தண்—ஸந்நிபதித ஶரீரம்போலே குளிர்ந்திருக்கிற	மலையும்—மலையும்
வாடாய்—வாடாய்!	விசும்பும்—விசும்பும்
கடலும்—கடலும்	துழாய்—தடவிக்கொண்டு

எம்போல்—(க) "ஸுஹு ஸ்வபாரே ஸுவநஸ்யமத்யே நாகஸ்யப்ருஷ்டே - அம்பஸ்யபாரே புவநஸ்யமத்யே நாகஸ்யப்ருஷ்ட்டே" என்று க்ஷீராப்தியிலும் திருமலையிலும்பரமபதத்திலுமவனை யாராய்கிறவெங்களைப் போலே

சுடர்—சந்த்ராதித்யதேஜஸ்ஸுகளை

கொள்—நிரூபகமாகவுடைய

இரா—இரவும்

பகல்—பகலும்

துஞ்சாய்—ஓரிடத்தில் பர்யவஸித்துறங்குகிறிலே;

ஆல்—ஆதலால்

அடல்—மஹாபாரதயுத்தத்திலே

கொள்—"ஆயுதமெடேன்" என்று வைத்து எடுத்த

படையாழி—திருவாழியையுடைய

அம்மானை—ஸர்வேஸ்வரனை

காண்பான்—அந்த பீஷ்மன் கண்டாப் போலே காணநினைத்து

நீ—ஸர்வோபகாரகமான நீ

ஊழிதோறூழி-கல்பபேதங்கள் பிறந்து நடந்தாலும் காலமுள்ளதனையும் அவனை யொருப்பட்டு

உடலம்—ஶரீரமுள்ளதனையும் வ்யாப்தமான

நோய்—வ்யாதியை

உற்றாயோ—கொண்டாயோ.

உபகாரஶீலர்க்கு முடம்பில் வரும் விகாரங்கள் அவனைக்காணப் பெறுமமென்றுகருத்து. (ச)

ஆறு ;—(கடலும்) என்னைப்போலே(உ) "எங்குற்றாயெம்பெருமான்" என்றுகடலும் மலையும் விசும்புந்துழாவி யிராப்பகலுறங்குகிறிலே; நீயுமெம்பெருமானுடைய திருவாழியுங்கையுங் காணவாசைப்பட்டுப் பெறுமையாலே காலதத்வமெல்லாம்உடலம்நோயுற்றாயாகாதே தண்வாடாயென்கிறாள். ... ... (ச)

ஈடு ; அவ ;—(அஞ்சாம்பாட்டு) அவ்வளவிலே ஒருமேகமானது-கரைந்து நீராய் விழப்புக்கது. நீயும் அவனுடைய விரோதி நிரஸநஶீலதையிலே அகப்பட்டாயாகாதே யென்கிறாள்.

ஊழிதோறூழி யுலகுக்குநீர்கொண்டு
தோழியரும்யாமும்போல் நீராய்நெகிழ்கின்ற
வாழியவானமே நீயும்மதுசூதன்
பாழிமையிற்பட் டவன்கட்பாசத்தால்நைவாயே. (ரு)

ப ;—அநந்தரம் நீயு மவன் ஶக்தியோகத்திலே யகப்பட்டு ஶிதிலமாகிறாயோவென்று ஒருமேகத்தைக்கண்டுரைக்கிறாள்

(க) தை-நா-க. (உ) திருநெ-கூ.

தோழியரும் — ஸமானதுःகைகளான தோழிமாரும்
யாமும்போல் — து:கோத்தரைகளான நாங்களும்போலே
உலகுக்கு—லோகம் நிரம்பவேண்டும்
நீர்கொண்டு—நீரைக்கொண்டு
ஊழிதோறூழி—காலமுள்ளதனையும்
நீராய்—ஜலமயமாய்
நெகிழ்கின்ற—இற்றுவிழுகிற
வானமே—மேகமே!
நீயும்—உதாரசீலமான நீயும்

மதுசூதன்—மதுமர்த்தநனுடைய
பாழிமையில்—பெருமிடுக்கிலே
பட்டு—அகப்பட்டு
அவன்கண்—அவன்பக்கல்
பாசத்தால்—ஸ்நேஹத்தாலே
நைவாயே—சிதிலமாகிறாயே;
வாழிய—இந்த வைஶில்யந்தீர்ந்துவாழ் வாயாக.

உதாரஸ்வபாவர்க்கு வைசில்யம் பகவத்விரஹ ஜநிதமென்கை. (ரு)

ஆறு ;—(ஊழிதோறூழி) லோகமெல்லாம் நிறையும்படி இக்காலமெல்லாம்நின்று நீராயுருகுகிற வாழியவானமே, நீயுமெங்களைப் போலே எம்பெருமானுடைய குணசேஷ்டிதங்களிலே யகப்பட்டு அவன் பக்கலுள்ள ஸங்கத்தாலே இப்படிநைந்தாயாகாதேயென்கிறாள். ... ... (ரு)

ஈடு ; அவ ;—(ஆறாம்பாட்டு) மேகத்தினருகே கலாமாத்ரமானசந்த்ரன் தோற்றினான் ; அவனைப்பார்த்து, உன்வடிவிலெழில் விழுந்தாயாகாதேயென்கிறாள்.

நைவாயவெம்மேபோல் நாண்மதியேநீயிந்நாள்
மைவானிருளகற்றாய் மாழாந்துதேம்புதியால்
ஐவாயரவணைமே லாழிப்பெருமானார்
மெய்வாசகங்கேட்டுன் மெய்ந்நீர்மைதோற்றாயே. (சு)

ப ;—அநந்தரம் எங்களைப்போலே அவன் ஸத்யவாதித்வத்திலே நீயகப்பட்டாயோவென்று க்ஷீணனான சந்த்ரனைக்குறித்துச் சொல்லுகிறாள்.

நைவு — நைகையே
ஆய—ஸ்வபாவமான
எம்மேபோல்—எங்களைப்போலே
நாள்—கலாமாத்ரமான
மதியே—சந்த்ரனே!
நீ—தேஜோரூபனான நீ
இந்நாள்—இக்காலத்திலே

மை—மைபோலேயிருக்கிற
வான்—ஆகாசத்தில்
இருள்—இருளை
அகற்றாய்—போக்குகிறிலை;
மாழாந்து—மழுங்கி
தேம்புதி—குறையாநின்றாயே;
ஆல்—ஆதலால்

ஐவாய்—பொய்ம்மைக்குப் பலமுகமு மிரண்டுநாவுமுடைய	மெய்—பெரும்பொய்யான
அரவணைமேல் — திருவரவணைமேற் கொண்டு	வாசகம்—வார்த்தையை
ஆழி — பொய்க்குப்பெருநிலைநிற்கும் திருவாழியை யுடையராய்	கேட்டு—கேட்டு
பெருமானார் — இவர்களைப் பொய்கற்பிக்கும்பெருமையை யுடையவருடைய	உன்—உன்
	மெய்—வடிவில்
	நீர்மை—உஜ்ஜ்வலஸ்வபாவத்தை
	தோற்றாயே—இழந்தாயோ.

நாண்மதி - புதுமதி. மைவானிருள் - கறுத்த பெரியவிருளென்றுமாம். மாழாந்து - மழுங்கி. இத்தால் - உஜ்ஜ்வலஸ்வபாவருடைய வொளிமழுக்கம் அவனுடைய உக்திவையர்த்த்யஸங்காவஹமான விளம்பமென்று கருத்து. (சா)

ஆறு ;—(நைவாய) நாண்மதியே நீயிந்நாள் வலிதானவிருளை யகற்றுகிறிலை ; மழுங்கித்தேயாநின்றாய் ; நைவுந்தானாயிருந்த என்னைப்போலே நீயும், (க) "பேதைநினைப்பிரியேன்" என்றும், (உ) "[illegible] ஏதத்வ்ரதம்மம" என்றும், (ங) "[illegible] மாஸுச:" என்றும் எம்பெருமானருளிச்செய்த வார்த்தையைக் கேட்டு, "திருவநந்தாழ்வான் தொடக்கமாகவுள்ள திவ்யபுருஷர்களோடே பழகிவர்த்திக்கிற இவன் மெய்யல்லது சொல்லான்" என்று கொண்டு அவ்வார்த்தையை விஸ்வஸித்து, அகப்பட்டாயாகாதே யென்கிறாள். ... ... (சா)

ஈடு ; அவ ;—(ஏழாம்பாட்டு) மதிகெட்டவாறே அந்தகாரம் வந்து மேலிட்டதென்கிறாள்(தோற்றேமித்யாதி)கீழும்மேலும்போரு கிறபடியொழிய, ஸப்தஸ்வாரஸ்யத்தைப்பற்ற எம்பெருமானாரருளிச்செய்து போருவதொன்றுண்டு: அம்மங்கியம்மாளும்அத்தையே நிர்ப்பந்தித்துப்போரும். அதாகிறது தான், பிரிவாற்றாதாரநேகர் கூடக்கட்டிக்கொண்டு கூப்பிடாநிற்க, இருள்வந்துமுகத்தைமறைக்க அத்தைப்பார்த்து, ஆற்றாமைக்குப் போக்குவிட்டு தரிக்கவொட்டாதே நீவந்துநலியக்கடவையோ வென்கிறாள்.

தோற்றேம்மடநெஞ்ச மெம்பெருமான் நாரணற்கெம்
ஆற்றாமைசொல்லி யழுவோமைநீநடுவே
வேற்றோர்வகையிற் கொடிதாயெனையூழி
மாற்றாண்மைநிற்றியோ வாழிகனையிருளே. (எ)

(க) தி-மொ-க. (உ) ரா-யு-கச-ஙச. (ங) கீ-கஅ-சாசா.

ப ;—அநந்தரம் நிருபாதிக ஸம்பந்தயுக்தனானவனைப் பிரிந்தார்த்தையான வென்னை உன்னீடுபாட்டைக் காட்டி நலிவதேயென்று இருளைக்கண்டுபேட் டுரைக்கிறாள்,

எம்—எங்கள்
பெருமான்—ஸ்வாமியான
நாரணற்கு—நாராயணனுக்கு
மடம்—ஏங்களுக்கு விதேயமான
நெஞ்சம்—நெஞ்சை
தோற்றோம்—இழந்தோமாய்
எம்மாற்றாமை—அது அடியானவெங் களாற்றாமையை
சொல்லி—வாய்விட்டுச்சொல்லி
அழுவோமை — அழுகிறவெங்களைப் பற்ற
நீ—நீ
நடுவே — பாத்யபாதகஸம்பந்தமற்றிருக்க, நடுவேபுகுந்து
வேற்றோர்வகையில்—ஶத்ருக்கள் படியிலும்
கொடிதாய்—கொடிதாம்படி
எனையூழி —காலமுள்ள தனையும்
மாற்றாண்மை —எங்கள்நோவுக்கு மறுதலையான ஆளாகையிலே
நிற்றியோ—நிலைநிற்கிறாயோ
கனை—திணுங்கின
இருளே—இருளே !
வாழி—உன்ஸந்நிதியைக் காட்டி நலியாதேக்லேஶந்தீர்ந்து வாழவேணும்

கனையிருள் - திணுங்கினவிருள். இவள்நோவுக்கு மறுதலையான ஆளாகையாவது-இருள் தானுமீடுபடுகை. இதின்கருத்து தல்விரஹத்தாலேயென்றுநினைத்து பொறுக்கமாட்டாமலுரைத்தாளாயிற்று. இத்தால் - தம:ப்ரக்ருதிகளுடைய மாலிந்யமும் ஸர்வேஶ்வரனைப்பிரிந்ததென்றிருக்கை. (எ)

ஆறு ;—(தோற்றோம்) எம்பெருமானுடைய ஆஶ்ரிதஸௌலபத்வாதி குணங்களாலே அவனுக்குத்தோற்றடிமையானோம்; ஆதலால், "அவனைப்பிரிந்த வ்யஸநத்தையொன்றும் பொறுக்கமாட்டுகிறிலோம்" என்றுசொல்லிக்கொண்டழுகிறவெங்களை நீநடுவே சத்ருக்களினும் கொடியையாய் நின்று எத்தனைகாலம் பாதிக்கக்கடவை கனையிருளேயென்கிறாள். ... ... (எ)

ஈடு ; அவ ;—(எட்டாம்பாட்டு) அவ்விருளுக்கிறுய்த்து அங்கே இங்கே ஸஞ்சரியாநிற்க, இருள்செறிந்தாற்போலே யிருப்பதொரு கழியிலே சென்றிழிந்தாள் ; அதுமடலெடுப்பாரைப்போலே கெட்டோடாநிற்குமே; பாவியேன், சகடாஸுர நிரஸநம் பண்ணின அச்செயலிலே நீயுமகப்பட்டாயாகாதே யென்கிறாள்.

இருளின் திணிவண்ணம் மாநீர்க்கழியேபோய்
மருளுற்றிராப்பகல் துஞ்சிலுநீதுஞ்சாயால்
உருளுஞ்சகட முதைத்தபெருமானார்
அருளின்பெருநசையா லாழாந்துநொந்தாயே. (அ)

ப ;—அநந்தரம் அவன்காருணிகத்வத்திலே நசைபண்ணி யாழங்காற்பட்டாயோவென்று கழியைப்பார்த்துக் கலங்கியுரைக்கிறாள்.

இருளின்—இருளினுடைய
திணி—செறிந்த
வண்ணம்—நிறத்தையுடைத்தான
மா—பெரிய
நீர்—நீரையுடைய
கழியே—கழியே!
போய்—மிகவும்
மருளுற்று—அறிவுகெட்டு
இராப்பகல்—அஹோராத்ரரூபமானகாலமும்
துஞ்சிலும்—முடியிலும்
நீ—நீ
துஞ்சாய்—உறங்குகிறிலை;
ஆல்—ஆதலால்
உருளும்—உருளுதலையுடைத்தான
சகடம்—சகடத்தை
உதைத்த—திருவடிகளாலேயுதைத்த
பெருமானார்—பெரியவருடைய
அருளின்—க்ருபாகுணத்திலுண்டான
பெரு—பெரிய
நசையால்—ஆசையாலே
ஆழாந்து—ஆழங்காற்பட்டு
நொந்தாயே—நொந்தாயோ.

மாநீரென்றது — கறுத்தநீரென்றுமாம். இத்தால் - ஜலப்ராக்ருதிகளும் அவன் க்ருபாகுணத்திலே யகப்பட்டால் கால்தாழ்வரென்றுகருத்து. (அ)

ஆறு ;—(இருளின்) இருளின்திணிவண்ணம்மா நீர்க்கழியே, போயறிவழிந்திராப்பகல்முடியிலும் நீயுறங்குகிறிலை ; நீயுமென்னைப் போலே உருளுஞ்சகடமுதைத்த பெருமானாரோடே ஸம்ச்லேஷிக்கையிலுள்ள அபிநிவேசத்தாலே யாழாந்து நொந்தாயாகாதேயென்கிறாள். ... ... (அ)

ஈடு ; அவ ;—(ஒன்பதாம்பாட்டு) அக்கழிக்கொருகரை காணமாட்டாதே மீண்டுவந்துபடுக்கையிலே விழுந்தாள் ; அங்கெரிகிற விளக்கைக்கண்டாள் ; அது "உடம்பில்கைவைக்கவொண்ணாதபடி விரஹஜ்வரம்பற்றி யெரியாநின்றது" என்று அத்தைப்பார்த்து, நீயும் நோவுபட்டாயாகாதே யென்கிறாள்.

நொந்தாராக்காதல்நோய் மெல்லாவியுள்ளுலர்த்த
நந்தாவிளக்கமே நீயுமளியத்தாய்
செந்தாமரைத்தடங்கண் செங்கனிவாயெம்பெருமான்
அந்தாமத்தண்டுழா யாசையால்வேவாயே. (கூ)

ப;—அநந்தரம் கமநீய விக்ரஹனுனவனுடைய போக்யதாவிஷயமான ஆசையாலே வெதும்புகிறுயோ வென்று ஒருவிளக்கையுரைக்கிருள்.

நந்தா—ஒன்றுய்வீவற்ற
விளக்கமே—விளக்கே!
அளியத்தாய்—இப்படி விலக்ஷணமான
நீயும்—நீயும்
நொந்தாரா—ஈடுபட்டிருக்கச்செய்தேயு மீடுபடுத்துகிறதால்வயிறு நிறையாத
காதல்—காதலாகிற
நோய்—நோயானது
மெல்-உன்மேனிபோலேமெல்லிதான
ஆவி—ப்ராணனையும்
உள்—உள்ளே
உலர்த்த—உலர்த்தும்படியாக
செம்—சிவந்த
தாமரை—தாமரைபோன்ற
தடம்—பெரிய
கண்—கண்களையும்
செம்—சிவந்த
கனி—கனிபோன்ற
வாய்—வாயையுமுடையனுன
எம்பெருமான்—என்ஸ்வாமியானவனுடைய
அம்—அழகிய
தண்டுழாய்த்தாமம்—திருத்துழாய்மாலையிலுண்டான
ஆசையால்—ஆசையாலே
வேவாயே—பரிதபிக்கிறுயோ,

அளியத்தாயென்று - "அருமந்த" என்னுமாபோலே, நன்மையைக்காட்டுகிறது. இத்தால் - அவன்வடிவழகிலாசை தேஜஸ்விகளையும் பரிதபிக்குமென்கை. (கூ)

ஆறு;—(நொந்தாரா) நந்தாவிளக்கே, இப்பாடுபடுகைக் கீடன்றியேயிருந்தநீயு மென்னைப்போலே, காலதத்வமெல்லா மநுபவித்தாலும் ஆராதகாதல் நோயானது உன்னுடைய மெல்லாவியையுள்ளுலர்த்த, செந்தாமரைத்தடங்கண் செங்கனிவாயெம்பெருமானந்தாமத் தண்டுழாயினுள்ளே ஆசையாகிறமஹாக்நியாலே வேவாநின்றுயாகாதே யென்கிறுள். ... ... (கூ)

ஈடு; அவ;—(பத்தாம்பாட்டு) இவளவஸாதமெல்லாந்தீரவந்து ஸம்ச்லேஷித்த எம்பெருமானைக்குறித்து, இனியொருநாளுமென்னைவிடாதொழியவேணுமென்கிறுள்.

வேவாராவேட்கைநோய் மெல்லாவியுள்ளுலர்த்த
ஓவாதிராப்பகலுன்பாலே வீழ்த்தொழிந்தாய்
மாவாய்பிளந்து மருதிடைபோய்மண்ணளந்த
மூவாமுதல்வாவினி யெம்மைச்சோரேலே. (கo)

ப ;—அநந்தரம் இவ்வார்த்தியைக்கண்டு ஸங்கிஹித்ஞன ஸர்வகாரண பூதனுயுள்ள ஈஸ்வரனை, நீயென்னை நழுவாதொழியவேணுமென் றபேக்ஷிக்கிறுர்.

வேவாரா—வேவித்துத்ருப்தமாகாத	வாய்—வாயை
வேட்கை—ஆசையாகிற	பிளந்து—பிளந்து
நோய்—நோயானது	மருது—த்வந்த்வமான மருதுமுறியும் [படி
மெல்—விரஹத்தாலேபலஹீநமான	இடை—நடுவே
ஆவி—ஆத்மாவை	போய்—போய்
உள்—குருத்துவற்றுக	(அநந்யார்ஹமாம்படி)
உலர்த்த—வற்றுவிக்க	மண்—பூமியை
இராப்பகல்—இராப்பகல்	அளந்த—அளந்துகொண்டு
ஓவாது—இடைவிடாதே	மூவா—அத்தாலேயிளகிப்பதித்த
உன்பாலே—உன்ஸ்வபாவங்களிலே	முதல்வா—ஸர்வகாரணபூதனே
வீழ்த்தொழிந்தாய் — தாழ்ந்தகப்படும் படிபண்ணினவனுய்	இனி—இனியொருகாலமும்
	எம்மை—எங்களை
மா — உன்னைக்கிட்டுவார்க்கு விரோதியான கேஸியாகிற குதிரையின்	சோரேல்-நழுவவிடாதொழியவேணும்.

மூவாமுதல்வா என்றது - நித்யயௌவநஸ்வபாவனுன உத்பாதகனென்றுமாம். இத்தால் - தம்முடைய அநிஷ்டங்களைப்போக்கி ஸத்தையையுண்டாக்கினபடியை யநுஸந்தித்தாராயிற்று. இதில் ஏகாரம் - தேற்றம். (கo)

ஆறு ;—(வேவாரா) அதாஹ்பமான என்னுடையமெல்லாவி முடிந்தாலும் தவிராதேநின்று வேட்கைநோயானது தஹிக்கும்படி உன்னுடைய குணசேஷ்டிதங்களாலே யென்னைபோவாதே யிராப்பகலுன் பக்கவிலே விழுந்து கிடக்கும்படி பண்ணினுய் ; இனியடியேனைச் சோரவிடாதொழியவேணு மென்கிறுர். ... (கo)

ஈடு ; அவ ;—(பதிஞேராம்பாட்டு) நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றுர், கண்ணுற்கண்டதெல்லாம் பகவதலாபத்தாலேநோவுபடுகிற ஸம்ஸாரத்திலேயிருந்து நோவுபடாதே, கண்டாரெல்லாம் பகவல்லாபத்தாலே களித்துவர்த்திக்கும் நாட்டிலே புகப்பெறுவரென்கிறுர்.

சோராதவெப்பொருட்கு மாதியாஞ்சோதிக்கே
ஆராதகாதற் குருகூர்ச்சடகோபன்
ஓராயிரஞ்சொன்ன வவற்றுளிவைபத்தும்
சோரார்விடார்கண்டீர் வைகுந்தந்திண்ணனவே. (கக)

ப ;—அநந்தரம் இத்திருவாய்மொழிக்கு பலம் பரமபதப்ராப்தியென்றருளிச்செய்கிறார்.

சோராத—ஒன்றுஞ்சோராதபடி
எப்பொருட்கும்—எல்லாப்பொருளுக்[கும்
ஆதியாம்—காரணபூதனான
சோதிக்கே—பரஞ்ஜ்யோதி ஶப்தவாச்யனுக்கே
ஆராத—ஒருகாலும்த்ருப்திபிறவாத
காதல்—அபிநிவேசத்தையுடைய
குருகூர்ச்சடகோபன்—ஆழ்வார்
ஓர்—அத்விதீயமான
ஆயிரம்—ஆயிரமாக
சொன்னவவற்றுள் – சொன்னவற்றுக்குள்ளே
இவைபத்தும் — அதிப்ரேம ப்ரகாசகமான இவைபத்தையும்
சோரார்—நழுவநில்லாதவர்கள்
வைகுந்தம்—பரமபதத்தை
திண்ணன—அறுதியாக
விடார்கண்டீர்—விடாதவர்கள்கிடீர்.

இது - கலிவிருத்தம். நாலடித்தாழிசையுமாம். (கக)

ஆறு ;—(சோராத) இப்படி எம்பெருமானைப் பிரிந்தவ்யஸநத்தாலேமுடியப்புகுகிற தம்மையுஜ்ஜீவிப்பிக்கைக்காக வந்துதோற்றியருளின எம்பெருமானைக்கண்டு தாமுஜ்ஜீவித்து, ஸ்வோஜ்ஜீவநத்தாலே யெம்பெருமான் ஸர்வேஶ்வரத்வ மவிகலமானபடியைக்கண்டு ப்ரீதராய், "அடியேனிவனுடைய ஸர்வேஶ்வரத்வமவிகலமாகப் பெற்றேனாகாதே" என்று கந்துகொண்டெம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வத்தை யநுபவித்து, இப்படி ஸர்வேஶ்வரனாயிருந்த எம்பெருமான்பக்கலுள்ள நிரவதிகமான ஆசையாலே சொன்ன இத்திருவாய்மொழியை விடாதார் ஒருநாளுமெம்பெருமானைப்பிரியார்; இது நிஶ்சிதமென்கிறார். ... ... (கக)

ஈடு ; நிக ;—முதற்பாட்டிலேதொடங்கி, நாரைதொடக்கமாக, அன்றில், கடல், காற்று, மேகம், சந்த்ரன், இருள், கழி, விளக்கு, இப்பதார்த்தங்களைக் குறித்தநுசோகித்து மிகவுந்தளர்ந்தவளவிலே அவன்வந்து முகங்காட்ட "இனியென்னைவிடாதொழியவேணும்" என்று, இத்திருவாய்மொழிகற்றார்க்குப் பலத்தைச்சொல்லித் தலைக்கட்டினார்.

இரண்டாம்பத்தில் முதற்றிருவாய்மொழி
முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

இரண்டாம்பத்து

இரண்டாந் திருவாய்மொழி

திண்ணன்வீடு ப்ரவேசங்கள்.

ப;—இரண்டாந்திருவாய்மொழியில், கீழுக்தமான போக்யத்வத்தினுடைய நிரதிசயத்வாபாதகமாய், "மாவாய்பிளந்து" என்று தொடங்கிக் கீழ்ப்ரக்ருதமான ஸௌலப்யத்துக்கும் ஸ்வாமித்வத்துக்கும் ப்ரகாசகமான மநுஷ்யத்வேபரத்வத்துக் குபபாதகமான, அவதார தசையிலு மவனுடைய ஸர்வநிர்வாஹகத்வத்தையும், அநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்தி ஹேதுத்வத்தையும், ஸர்வாதிகத்வத்தையும், ஸர்வப்ரகாரஸமாராத்யதையையும், ஆதிக்யஸூசகமான புண்டரீகாக்ஷத்வத்தையும், ஆஸ்ரிதாகஷ்ணார்த்தமான அர்ணவஸாயித்வதையும், அகடிதகடநாஸாமர்த்ய த்தையும், ஸர்வப்ரகாரரக்ஷகத்வத்தையும், ஜகஜ்ஜந்மாதி ஹேதுத்வத்தையும், ஸர்வதேவதாஸமாஸ்ரயணீயத்வத்தையு மருளிச்செய்து, ஸர்வஸ்மாத்பரனும் ஸர்வஸுலபனுமான ஈஸ்வரனுடைய போக்யத்வவர்த்தகமான உத்துங்கலலிதத்வத்தை யுபபாதிக்கிறார். *

ஆறு ;—(திண்ணன்வீடு) இப்படி ப்ரஸ்துதமானஸர்வேஸ்வரத்வத்தை, தம்முடைய ப்ரீத்யதிஸயத்தாலே ஸஹேதுகமாகவுபபாதிக்கிறார். *

ஈடு ;—கீழிற்றிருவாய்மொழியில் இவர்க்குப் பிறந்த ஆற்றாமை பேச்சுக்கு நிலமன்றிறே; "கடல்வெதும்பினால் விளாவதீரில்லை" என்னுமாபோலே "ஆற்றாமையோடேமுடிந்துபோமித்தனை" என்றிருந்தார்; அநந்தரம் அவன்வந்து முகங்காட்டினவாறே ஆற்றாமை புக்கவிடங்கண்டிலர்; "இதுக்கடி என்" என்று பார்த்தாராய்த்து; அவாறே, இதரவிஷயங்களினுடைய லாபாலாபத்தளவல்லாத விஷயவைலக்ஷண்யமாயிருந்தது; பிரிந்தபோது தன்னையொழிய வேறொன்றுதோற்றாதபடியாய், கலந்தபோதும் தன்னையொழிய மற்றொன்று தோற்றாதபடியான விஷயவைலக்ஷண்யமாயிருந்தது; "இதுக்கடி என்" என்றுபார்த்தார், ஸமஸ்தகல்யாண குணாத்மகனுகையாலேயாயிருந்தது; "இதுதனக்கடிஎன்" என்று பார்த்தவாறே, ஸர்வேஸ்வரனாகையாலேயாயிருந்தது; "உயர்வறவுயர்நலமுடையவன்"

என்றால், "அயர்வறுமமரர்களதிபதி" என்றிறேதோற்றுவது ; ஆக, இங்ஙனே ப்ராஸங்கிகமாக ப்ரஸ்துதமான ஈஶ்வரத்வத்தை யநுஸந்தித்து, அத்தை யருளிச்செய்கிறார்.

"கீழே 'மூவாமுதல்வா' என்றுகாரணத்வம் ப்ரஸ்துதமாகை யாலே, அந்தக்காரணத்வத்தை யுபபாதிக்கிறார்" என்றுபணிக்கும் பிள்ளான். முதற்றிருவாய்மொழியிலுஞ் சொல்லிற்றில்லையோ ஈஶ்வரத்வமென்னில் ; "ஒருகாற்சொன்னோம்" என்று கைவாங்கியிருக்கவல்லரல்லரிவர்; ஒருகாற்சொல்லிற்றென்று கைவாங்கலாம்விஷயமன்று அது. இனித்தான் பகவத்விஷயத்தில் புநருக்தி தோஷாயவாகாது ; ஒருகுணத்தையே எல்லாக்காலமுமநுபவிக்கவல்லாரொருவரிவர் ; ஒருகுணந்தன்னையே "இதுக்குமுன்பநுபவிப்பித்தது இக்குணம்" என்றுதோற்றாதபடி க்ஷணந்தோறும்புதுமை பிறப்பித்தநுபவிப்பிக்கவல்லானொருவன் அவன் ; * பயிலாநிற்கச்செய்தேயிறே (க) * பண்டிவரைக்கண்டறிவதெவ்வூரில் யாமென்பது ; ஆகையிறே ஏகவிஷயமே நித்யப்ராப்யமாகிறது ;

இவர்தாமும், "எப்பொழுதும் நாள் திங்களாண்டூழி யூழி தொறு மப்பொழுதைக்கப்பொழு தென்னாராவமுதம்" என்னா நின்றார். ஆனாலு மிதுக்கு வாசியுண்டு; முதற்றிருவாய்மொழியிலே பரத்வஞ்சொல்லாநிற்கச்செய்தே, அது ஸ்வாநுபவமாயிருக்கும்; அந்தப்பரத்வந்தன்னையெல்லாருக்கு மநுபவிக்கலாம்படி பிறர்நெஞ்சிலே படுத்துகிறாராகையால் பரோபதேஶத்தாலே பரத்வாநுபவம் பண்ணுகிறார் ; அங்கு - அந்வயமுகத்தாலே பரத்வஞ்சொன்னார்; அந்வயவ்யதிரேகங்க ளிரண்டாலும் பரத்வஞ்சொல்லுகிறாரிங்கு ; அங்கு - ஶ்ருதிச்சாயையாலே சொன்னார்; இங்கு - இதிஹாஸபுராணப்ரக்ரியையாலே சொல்லுகிறார் ; அங்கு-பரத்வத்திலேபரத்வம்; இங்கு - அவதாரத்திலே பரத்வம். *

ஈடு ; அவ ;—(முதற்பாட்டு) இத்திருவாய்மொழியிற் சொல்லுகிற பரத்வத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்,

(க) தி-மொ-அ-க.

திண்ணன்வீடு முதல்முழுதுமாய்
எண்ணின்மீதிய னெம்பெருமான்
மண்ணும்விண்ணு மெல்லாமுட னுண்டநம்
கண்ணன்கண்ணல்ல தில்லைபோர்கண்ணே. (க)

ப ;—முதற்பாட்டில், க்ருஷ்ணனே ஸர்வநிர்வாஹக னென்கிறார்.

திண்—திண்மையையுடைத்தாய்
நல்—விலக்ஷணமான
வீடு—மோக்ஷம்
முதல்—முதல்
முழுதுமாய் — ஸகலப்ரயோஜநநிர்வாஹகனாய்
எண்ணின்மீதியன்—நினைவுக் கவ்வருகான அபரிச்சிந்நஸ்வபாவனாய்
எம்பெருமான்—இம்மேன்மையைக்காட்டியென்னையடிமைகொண்டஸ்வாமியாய்
மண்ணும்—பூமியும்
விண்ணும்—ஊர்த்வலோகமும்
எல்லாம்—ஒன்றொழியாமல்
உடன்—தாரதம்யமில்லாதபடி ஏகோத்யோகத்திலே
உண்ட—வயிற்றிலேவைத்துநோக்கின
நங்கண்ணன்—க்ருஷ்ணனாயவதரித்து நமக்கே தன்னைத்தந்த ஸௌலபனே
கண்—ஜகத்துக்குநிர்வாஹகன்;
அல்லது—அல்லது
ஓர்—ஒரு
கண்—நிர்வாஹகவஸ்து
இல்லை—இல்லை.

கண்-களைகண். திண்ணனென்றது-நிஶ்சிதமென்றுமாம். (க)

ஆறு ;—மோக்ஷாத்யஶேஷ புருஷார்த்தப்ரதனாய், ஸாங்கபநஸாபரிச்சேத்ய கல்யாணகுணங்களை யுடையனாய், எனக்கு ஸ்வாமியாய், ஸர்வாத்ம ஸம்ரக்ஷகனாயிருந்த வண்டுவரைப்பெருமாளே இஜ்ஜகத்தி லீஶ்வரன் ; மற்றீஶ்வரனில்லை ; இதிலொரு ஸம்ஶய மில்லை யென்கிறார். (க)

ஈடு ; அவ ;—(இரண்டாம்பாட்டு) "அல்லதில்லை" என்று நீர்சொல்லுவானென்? ; ப்ரஹ்மருத்ரர்களு மீஶ்வரர்களாக அவர்களுக்கும் சிலப்ரமாணங்களுண்டாயன்றோ போருகிறதென்னில் ; அவர்கள்நிலைகளை யாராய்ந்துபார்த்தால், தலையறுப்பார் சிலரும், அறுப்புண்டுநிற்பார் சிலருமாகாநின்றார்கள் ; அவர்களாபத்தைப் போக்கி ரக்ஷியாநின்றானிவன் ; அவர்களோ இவனோ ஈஶ்வரனென்கிறார். *

ஏபாவம்பரமே யேழுலகும்
ஈபாவஞ்செய் தருளாலளிப்பாரார்
மாபாவம்விட வரற்குப்பிச்சைபெய்
கோபாலகோளரி யேறன்றியே. (உ)

ப ;—அநந்தரம் அநிஷ்ட நிவ்ருத்திக்கு மிஷ்டப்ராப்திக்கும் ஹேது க்ருஷ்ணனென்கிறார்

மா—அரப்பெரியதான	அன்றியே—அன்றி,
பாவம்—குருபாதகம்	ஏழுலகும்—ஸர்வலோகத்தையும்
விட—விட்டுப்போம்படி	ஈபாவஞ்செய்து—நஶித்தபாபத்தையு டைத்தாம்படிபண்ணி
அரற்கு—ருத்ரனுக்கு	அருளால்—தன்க்ருபையாலே
பிச்சைபெய்—பிக்ஷாப்ரதாநம் பண்ணினவனாய்	அளிப்பார்— அபிமதங்களைக்கொடுத்து [ரக்ஷிப்பரா
கோபாலகோள்—கோபகுலத்திற்பிறந்தார்கள்	ஆர்—ஆர்;
அரியேறு — ஸிம்ஹஶ்ரேஷ்ட்டமான க்ருஷ்ணன்	ஏபாவம்—என்னபாவமிருந்தபடி;
	பரமே—இவனுடைய ஸர்வாதிகத்வஞ் சொல்லுதல் நமக்குபரமாவதே.

ஏ என்று - வெறுப்பைக்காட்டுகிறது. (உ)

ஆறு ;—(ஏபாவம்) இஜ்ஜகத்துக்கு வேறுரக்ஷகனில்லையோ வென்னில்;(க)" நஹிபாப நஸாகஸ்ய ... ஹரம் ... நஹிபாலநஸாமர்த்ய ம்ருதேஸர்வேஶ்வரம்ஹரிம்" என்றுகொண்டு ருத்ரனுடைய மஹாபாபத்தைப்போக்கி அவனை ரக்ஷித்தருளின பரமகாருணிகனாயிருந்தகோபாலகோளரியேறன்றி, இந்தஸர்வலோகங்களினுடையபாபத்தைப்போக்கி ரக்ஷிப்பாருளரோ ; ரக்ஷிக்கவல்லார்தானுளரோ ; இது உபபாதிக்கவேணுமோ வென்கிறார். (உ)

ஈடு; அவ ;—(மூன்றாம்பாட்டு) ஸௌஶீல்யத்தாலும், த்ரைவிக்ரமக்ரமணமாகிற அதிமாநுஷசேஷ்டிதத்தாலு மிவனே யீஶ்வரனென்கிறார்.

ஏறனைப்பூவனைப் பூமகள்தன்னை
வேறின்றிவிண்டொழுத் தன்னுள்வைத்து
மேறன்னைமீதிட நிமிர்ந்துமண்கொண்ட
மாறனின்மிக்கு மோர்தேவுமுளதே. (ங)

(க) வி - பு - க - உஉ - உக.

ப ;—அநந்தரம் இவனே ஸர்வஸ்மாத்பரனென்கிறார்.

ஏறனை—ருஷபவாஹநனான ருத்ரனையும்
பூவனை—கமலாஸநனான ப்ரஹ்மாவையும்
பூமகள் தன்னை — பத்மவாஸிநியாய்த்தனக்கஸாதாரணையான பிராட்டியையும்
வேறின்றி — தன் திருமார்பில் வைத்ததிற்காட்டில் வேறு தோன்றாதபடி
தன்னுள்—தன் திருமேனிக்குள்ளே
விண்—இந்த ஸீலமறிந்த பரமபதவாஸிகள்
தொழ - தன்னைத்தொழும்படி
வைத்து—வைத்து
மேல்தன்னை—ஊர்த்வலோகத்தை
மீதிட—கீழ்க்கும்படி
நிமிர்ந்து—வளர்ந்து
மண்—பூமியை
கொண்ட—அளந்துகொண்ட
மால்தனில்—பெரியவனை
மிக்கும்—மிகுத்திருப்பது
ஓர்—ஒரு
தேவும்—தேவதாதத்வமும்
உளதே—உண்டோ.
ஏகாரம் - உண்டோ. (௫)

ஆறு ; —(ஏறனை) * அயர்வறுமமரர்கள் தன்னுடைய ஸௌஸீல்யகுணத்தைக்கண்டு தொழுகைக்காக, ஸர்வேஸ்வரியான பெரிய பிராட்டியாரோடொக்க, அத்யந்தமபக்ருஷ்டரான ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் தன்னையாஸ்ரயமாகக்கொடுத்துக்கொண்டிருக்கையாலும், ஸர்வலோகங்களும் திருவடிகளினுள்ளே யடங்கும்படி அளந்தருளுகையாலும் இவனே ஸர்வேஸ்வரன் ; மற்றில்லையென்கிறார். (௫)

ஈடு ; அவ ;—(நான்காம்பாட்டு) ஸௌகுமார்யத்தாலும் முதன்மையாலு மிவனே யீஸ்வரனென்கிறார்.

தேவு மெப்பொருளும் படைக்கப்
பூவில் நான்முகனைப் படைத்த
தேவ னெம்பெருமானுக் கல்லால்
பூவும் பூசனையுந் தகுமே. (௪)

ப ;—அநந்தரம் ஆராத்யதைக்கீடான ஆதிக்யமவனுக்கொழிய மற்றொருவர்க்கில்லையென்கிறார்.

தேவும்—தேவஜாதியையும்
எப்பொருளும்—மநுஷ்யாதிஸகலபதார்த்தங்களையும்
படைக்க—ஸ்ருஷ்டிக்கைக்காக
பூவில்—திருநாபிகமலத்திலே
நான்முகனை — சதுர்முகனான ப்ரஹ்மாவை
படைத்த—படைத்த

தேவன்—பரதேவதையான	பூவும்—புஷ்பாத்யுபஹாரமும்
எம்பெருமானுக்கு—என்னுயனுக்கு	பூசனையும்—ஆராதநோபசாரமும்
அல்லால்—அல்லது	தகுமே—வேறு சிலர்க்குத்தகுமோ.

தகாதென்று கருத்து. (ச)

ஆறு ;—(தேவும்) சதுர்முகாதி ஸகலபதார்த்த ஸ்ருஷ்டிலீல னுப், தன்னுடைய ஸௌந்தர்யகுணத்தாலே எனக்கு ஸ்வாமியா யிருந்த வெம்பெருமானல்லது ஸர்வேஶ்வரனு மழகியாருமுளரோ வென்கிறார். ... ... (ச)

ஈடு ; அவ ; (அஞ்சாம்பாட்டு) புண்டரீகாக்ஷனுகையாலு மிவ னேயீஶ்வரனென்கிறார்.

> தகுஞ்சீர்த் தன்தனி முதலினுள்ளே
> மிகுந்தேவு மெப்பொருளும் படைக்கத்
> தகுங்கோலத் தாமரைக்கண்ண னெம்மான்
> மிகுஞ்சோதி மேலறிவார் யவரே. (ரு)

ப ;—அநந்தரம் இப்பரத்வஸூசகமான புண்டரீகாக்ஷத்வத்தை யருளிச் செய்கிறார்.

தகும்—ஸ்ருஷ்ட்யாதிகளுக்குத் தகுதியான	படைக்க—ஸ்ருஷ்டிக்க
சீர்—ஜ்ஞாநஶக்த்யாதிகளையுடையனுன	தகும்—"இவன் றனக்குத்தகும்" என்னஸூசகமான
தன்—தன்னுடைய	கோலம்—அழகிய
தனி—அத்விதீயமாய்	தாமரை—தாமரைபோன்ற
முதலினுள்ளே—ஜகத்துக்குமூலமான ஸங்கல்பத்துக்குள்ளே	கண்ணன்—கண்களையுடைய
மிகும்—"ஈஶ்வரன்" என்று ஶங்கிக்கலாம்படி மிக்க	எம்மான்—என்ஸ்வாமியானவனைக்காட்டிலும்
தேவும்—ப்ரஹ்மருத்ராதி தேவஜாதியையும்	மிகுஞ்சோதி—பரஞ்ஜ்யோதிஸ்ஸு
எப்பொருளும்—மநுஷ்யாதிஸகலபதார்த்தங்களையும்	மேல்—இதுக்குமேலொருதத்த்வமுண்டென்று, (வைதிகரில்)
	அறிவார்—அறிவார்
	யவர்—ஆர்.

உண்டென்றறிவார் - அவைதிகரென்று கருத்து. (ரு)

ஆறு ;—(தகுஞ்சீர்) தன்னுடைய திவ்யாத்மஸ்வரூபத்துக் குசிதமான கல்யாணகுணங்களை யுடையனுப், ஸ்வஸங்கல்பகல்பித

நிகிலஜகத்தையுடையனாய், தன்னுடைய ஸர்வேஸ்வர த்வோசித மான அழகிய திருக்கண்களை யுடையனாயிருந்த வெம்பெருமானு டைய திருமேனியினழகு ஒருவர்க்கு நினைக்கநிலமோவென்கிறார்.(ரு)

ஈடு ; அவ ;—(ஆறாம்பாட்டு) ஆபத்ஸகனாகையாலு மிவனே யீஸ்வரனென்கிறார்.

யவரும்யாவையு மெல்லாப்பொருளும்
கவர்வின்றித் தன்னுள்ளொடுங்கநின்ற
பவர்கொள் ஞானவெள்ளச் சுடர்மூர்த்தி
அவரெம்மாழி யம்பள்ளியாரே. (சு)

ப ;—அநந்தரம் ஆஸ்ரிதாக்ஷணார்த்தமாக க்ஷீரார்ணவத்திலே கண்வளர்ந் தருளினானென்கிறார்.

யவரும்—எல்லாச்சேதநரும்	பவர்கொள்—பரப்பையுடைத்தான
யாவையும்—எல்லாவசேதநங்களுமாகிற	ஞானவெள்ளம்—ஞானவெள்ளத்தை
எல்லாப்பொருளும்—ஸமஸ்தபதார்த்த ங்களும்	சுடர்—தனக்கு ப்ரபையாகவுடைய
கவர்வின்றி—சோர்வின்றி	மூர்த்தி—ஸ்வாமிகளான
தன்னுள் — தன்ஸ்வரூபைக தேஸத் திலே	அவர்—ஸர்வாதிகாரனவர்
ஒடுங்க—அடங்கும்படியாக	எம்—நமக்குபோக்யமாய்
நின்ற—நின்ற	அம்—தர்ஸநீயமான
	ஆழி—க்ஷீரார்ணவத்திலே
	பள்ளியார்—கண்வளர்ந்தருளுகிறார்.

கவாவு-சோர்வு. பவர்வு-பரப்பு; சுடர்மூர்த்தி-விக்ரஹமாகவுமாம். (சு)

ஆறு ; -(யவரும்) அஸம்பாதமாகத்தன்னுள்ளே வைக்கப் பட்ட ஸர்வஜகத்தையுமுடையனாய், ஸ்வாபாவிகஸார்வஜ்ஞத்தை யுடையனாய், *க்ஷீரார்ணவநிகேதநனான வண்டுவரைப்பெருமானே ஸர்வேஸ்வரனென்கிறார். ... ... (சு)

ஈடு ; அவ ;—(ஏழாம்பாட்டு) அகடிதகடநாஸாமர்த்யத்தாலு மிவனே யீஸ்வரனென்கிறார்.

பள்ளியாலிலை யேழுலகுங் கொள்ளும்
வள்ளல் வல்வயிற்றுப் பெருமான்
உள்ளுளா ரறிவாரவன்றன்
கள்ளமாய மனக்கருத்தே. (எ)

ப ;—அநந்தரம் வடதளஶாயித்வரூபமான அகடிதகடநா ஸாமர்த்த்யத்தாலே அவன்பரத்வம் துரவபோதமென்கிறார்.

பள்ளி—படுக்கை
ஆலிலை—ஆலிலையாக
ஏழுலகும்—எல்லாலோகத்தையும்
கொள்ளும்—கொள்ளுகைக் கிடங்கொடுக்கும்
வள்ளல்—ஔதார்யத்தையும்
வல்—ஶக்தியையுமுடைத்தான
வயிறு—வயிற்றையுடைய
பெருமான்-ஸர்வாதிகனான
அவன் தன்—அவனுடைய
கள்ளம்—ஒருவர்க்குந்தோன்றாதே
மாயம்—ஆஶ்சர்யமான
மனக்கருத்து—மாநஸவ்யாபாரம்-ஜகதர்த்தமான ரக்ஷணசிந்தாவ்யாபாரம்
உள்ளுள்—மாநஸவ்யாபாரத்தாலே
அறிவார்—அறியுமவர்கள்
ஆர்—ஆர்.

எவர்க்குமறியவரிதென்று கருத்து. (எ)

ஆறு ; (பள்ளியாலிலை) ஸர்வலோகாவகாஶப்ரதத்வபரமௌதார்யத்தையுடைத்தாய், ஸர்வலோகபரணஸமர்த்தமாயிருந்த தன் வயிற்றிலே ஸர்வலோகத்தையும் வைத்துக்கொண்டு ஆலிலையிலே கண்வளர்ந்தருளுகிற இவனுடைய ஸர்வேஶ்வரத்வ சிஹ்நபூததிவ்ய சேஷ்டிதங்களுக்கொரு முடிவுண்டோ வென்கிறார். (எ)

ஈடு ; அவ ;—(எட்டாம்பாட்டு) ஸ்ருஷ்டியும் பாலநமும் ஸ்வாதீநமாகவுடையவனுகையாலே யிவனே யீஶ்வரனென்கிறார்.

கருத்தில்தேவு மெல்லாப்பொருளும்
வருத்தித்த மாயப்பிரானை யன்றியாரே
திருத்தித்திண்ணிலை மூவுலகுந்தம்முள்
இருத்திக்காக்கு மியல்வினரே. (அ)

ப ;—அநந்தரம் ஸர்வப்ரகாரரக்ஷகன் அவனேயென்கிறார்.

கருத்தில்—தன்னினைவாலே
தேவும்—தேவவர்க்கமும்
எல்லாப்பொருளும்—மநுஷ்யாதி ஸகலபதார்த்தங்களும்
வருத்தித்த—ஸத்தைபெற்று அபிவ்ருத்தமாம்படி யுண்டாக்கின
மாயம்—ஆஶ்சர்யஶக்த்யாதிகளையுடைய
பிரானை—ஈஶ்வரனை
அன்றி—ஒழிய
ஆரே—ஆர்தான்
மூவுலகும்—ஸமஸ்தலோகத்தையும்
திண்—திண்ணிதான
நிலை—நிலையையுடைத்தாம்படி
திருத்தி—அநிஷ்டநிவ்ருத்யாதிகளாலேதிருந்தச்செய்து
தம்முள்—தன்னினைவுக்குள்ளே

இருத்தி—அவற்றை ப்ரதிஷ்ட்டிதமாக்கி

காக்கும்—ரக்ஷிக்கும்

இயல்வினர்—ஸ்வபாவத்தையுடையார். ரக்ஷணைக ஸ்வபாவனவனென்று கருத்து. (அ)

ஆறு ;—(கருத்தில்) ஸ்ருஷ்டிரக்ஷணங்கள் பிறகர்த்ருகமல்லவோ, இவற்றைப்பரமபுருஷைக கர்த்ருகமாகச் சொல்லுவாருண்டோவென்னில் ; பெற்றமாதாவே புத்ரரக்ஷணம்பண்ணுகிறப்போலே ஸ்ருஷ்ட்டித்தவனே ரக்ஷிக்கப்ராப்தம் ; ஆதலால் ரக்ஷிக்கிறான் பரமபுருஷனே. ஸ்ருஷ்டிரக்ஷணங்களிரண்டும் பரமபுருஷைக கர்த்ருகமென்கிறார். ... ... (அ)

ஈடு ; அவ ;—(ஒன்பதாம்பாட்டு) ஸ்ருஷ்டிஸ்த்திதி ஸம்ஹாரங்கள் மூன்றும் ஸ்வாதீநமாம்படியிருக்கையாலு மிவனே யீஶ்வரனென்கிறார்.

காக்குமியல்வினன் கண்ணபெருமான்
சேர்க்கைசெய்து தன்னுந்தியுள்ளே
வாய்த்ததிசைமுக னிந்திரன்வானவர்
ஆக்கினான் தெய்வவுலகுகளே. (கூ)

ப ;—அநந்தரம் இந்த்ராக்ஷணத்தோபாதி ஜகதுத்பத்தி ஸம்ஹாரங்களும் தததீநமென்கிறார்.

காக்குமியல்வினன்—ரக்ஷணத்தைஸ்வபாவமாகவுடைய

கண்ணன்—க்ருஷ்ணனான

பெருமான்—ஸர்வேஶ்வரன்

சேர்க்கைசெய்து—ஸம்ஹ்ருதிஸமயத்திலே நாமரூபவிபாகரஹிதமாய் (க) "தஉவ கீஹவ தி-தமவகீபவதி" என்கிறபடியேசேரும்படிபண்ணி

தன்னுந்தியுள்ளே — தன்திருநாபிக்குள்ளே

வாய்த்த—ஸ்ருஷ்ட்டிக்குவாய்த்த

திசைமுகன்—சதுர்முகன்

இந்திரன்—இந்த்ரன்

வானவர்—தேவர்கள்

தெய்வவுலகுகள்—அவர்களுக்கு வாஸஸ்த்தாநமான திவ்யலோகங்கள்

ஆக்கினான்-இவற்றையுண்டாக்கினான் உந்தியுள்ளேபிறந்த திசைமுகனென்றுமாம். (கூ)

ஆறு ;—(காக்கும்) கேவலம்ஸ்ருஷ்ட்டிமாத்ரமேயன்று பரமபுருஷகர்த்ருகம் ; ப்ரஹ்மாதிஸ்தம்பபர்யந்த ஸர்வஜகத்ஸ்ருஷ்ட்டிஸ்த்திதிஸம்ஹாரங்கள் மூன்றும் பரமபுருஷகர்த்ருகம் ; ஆதலாலவனே ஸர்வேஶ்வரனென்கிறார். ... ... (கூ)

(க) ஸுபால - உ.

A A.

ஈடு ; அவ ;—(பத்தாம்பாட்டு) இவ்வளவும்வர நான் ப்ரதிப ாதித்த பரத்வத்தை, நீங்களாஶ்ரயணீயராக நினைத்திருக்கிறவர்கள் மேலெழுத்தைக்கொண்டு விஶ்வஸியுங்கோளென்கிறார்.

கள்வாவெம்மையு மேழுலகும்நின்
உள்ளேதோற்றிய விறைவவென்று
வெள்ளேறன்நான்முக னிந்திரன்வானவர்
புள்ளூர்திகழல் பணிந்தேத்துவரே. (௧0)

ப ;—அநந்தரம் ஸர்வஸ்மாத்பரனுகையாலே ஸர்வதேவதாஸமாஶ்ரயணீய னவனேயென்கிறார்.

கள்வா — அவதாரமுகத்தாலே யாதிக்யத்தைமறைக்கும்க்ருத்ரிமனே
எம்மையும்—எம்மையும்
ஏழுலகும்—ஸமஸ்தலோகங்களையும்
நின்னுள்ளே - உன்னுடைய ஸங்கல்பத்துக்குள்ளே
தோற்றிய—தோற்றுவித்த
இறைவ—ஸ்வாமியே
என்று—என்றுகொண்டு!
வெள்—வெளுத்த
ஏறன்—ஏற்றையுடைய ருத்ரனும்
நான்முகன்—சதுர்முகனும்
இந்திரன்—இந்த்ரனும்
வானவர்—ஸ்வர்க்கவாஸிகளும்
புள்ளூர்தி—கருடவாஹநனுடைய
கழல்—திருவடிகளை
பணிந்து—ப்ரணாமம்பண்ணி
ஏத்துவர்—ஸ்துதியாநிற்பார்கள்.

இத்தால் - தர்மபர்யாய வ்ருஷபவாஹநத்வத்தாலே ருத்ரனுடைய கர்மவஶ்யதையும், வேதமயனனகருடன் வாஹநமாகையாலே ஈஶ்வரனுடைய வேதாந்தவேத்யத்வமுந் தோற்றுகிறது. (௧0)

ஆறு ;—(கள்வா) இப்படி சதுர்முக பசுபதி ப்ரமுகப்ரப்ருதி தேவர்களுக்கு மெம்பெருமானே காரணபூதனுமாயீஶ்வரனுமாயிருக்குமென்னுமிடத்தில் ப்ரமாணமென்னென்னில் ; அவர்கள் தங்களுடைய வாக்யமே ப்ரமாணமென்கிறார். ... (௧0)

ஈடு ; அவ ;—(பதினோராம் பாட்டு) நிகமத்தில், இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லவர்களுக்கு, தேவதாந்தரங்கள்பக்கலீஶ்வரத்வபுத்தி பண்ணுகையாகிற ஊனமில்லை யென்கிறார்.

ஏத்தவேழுலகுங் கொண்டகோலக்
கூத்தனைக் குருகூர்ச் சடகோபன்சொல்
வாய்த்த வாயிரத்துள் ளிவைபத்துடன்
ஏத்தவல்லவர்க் கில்லையோரூனமே. (௧௧)

ப ;—அநந்தரம் இத்திருவாய்மொழிக்கு பலமாக ஸர்வப்ரகார வைகல்யாா ஹித்யத்தை யருளிச்செய்கிறார்.

ஏத்த—லௌகிகரேத்துகிற விதுவே விஜேதாக
ஏழுலகம்—ஸமஸ்த லோகத்தையும்
கொண்ட—அளந்துகொண்ட
கோலம்—வடிவழகையும்
கூத்தனை — வல்லாராடினாற்போலே அளந்து, அநாயஸத்தையு முடையவனை
குருகூர்ச்சடகோபன்—ஆழ்வார்
சொல்—அருளிச்செய்த
வாய்த்த—லோகத்துக்கலப்யலாபமான
ஆயிரத்துள்—ஆயிரத்துள்
இவைபத்து—இவைபத்தையும்
உடன்—அர்த்தத்தோடே யுடன்பட்டு
ஏத்த—ஸ்துதிரூபமாகச்சொல்ல
வல்லவர்க்கு—வல்லவர்க்கு
ஊனம்—தேவதாந்தரங்களினுடைய வுத்கர்ஷபுத்தியும், அவர்களோடுண்டான ஸாம்ய புத்தியும், அவர்களில் நிகர்ஷ புத்தியுமாகிறகுறைவுகளொன்றும்
இல்லை—இல்லை.

ஊனம் - குறைவு. சொல்வாய்த்தவென்று - அர்த்தப்ரதிபாதநஸாமர்த்த்யமாகவுமாம். ஏழுலகென்று - கீழும்மேலுங்கூட்டுகிறது. இது கலிவிருத்தம்.(கக)

ஆறு ;—(ஏத்தவேழுலகும்) ஸர்வலோகங்களுந் தன்னுடைய விஜயத்தைச் சொல்லிக்கொண்டு நின்றேத்த ஏழுலகுங் கொண்டருளினவிது தொடக்கமாகவுள்ள திவ்யசேஷ்டிதங்களாலே யெம்பெருமானுடைய ஸர்வேஸ்வரத்வத்தை ப்ரதிபாதிக்கிற இந்தத்திருவாய்மொழியை இந்தபாவனையோடேகூட ஏத்தவல்லார்க் கினியொருநாளு மெம்பெருமானோடு விஸ்லேஷமில்லை யென்கிறார். (கக)

ஈடு ; நிக ;—முதற்பாட்டில், மேல்பரக்கவருளிச்செய்கிற இத்திருவாய்மொழியிலர்த்தத்தை ஸங்க்ரஹேண வருளிச்செய்தார். இரண்டாம்பாட்டு முதல்-துஃக்கநிவர்த்தகனுகையாலும், ஸீலவானுகையாலும், ஸுகுமாரனுகையாலும், புண்டரீகாக்ஷனுகையாலும், ஆபத்ஸகனுகையாலும், அகடிதகடநாஸமர்த்தனுகையாலும், ஸ்ருஷ்டிஸ்திதிகளைப்பண்ணுகையாலும், ஸம்ஹாரமாகிற செயலைச்செய்கையாலும், ஈஸ்வராபிமாநிகளா யிருக்கிறவர்களுடைய ஸ்தோத்ராதிகளாலும், இப்படி பஹுப்ரகாரங்களாலே அவனுடைய பரத்வத்தை யருளிச்செய்து, இதுகற்றார்க்குப்பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

இரண்டாம்பத்தில் இரண்டாந் திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

இரண்டாம்பத்து.

மூன்றாந் திருவாய்மொழி.

ஊனில்வாழ் - ப்ரவேசங்கள்.

ப ;—மூன்றாந்திருவாய்மொழியில், இப்படி யுத்துங்கலலிதனான இவனுடையஸர்வவித ஸாரஸ்யாதிஶய ப்ரயுக்தமான திவ்யபோக்யதையையருளிச்செய்வதாக ; அவனுடைய ஸர்வரஸாத்மகத்வத்தையும், ஸாரஸ்யயுக்தனான அவன் விஷயத்தில் தம்முடைய வுபகாரஸ்ம்ருதியையும், ஸ்வவிஷயத்தில் தம்மை அவனபிநிவேஶிப்பித்தபடியையும், அவ்வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமில்லாதபடியையும், தன்னுடைய அப்ராக்ருதபோக்யதையையும் ப்ரகாஶிப்பித்துச் சேர்த்துக்கொண்டபடியையும், இந்த ஸம்ஶ்லேஷம் ஸ்வரூபப்ரயுக்தமாகையாலே அநாதிஸித்தமானபடியையும், போக்யதாதிஶயத்தாலே வ்யதிரேகத்தில் தரிக்கவருமையையும், அவ்வநுபவம் தமக்குக் கைப்புகுந்தமையையும், ஸர்வப்ரகாராநுபவத்தால் பிறந்த ஆநந்தவிசேஷத்தையும், இப்படியநுபவித்து ஆநந்திகளானஸூரிகளோடு தாங்கூடியநுவிக்கையிலுண்டான ஆசையையுமருளிச்செய்து, கீழ்ச்சொன்ன ஸர்வப்ரகாரஸாரஸ்யம் ஸூரிபோக்யமென்னுமிடத்தையு முபபாதித்தருளுகிறார். *

ஆறு ;—(ஊனில்வாழுயிரே) இப்படி ஸ்வோஜ்ஜீவநார்த்தமாக வந்துதோற்றியருளினவன் தம்மோடேகலந்தருளினபடியைச் சொல்லுகிறார்.

ஈடு ;—*வாயுந்திரையுகளி லார்த்திதீரவந்து ஸம்ஶ்லேஷித்த ஸம்ஶ்லேஷத்தைச் சொல்லுகிறது இத்திருவாய்மொழியில் ; நடுவு ப்ராஸங்கிகமாகப்ரஸ்துதமானவித்தனை யீஶ்வரத்வம். தாம்பெற்ற பேற்றின் கனத்தைப்பார்த்தார் ; அதுதாமடியாக வந்ததாகில்றே அளவுபட்டிருப்பது; ஸர்வேஶ்வரனடியாகவந்ததாகையாலே கனத்திருக்குமிறே. தாமநுபவித்தவநுபவத்துக்குள்ளே யெல்லாரஸங்களுமுண்டாய், அதுதான் ஸமாப்யதிகவர்ஜிதமுமாயிருந்தது; “இப்படிப்பட்டபேற்றுக்கு உசாத்துணையாவாரார்” என்று பார்த்தவிடத்தில் ஸம்ஸாரத்திலாளில்லாமையாலே, “அவன்றன்னோடொக்க ப்ராப்யருமாய், அவனை நித்யாநுபவம்பண்ணாநிற்பாருமாய், பகவதநுபவத்துக்கு தேசிகருமாயிருக்கிற நித்யஸூரிகள் திரளிலேபோய்ப்புக்கு (க) * [illegible] - போதயந்த: பரஸ்பரம் பண்ணி

(க) கீதை - ௧௦ - ௯.

யநுபவிக்கப்பெறுவதெப்போதோ" என்னுமநவாப்தியோடே தலைக்கட்டுகிறார்.

* வாயுந்திரையுகளிலாற்றாமைக்கு அறிவுநடையாடாத திர்யக்குகளையு மசேதநங்களையும் சேர்த்தாரங்கு; இங்கு, ஸம்ஶ்லேஷத்தால் வந்த ப்ரீதிக்கு, அறிவுநைஸர்க்கிகமான நித்யஸூரிகளைத் தேடுகிறார். (க) [ராமஸ்து - ராமஸ்து] பெருமாளும் பிராட்டியும் (உ) "ஏகதத்த்வம் - ஏகதத்த்வம்" என்னலாம்படி கலந்தகலவியைச் சொல்லுகிறது. "பித்ருஶுஶ்ரூஷணபரரானார், தர்மங்களை ப்ரவர்த்திப்பித்தார், தேவதாஸமாராதநம் பண்ணினார்" என்றாயிற்றுச் சொல்லிக்கொண்டு போந்தது; இப்படிப் போந்த இவரிப்போது "வாத்ஸ்யாயநங்கற்றுக் காமதந்த்ரமேயோ நடத்திப்போந்தது" என்னும்படி வேறுபட்டார். [ஸீதயாஸார்த்தம் - ஸீதயாஸார்த்தம்] பரமபதத்தில் செவ்வியோடே வந்தவளும் பிற்பாடை யாம்படி போகஸ்ரோதஸ்ஸிலே முற்பாடரானார். [விஜஹார - விஜஹார] இப்படி பரிமாறச்செய்தேயும் போகோபோத்காதத்துக் கவ்வருகு பட்டிலர். [பஹூந்ருதூந் - பஹூந்ருதூந்] பஹூந்ஸம்வத்ஸராந் என்றதேயொழிந்தது - "அவ்வோகால விசேஷங்களுக்கடுத்த போகோபகரணங்களைக்கொண்டு புஜித்தார்" என்னுமிடந் தோற்றுகைக்காக. [மநஸ்வீ - மநஸ்வீ] ஸம்ஶ்லேஷத்தில் பிராட்டி கோலினவளவுக் கவ்வருகுபட்டுப் பரிமாறினார். [தத்கத: - தத்கத:] தஸ்யாங்கத: - ஜாதிகுணங்கள் த்ரவ்யத்துக்கு ப்ரகாரமாய்ப் பிரிக்கவொண்ணாதபடியா யிருக்குமாபோலே, பிரிக்கவொண்ணாதபடி யொருநீராகக்கலந்தபடி. [தஸ்யா நித்யம்ஹ்ருதிஸமர்ப்பித: - தஸ்யா நித்யம்ஹ்ருதிஸமர்ப்பித:] இவருபார்த்தியையறிந்திருப்பாளொருத்தியாகையாலே "அப்பெரியவணிப்படித் தாழவிடுவதே" என்று அச்செயலிலே தன்னெஞ்சு அவக்குப்பட்டு "அதுவது" என்று கிடக்குமாயிற்று. அப்படியாயிற்று இங்குக்கலந்தகலவிதான். *

ஈடு; அவ;—(முதற்பாட்டு) இதில் முதற்பாட்டில்-ராஜ்யத்தை யிழந்தராஜபுத்ரனை ஒருவன், ராஜ்யத்திலே ப்ரவேசிப்பித்தால், "இவனாலே நாமிப்பேறுபெற்றோம்" என்று அவனைக் கொண்டாடுமாபோலே, "கைங்கர்யஸாம்ராஜ்யத்துக்கிட்டுப்பிறந்துவைத்து

(க) ரா - பா - எஎ - உரு.   (உ) ரா -

நெடுநாளிழந்துகிடக்க இந்நெஞ்சிறே யித்தைத்தந்தது" என்று திருவுள்ளத்தைக்கொண்டாடுகிறார்.

ஊனில்வாழுயிரேநல்லைபோ வுன்னைப்பெற்று
வானுளார்பெருமான் மதுசூதனென்னம்மான்
தானும்யானுமெல்லாம் தன்னுள்ளேகலந்தொழிந்தோம்
தேனும்பாலும்நெய்யும் கன்னலுமமுதுமொத்தே. (க)

ப ;—முதற்பாட்டில், ஸர்வரஸமானவஸ்துவோடு தமக்குண்டான ஸம்ச்லேஷம் தம்முடைய திருவுள்ளமடியாகவாதலால் நெஞ்சைப்பார்த்துஉகக்கிறார்.

ஊனில்—மாம்ஸமயமான சரீரத்திலே
வாழ் — இந்தளத்தில் தாமரைபோலே பகவதநுபவத்தைப்பெற்று வாழ்கிற
உயிரே—நெஞ்சே!
நல்லைபோ—நல்லைகாண் ; (எங்ஙனேயென்னில்)
உன்னை—உன்னை
பெற்று—எனக்கு விதேயமாகப்பெறுகையாலே
வானுளார்—பரமபத வாஸிகளான நித்யஸூரிகளுக்கும்
பெருமான்—மேலான மேன்மையையுடையனாய்
மதுசூதன்—தன்னை யநுபவிக்கப்பாரித்த என்னுடையப்ரதிபந்தகத்தை மதுவைமுடித்தாற்போலேமுடித்து
என்னம்மான்றானும்—என்னையடிமைகொண்டருளின தன்மையையுடையஅவனும்
யானும்—அவனை யநுபவிக்கவாசைப்பட்டு அடிமைபுக்கநானும்
தன்னுள்ளே—தனக்குள்ளே
எல்லாம்—எல்லாவினிமையுமாம்படி
தேனும்—தேனும் தேனும்
பாலும்—பாலும் பாலும்
நெய்யும்—நெய்யும் நெய்யும்
கன்னலும்—கன்னலும் கன்னலும்
அமுதுமொத்து—அமுதமுமமுதமும்போல
கலந்தொழிந்தோம்—கலந்துவிட்டோம்.

இத்தால் - ஏகஜாதித்ரவ்யங்கலந்தாற்போலே யென்கிறபடி. அநேகத்ருஷ்டாந்ததாத்பர்யம் - ஸர்வவிதஸாரஸ்யமுந் தோற்றுகைக்காக. தேனென்று-ஸர்வரஸஸமவாயம். பாலென்று - ஸ்வாபாவிகரஸம். நெய்யென்று - ப்ரும்ஹணரஸம். கன்னலென்று-கரும்பாய், அதினுடைய பாகஜரஸத்தைநினைக்கிறது. அமுதென்று - நித்யரஸம். உயிரென்று - ப்ராணாச்ரயமான நெஞ்சைச்சொல்லுகிறது. போவென்று - ஸாதரமான ஸம்புத்திஸூசகம். (க)

ஆறு ;—ஆச்ரிதஸம்ச்லேஷைகபோகனாய், ஆச்ரிதவிரோதிநிரஸநஸ்வபாவனாய், எனக்கு ஸ்வாமியாயிருந்த எம்பெருமான்றானும்யானும் எல்லாப்படியாலு மிந்தக்கலவியினுள்ளே யெல்லாரஸங்

களுமுண்டாம்படி கலந்தொழிந்தோம்; திருநாட்டிலே சென்றால் ரஸிக்கக்கடவபகவதேக போகத்வத்தை, இந்தப்ரக்ருதியிலேயிருந்துவைத்தே பெற்று வாழ்கிறநெஞ்சே, உன்னைப்பெற்றே இந்தஸம்ருத்தியெல்லாம் விளைந்தது; நல்லைநல்லையென்று நெஞ்சைக்கொண்டாடுகிறார். ... ... (க)

ஈடு; அவ;—(இரண்டாம்பாட்டு) இப்பாட்டு ப்ரஸ்துதமான வளவிலே எம்பார் கோஷ்டியிலே "இவ்வாத்மாவுக்குப்ரதமகுரு வார்" என்றுபிறந்ததாய், இருந்த முதலிகளில்சிலர், "ஆசார்யனன்றோ" என்றார்கள்; சிலர் "ஆசார்யன் ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயிக்கப்போரு என்று அழைத்துக் கொண்டுபோய்ச் சேரவிட்ட ஸ்ரீவைஷ்ணவன்ப்ரதமகுரு" என்றார்கள்; "அங்ஙனன்றுகாண், அவனிவனை யழைத்தாலும் இவன் 'அல்லேன்' என்னுமதபடி (க) 'இசைவித்தென்னை' என்கிறபடியே அகவாயிலேயிருந்து இசைவித்த ஸர்வேஶ்வரன்காண் ப்ரதமகுரு" என்றருளிச்செய்தார்.

"அகன்றநம்மை அவன்திருவடிகளிலே சேரவிட்டதுநெஞ்சிறே" என்று இவர் திருவுள்ளத்தைக் கொண்டாடப்புக்கவாறே, "நீர்வழிபோவாரைக்கொண்டாடுகிறதென்? அடியறியாதே" என்ன; ஆராய்ந்தவாறே, அதுக்குமடி அவனாயிருந்தது; "நடுவேநெஞ்சைக்கொண்டாடினோ மித்தனையாகாதே" என்று, அத்தைவிட்டு - "என்னையுமிசைவித்த ஸர்வேஶ்வரனைக்கொண்டாடீர்" என்ன; தந்திருவுள்ளத்தைவிட்டு, ஸர்வேஶ்வரனைக் கொண்டாடுகிறார்.

ஒத்தார்மிக்காரை யிலையாயமாமாய
ஒத்தாயெப்பொருட்கு* முயிராயென்னைப்பெற்ற
அத்தாயாய்த்தந்தையா யறியாதனவறிவித்து
அத்தாநீசெய்தன வடியேனறியேனே. (உ)

ப;—அநந்தரம் ஏவம்விதஸாரஸ்யயுக்தன் தம்விஷயத்தில் பண்ணினவுபகாரமபரிச்சேத்யமென்கிறார்.

ஒத்தார்மிக்காரையிலையாய—இந்தஸாரஸ்யாதிசயத்துக்கு ஸமாப்யதிகதரித்ரனாய் மாமாய—ப்ரதிக்ஷணமநுபவியா நின்று

லும் அபூர்வவத்விஸ்மயாவஹமானமஹாஶ்சர்யயுக்தனாய் ஒத்தாயெப்பொருட்கும்—ஸர்வபதார்த்த ஸஜாதீயனாய் ஐஸ்வர்யத்தை அநுபவிப்பிக்குமவனாய்

உயிராய்—ஆத்மாசரீரத்துக்கு தாரகனாமோபாதி, ஸர்வபதார்த்த
என்னை—என்னை தாரகனாய்
பெற்ற—உத்பாதித்த
அ—அந்த வஸாதாரணஸம்பந்தத்தையுடைய
தாயாய்—தாயாம்படிப்ரியபரனாய்
அ—தகாவிதோத்பத்திஹேதுவான
தந்தையாய்—பிதாவாம்படி ஹிதபரனு (ஆசார்யனோபாதி) மாய்
அறியாதன—அஜ்ஞாதமான அபவாதிகளை
அறிவித்து—அறிவிப்பதுஞ்செய்து
அத்தா—இவ்வுபகாரங்களுக் கடியான ஸம்பந்தத்தையுமுடையவனே
நீ—ஸோபாதிகரானவவர்களைப் போலன்றியே நிருபாதிகஸம்பந்தயுக்தனான நீ
செய்தன—செய்தவுபகாரங்கள்
அடியேன் — அடியேனளவுறவாலே யென்றிருக்குமதொழிய
அறியேன்—அளவிட்டறியமாட்டுகிறிலேன்.

ஸர்வவிதபந்துவான நாராயணனிறே மாதாவும் பிதாவும் குருவுமென்று கருத்து. (உ)

ஆறு ;—(ஒத்தார்) இப்படி நெஞ்சைக்கொண்டாடி, எம்பெருமான் தமக்குச்செய்தருளின ஸம்ருத்தியை அவன்றனக்குச்சொல்லிக்கொண்டநுபவிக்கிறார்.

நிரஸ்தஸமாப்யதிகனாய், ஆஶ்சர்யபூதனாயிருந்துவைத்து, ஆஶ்ரித ஜநங்களெல்லாரோடும் ஸஜாதீயனாய்வந்து பிறந்தருளி, அவர்களுக்கத்யந்தஸுலபனாயிருந்து, எனக்கவ்வளவன்றிக்கே ஒருவன் தான்தனக்குச்செய்யும் நன்மையும், மாதா புத்ரனுக்குச்செய்யும் நன்மையும், பிதா புத்ரனுக்குச்செய்யும் நன்மையும், ஆசார்யன் ஶிஷ்யனுக்குச் செய்யும் நன்மையும் செய்தருளினாய் ; இன்னமடியேன் திறத்து நீசெய்தருளினவற்றுக்கொரு முடிவுகாண்கிறிலேனென்கிறார். ... ... (உ)

ஈடு ; அவ ;—(மூன்றாம்பாட்டு) ஆளவந்தாரருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி - "அறிவுநடையாடாததசையிலே ஸம்பந்தஜ்ஞாநத்தைப்பிறப்பித்து, பிறந்தஜ்ஞாநத்தையழிக்கக்கடவதான தேஹஸம்பந்தத்தோடே பின்னையும்வைத்தாய், என்கிற இழவாலே சொல்லுகிறார்" என்றாம். இத்தை எம்பெருமானார் கேட்டருளி, "முன்னிற்பாட்டுக்களும் பின்னிற்பாட்டுக்களும் ப்ரீதியோடேநடவாநிற்க, நடுவே அப்ரீதிதோற்றச்சொல்லுமது சேராது, ஆனபின் பிங்ஙனேயாமித்தனை; "அறியாமாமாயத்தடியேனை அறியாக்

காலத்துள்ளே யடிமைக்கணன்புசெய்வித்து - வைத்தாயால் - என்கிறார்" என்று இத்தையும் ஒருவுபகாரமாக்கி யருளிச்செய்தார். "அத்தாநீசெய்தன" என்று-நாம்பண்ணினவுபகாரங்களைச்சொல்லாநின்றீர்; அவற்றிலே நீர்மதித்திருப்பதொரு வுபகாரத்தைச்சொல்லிக்காணீரென்ன ; அத்தைச்சொல்லுகிறார்.

அறியாக்காலத்துள்ளே யடிமைக்கணன்புசெய்வித்து
அறியாமாமாயத்தடியேனை வைத்தாயால்
அறியாமைக்குறளாய் நிலம்மாவலிமூவடியென்று
அறியாமைவஞ்சித்தா யெனதாவியுள்கலந்தே. (௩)

ப ;—அநந்தரம் தன்பக்கலிலே அவன் தம்மையபிநிவேசிப்பித்தபடியை யருளிச்செய்கிறார்.

அறியாமை—பிறர் தன்னையுள்ளபடியறியாதபடிவடிவழகாலே மதிமயக்கின
குறளாய்—வாமநனானவனாய்
நிலம்மாவலிமூவடியென்று } நிலம்மாவலிமூவடியென்று அநங்கிதபதமாய் அபரிஸமாப்தமானவாக்யத்தாலே
அறியாமை—"இவனீஶ்வரன்" என்றறிவிக்கிற ஶங்க்ராதிகள் பாசுரமும்நெஞ்சிலபடாதபடியாக
வஞ்சித்தாய் — அவன் " தன்னது " என்றிருந்த ஜகத்தை வஞ்சித்துக்கொண்டவனே!
எனதாவியுள் கலந்து } இவ்வபதாநத்தையெனக்கு ப்ரகாஶிப்பித்துஎன்னெஞ்சுக்குள்ளேகலந்து அக்கணக்கிலே
அறியா—அறியாமையை விளைப்பதாய்
மா—துஸ்தரமான பெருமையையுடைத்தாய்
மாயத்து—மாயாகார்யமான ஸம்ஸாரத்திலே
அடியேனை-ஸ்வதஸ்ஸித்தமான ஶேஷத்வஸம்பந்தம் பற்றாசாக என்னை
அறியாக்காலத்துள்ளே } அந்த ஶேஷத்வமறிகைக்கு ஸம்பாவனையில்லாக்காலத்திலே
அடிமைக்கண்—தத்பலமான ஶேஷவ்ருத்தியிலே
அன்பு—ஆதரத்தை
செய்வித்துவைத்தாயால் } பிறப்பித்து வைத்தாயிறே.

இது, உன்னுடைமை நழுவவிடாமைக்கிறே யென்று கருத்து. (௩)

ஆறு ;—(அறியா) தம்திறத்திலெம்பெருமான் செய்தருளின நன்மைகளைப்பேசுகிறார். ... ... (௩)

ஈடு ; அவ ;—(நான்காம்பாட்டு) "வைத்தாயால்" என்று அவன் பண்ணினவுபகாரத்தையநுஸந்தித்து, இங்ஙனேகிடந்து நெஞ்சாறல் படாநில்லாதே, ப்ரத்யுபகாரமாக உம்மதாயிருப்பதொரு வஸ்து வைக்கொடுத்து நெஞ்சாறல் தீரமாட்டீரோவென்ன ; " அப்படியே யிறேசெய்வது " என்று அவன் திருவடிகளிலே ஆத்மஸமர்ப்பணத் தைப்பண்ணி யநுஶயிக்கிறார்.

எனதாவியுள்கலந்த பெருநல்லுதவிக்கைம்மாறு
எனதாவிதந்தொழிந்தே னினிமீள்வதென்பதுண்டே
எனதாவியாவியும்நீ பொழிலேழுமுண்டவெந்தாய்
எனதாவியார்யானார் தந்தநீகொண்டாக்கினையே. (௪)

ப ;—அநந்தரம் இவ்வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமில்லை யென்கிறார்.

பொழிலேழும்—ஸமஸ்தலோகங்களும் ப்ரளயத்திலேயழியப்புக
உண்ட—வயிற்றிலேவைத்துநோக்கின
எந்தாய்—ஸ்வாமியே !
(அப்படி நானுமழிந்துபோகாதபடி)
எனதாவியுள்-அத்யந்தஹேயமான என்னுத்மாவுக்குள்ளே
கலந்த—ஒருநீராகக்கலந்த
பெரு—அது தன்பேறும்படிபெருத்து
நல்—நிர்ஹேதுகமாகையாலே நன்றான
உதவி—உதவிக்கு
கைம்மாறு—ப்ரத்யுபகாரமாக
எனதாவி—என்னுத்மாவை
தந்தொழிந்தேன்—உனக்குத் தந்தேவிட்டேன்;
இனி—இனி
மீள்வதென்பது—அதுக்குமீட்சி யென்பதொன்று
உண்டே—இல்லை;
(இதுதானுறதென்றாயில்)
எனதாவியும்—என்னுத்மாவுக்கும்
ஆவி—ஆத்மா
நீ—நீ; (ஆதலால்)
எனதாவியார்—தரப்படுகிறவென் ஸ்வரூபத்தினுடைய கர்மத்வமும் நானிட்டவழக்கல்ல;
யானார்—தருகிற என்னுடைய கர்த்ருத்வமும் நானிட்டவழக்கல்ல;
தந்த — தாத்ருத்வகர்த்ருத்வாதிவிஶிஷ்டமான விவ்வஸ்துவினுடையஸத்தையையடியிலே யுண்டாக்கித்தந்த
நீயே—நீதானே
கொண்டாக்கினை—பின்னையும் ஸ்வீகரித்தாய்;

ஆதலால், உனக்கே ஶேஷமென்றிட்டு, எனக்கு ஸமர்ப்பணத்தில் கர்மத்வ மில்லை, கர்த்ருத்வமுமில்லை. கைம்மாறு - ப்ரத்யுபகாரம். (௪)

ஆறு ;—(எனதாவி) இப்படி எம்பெருமானோடுகலந்த கலவியா லுள்ள நிரவதிகப்ரீதியாலே யறிவழிந்து, " இவ்வாத்மா தம்முடை

யதன்று" என்று நிரூபிக்கமாட்டாராய், அவன் தம்மோடுகலந்த விப்பெருநல்லுதவிக்குக் கைம்மாறாகத் தம்முடைய ஆத்மாவை அவனுக்கு மீளாவடிமையாகக்கொடுத்து, பின்னையுந் தம்முடையஸ்வரூபத்தையுள்ளபடி விவேகித்து, தருகிற நானார், தரப்புகுகிறவிவ்வாத்மாவார், பண்டே உனக்குச்சேஷமாயிருக்கிற விவ்வாத்மாவை நீகொண்டருளின யத்தனையிறே யென்கிறார். ... (௪)

ஈடு; அவ;—(ஐந்தாம்பாட்டு) ஜ்ஞாநலாபமே அமையுமோ, ப்ராப்திவேண்டாவோவென்ன; எனக்கு ப்ரதமஸுக்ருதமும் நீயேயாய், என்னை ஸம்ஸாரிகளில் வ்யாவ்ருத்தனாக்கினவன்றே பெற்றேனேயன்றோவென்கிறார்.

> இனியார்ஞானங்களா லெடுக்கலெழாதவெந்தாய்
> கனிவார்வீட்டின்பமே யென்கடற்படாவமுதே
> தனியேன்வாழ்முதலே பொழிலேழுமேனமொன்றாய்
> நுனியார்கோட்டில்வைத்தா யுனபாதஞ்சேர்ந்தேனே. (௫)

ப;—அநந்தரம் உன்னுடைய அப்ராக்ருதபோக்யதையைக்காட்டி ருசிஜநகனானபடியாலே உன் திருவடிகளைப் பெற்றேனல்லேனோ வென்கிறார்.

யார்—எத்தனையேனுமதிஶயிதரானவர்களுடைய
ஞானங்களால்—ஜ்ஞாநங்களால்
எடுக்கல்—எடுக்கைக்கு
எழாத—எடுப்புண்ணாத
எந்தாய்—ஸ்வாமியாய்
கனிவார்—உன்பக்கல் ஸ்நேஹத்தாலே பரிபக்வஹ்ருதயரானவர்களுக்கு
வீட்டின்பமே—மோக்ஷாநந்தபூதனாய்
என்—உபயவ்யாவ்ருத்தனானவெனக்கு (மதநாதியத்நத்தால்)
கடல்—கடலிலே
படா—உண்டாகாத
அமுதே—அப்ராக்ருதமானவம்ருதமாய்
தனியேன்—ஸம்ஸாரத்திற்பொருந்தாமையாலே தனியனானவென்னுடைய
வாழ்—த்வதநுபவரூபமான வாழ்வுக்கு
முதலே—ருசிஜநகத்வாதியாலே ப்ரதமஹேதுபூதனாய்
(என்னைஸம்ஸாரார்ணவத்தினின்றுமெடுக்கைக்கு ஸூசகமாக)
பொழிலேழும்—ஸப்தத்வீபயுக்தமான ஜகத்தை
ஒன்று—அத்விதீயமான
ஏனமாய்—மஹாவராஹமாய்க்கொண்டு
நுனியார்—கூர்மைமிக்க
கோட்டில்—கொம்பிலே
வைத்தாய்—வைத்தவனே!
இனி—இனிநீயேஹேதுபூதனாய் நிர்வஹிக்கிறபின்பு
உனபாதம்—உன திருவடிகளை
சேர்ந்தேனே-ப்ராபித்தேனேயன்றோ.

ஏகாரம் - தேற்றம். எடுக்கல் - தம்வசமாக்குதல்.

ஆறு ;—(இனியார்) அநாஶ்ரிதரெத்தனையேனு முத்க்ருஷ்டரேயாகிலும் அவர்களுடைய ஜ்ஞாநங்களுக்ககோசரனாய், அநந்யபக்திகளாயிருப்பார்க்குப்பரமஸுலபனாய், தாத்ருஶபக்திஹீநனாயிருக்கச்செய்தே எனக்கயத்நஸித்தபோக்யனாய், ஸமுத்ரத்திலேயழுந்திக்கிடக்கிற வாத்மவர்க்கத்தை நிர்ஹேதுகமாகவெடுத்து உஜ்ஜீவிப்பித்தாற்போலே, உன்னுடையக்ருபையாலே, அநந்யகதியாயிருந்த வென்னுடைய வுஜ்ஜீவநஹேதுபூதனானவனே, உன்திருவடிகளை இனியொருநாளும் பிரியாதொருபடி சேர்ந்தேனேயென்கிறார்.

ஈடு ; அவ ;—(ஆறும்பாட்டு) “இனியுனபாதஞ்சேர்ந்தேனே” என்றார் ; “இனி” என்று விஶேஷிக்கவேணுமோ, *பொய்ந்நின்ற ஞானத்திலே நீவிஶேஷகடாக்ஷம்பண்ணினபோதே கிட்டிற்றிலேனோவென்னுதல் ; அன்றிக்கே, ஸ்வரூபத்தையநுஸந்தித்தவாறே ஸ்வாபாவிகஶேஷத்வமேயாய் நிலைநின்றவாகாரம், நடுவுள்ளது வந்தேறியாய்த்தோற்றுகையாலே சொல்லுகிறாராகவுமாம்.

சேர்ந்தார்தீவினைகட் கருநஞ்சைத்திண்மதியைத்
தீர்ந்தார்தம்மனத்துப் பிரியாதவருயிரைச்
சோர்ந்தேபோகல்கொடாச் சுடரையரக்கியைமூக்
கீர்ந்தாயையடியே னடைந்தேன்முதன்முன்னமே. (௬)

ப ;—அநந்தரம் இந்தப்ராப்தி, ஸ்வரூபப்ரயுக்தமாகையாலே அநாதிஸித்தமன்றோ வென்கிறார்.

சேர்ந்தார் — உன்னையடைந்தவர்களுடைய
தீ—க்ரூரமான
வினைகட்கு—பாபங்களுக்கு
அரு—ஆற்றவரிய
நஞ்சை—நஞ்சாய்
திண்மதியை—திண்ணிதான மதியாகிற-வ்யவஸாயம்தானாய் நிற்கிறானென்னலாம்படியதுக்குத்பாதகனாய்
தீர்ந்தார்தம்—அந்த வ்யவஸாயத்தையுடையவர்களுடைய
மனத்து—மநஸ்ஸிலே
பிரியாது—விடாதே
அவருயிரை—அவர்களாத்மவஸ்துவை
சோர்ந்தே-என்றும் விஷயாந்தரங்களிலேபுக்குச்சோர்ந்து
போகல்கொடா—போகக்கொடாதே
சுடரை—தன்வடிவையே யவர்களுக்கு விஷயமாக்கு முஜ்ஜ்வலஸ்வபாவனாய்
(அவர்கள்விஷயருசியை)
அரக்கியை—சூர்ப்பநகியை

மூக்கீர்ந்தாயை — அழித்தாற்போலே யழித்துக்கொடுக்க வல்லவுன்னை

அடியேன் — உனக்குஶேஷபூதமான ஸ்வரூபத்தையுடைய நான்

முதன்முன்னமே—முதலுக்குமுன்னே

அடைந்தேனே- அடைந்தேனல்லவோ

* மயர்வறமதிநலமருளுவதற்குமுன்னே ப்ராப்தியுண்டல்லவோவென்று கருத்து. (ச)

ஆறு ;—(சேர்ந்தார்) “ போனகாலமும் ஸம்ஶ்லேஷித்தோம் ” என்று தமக்குத்தோற்றும்படி யெம்பெருமானோடே தாம்ஸம்ஶ்லேஷிக்கையாலே, ஆஶ்ரிதருடைய ஸ்வவிஷயதிவ்ய ஜ்ஞாநவிரோதி பாபங்களுக்கு நஞ்சாய், அவர்களுக்கு ஸ்வவிஷயத்ருடஜ்ஞாநப்ரதனாய், இப்படி தன்னுடையப்ரஸாதத்தாலே லப்தஜ்ஞாநராகையாலே * ஸம்யக்வ்யவஸிதராயிருந்தவர்களை ஸம்ஸாரத்தில்புகவிடாதே அவர்களோடுபிரியாதே ஸம்ஶ்லேஷிக்கும் ஸ்வபாவனுமாய், ஆஶ்ரிதவிரோதி நிரஸநஸ்வபாவனுமாயிருந்தவுன்னோடு இன்றோ அடியேன் ஸம்ஶ்லேஷிக்கப் பெற்றது, இவ்வாத்மாவுள்ளவன்றே பெற்றேனன்றோவென்கிறார். ... ... (ரு)

ஈடு ; அவ ;—(ஏழாம்பாட்டு) இப்படி தாம்பெற்ற பேற்றின் கனத்தையுமநுஸந்தித்து, இவ்விஷயத்தினுடைய போக்யதையையுமநுஸந்தித்து, “ இதிருந்தபடிகண்டோமுக்குத் தொங்காதுபோலேயிருந்தது ” என்றதிஶங்கை பண்ணி, தேவரென்னைக்கைவிடில் நானுளேனாகேன், என்னைக்கைவிடாதொழிய வேணுமென்கிறார்.

முன்னல்யாழ்பயில் நூல்நரம்பின்முதிர்சுவையே
பன்னலார்பயிலும் பரனேபவித்திரனே
கன்னலேயமுதே கார்முகிலேயென்கண்ணா
நின்னலாலிலேன்காண் என்னைநீகுறிக்கொள்ளே. (எ)

ப ;—அநந்தரம் இப்படி யுபகரித்த நிரதிஶயபோக்யனை யுன்னை யொழிந்தால் எனக்கு ஸத்தையுண்டோவென்கிறார்.

முன்—அநாதியாய்

நல்—விலக்ஷணமாய்

யாழ்—யாழைப்பற்றியிருப்பதாய்

பயில்—வ்யுத்பித்ஸுக்களாலே பயிலப் படுவதான

நூல்—கீதஶாஸ்த்ரத்தில் லக்ஷணாந்தப்

நரம்பில்—நரம்பிலேகிளர்ந்த பாத

முதிர்—முதிர்ந்த

சுவையே—கீதரஸம்போலே நிரதிஶய போக்யபூதனாய்

பல்—இந்த்ரஸஜ்ஞராய் பஹுவிதரா யிருக்கிற
நலார்—அஸ்கலிதஜ்ஞாநாதி வைலக்ஷண்யத்தை யுடையார்
பயிலும் — நித்யாநுபவம் பண்ணுவத
பரனே—மேலாயிருக்குமவனாய் [ற்கு
பவித்திரனே— இந்த்ரஸஜ்ஞரல்லாதார்க்கு மஜ்ஞாநாதி தோஷங்களைப்போக்கிபுஜிப்பிக்கும்பாவநபூதனாய்
கன்னலே—இக்ஷுரஸம்போலே பர்வந்தோறும் நிரதிஶயபோக்யபூதனாய்
அமுதே—அழிந்தாரையுமாக் குவதான அம்ருதரஸமாய்
கார்முகிலே—ஏவம் விதஸாரஸ்யத்துக் காஶ்ரயமான கார்காலத்தில்மேகம்போலேஉதாரவிக்ரஹயுக்தனாய்
என்—அவ்வடிவழகோடே யெனக்கு பாவ்யனானைக்கு
கண்ணா—க்ருஷ்ணனானவனே
நின்னலால்—இப்படி நிரதிஶயபோக்யபூதனானவுன்னையொழிந்தால்
இலேன்காண்—எனக்குஸத்தையில்லை காண்;
என்னை—வ்யதிரேகத்திலழியும் படியானவென்னை
நீ — வ்யதிரேகத்திலழிக்கும்படி யான போக்யதையையுடையநீ
குறிக்கொள்—இரண்டுதலையையுமறிந்து திருவுள்ளம்பற்றவேணும். (எ)

ஆறு ;—(முன்னல்) ஸர்வ கரணங்களுக்கும் நிரவதிக போக்ய பூதனாய், உன் திருவடிகளுக்கு நல்லராயிருப்பாரெல்லாருக்கும் உன்னைக்கொடுக்கும் ஸ்வபாவனாய், அவர்களுடைய த்வதநுபவவிரோதி ஸர்வதோஷநிரஸ நஸ்வபாவனாயிருந்த வுன்னை யெனக்கு நிர்ஹேதுகமாகத் தந்தருளினாய்; நீயல்லது எனக்கொரு தாரகமில்லை; இனி யென்னைக் கைவிடாதே கிடாய் என்று கொண்டு, "எம்பெருமானோடு தமக்கு ப்ரவ்ருத்தமான ஸம்ஶ்லேஷத்துக்கு பங்கம்வருகிறதோ" என்னுமதிஶங்கையாலே யெம்பெருமானையபேக்ஷிக்கிறார்.

ஈடு ; அவ ;—(எட்டாம்பாட்டு) "என்னைநீகுறிக்கொள்ளே" என்றவாறே அவன்குளிரக்கடாக்ஷித்தான், அத்தாலே ஸகலவ்யஸநங்களும்போய் அவனை யநுபவிக்கிறார்.

குறிக்கொள்ஞானங்களா லெனையூழிசெய் தவமும்
கிறிக்கொண்டிப்பிறப்பே சிலநாளிலெய் தினன்யான்
உறிக்கொண்டவெண்ணெய்பா லொளித்துண்ணுமம்மான்பின்
நெறிக்கொண்டநெஞ்சனாய்ப் பிறவித்துயர்கடிந்தே. (அ)

ப;–அநந்தரம் இவ்வநுபவம் தமக்குக்கைவந்தபடியை யருளிச்செய்கிறார்.

உறி—உறியிலே
கொண்ட—சேமித்துவைத்துகொண்ட
வெண்ணெய்—வெண்ணெயையும்
பால்—பாலையும்
ஒளித்து—உடையவர்களறியாமல் க்ருத்ரிமத்தாலேபுக்கு
உண்ணும்—அமுதுசெய்த செயலாலே
அம்மான்—அடிமைகொண்ட ஸ்வாமியான க்ருஷ்ணனுடைய
பின்—பின்னே
(அவ்வபதாநத்துக்குத்தோற்று)
நெறி—அவன்போனவழியே
கொண்ட—போய்த்திரிகிற
நெஞ்சனாய்—நெஞ்சையுடையேனாய்
பிறவித்துயர்-ஜந்மப்ரயுக்ததுரிதங்களை
கடிந்து—காற்கடைக் கொண்டநாதரித்து
குறிக்கொள்—கர்த்ருத்வாதித்யாகத்தாலும்யமநியமாதிகளாலும்குறிக்கொள்ளப்படுவதான
ஞானங்களால்—வேதநத்யாநோபாஸநரூபபர்வபேதங்களாலும்
(ஸத்வித்யாதஹரவித்யாதி வ்யக்திபேதங்களாலும் பலவகைப்பட்ட ஜ்ஞாநயோகங்களாலே) (க) "ஜ்ஞாநாநாஸஹஸ்ரேஷு ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு" (உ) "பஹூநாம் ஜந்மநாமந்தே" என்கிறபடியே
ஊழூழி—அநேககாலங்களிலே
செய்—செய்யப்பட்ட
தவமும் — பக்தியோகமாகிறதபஸ்ஸினுடைய பலத்தை
கிறிக்கொண்டு—பகவத்க்ருபையாகிற நல்விரகைக்கொண்டு
இப்பிறப்பே—இஜ்ஜந்மத்திலே
சிலநாளில்—அல்பகாலத்திலே
யான் — அநுபவத்துக்கடைவில்லாத நான்
எய்தினன்—கிட்டப்பெற்றேன்.

கிறி - விரகு. (அ)

ஆறு ;—(குறிக்கொள்) தாமிப்படி யெம்பெருமானையபேக்ஷிக்க, அவனும், "நாம்விஸ்லேஷிக்க ப்ரஸங்கமென்" என்றருளிச்செய்ய, தாமும் நிவ்ருத்தாதி ஸங்கராய்க்கொண்டு ; அதிதுஷ்கரமாய் அநேககாலஸாத்யமான கர்மயோகஜ்ஞாநயோகஸஹக்ருதபக்தி யோகஸாத்யமானஸம்ஸார நிவ்ருத்தி பூர்வகபகவதநுபவத்தை இஜ்ஜந்மத்திலே அல்பகாலத்திலே அயத்நேந நான்பெற்றேனென்று தாம்பெற்ற ஸம்ருத்தியைச்சொல்லி யநுபவிக்கிறார். ... (அ)

ஈடு ; அவ ;—(ஒன்பதாம்பாட்டு) (௩) "ஸோஸ்நுதே ஸர்வாந்காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஸ்சிதா - ஸோஸ்நுதே ஸர்வாந்காமாந்

(க) லக்ஷ்மீதந்த்ரஸ்ம்ருதி. (உ) கீதை - எ - கக. (௩) தை - ஆந - க.

ஸஹப்ரஹ்மணாவிபஶ்சிதா" என்கிறபடியே, என்னுடைய ஸகலதுரிதங்களும்போம்படி ஸர்வேஶ்வரனை யநுபவிக்கப்பெற்றேனென்று ஹ்ருஷ்டராகிறார்.

கடிவார்தண்ணந்துழாய்க் கண்ணன்விண்ணவர்பெருமான்
படிவானமிறந்தபரமன் பவித்திரன்சீர்ச்
செடியார்நோய்கள்கெடப் படிந்துகுடைந்தாடி
அடியேன்வாய்மடுத்துப் பருகிக்களித்தேனே. (௯)

ப;—அநந்தம் இப்படியவன்குணங்களை யநுபவித்து ஆநந்தியானேனென்கிறார்.

கடி—பரிமளம்
வார்—ப்ரவஹியாநிற்கிற
தண்ணந்துழாய் — செவ்வித்திருத்துழாயையுடையனாய்க்கொண்டு
கண்ணன்—ஆஶ்ரிதபவ்யனான க்ருஷ்ணனாய்
விண்ணவர் பெருமான் — இவ்வடிவழகையநுபவிக்கிற பரமபத வாஸிகளுக்கவ்வருகானமேன்மையையுடையதனக்கு
வானம்—பரமபதத்திலும்
படி—ஒப்பு
இறந்த—இல்லையாகையாலே
பரமன்—தனக்குமேலில்லையான பெரியவனாய்
பவித்திரன்—இப்பெருமையறியாதாரறிவுகேட்டையும் போக்கியநுபவிப்பிக்கும்பாவநபூதனுடைய
சீர்—பரத்வஸௌலப்ய போக்யத்வபாவநத்வப்ரகாசகமானகுணங்களிலே
செடியார்—ஒன்றோடொன்று மிடைந்து தூறுமண்டினாற்போலே யிருக்கிற
நோய்கள்—விஷயருசி தொடக்கமான மஹாவ்யாதிகள்
கெட—நஶிக்கும்படி
படிந்து—கிட்டி
குடைந்து—எங்குமுட்புக்கு
ஆடி—முழுகி
அடியேன்—அவனை யொழியச்செல்லாதபடி அநந்யார்ஹனானநான்
வாய்மடுத்து-புஜிக்கைக்கு உபகரணமான அபிநிவேஶமாகிற வாயைமடுத்து
பருகி—பெருவிடாயன் தண்ணீர்குடித்தாற்போலே நிரம்ப புஜித்து
களித்தேன் — நிரதிஶயமானவாநந்தத்தைப்பெற்றேன்

படிவானமிறந்தவென்று-வடிவழகுக்கு மேகமொப்பல்லவென்றுமாம்.(௯)

ஆறா;—(கடிவார்) நிரவதிகபோக்யபூதனாய், * அயர்வறுமமரர்களதிபதியாய், திருநாட்டிலுங்கூடத் தன்னோடொத்தாரையும் மிக்காரையுமுடையவனல்லாமையாலே பரமனாய், ஸ்வாஶ்ரிதருடைய ஸ்வஸம்ஶ்லேஷ விரோதிஸர்வதோஷங்களையும் போக்கும்

ஸ்வபாவனாயிருந்த வெம்பெருமானுடைய கல்யாணகுணங்களாகிற வம்ருதவெள்ளத்திலே என்னுடைய விடாயெல்லாங்கெடும்படி போய்ப் புக்குப்படிந்துகுடைந்தாடி வாய்மடுத்துப்பருகிக் களித்தே னடியேனென்கிறார். ... ... (௯)

ஈடு; அவ;—(பத்தாம்பாட்டு) "களித்தேன்" என்று, திரியட்டும் ஸம்ஸாரிகளோடே யிருக்கையன்றியே, இவ்வநுபவத்துக்கு தேசிகரான நித்யஸூரிகள் திரளிலே போய்ப் புகுவதெப்போதோ வென்கிறார்.

களிப்புங்கவர்வுமற்றுப் பிறப்புப்பிணி மூப்பிறப்பற்று
ஒளிக்கொண்டசோதியுமா யுடன்கூடுவதென்றுகொலோ
துளிக்கின்றவானிந்நிலஞ் சுடராழிசங்கேந்தி
அளிக்கின்றமாயப்பிரா னடியார்கள்குழாங்களையே. (௧௦)

ப;—அநந்தரம் ஏவம்விதபோகாநந்தத்துக்கு முக்யபோக்தாக்கள் ஸூரிகளாகையாலே, அவர்களோடுகூடுகையை யர்த்திக்கிறார்.

களிப்பும்—விஷயலாபத்தில் களிப்பும்
கவர்வும்—தத்லாபத்திலபிநிவேஸமும்
அற்று—அற்று
பிறப்புப்பிணி மூப்பிறப்பற்று—அதுக்கடியான ஜந்மவ்யாதிஜராமரணங்களுமற்று
ஒளிக்கொண்ட—ஆவிர்ப்பூதமான ஜ்ஞாநாதிகளாகிற ஒளிகளுக்கு ப்ரகாசகமான
சோதியுமாய்—ஜ்யோதிர்மய விக்ரஹத்தையுடையோமாய்க்கொண்டு
துளிக்கின்ற—வர்ஷிக்கிற
வான்—ஆகாசத்தையும்
இ—அத்காலே தரிக்கிற
நிலம்—பூமியையும் (பாதகாஹிதமாம்படி)
சுடர்—பேரொளியையுடைய
ஆழி—திருவாழியையும்
சங்கு—திருச்சங்கையும்
ஏந்தி—ஏந்தி
அளிக்கின்ற—ரக்ஷிக்கருளுகிற
மாயப்பிரான்—மஹோபகாரகனுடைய
அடியார்கள்—நித்யதாஸ்யைக நிரூபணீயரான ஸூரிகளுடைய
குழாங்களை—ஸங்கங்களை
உடன்—ஒருசீராம்படி யுடன்பட்டு
கூடுவது—கூடுவது
என்றுகொலோ—என்றோ.

ஸமஸ்தவிரோதி நிவ்ருத்திபிறந்து ஆவிர்ப்பூதஸ்வரூப ஸ்வபாவரானவர்க்குப்ராப்யம் அடியாரான ஸூரிகளென்றுகருத்து. (௧௦)

ஆறு;—(களிப்பும்) இப்படி யெம்பெருமானுடைய குணங்களாகிற அம்ருதத்தை புஜிக்கிறவாழ்வார், இந்தவம்ருதத்தை நிரஸ்

தஸமஸ்த ப்ரதிபந்தகஙளுப்க்கொண்டு பகவத்குணைகபோகரானநித்
ஸித்தபுருஷர்களுடைய திவ்யபரிஷத்திலேசென்று அவர்களோடே
கூட நான்புஜிப்பதென்றோ வென்கிறார். ... (கஐ

ஈடு ; அவ ;—(பதினோராம்பாட்டு) நிகமத்தில் - இத்திருவாய்மொழியை, பகவதேகபோகராயிருப்பாரென்னைப்போலே தனிப்படாதே திரளாகவநுபவியுங்கோளென்கிறார்.

குழாங்கொள் பேரரக்கன்குலம்வீயமுனிந்தவனைக்
குழாங்கொள்தென்குருகூர்ச்சடகோபன்தெரிந்துரைத்த
குழாங்கொளாயிரத்து ளிவைபத்துமுடன்பாடிக்
குழாங்களாயடியீருடன்கூடிநின்றாடுமினே (கக)

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழியைப்பாடி பரஸ்பரஸங்கதராய் ஸங்கிபவித்து ப்ரீதிப்ரேரிதராய் வர்த்தியுங்கோளென்று பலத்தையருளிச்செய்கிறார்.

குழாங்கொள்-பாதகரான ராக்ஷஸரைத் திரள்திரளாகவுடையனாயிருக்கிற
பேர்—பெருமையையுடையனான ராவணனாகிற
அரக்கன்—ராக்ஷஸனுடைய
குலம்—குலமகப்பட
வீய—நசிக்கும்படி
முனிந்தவனை—முனிந்தருளினவனை
குழாங்கொள் — ஸ்ரீ வைஷ்ணவர்கள் திரளையுடைத்தான
தென்குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வார்
தெரிந்து—ஆராய்ந்து
உரைத்த—அருளிச்செய்த
குழாங்கொள்—பத்தானதிரள்களை வடிவாகவுடைத்தான
ஆயிரத்துள்—ஆயிரம் திருவாய்மொழியிலும்
இவைபத்தும்—இவைபத்தையும்
உடன்—அர்த்தத்தோடே யுடன்பட்டு
பாடி—ப்ரீதிக்குப் போக்குவீடாகப்பாடி
குழாங்களாய்—பாஸ்பர ஸம்ஶ்லிஷ்டராய்க்கொண்டு பல திரளாய்
அடியீருடன் — அடியாரான வுங்கள் ஸ்வரூபத்துக்கநுரூபமாம்படி ஏககண்டராய்
கூடி —ஸம்ஶ்லேஷித்து
நின்று—இடைவிடாதே நின்று
ஆடுமின் — ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணப்பாருங்கோள்.

இது - கலிவிருத்தம்.

(கக)

ஆறு ;—(குழாங்கொள்) ஸபுத்ரஜநபாந்தவமாக ராவணன்மடியும்படி சிவந்தவனையுள்ளபடிகண்டுசொன்ன இத்திருவாய்மொழியை பகவதேக போகராயிருப்பாரெல்லாருங்கூடி புஜியுங்களென்கிறார்.

ஈடு ;—முதற்பாட்டில், திருவுள்ளத்தைக் கொண்டாடினார் ; இரண்டாம்பாட்டில், அத்தையுமிசைவித்த ஸர்வேஶ்வரனைக்கொண்டாடினார் ; மூன்றாம்பாட்டில், தம்நெஞ்சிற்பட்டதொரு உபகாரத்தைச்சொன்னார் ; நாலாம்பாட்டில், அதுக்குப்ரத்யுபகாரமாக ஆத்மஸமர்ப்பணம்பண்ணி அது தனக்கநுரூபித்தார் ; அஞ்சாம்பாட்டில், எனக்குப்ரதமஸுக்ருதமும் நீயேயானபின்பு உன்திருவடிகளைக்கிட்டினேனேயன்றோவென்றார் ; ஆறாம்பாட்டில், இன்றோகிட்டிற்று, தேவரெனக்கு விசேஷகடாக்ஷம்பண்ணினவன்றே பெற்றேனேயல்லேனோவென்றார் ; ஏழாம்பாட்டில், அவனுடையபோக்யதையையநுஸந்தித்து, உன்னைப்பிரியில் தரியேனென்றார்; எட்டாம்பாட்டில் இப்படி நிரதிஶயபோக்யனானவனை எளியதொருவிரகாலே லபிக்கப்பெற்றேனென்றாராதல்; அன்றியே, அநேககாலங்கூடிப்பண்ணிலபிக்கக்கடவ தப:பலத்தை அவனைப்பின்சென்று எளிதாகலபித்தேனென்னுதல் ; ஒன்பதாம்பாட்டில், என்னுடைய ஸகலக்லேஶங்களும் போம்படியநுபவித்துக்களித்தேனென்றார் ; பத்தாம்பாட்டில் இப்படியிவனையநுபவித்துக்களிப்பார் திரளிலேபோய்ப்புகப்பெறுவதெப்போதோ வென்றார் ; நிகமத்தில், இத்திருவாய்மொழியை ஸாபிப்ராயமாக வப்யஸித்து, நாலுநாளும் நால்வரிருவருள்ளார் கூடியிருந்தநுபவிக்கப்பாருங்கோளென்கிறார். (௧௧)

வடக்குத்திருவீதிப் பிள்ளை திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்தில் மூன்றாந்திருவாய்மொழி

முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

இரண்டாம்பத்து
நான்காந் திருவாய்மொழி
ஆடியாடி ப்ரவேஶங்கள்.

—•—

ய ;—நாலாந்திருவாய்மொழியில், இப்படி தாமாசைப்பட்டபடியை யநுபவிக்கப்பெறாமையா லவஸந்நராய், "தமக்குப்பிறந்த ஆர்த்த்யதிசயத்தை ஶமிப்பிக்கைக்கு, ஸர்வரக்ஷகனாய் போக்யபூதனானவனையொழிய இல்லை" என்றறுதியிட்டு; அவன் ஆஶ்ரிதனான ப்ரஹ்லாதனுக்குதவினபடியையும், அநிருத்தனுக் குதவினபடியையும், அபிமதையான பிராட்டிக் குதவினபடியையும், நாட்டுக்குதவினபடியையும், ஶுத்தபாவனதையையும், நிரதிஶயபோக்யதையையும் ரக்ஷணார்த்தமான ஆஸக்தியையும், ஆஸந்நஜநங்களுக்கு மநுபவவிரோதிகளைப் போக்கினபடியையும், ரக்ஷோபகாரவத்தையையும், விரோதிமிகுத்தாலும் வென்று மீழப்பண்ணும் வீரப்பாட்டையு மநுஸந்தித்து, தம்முடைய ஆர்த்தியைப் பரிவர்முகத்தாலே அவனுக்கறிவித்தபடியை, பிரிந்ததலைமகளாற்றாமைக்கு நல்தாயிரங்கின பாசுரத்தாலே யருளிச்செய்கிறார். ... *

ஆறு ;—(ஆடியாடி) இப்படி நித்யபுருஷர்களோடேகூட வெம்பெருமானை யநுபவிக்க ஆசைப்பட்டவாழ்வார், அப்போதே யப்படி யநுபவிக்கப்பெறாமையாலே வந்த நிரதிஶயபாவஸாதத்தாலே யொருக்ஷணமாத்ரமு மாத்மதாரணம்பண்ண வொண்ணாத தபநீயதஶாபந்நராய், அந்தத்தஶாநுகுணமாக வெம்பெருமானைக்குறித்துத் தாம் சொல்லுகிறவார்த்தைகளையுஞ் செய்கிறசேஷ்டிதங்களையுங் கண்டு தம்மோடுஸமாநஶோகரான தம்முடையபந்துக்க ளெம்பெருமானை நோக்கித் தம்முடையதசையை விண்ணப்பஞ்செய்து சொல்லுகிறபடியை யநுஸந்தித்து; இப்பொருளை, எம்பெருமானை யாசைப்பட்டு அத்யந்தமவஸந்நையா யிருந்தாளொரு பிராட்டியுடைய திருத்தாயார் அவளுடைய தசையைவிண்ணப்பஞ்செய்துகொண்டு, "இவள் முடிவதற்குமுன்பே சடிடெனவந்துவிஷயீகரித்தருள வேணும்" என்றுகொண்டெம்பெருமானை யபேக்ஷிக்கிற வாக்யாபதேசத்தாலே யருளிச்செய்கிறார்.

ஈடு ;—கீழ்த்திருவாய்மொழியிலே - "பருகிக்களித்தேனே" என்று ஹ்ருஷ்டராய், "அது தன்னைப்பாகவதர்களோடே உசாவித்

தரிக்கவேணும்" என்றுபாரித்து, அதுக்கிவ்விபூதியிலாளில்லாமை யாலே, நித்யவிபூதியிலே நித்யஸூரிகள் திரளிலேபோய்ப்புக்கு* (க) * வொயயஙஃ வாருறாஓ - போதயந்த: பரஸ்பரம்பண்ணி யநுபவிக்கக்கோலி நினைத்தபோதே அத்திரளிலேபோய்ப்புக் கநுப விக்கப்பெறுமையாலே மிகவுமவஸந்நராய், தம்முடையதசையை ஸ்வகீயரான ஸ்ரீவைஷ்ணவர்கள் எம்பெருமானுக் கறிவிக்கிறபடியை அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

* அஞ்சிறையமடநாரையில் - தூதுவிடக்ஷமரானார்; * வாயுந் திரையுகளில் - கண்ணுற்கண்ட பதார்த்தங்களடைய பகவதலாபத் தாலே நோவுபடுகிறனவாகக்கொண்டு அவற்றுக்குமாக நோவுபட க்ஷமரானார்; அவ்வளவன்றிக்கே ஆற்றுமைகரைபுரண்டு, காமான தன்மையழிந்து ஒருபிராட்டிதசையைப்ராப்தராய், அதுதன்னி லும் தன்தசை தான் வாய்விட்டுப்பேசமாட்டாதே பார்ஸ்வஸ்த்தரா றிவிக்க வேண்டும்படியாய், ஸ்த்திதிகமநஸயநாதிகளி லொருநியதி யின்றியிலே அரதியாய்நோவுபட, இப்பெண்பிள்ளைதசையை யநு ஸந்தித்த திருத்தாயார், "ராமக்ருஷ்ணுத்யவதாரங்களைப்பண்ணி ஆர்த்தராணாரார்த்தியெல்லாம் பரிஹரிக்கக்கடவ ஸ்வபாவரானநீர் உம்மையாசைப்பட்டவிவள் நோவுபடப்பார்த்திருப்பதே" என்று எல்லாவளவிலுமவனை யிட்டுப்பரிஹரித்துக்கொள்ளுங் குடியாகை யாலே அவன்திருவடிகளிலேபொகட்டு, "இவளிடையாட்டத்தில் நீர்செய்யநினைத்திருக்கிறதென்" என்று கேட்கிறபாசுரத்தாலே தம்முடையதசையை யருளிச்செய்கிறார்.

காசையிழந்தவனுக்கும், பொன்னையிழந்தவனுக்கும், ரத்நத் தையிழந்தவனுக்கு மொத்திராதிறேக்லேஸம்; அவதாரத்திலே* பெருநிலங்கடந்த நல்லடிப்போதை யநுபவிக்கவாசைப்பட்டுக்கிடை யாமையாலே வந்தவாற்றுமை - *அஞ்சிறையமடநாரையில்; "நம்பி யைத்தென்குறுங்குடிநின்ற" என்றர்ச்சாவதாரத்திலே யநுபவிக்க வாசைப்பட்டுக் கிடையாமையாலே வந்தவாற்றுமை - *வாயுந்திரை யுகளில்; இதில் - அவன்றனக்கும் ப்ராணபூதரான நித்யஸூரிகளை யநுபவிக்கவாசைப்பட்டுக் கிடையாமையாலே வந்தவாற்றுமையா கையாலே அவற்றிலுமிதுக்காற்றுமை விஞ்சியிருக்கும்; நித்யஸூரி கள் திரளிலேபோய்ப் புக்கநுபவிக்கப் பெறாமையாலே நோவுபடுகிற

(க) கீதை.

தாகில், பின்னையவர்களைச் சொல்லிக்கூப்பிடாதே அவனைச்சொல் லிக்கூப்பிடுவானென்னென்னில் ; எங்கேனுமொருகாட்டிலே ரத்நங் கள்பறியுண்டாலும், நாட்டிலே ராஜாவின்வாசலிலே அவன்பேர் சொல்லியிறேகூப்பிடுவது; அவர்களோட்டை ஸம்ஶ்லேஷத்துக்கும் கடவனவனாகையாலே அவனைச்சொல்லிக்கூப்பிடுகிறது.

பகவத்விஶ்லேஷத்திலேயுட்புகநின்றுவிறேபாகவதவிஶ்லேஷந் தான்தெரிவது ; (க) [ஜாநந்ஹஸம்ஸௌஷ்ட்ராணி ஸாதைநஹா த்தநா । ஸத்ராத்ரெளநவீரேண ஸ்யாவாவஸந்நந - கதாந் வஹம்ஸமேஷ்யாமி பரதேநமஹாத்மநா । ஸத்ருக்நேநசவீரேணத் வயாசரகுநந்தந] ஸ்ரீபரதாழ்வானோடும் ஸ்ரீஶத்ருக்நாழ்வானோடும் கூடப்பெறாத கிழிக்குறையாலே, கூடநிற்கிற விளையபெருமாளோ டும் கூடிற்றுய்த்தோற்றிற்றில்லையிறே பெருமாளுக்கு ; (உ) [ஸஹி நஸஹிதோராமோ லக்ஷ்மணேநவஸீதயா - குஹேநஸஹி தோராமோலக்ஷ்மணேநசஸீதயா] கூடப்போன இளையபெருமா ளோடும் பிராட்டியோடும் கூடிற்றுய்த்தோற்றிற்று ஸ்ரீகுஹப்பெரு மாளோடு கூடினபின்பிறே ; இப்படியிறே அவன்றனக்கு மங்வயவ் யதிரேகங்க ளிருக்கும்படி ; ததீயஸம்ஶ்லேஷத்தையாசைப்பட்டுப் பெறாமையாலே வந்த இழவு, பெற்றபகவத்ஸம்ஶ்லேஷமிழந்து, அடியேபிடித்து ப்ரார்த்திக்கவேண்டும்படியாய் வந்துவிழுந்தது. * வாயுந்திரையுகளி லார்த்தி தீரவந்து ஸம்ஶ்லேஷித்த ஸம்ஶ்லே ஷம் முற்றுவதற்குமுன்னே வந்தபிரிவாகையாலும் ஆற்றவொண் ணாதிறே.

ஈடு ; அவ ;—முதற்பாட்டில், ஆபத்தேசெப்பேடாக ஆஶ்ரி தன்ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலேவந்து உதவும் ஸ்வபாவனானவனைச் சொல்லிக்கூப்பிடாநின்றாளென்கிறாள். *

ஆடியாடி யகங்கரைந்திசை
பாடிப்பாடிக் கண்ணீர்மல்கி யெங்கும்
நாடிநாடி நரசிங்காவென்று
வாடிவாடு மிவ்வாணுதலே. (க)

ப ;—முதற்பாட்டில், "ப்ரஹ்லாதனுக்குதவினாற்போலே வந்துதவுகிறி லன்" என்று இவள் தளராநின்றாளென்கிறாள்.

(க) ரா - ஆர கக - சo. (உ) ரா - பா - க - உக.

இவ்வாணுதல்—ஒளிவிடுகிற நெற்றியையுடையளான இவள்
ஆடியாடி — வல்லாராடினாற்போலே தர்ஸநீயமாம்படி, தன்னுற்றாமையாலே நின்ற விடத்தில் நில்லாதே பலகாலுமுலாவி
அகங்கரைந்து — மநஸ்ஸைஸ்திலம்பிறந்து
இசைபாடிப்பாடி — அந்தக்லேஸமடியாக, இசையிலே பலகாலும் பாடுவாரைப்போலே ப்ரலாபித்து
கண்ணீர்மல்கி—கரைந்தநெஞ்சு ப்ரவஹிக்குமாபோலே கண்கள் நீர்மல்கி
எங்கும்—ஸர்வதேஸத்திலும்
நாடிநாடி — அவன்வரவை யாராய்ந்து பலகாலும்பார்த்து
நரசிங்காவென்று—எங்குந்தோற்றவல்ல நரஸிம்ஹரூபத்தையுடையவனே யென்று
வாடிவாடும்—அவ்வளவிலும் வரக்காணமையாலே வாட்டத்தின் மேல் வாட்டமாம்படி தளராநிற்கும். (க)

ஆறு;-எம்பெருமானைப்பிரிந்த வ்யஸநத்திலே தன்னைக்கொண்டு தரிக்கமாட்டாமையாலே தன்னுடைய ஆஸ்வாஸார்த்தமாக அவனுடையகுணசேஷ்டிதங்களைப்பாடிபாடினவிடத்திலும் அது தனக்காஸ்வாஸகரமாகாதேஅவஸாதகரமேயாக, "இனியவனைக்கண்டாலல்லது தரிக்கமுடியாது" என்றுபார்த்து அவனையெங்குந்தேடி, ஆஸ்ரிதருடைய துர்த்தஸைகளில் ஸஹஸைவதோன்றிக்கொண்டுநிற்கும் ஸ்வபாவனானவனேயென்றழைத்துப் பின்னையுங்கண்டாலுந் தேறுகதொருபடி அறவாடிப்போயறவாடினாள் இவ்வாணுதலென்று திருத்தாயார் ப்ரலாபிக்கிறாள். ... ... (க)

ஈடு ; அவ ;—(இரண்டாம்பாட்டு) நடுவேவாடுமித்தனையேயோ வேண்டுவது, விரோதிகிடக்கச் செய்தேயென்ன, பாணனுடைய பாஹுவநத்திலும் ப்ரபலமோ! இவள் விரோதியென்கிறாள்.

வாணுதலிம்மடவரலுமைக்
காணுமாசையுள் நைகின்றாள்விறல்
வாணனாயிரந் தோள்துணித்தீருமைக்
காண நீரிரக்க மிலீரே. (உ)

ப ;—அநந்தரம், அநிருத்தனை நிரோதித்தபாணனைத் தோள்மிடுக்கறுத்த நீர் இவளுக்கிரங்கு கிறிலீரென்கிறாள்.

வாள்—ஒளிவிடுகிற	வாணன்—பாணனுடைய
நுதல்—நுதலையுடையளாய்	ஆயிரந்தோள் துணித்தீர் } ஆயிரந்தோள் துணி தவரே
இம்மடவரல்—மடப்பத்தால் விஞ்சின விவள்	உம்மை—உம்மை
உம்மை—தர்ஶநீயரான வும்மை	காண—காண்கைக்கு
காணுமாசையுள்—"காணவேணும்" என்கிறவாசையிலே	நீர்—நீர்
நைகின்றாள்—ஶிதிலையாகாநின்றாள்;	இரக்கமிலீர் — இரக்கமில்லாமை யிராநின்றீ
விறல்—பெருமிடுக்கனான	

இவளாசைப்பட்டாலும் பசையில்லை, உம்முடைய இரக்கமிறே காட்டு தென்று கருத்து. (உ

ஆறு ;—(வாணுதல்) "உம்மைக்காணவேணும்" என்னும சையாலே இவள்நையாநின்றாள் ; உம்மைக்காணும்படி யிவள்பக்க க்ருபைபண்ணுகிறிலீர்; ப்ரதிகூலர் திறத்திலன்றோ இப்படி நைர் க்ருண்யம்பண்ணுவது; உம்மையாசைப்பட்டார் திறத்திலுமிப்ப நைர்க்ருண்யம் பண்ணலாமோவென்கிறாள். ... (உ

ஈடு ; அவ ;—(மூன்றாம்பாட்டு) இன்றுஇச்செயல் செய்யக்கட தாக நினைத்தநீர், அன்று*உண்ணுதுறங்காதொலிகடலை யூடறுத் அச்செயலை என்றியசெய்தீரென்கிறாள்.

> இரக்கமனத்தோ டெரியணை
> அரக்குமெழுகு மொக்குமிவள்
> இரக்கமெழீ ரிதற்கென்செய்கேன்
> அரக்கனிலங்கை செற்றீருக்கே. (௩

ப ;—அநந்தரம், பிராட்டிக்காக ராவணனையும் லங்கையையுமழித்த நீ இரங்குகிறிலீர், இதற்குச் செய்வதென்னென்கிறாள்.

இரக்கம்—க்லேஶோத்தரமான	இரக்கமிலீர்—நீரிரக்கந்தோற்ற விரு கிறிலீர்
மனத்தோடு—நெஞ்சோடே	இதற்கு—இது நிமித்தமாக
இவள்—இவள்	அரக்கன்-ராக்ஷஸனானராவணனுடை
அரக்கும்—சிக்கென்றவரக்கும்	இலங்கை-லங்கையை
மெழுகும்—மெத்தென்ற மெழுகும்	செற்றீருக்கு—அழித்தவுமக்கு
எரியணை யொக்கும் } அக்நிஸகாஶத்தி லொக்க வுருகுமாப்போலே, கற் பும்மடமும் கட்டுக்குலை யாநின்றாள் ;	என்—எத்தை
	செய்கேன்—செய்வேன்.

இல்லாத விரக்கத்தை யுண்டாக்கவோ? இவள் ஸைதில்யத்தை (க) "தத்கஸ்யஸத்ருஸம்பவேத் - தத்கஸ்யஸத்ருஸம்பவேத்" என்றவள் நெஞ்சுபோலே சிக்கெனப் பண்ணவோவென்று கருத்து. (ங)

ஆறு ;—(இரக்கமனத்தோடு) அவஸந்நமான மநஸ்ஸை யுடையளாய், எரியணையரக்கு மெழுகும்போலே விரஹாக்நியாலே தஹ்யமானையான விவள்பக்கல் க்ருபையுங்கூடப் பண்ணுகிறிலீர். இதற்கென்செய்கேன். கெட்டேன், ஓ கொடுமையே! இதுவென்கிறாள்.

ஈடு ; அவ ;—(நான்காம்பாட்டு) "'அரக்கனிலங்கை செற்றீர்' என்கிறவிது நியதஸ்வபாவமன்றுகாண், காதாசித்கங்காண்" என்றாள் திருத்தாயார்; அது பொறுக்கமாட்டாமை, அது தன்னையே சொல்லுகிறாள்.

இலங்கைசெற்றவனே யென்னும்பின்னும்
வலங்கொள் புள்ளுயர்த்தா யென்னுமுள்ளம்
மலங்கவெவ்வுயிர்க்கும் கண்ணீர்மிகக்
கலங்கிக் கைதொழும் நின்றிவளே. (ச)

அநந்தரம், நாட்டுக்குதவினபடியைச் சொல்லி க்லேஸியாநின்றாளென்கிறாள்.

இவள்—இவள்
பின்னும்—முன்புத்தை க்லேஸத்தளவன்றியே, பின்னையும்
இலங்கை—மாலிப்ரப்ருதிகளிருந்த லங்கையை
செற்றவனே—செறுத்தவனே
என்னும்—என்னும்;
(அதுக்குறுப்பாக)
வலங்கொள்—பலவானான
புள்—பெரியதிருவடியை
உயர்த்தாய்—வாஹநமும் த்வஜமுமாக வுடையவனே
என்னும்—என்னும்,
(அப்படி தனக்குவந்து தோற்றாமையாலே)
உள்ளம்—நெஞ்சு
மலங்க—அலமாக்கும்படி
வெம்—வெவ்விதாக
உயிர்க்கும்—மூச்சுவிடும்;
கண்ணீர்—கண்ணீரானது
மிக—மேலிட
கலங்கி—அறிவுகலங்கி
நின்று—வருகிறானாக நினைத்து
கைதொழும்-அஞ்ஜலிபண்ணாநிற்கும்.

ஆறு ;—(இலங்கை) இப்படி நான் அவனுடைய கொடுமையை நினைத்து "இலங்கைசெற்றீர்" என்று சொல்லுமளவில், தான்

(க) ரா - ஸு - நக - ௩௦.

அத்தைக்கேட்டு அவனுடைய ப்ராணயித்வத்தையே நினைத்து, இலங்கைசெற்றவனே யென்னும்; பின்னையும், பெரியதிருவடிமேலே யேறி யருளிவந்து தோன்றுயென்னும் ; என்றால் அப்போதே வரக் காணாமையாலே உள்ளம்மலங்க வெவ்வுயிர்க்கும் ; கண்ணீர்மிகக் கலங்கி இவள்நின்று கைதொழாநிற்கு மென்கிறாள். (ச)

ஈடு ; அவ ;—(அஞ்சாம்பாட்டு) இவளிப்படி க்லேசிக்கிற ...த் திலும் வரக்காணாமையாலே, நிர்த்தயரென்கிறாள்.

இவளிராப்பகல் வாய்வெரீஇத் தன
குவளையொண் கண்ணநீர்கொண்டாள் வண்டு
திவளுந் தண்ணந்துழாய் கொடீரென
தவளவண்ணர் தகவுகளே. (ரு)

ப ;—அநந்தரம் ஸாத்தபாவரான வும்முடைய ஸ்வபாவமிருந்தபடி யென் னென்கிறாள்.

இவள்—விலக்ஷணையானவிவள்
இராப்பகல்—இரவோடுபகலோடு வாசியற
வாய்வெரீஇ—திருத்துழாயை வாய் வெருவி (அதுகிடையாமையாலே)
தன—தன்னுடைய
குவளை—நெய்தல்போலே
ஒண்—அழகியவான
கண்—கண்களிலே
நீர்—ஶோகாஶ்ருவை
கொண்டாள்—உடையளானாள்;
வண்டு—வண்டுகள்
திவளும்—மதுபாநம்பண்ணி, ரஸாயந ஸேவை பண்ணினாரைப் போலே படிந்து ஒளி விடும்படியான
தண்ணந்துழாய்—திருத்துழாயை
கொடீர்—கொடுக்கிறிலீர்;
தவளவண்ணர்—ஆஶ்ரிதவிஷயத்தில் ஸாத்தஸ்வபாவரான உம்முடைய
தகவுகள்—க்ருபாதிஸ்வபாவங்கள்
என—என்னென்னவாயிருக்கின்றன.

வாய்வெருவினதற் கிரக்கமற்று, கண்ணநீர்க்கிரக்கமற்று, “இவளுக்குக் கொடுக்கவேண்டும்” என்றிரக்கமற்று, வண்டுகளுக்குக் கொள்ளைகொடுத்தது என்ன ஸ்வபாவமென்று கருத்து (ரு)

ஆறு ;—(இவள்) “இலங்கைசெற்றவனே” என்றும், “வலங் கொள் புள்ளுயர்த்தாய்” என்றுமிப்படியிராப்பகல் வாய்வெருவி, தனகுவளை யொண்கண்ணநீர்கொண்டாள் ; இப்படிதயநீயதஶை வரச்செய்தேயும் வண்டுதிவளும் தண்ணந்துழாய் கொடுக்கிறிலீர் ;

பரமகாருணிகரான வும்முடைய காருண்யமிருக்கும்படி யிதுவோ வென்கிறாள். ... ... (௫)

ஈடு ; அவ ;—(ஆறாம்பாட்டு) இவளவஸாதத்தைக்கண்ட திருத்தாயார் " நிர்த்தயர் " என்றாள் ; இவளதுபொறாதே, " தகவுடையவனே " என்று அத்தைநிரூபகமாகச் சொல்லாநின்றாளென்கிறாள்.

தகவுடையவனே யென்னும் பின்னும்
மிகவிரும்பும் பிரானென்னு மென
தகவுயிர்க்கமுதே யென்னு முள்ளம்
உகவுருகி நின்றுள்ளுளே. (௬)

ப ;—அநந்தரம் தன்னிலேஸ்திதியாய், உம்முடைய போக்யதாதிசயத்தைப்பேசிவாய்புலற்றா நின்றாளென்கிறார்.

(இவள்)
உள்ளம்—தன்னெஞ்சு
உக—அழியும்படி
உருகி—ஸ்வரூபம் நீராயுருகி
உள்ளுளே—தன்னிலேதன்னிலே
நின்று—நின்று
தகவு—என்னைப் புஜிப்பிக்கைக் கடியான க்ருபாதிஸ்வபாவங்களை
உடையவனே—உடையவனே
என்னும்—என்னும்,

பின்னும்—அவ்வளவிலே நில்லாதே
மிக—மேன்மேலும்
விரும்பும்—விரும்பும்படியான
பிரான்—உபகாரகனே
என்னும்—என்னும்,
எனது—என்னுடைய
அகவுயிர்க்கு—அந்தராத்மாவுக்கு [மே
அமுதே—நித்யமான நிரதிசயபோக்ய
என்னும்—என்னாநிற்கும்.

மிகவிரும்புமென்று॰ தன்னை அவன் விரும்பினபடியாகவுமாம். (௬)

ஆறு ;—(தகவு) இப்படியிவளுடைய ப்ரஸங்கத்தாலே அவனுடைய க்ருபையைநினைத்துப் பரமகாருணிகனேயென்றுகூப்பிடும் ; இப்படிக்ருபையையுடையவன் நம்மைக்கைவிடானென்று பார்த்துப் பின்னையும் மிகவுமாசைப்படும் ; ஆசைப்பட்ட வப்போதே பெருமையாலேவந்த வவஸாதத்தாலே நெஞ்சுருகும்படியுருகிநின்று, கேட்கச்சொல்லக்ஷமையல்லாமையாலேபோய்த் தன்னுள்ளுளே பிரானேயென்றும், என்னுடையபோக்யமென்றுஞ் சொல்லாநிற்கு மென்கிறாள். ... ... (௬)

ஈடு ; அவ ;—(ஏழாம்பாட்டு) தன்னெஞ்சிலோடுகிறது பிறரறியாதபடி அடக்கமுடையவிவள், வாய்விட்டுக்கூப்பிடும்படி இவளை வஞ்சித்தா னென்கிறாள்.

உள்ளுளாவி யுலர்ந்துலர்ந்தென
வள்ளலேகண்ணனே யென்னும்பின்னும்
வெள்ளநீர்க்கிடந்தா யென்னு மென
கள்விதான்பட்ட வஞ்சனையே. (எ)

ப ;—அநந்தரம், "அபேக்ஷித்தார்க்கு உபகரிக்க அணித்தாகவர்த்திக்கிறவனே" என்றுநின்றாளென்கிறாள்.

எனகள்வி—எனக்குத் தன்னெஞ்சில் விகாரந்தோன்றாதபடி மறைக்குங்களவையுடையவிவள்
தான்பட்ட—தானகப்படும்படி யவன் செய்த
வஞ்சனை—வஞ்சனைகளிருந்தபடி
உள்ளுள்—ஹ்ருதய ஸ்தாநத்துக்குள்ளே நிற்கிற
ஆவி—அஸோஷ்யமான அந்தராத்மாவானது
உலர்ந்துலர்ந்து—உலர்த்திமேலுலர்த்தியாம்படியாய்
என—எனக்குன்னை முற்றூட்டாகத் [தந்த
வள்ளலே—மஹோதாரனே
கண்ணனே—அதுதானுன் பேறாம்படியான தாழ்ச்சியையுடைய க்ருஷ்ணனே
என்னும்—என்னும்,
பின்னும்—அதுக்குமேலே (அவதாரகந்தமாம்படி யணித்தாக)
வெள்ளநீர்—பரிபூர்ண ஜலமான கடலிலே
கிடந்தாய்—கண்வளர்ந்தருளினவனே
என்னும்—என்னும்.

அப்படுக்கை தனக்குறுப் பென்றிருக்கிறாள். (எ)

ஆறு ;—(உள்ளுளாவி) எம்பெருமானைப் பிரிகையாலே பரிதப்தையாய் அந்தப்பரிதாபத்தைப் பொறுக்கமாட்டாமையாலே, விடாய்பட்டார் "தண்ணீர் தண்ணீர்" என்னுமாபோலே என்வள்ளலே! என்கண்ணனேயென்னும்; பின்னும் வெள்ளநீர்க்கிடந்தாயென்னும்; எம்பெருமானையுங்கூட வஶீகரிக்கு மழகுடையளானவிவள் அவனுடைய குணங்களிலே இங்ஙனே யகப்பட்டாளென்கிறாள். (எ)

ஈடு ; அவ ;—(எட்டாம்பாட்டு) உம்மை யநுபவித்து ஸுகிக்கவைத்திரல்லீர்; கம்ஸனைப்போலே முடித்துவிட்டீரல்லீர், உம்மை "ரக்ஷகர்" என்றிருந்த விவள் படும்பாடே யிதுவென்கிறாள்.

வஞ்சனேயென்னுங் கைதொழுந்தன
நெஞ்சம்வேவ நெடிதுயிர்க்கும் விறல்
கஞ்சனைவஞ்சனை செய்தீரும்மைத்
தஞ்சமென்றிவள் பட்டனவே. (அ)

ப;—அநந்தரம், ஆஸந்நஜநங்களுக்கு 'அநுபவவிரோதி நிவர்த்தகரான மைவிஸ்வஸித்து இவள் பட்டபாடுகளென்னென்கிறாள்.

வஞ்சனே—உட்புகுந்தாரைப்போலே பவ்யதையைக்காட்டி வஞ்சித்தவனே
என்னும்—என்னும்
கைதொழும்—"அவ்வஞ்சகத்துக்குத் தொழவேண்டாவோ" என்று ப்ரணயரோஷத்தாலே கையெடுத்துத் தொழாநிற்கும்;
(பூர்வஸம்ஶ்லேஷ ப்ரகாரத்தை நினைத்து)
தனநெஞ்சம்—தன்னெஞ்சானது
வேவ—தக்தமாம்படி

நெடிதுயிர்க்கும்—நெடுமூச்செறியும்;
விறல்—பெருமிடுக்கனை
கஞ்சனை—கம்ஸனை
வஞ்சனைசெய்தீர்—அவன் வஞ்சனை அவனோடேபோம்படி பண்ணினவரே
உம்மை—மதுரையில் பெண்களுக்குத வின வும்மை
தஞ்சமென்று—தனக்குத்தஞ்சமென்று
இவள்—இவள்
பட்டன—பட்டவெள்ளம்
ஏ—என்.

இப்படி காணத்ரயமும் ஶிதிலமாம்படி பண்ணவேணுமோ வென்று கருத்து. (அ)

ஆறு;—(வஞ்சனே) உன்னுடைய குணங்களிலே என்னை யகப்படுத்தினவனே யென்னும்; பின்னைத்தன் திருவாயாலொன்றுஞ் சொல்லமாட்டாமையாலே தன்கைகளாலே தொழுதிருக்கும்; அப்போதே அவனைக் காணாமையாலே தன்னெஞ்சம்வேவ நெடிதுயிர்க்கும்; "தன்னுடைய வாபத்துக்குத் துணை" என்று விஶ்வஸித்திருந்த விவளும் உமக்கு ப்ரதிகூலனை கம்ஸன்பட்டது படுவதே யென்கிறாள். ... ... (அ)

ஈடு; அவ;—(ஒன்பதாம்பாட்டு) "இவள்பட்டன" என்கைக்கு என்பட்டாளென்ன; படுவதெல்லாம் பட்டாளாகில் இவளினி என் படுவாளென்கிறாள்.

பட்டபோதெழுபோதறியாள் விரை
மட்டலர்தண்டுழா யென்னுஞ் சுடர்
வட்டவாய்நுதி நேமியீர் நும
திட்டமென்கொ லிவ்வேழைக்கே. (கூ)

ப ;—அநந்தரம், இவ்வளவில், ரக்ஷ்ணோபகாரணவத்தையை யுடைய உம்முடைய நினைவு ஏதாயிருக்கிற தென்கிறாள்.

(உறங்காமையாலும், உணர்ந்துதெளிவுடையளா யிராமையாலும்)
பட்டபோது—அஸ்தமித்தபோதும்
எழுபோது—உதித்தபோதும்
அறியாள்—அறிகிறிலள்;
(அறிகிறது நெஞ்சத்திலே யாகையாலே)
விரை—பரிமளமும்
மட்டு—மதுவும்
அலர்—பரம்பின
தண்டுழாய்—செவ்வித்திருத்துழாய்
என்னும்—என்னாநிற்கும்;
சுடர்—ஜ்வாலைகளையுடைய
வட்டம்—வட்டமான
வாய்—வாயையும்
நுதி—கூர்மையையுமுடைய
நேமியீர்—திருவாழியையுடையவரே
நுமது—ப்ரதிபந்தகத்தைக் கழித்துக் கிட்ட பரிகரமுடையீரான வும்முடைய
இட்டம்—நினைவானது
இவ்வேழைக்கு—பற்றிற்றுவிடமாட்டாத விச்சபலைக்கு
என்கொல்—ஏதாயிருக்கிறது.

ஸத்தைக் குறுப்பாயிருக்கிறதோ, முடிவுக்குறுப்பாயிருக்கிறதோவென்று கருத்து. (கூ)

ஆறு ;—(பட்டபோது) ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாகத் திருவாழியை யேந்திக்கொண்டிருக்கிற நீர், உம்மோடு ஸம்ஸ்லேஷிக்கையிலுள்ள வபிநிவேஸத்தாலே மற்றொன்று மநுஸந்திக்க க்ஷமையன்றிக்கே யிருக்கிற விவள்திறத்தில் செய்யநினைத்தருளிற்றுஎன்னென்கிறாள். ... ... (கூ)

ஈடு; அவ ;—(பத்தாம்பாட்டு) இவள், நோக்கொன்று மொழிய அல்லாதவெல்லா மொழிந்தாள் ; இந்நோக்கொன்றையும் நோக்கிக் கொள்ளீரென்கிறாள்.

ஏழைபேதை யிராப்பகற்றன
கேழிலொண்கண்ணநீர் கொண்டாள்கிளர்
வாழ்வைவேவ விலங்கைசெற்றீரிவள்
மாழைநோக்கொன்றும் வாட்டேன்மினே. (கo)

ப ;—அநந்தரம், விரோதிமிக்கால் வெந்துவிழப்பண்ணும் வீரப்பாட்டை யுடைய நீர் ; இவள்நோக்கொன்று மொழியச்சென்றற்றது; இத்தைமுடியாதொழிய வேணுமென்கிறாள்.

ஏழை—கிட்டாதொழியிலும் விடாத சபலையுமாய்
பேதை—என்சொற்கேளாத பேதையுமான விவள்
இராப்பகல்—இரவோடு பகலோடு வாசியற
தன—தன்
கேழ்—ஒப்பு

இல்—இல்லாத
ஒண்—அழகிய
கண்—கண்கள்
நீர்—நீர்
கொண்டாள்—கொள்ளும்படியானாள்;
கிளர்—மிக்கவுயர்த்தியை யுடைத்தாய்,
பரபீடாபலமான
வாழ்வு—ராவணைஸ்வர்யம்
வேவ—அக்நிஸாத்காம்படி
இலங்கை—லங்கையை
செற்றீர்—அழியச்செற்றவனே
(அவளுக்கு உவிஞற்போலே)
இவள்—இவளுடைய
மாழை—முக்தமான மானின்நோக்குப்
போலே யிருக்கிற
நோக்கொன்றும்—நோக்கை யொன்
றையுமாகிலும்
வாட்டேன்மின்—க்ஷயிப்பியாதொழிய
வேணும்

இவள் நோக்குக்கிலர் எல்லார்க்கு முஜ்ஜீவநஹேதுவென்று கருத்து. (கo)

ஆறு ;—(ஏழைபேதை) உம்மையாசைப்படும் ஸ்வபாவையாய், உம்முடைய துர்லபத்வத்தை யறியமாட்டாத பால்யதசாபந்நையா யிருந்தவிவள், உம்மை யாசைப்பட்டுப்பெறாத வ்யஸநத்தாலே அத்யந்தமவஸந்நையானாள்; இவள் முடிவதற்குமுன்னே ப்ரதிபந்தகங்களையும் நீரேபோக்கிக்கொண்டு ஈண்டெனவந்து ரக்ஷித்தருளவேணுமென்று எம்பெருமானை யபேக்ஷிக்கிறாள். ... (கo)

ஈடு ; அவ ;—(பதினொன்றும்பாட்டு.) நிகமத்தில்-இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லார், இவர் ப்ரார்த்தித்தபடியே நித்யஸூரிகள் திரளிலேபோய்ப்புக்கு ஸர்வேஸ்வரன் திருவடிகளிலே * சூட்டுநன்மாலைப்படியே திருமாலை சாத்தி யடிமைசெய்யப் பெறுவர்களென்கிறார்.

வாட்டமில் புகழ்வாமநனை யிசை
கூட்டி வண்சடகோபன் சொல்லமை
பாட்டோராயிரத் திப்பத்தாலடி
சூட்டலாகு மந்தாமமே. (கக(

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக பகவதாராதநரூப கைங்கர்யத்தை யருளிச்செய்கிறார்.

(நோக்குவாடாதபடி தன்குறைவு
தோன்ற அர்த்தியாய்வந்து
முகங்காட்டினபடியாலே)
வாட்டம்—வாட்டம்
இல்—இல்லாத
புகழ்—குணப்ரதையை யுடைய
வாமநனை—வாமநனைக்குறித்து
வண்—உதாரரான
சடகோபன்—ஆழ்வார்
இசை—இசையோடே
கூட்டி—கூட்டி
சொல்—சொன்ன

அமை—லக்ஷணபூர்த்தியாலே யமைதி யையுடைய	இப்பத்தால்—இப்பத்தால்
ஓர்—அத்விதீயமான	அடி—அந்தவாமநனடியிலே
பாட்டு—பாட்டுக்கள்	அம்—அழகிய
ஆயிரத்து—ஆயிரத்திலும்	தாமம்—மாலையை
	சூட்டலாகும்—சூட்டலாம்.

இது வஞ்சிவிருத்தம். (கக)

ஆறு ;—(வாட்டமில்) ஆழ்வாரிப்படி யவஸந்நரானவிடத்தில், அவருடைய அவஸாதமெல்லாம் போம்படிவந்து தோன்றி யருளுகையாலே, வாட்டமில்லாத ப்ரணயித்வ வாத்ஸல்ய காருண்ய ஸௌஶீல்யாதி கல்யாணகுணங்களை யுடையனாயிருந்த எம்பெருமானைச்சொன்ன வித்திருவாய்மொழி, அவன் திருவடிகளிலே யழகிய தொரு திருமாலையாகச் சூட்டலாமென்கிறார். (கக)

ஈடு ;—முதற்பாட்டில்-ஆஶ்ரித்ராபத்தே செப்பேடாக வுதவும் ஸ்வபாவனானவன், இவளுடைய ஆபத்துக்குவந் துதவுகிறிலனென்றாள் ; இரண்டாம்பாட்டில்-“ விரோதியுண்டே ” என்று நினைவாக, பாணனுடைய பாஹுவநத்திலும் வலிதோ இவள் விரோதியென்றாள் ; மூன்றாம்பாட்டில்-இப்படி செய்யநினைத்த நீர், முன்பு அச்செயலை என்றியசெய்தீரென்றாள்; நாலாம்பாட்டில்-அதுபொறுக்கமாட்டாமல் அதுதன்னையே யுபகாரமாகச் சொல்லாநின்று ளென்றாள் ; ஐந்தாம்பாட்டில் - அவ்வளவிலும் வாராமையாலே, நிர்த்தயனென்றாள் திருத்தாயார் ; ஆறாம்பாட்டில்-அதுபொறுக்கமாட்டாமல், கெடுவாய்! ஆகரத்தில் தகவுமறுக்குமோ, அதுநங்குறை காணென்கிறாளென்றாள் ; ஏழாம்பாட்டில் - அவன் குணஹாநி தன்னையே குணமாகக்கொள்ளும்படி இவளை வஞ்சித்தானென்றாள் ; எட்டாம்பாட்டில்-உம்மை யபாஶ்ரயமாகப் பற்றினவிவள் படும்பாடே இதுவென்றாள் ; ஒன்பதாம்பாட்டில் - இவள்பேற்றில் நீர்செய்தருள நினைத்திருக்கிற தென்னென்றாள் ; பத்தாம்பாட்டில் - ஶோஷித்தது நோக்கொன்றுமேயாயிற்று, இதொன்றையும் நோக்கிக்கொள்ளீரென்றாள் ; நிகமத்தில் - இத்திருவாய்மொழியை யப்யஸித்தார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார். ... ... (கக)

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளேசரணம்.

இரண்டாம்பத்தில் நான்காந்திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

இரண்டாம்பத்து

ஐந்தாந் திருவாய்மொழி

அந்தாமத்தன்பு ப்ரவேஶங்கள்.

ப ;—அஞ்சாந் திருவாய்மொழியில், இப்படி யிவருடைய ஆர்த்தியைக் கண்டு த்வரிதனுய் ஸம்ஶ்லேஷித்த ஸர்வேஶ்வரனுக்கு ப்ரீதியாலேவந்த ஸௌந்தர்யாதிஶயத்தை யருளிச்செய்கிறதாக; ப்ரதமத்திலே ஸங்க்ரஹேண பூஷணவயவாயுதஸோபாவிஶிஷ்டமான வடிவழகையும், அத்தோடேகூடின விபூத்யுந்மேஷத்தையும், ஸம்ஶ்லேஷகாரிதமான ரக்ஷகத்வோந்மேஷத்தையும், ஸ்த்திரௌஜ்ஜ்வல்யத்தையும், உபமாநராஹித்யத்தையும், அபர்யந்தபூஷணாதி யோகத்தையும், தர்ஶநீய சேஷ்டிதத்வத்தையும், ஸம்ஶ்லேஷ வைலக்ஷண்யத்தினுடைய வாசாமகோசரதையையும், சொல்லுகைக் கதிகாரிகளில்லை யென்னுமிடத்தையும், சொல்லுகை யரிதென்னுமிடத்தையு மருளிச்செய்து, தம்முடைய ஸம்ஶ்லேஷப்ரீதிகாரித ஸௌந்தர்ய பாரம்யத்தை யருளிச்செய்கிருர்.

ஆறு ;—(அந்தாமத்தன்பு) இப்படி தோற்றியருளின வெம்பெருமான் தம்மோடு கலந்த கலவியையும், அக்கலவியால் தமக்குப் பிறந்த ஸம்ருத்தியையுஞ் சொல்லுகிருர். ... ... *

ஈடு ;—(க) "கஜாக்ருஷ்டே தடே தீரே க்ராஹாக்ருஷ்டே ஜலே - கஜ ஆகர்ஷதே தீரே க்ராஹ ஆகர்ஷதே ஜலே" என்னுமாபோலேயிறே கீழ் * ஆடியாடியில் ஆழ்வார்க்குப்பிறந்த வ்யஸநம் ; அதெல்லாமாறும்படியாக, (உ) "அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தம் - அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தம்" என்கிறபடியே பெரியத்வரையோடே ஆயுதாபரணங்களை அக்ரமமாகத்தரித்துக்கொண்டு மடுவின் கரையிலே அரைகுலையத்தலைகுலையவந்துஉள்ளேபோய்ப்புக்கு, ஆனையையொருகையாலும் முதலையையொருகையாலுமாக வணைத்தெடுத்துக்கொண்டு கரையிலேயேறி, (ங) "க்ராஹம் சக்ரேண மாதவ: - க்ராஹம்சக்ரேணமாதவ:" என்கிறபடியே ப்ரஜையின்வாயிலே முலையைக்கொடுத்து க்ரந்தியை சிகித்ஸிப்பிக்குமாபோலே, பெரியபிராட்டியாரும் தானுமாக இரண்டுக்கும் நலிவுவாராமே திருவாழி

(க) விஷ்ணுதர்ம - சு அ. (உ) ரங்க - ஸ்த - ருஎ. (ங) விஷ்ணுதர்ம.

யாலேவிடுவித்து, சாத்தியருளின திருப்பரிவட்டத்தலையைச்சுருட டித்திருப்பவளத் திலேவைத்து அதினுடைய புண்வாயை வேது கொண்டு திருக்கையாலே குளிரஸ்பர்ஶித்துநின்றாப்போலே இவருட "வலங்கொள்புள்ளுயர்த்தாய்" என்று கூப்பிட்ட ஆர்த்தநாதட செவிப்பட்டு, "அழகிதாக நாம் ஜகந்நிர்வஹணம்பண்ணினோம் நாமாரானோம்" என்று பிற்பாட்டுக்கு லஜ்ஜாபயங்களினாலே விவ் வலனாய், தன்னுடைய ஸ்வரூபரூபகுணங்கள், ஒப்பனை, திவ்யாயுதங் கள்சேர்ந்தசேர்த்தி, இவையெல்லாவற்றோடும்வந்து ஸம்ஶ்லேஷித்து அத்தாலே ஹ்ருஷ்டனாய் க்ருதக்ருத்யனாயிருக்கிற இருப்பை யநுப வித்து, அவ்வநுபவஜநிதஹர்ஷப்ரகர்ஷத்தாலே தாம்பெற்றபேற் றைப்பேசி யநுபவிக்கிறார். ... ...

ஈடு ; அவ ;—(முதற்பாட்டு) "அடியார்கள்குழாங்களை - உடன் கூடுவதென்று கொலோ" என்று இவராசைப்பட்டபடியேவந்து கலந்தானென்கிறார்.

அந்தாமத்தன்பு செய்தென் னாவிசேரம்மானுக்கு
அந்தாமவாண் முடிசங்காழி நூலாரமுள
செந்தாமரைத் தடங்கண் செங்கனிவாய் செங்கமலம்
செந்தாமரையடிக்கள் செம்பொன்திருவுடம்பே. (க)

ப ;—முதற்பாட்டில், பூஷணாதி விஶிஷ்டமான விக்ரஹஶோபையை யநுபவிக்கிறார்.

அந்தாமத்து—பரமபதத்தில்
அன்பு—விருப்பத்தை
செய்து—பண்ணி
என்னாவி—ஹேயனானவென்னெஞ்சுக்குள்ளே
சேர்—பொருந்தின
அம்மானுக்கு—நிருபாதிகஸ்வாமியானவனுக்கு (ஶேஷித்வஸூசகமான)
அம்—அழகிய
தாமம்—மாலையையுடைத்தான
வாள்—உஜ்ஜ்வலமான
முடி—திருவபிஷேகம்
சங்காழி—திவ்யாயுதங்கள்
நூல்—திருயஜ்ஞோபவீதம்
ஆரம்—திருவாரம்
உள — இவைஸ்ப்புரித்துத் தோன்றாநின்றன;
கண் —திருக்கண்கள்
செந்தாமரைத்தடம்—சிவந்த தாமரைத் தடாகமாயிராநின்றன;
செம்—சிவந்த
கனி—பக்வபலம்போன்ற
வாய்—அதரம்
செம்—சிவந்த

கமலம்—தாமரையாயிராநின்றது;
அடிக்கள்—திருவடிகள்
செம்—சிவந்த
தாமரை—தாமரையாயிராநின்றது;
திருவுடம்பு—திருவுடம்பு
செம்பொன் — செம் பொன்னுயிரா நின்றது.

இப்பாட்டு - அந்தராதித்ய வித்யையிற்சொன்ன ஹிரண்மய விக்ரஹயோகத்தையும், புண்டரீகாக்ஷத்வாத்யவயவஶோபையையும், கிரீடமகுடாத்யாபரண ஶோபையையும், த்ருதசங்கசக்ரத்வத்தையுஞ்சொல்லி, இப்படியாதித்ய மண்டலாந்தர்வர்த்தியானவன், (க) " ஸய[illegible] -ஸயஶ்சாயம்புருஷேயஶ்சாஸாவாதித்யேஸஏக: " என்கிறபடியே-அழகிய ஆதித்யமண்டலத்திற் பண்ணும்விருப்பத்தை யென்னெஞ்சிலே பண்ணிப்புகுந்து, அந்தவ்யக்த்யைக்யமிங்கே ஸ்புரிக்கும்படி அத்யுஜ்ஜ்வலனா யிராநின்றானென்றுஞ்சொல்லும். (க)

ஆறு ;—நித்யநிர்த்தோஷ நிரதிஶயகல்யாண திவ்யதாமத்திற் பண்ணும் ப்ரேமத்தை என்பக்கலிலே பண்ணிக்கொண்டு, ஸர்வ திவ்யபூஷணாயுத பூஷிதமாய்நிரதிஶய ஸௌந்தர்யாதி கல்யாணகுண விஶிஷ்டமாய், ஶாதகும்பஜாம்பூநத ப்ரபமான திவ்யரூபத்தோடே வந்து என்னோடேகலந் தருளினானென்கிறார். ... (க)

ஈடு ; அவ ;—(இரண்டாம்பாட்டு) தம்மோடேகலந்த பின்பு அவனுக்குப்பிறந்த புகரைச்சொல்லி, தன்னுடம்பைப்பற்றி ப்ரஹ்மேஶாநாதிகள் ஸத்தையாம்படி யிருக்கிறவன்தான் என்னுடம்பைப் பற்றித் தன்ஸத்தையாம்படி யிராநின்றானென்கிறார்.

திருவுடம்புவான்சுடர் செந்தாமரைகண்கைகமலம்
திருவிடமேமார்வ மயனிடமேகொப்பூழ்
ஒருவிடமுமெந்தை பெருமாற்கரனேயோ
ஒருவிடமொன்றின்றி யென்னுள்கலந்தானுக்கே. (உ)

ப ;—அநந்தரம் இவ்வவயவஶோபையையுடையவன், ப்ரஹ்மருத்ராதிகளான விபூதிபூதர்க்கும் பிராட்டியோபாதிதிருமேனியிலே யிடங்கொடுத்த ஔஜ்ஜ்வல்யத்தை யருளிச்செய்கிறார்.

(க) தை - ஆக.

ஒருவிடமொன்றின்றி — ஸ்வரூபரூப குணவிபூதிக ளொன்றுஞ் சோராதபடி
என்னுள்—என்னுள்
கலந்தானுக்கு—கலந்த
எந்தைபெருமாற்கு-என்குலநாதனுக்கு
திரு — ஶ்லாக்யமான
உடம்பு—வடிவு
வான்சுடர்—ஆதித்யவர்ணமாயிரா நின்றது
கண்கைகமலம்—திருக்கண்ணும் திருக் கையும்
செம்—சிவந்த
தாமரை—தாமரைபோலே செவ்வி பெற்றது
மார்வம்—திருமார்வு
திருவிடமே — லக்ஷ்மீஸ்த்தாநமேய யிற்று
கொப்பூழ்—கொப்பூழ்
அயன்—ப்ரஹ்மாவுக்கு
இடமே—ஸ்த்தாநமேயாயிற்று;
ஒருவிடமும்—நீக்கியுள்ளவிடம்
அரனே—ருத்ரனேயாயிராநின்றது;
ஓ—இதென்ன ஆஶ்சர்யம்.

ஒருவுதல் - நீங்குதல். தந்திருவுள்ளத்திலே அவன்கலந்தபின்பு ரூபௌஜ்ஜ்வல்யமும் அவயவௌஜ்ஜ்வல்யமுமுண்டானவோபாதி, விபூத்யௌஜ்ஜ்வல்யமுமுண்டாயிற்றென்று கருத்து. (உ)

ஆறு ;—(திருவுடம்பு) என்னோடே கலந்தருளுகிறான், ஸர்வேஶ்வரியான பெரியபிராட்டியாரோடும் ஆஶ்ரிதரான ப்ரஹ்மருத்ராதிகளோடும் கலந்தருளினாப்போலன்றியே, தன்னுடைய நிரதிஶயதேஜோமயமானதிருவுடம்பி லொருப்ரதேஶமொழியாமே ஸமஸ்தப்ரதேசத்தாலுங் கலந்தருளினான்; ஒருவனுடைய அபிநிவேஶமேயி தென்கிறார். ... ... (உ)

ஈடு; அவ;—(மூன்றாம்பாட்டு) ஸ்வவ்யதிரிக்தஸமஸ்தவஸ்துக்களும் தன்னைப்பற்றியுளவாம்படியிருக்கிற ஸர்வேஶ்வரன், தானென்னைப்பற்றியுளனாய், என்னோடேவந்து கலந்தானென்கிறார்.

என்னுள்கலந்தவன் செங்கனிவாய்செங்கமலம்
மின்னுஞ்சுடர்மலைக்குக் கண்பாதங்கைகமலம்
மன்னுமுழுவேழுலகும் வயிற்றினுள
தன்னுள்கலவாத தெப்பொருளுந்தானில்லையே. (௩)

ப;—அநந்தரம் தன்னுள்ளிராத வஸ்துவுக்கு ஸத்தையில்லையாமோபாதி, என்னுள் தான் கலவாதபோது தனக்கு ஸத்தையில்லையாகநினைத்துஎன்னுள்ளே கலந்து உஜ்ஜ்வலனானானென்கிறார்.

என்னுள்—என்னுள்ளே
கலந்தவன்—கலந்தவனாய்
மின்னும்—அத்தாலேவிளங்கின
சுடர்—சுடரையுடைய
மலைக்கு—மலைபோன்றவனுக்கு
செங்கனிவாய் செங்கமலம் கண்பாதங்கை கமலம் — முன்புசொன்ன அவயவசோபையும் யதாபூர்வ மத்யுஜ்ஜ்வலமாயிராநின்றது
மன்னும்—ஸ்த்திரமாய்
முழு—பூர்ணமான
ஏழுலகும்—ஸகலலோகங்களும்
வயிற்றின்—அவன்வயிற்றிலேயாய்
உள—ஸத்தைபெறுகின்றன;
தன்னுள்—தனக்குள்ளே
கலவாதது—ஸம்பந்தியாதிருப்பது
எப்பொருளுந்தான்—ஏதேனுமொரு பொருளும்
இல்லை—இல்லை.

ஸர்வவஸ்துவுக்கும் தத்வ்யதிரேகத்தில் ஸத்தாஹாநி ஸ்வரூபப்ரயுக்தை; ஈஶ்வரனுக்கு "இவருடையவ்யதிரேகத்தில் ஸத்தையில்லை" என்று நினைக்கிறவிடம் ஶ்ரீலக்ருதமென்று கருத்து. (ங)

ஆறு;—(என்னுள்) நிரதிஶயகல்யாணகுண திவ்யரூபத்தையுடையனாய், ஸ்வஸங்கல்பாதீந ஸமஸ்தவஸ்துஸ்வரூபஸ்த்திதி ப்ரவ்ருத்திகனாயிருந்தவன் என்னுள்ளேகலந்தருளினானென்கிறார். (ங)

ஈடு; அவ;—(நான்காம்பாட்டு) நீரொருகாற்சொன்னத்தையொன்பதின்கால்சொல்லி இங்ஙனேகிடந்து படுகிறதென்னென்ன; நானதுதவிர்கிறேன், நீங்கள் அவ்விஷயமொருகாலிருந்தபடியேயெப்போதுமிருக்கும்படி பண்ணவல்லீர்களோவென்கிறார்.

எப்பொருளுந்தானாய் மரதகக்குன்றமொக்கும்
அப்பொழுதைத்தாமரைப்பூ கண்பாதங்கைகமலம்
எப்பொழுதும்நாள்திங்க ளாண்டூழியூழிதொறும்
அப்பொழுதைக்கப் பொழுதென்னாராவமுதமே. (ச)

ப;—அநந்தரம் நிரதிஶயபோக்யபூதனானவன் என்னுள்ளே புகுந்தபின்பு ஸ்த்திரஸ்வபாவனானானென்கிறார்.

எப்பொழுதும்—எல்லாக்ஷணம்
எந்நாள்—எல்லாநாள்
எத்திங்கள்—எல்லாமாஸம்
எவ்வாண்டு—எல்லாவாண்டு
எவ்வூழியூழிதொறும்—எல்லா வகைப்பட்டவூழிதோறும்
அப்பொழுதைக் கப்பொழுது — அவ்வோகாலங்களிலே
என்—என்னுள்ளேகலந்து
ஆரா—அத்ருப்திகரமான
அமுதம்—அம்ருதமானவன், (அத்தால்வந்ததன்னுடைய ப்ரீத்யதிஶயத்தால்)

எப்பொருளும்—எல்லாப்பொருளும்	அப்பொழுதை—அப்போதலர்ந்த
தானாய்—தானானஸர்வாத்ம பாவமும்நி றம்பெற்று	தாமரைப்பூ—தாமரைபோலே
	கண்—கண்ணும்
மாதகக்குன றமொக்கும் — மாதகமலை போலேயுயர்த்தியும்	அப்பொழுதைக் கமலம் } அப்போதைக்கட லம்போலே
நிறமுமுமுமுடைய	பாதம்—பாதமும்
னானன்;	கை—கையும்புதுமைபெற்றன. (ச)

ஆறு;—(எப்பொருளும்) ஸர்வாந்தராத்மபூதனாய், அளவிறந்த வழகையுடையனாயிருந்தவிவன், அழகாலே ஸர்வகாலமும் ப்ரதிக்ஷணம் எனக்கபூர்வவத்போக்யமாயிராநின்றான்; ஒருவனுடையவழகிருக்கும்படியேயீதென்கிறார். ... ... (ச)

ஈடு; அவ;—(ஐந்தாம்பாட்டு) இத்தனைபோதும் தாமரையை யபேக்ஷித்து உபமாநமாகச் சொல்லிப்போந்தார்; விஷயத்திலே யவகாஹித்தவாறே நேர்கொடுநேரே யுபமாநமாய் நின்றதில்லை; அவற்றைக்கழித்து உபமேயந்தன்னையே சொல்லுகிறார்.

> ஆராவமுதமா யல்லாவியுள்கலந்த
> காரார்கருமுகில்போ லென்னம்மான்கண்ணனுக்கு
> நேராவாய்செம்பவளங் கண்பாதங்கைகமலம்
> பேராரநீண்முடி நாண் பின்னுமிழைபலவே. (ரு)

ப;—அநந்தரம் தம்முடையதிருவுள்ளத்திலே கலந்தவனுடைய அவயவ சோபைக்கு உபமையில்லையென்கிறார்.

ஆராவமுதமாய் — நிரதிசயபோக்யபூதனாய்	வாய்—அதரத்தை
	நேராது—ஒவ்வாது;
அல்—ஒன்றல்லாத	கமலம்—கமலங்கள்
ஆவியுள்—என்னெஞ்சுக்குள்ளே	கண்பாதம்கை—கண்பாதங்கைகளை
கலந்த—கலந்து	நேரா—ஒவ்வா;
(அத்தாலே)	(அதுக்குமேலே)
கார்...கார்காலத்திலே	பேர்—பெரிய
ஆர்...பூர்ணமான	ஆரம்—ஆரமும்
கருமுகில்போல்—காளமேகம் போலேயிருக்கிற	நீள்—உயர்ந்த
	முடி—முடியும்
என்னம்மான்—என்னுதனை	நாண்—நாணுமுதல்
கண்ணனுக்கு—க்ருஷ்ணனுக்கு	பின்னும்...மற்றுமுண்டான
செம்—சிவந்த	இழை—ஆபரணங்களும்
பவளம்—பவளம்	பல—அஸங்க்யாதங்கள். (ரு)

ஆறு ;—(ஆராவமுதமாய்) நிருபமமான ஸௌந்தர்யத்தையு டையனாய், அபரிமித திவ்யபூஷணோபேதனாய், ஸர்வகாலமுமநுப வித்தாலு மாராதபோக்யமாயிருந்தவன், அத்யந்தமவஸ்துபூதனா யிருந்த வென்னுள்ளே கலந்தருளினானென்கிறார். (௫)

ஈடு ; அவ ;—(ஆறும்பாட்டு) தம்முடனேகலந்து ஆற்றானாய் அநேகஶரீர பரிக்ரஹம்பண்ணி யென்னை யநுபவியாநின்றான் கிடீ ரென்கிறார்.

பலபலவேயாபரணம் பேரும்பலபலவே
பலபலவேசோதிவடிவு பண்பெண்ணில்
பலபலகண்டுண்டு கேட்டுற்றுமோந்தின்பம்
பலபலவேஞானமும் பாம்பணைமேலாற்கேயோ. (௬)

ப ;—அநந்தரம் பூஷணாத்யபரிச்சேதத்தை யநுபவிக்கிறார்.

பாம்பணைமேலாற்கு—திருவநந்தாழ்வானைப்படுக்கையாகக்கொண்டாற்போலே யென்னோடேகலந்தவனுக்கு

பண்பெண்ணில்--ஸ்வபாவநிரூபணம்

ஆபரணம்—ஆபரணம் பண்ணில்

பலபல — கிரீடாதிரூபபேதத்தாலும் ஓரொன்றில்ஸம்ஸ்தாநபாஹுள்யத்தாலும்பல பலவாயிருக்கும்

பேரும்—நாமமும்

பலபல—வ்யக்திபேதத்தாலும் நிர்வசநமுகத்தாலுமோரொன்றநேக நாமாத்மகமாகையாலேபலபல வாய்ருக்கும்

சோதி—ஜ்யோதிரூபமான

வடிவு—அப்ராக்ருதவிக்ரஹமும்

பலபல — பரவ்யூஹாதிபேதத்தாலும் அவாந்தரபேதத்தாலும் பலபலவாயிருக்கும் ;

கண்டுண்டுகேட்டுற்றுமோந்தின்பம் — இந்த்ரிய த்வாராதத்தத்விஷய ஸம்யோகத்தால் வருகிற ஸுகமும்

பலபல...வ்யக்திபேதத்தாலு மவாந்தரபேதத்தாலும் பலபலவாயிருக்கும்;

ஞானமும்--தத்த்வாரா பதார்த்தங்களிற் பிறக்கிறஜ்ஞாநமும்

பலபல-அப்படியேபலபலவாயிருக்கும்.

இந்த்ரியத்வாராவருகிற ஸுகஜ்ஞாநங்களிலீஶ்வரனுக்கு யதாக்ரமத்தாலும் வ்யுத்க்ரமத்தாலும் வருமநியமத்தாலே பன்மைசொல்லவுமாம். (௬)

ஆறு ;—(பலபலவே) அஸங்க்யேயதிவ்ய பூஷணங்களையும், அஸங்க்யேயகல்யாணகுணங்களையும், அஸங்க்யேய தேஜோமயகல் யாண திவ்யரூபங்களையும், அஸங்க்யேய திவ்யபோகங்களையும்,

அஸங்க்யேய திவ்யஜ்ஞாநங்களையுமுடையனாய், நாகபர்யங்கஸாயியாய் இப்படி பரிபூர்ணனாயிருந்து வைத்து என்னோடே கலந்தருளினானென்கிறார். ... ... (௬)

ஈடு ; அவ ;—(ஏழாம்பாட்டு) *அயர்வறுமமரர்க ளதிபதியாயிருந்துவைத்து, க்ஷீராப்தியிலே கண்வளர்ந்தருளி, ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணிற்றெல்லாம் எனக்காகக் கிடீரென்கிறார்.

பாம்பணைமேற்பாற்கடலுள் பள்ளியமர்ந்ததுவும்
காம்பணைதோள்பின்னைக்கா யேறுடனேழ்செற்றதுவும்
தேம்பணையசோலை மராமரமேழெய்ததுவும்
பூம்பிணையதண்டுழாய்ப் பொன்முடியம்போரேறே. (எ)

ப ;—அநந்தரம் தம்மோட்டை ஸம்ஶ்லேஷத்தாலே அவனுடைய திவ்ய சேஷ்டிதங்கள் தமக்கு ப்ரகாஶித்து நிறம்பெற்றபடியை யநுபவிக்கிறார்.

பாற்கடலுள்—பாற்கடலிலே
பாம்பணைமேல்-பாம்பணையின்மேலே
பள்ளி—கண்வளர்ந்தருளுகையை
அமர்ந்ததுவும்-பொருந்ினதும்,
காம்பணை—மூங்கில்போன்ற
தோள்—தோளையுடைய
பின்னைக்காய்—நப்பின்னைப்பிராட்டிக்காக
ஏறேழு—ஏறேழையும்
உடன்—ஏகோத்யோகத்திலே
செற்றதுவும்—கொன்றதுவும்,
தேம்—தேனையும்
பணைய—பணையையுமுடைய
சோலை — (அத்தால்) சோலையாகத்தழைத்த

மராமரம்—மராமரம்
ஏழு—ஏழு
எய்ததுவும்—எய்ததுவும்
பூ—அழகிய
பிணைய—தொடையையுடைத்தாய்
தண்—குளிர்ந்த
துழாய்—திருத்துழாயாலே யலங்க்ருதமாய்
பொன்—அத்யுஜ்ஜ்வலமான
முடி—முடியையுடைத்தாய்
அம்—தர்ஶநீயமாய்
போர்—விரோதிநிரஸநோத்யோகஶீலமாய்செருக்கையுடைத்தான
அம்—ருஷபம்போன்றவஸ்து.

“ஏறு” என்றசொற்கீடாக - அமர்ந்ததுவும், செற்றதுவும், எய்ததுவுமென்றஃறிணை. (எ)

ஆறா !—(பாம்பணை) தன்னுடையஸர்வ சேஷ்டிதங்களையுமெனக்கே போக்யமாகச்செய் தருளினானென்கிறார். ... (எ)

ஈடு ; அவ ;— (எட்டாம்பாட்டு) * அயர்வறுமமரர்களதிபதியா யிருந்துவைத்து என் தண்மையைப்பாராதே என்னோடேவந்து கலந்த விம்மஹாகுணத்தை என்னால்பேசி முடியாதென்கிறார்.

பொன்முடியம்போரேற்றை யெம்மானைநாற்றடந்தோள்
தன்முடிவொன்றில்லாத தண்டுழாய்மாலையனை
என்முடிவுகாணாதே யென்னுள்கலந்தானைச்
சொன்முடிவுகாணேனால் சொல்லுவதென்சொல்லீரே. (அ)

ப ;—அநந்தரம் ஸம்ச்லேஷவைலக்ஷண்யத்தினுடைய வாசாமகோசரதையை யருளிச்செய்கிறார்.

பொன்—உஜ்ஜ்வலமான
முடி—அபிஷேகத்தையுடைய
அம்போரேற்றை — பெரும் செருக்கனாய்
எம்மானை— அந்தஸ்வாதந்த்ர்யச்செருக்கைக்காட்டி யென்னை யடிமைகொண்டநாதனாய்
நால்—நாலுவகைப்பட்ட
தடம்—பெரிய
தோள்—திருத்தோளையுடையனாய்
தன்—தன்பெருமைக்கு
முடிவொன்றில்லாத - முடிவில்லாதவனாய்
(இந்த மேன்மைக்கும் போக்யதைக்கும் ஸூசகமான)
தண்—குளிர்ந்த
துழாய்மாலையனை - திருத்துழாய்மாலையையுடையனாய்
என்முடிவுகாணாதே — என்னுத்கர்ஷத்துக்கெல்லைகாணாதவோபாதி என்நிகர்ஷத்தின் முடிவுகாணாதே
என்னுள்—என்னெஞ்சுக்குள்ளே
கலந்தானை—கலந்தவனை
நான்—நான்
(ஸ்வஸம்வேத்யமாக வறியுமதொழிய)
சொல்—பாசுரமிட்டுச் சொல்லும்
முடிவு—ப்ரகாரம்
காணேன்—காண்கிறிலேன் ;
சொல்லுவது— நீங்களநுபவித்த விஷயம் வ்ருத்தகீர்த்தநம் பண்ணுமோபாதி யிங்குச்சொல்லுவது
சொல்லீர்-உண்டாகிற் சொல்லுங்கோளென்று லௌகிகரைக் குறித்துரைக்கிறார்.

லோகவ்யாவ்ருத்தனுடைய ஸம்ச்லேஷஸாரஸ்யம் வாசாமகோசரமென்று கருத்து. விச்லேஷதசையில் என்முடிவுகாணாதேயென்றுமாம். (அ)

ஆறு ;—(பொன்முடி) வாங்மநஸாபரிச்சேத்யநிரதிசய கல்யாணஸ்வரூபகுண விபூதிகளை யுடையனாயிருந்துவைத்து, என்னுடைய ஸ்வரூபஸ்வபாவகுண வ்ருத்தாதிகளினுடைய நிஹீநதையைப்பாராதே என்னுள்ளேகலந்த இஸ்ஸௌசீல்யத்துக்கொரு முடிவு காண்கிறிலேன் ; ஆனபின்பு எதைச்சொல்லுவது சொல்லீரென்கிறார். ... ... (அ)

ஈடு ; அவ ;— (ஒன்பதாம்பாட்டு) "பாசுரமில்லை" என்று கைவாங்கமாட்டாரே ; ஸம்ஸாரிகளைப்பார்த்து, என்னுயஜனஸர்வேஶ்வரனை எல்லாருங்கூடியாகிலும் சொல்லவல்லீர்களோவென்கிறார்

சொல்லீரென்னம்மானை யென்னுவியாவிதனை
எல்லையில்சீரென் கருமாணிக்கச்சுடரை
நல்லவமுதம் பெறற்கரியவீடுமாய்
அல்லிமலர்விரையொத் தாணல்லன்பெண்ணல்லனே. (கூ)

ப;—அநந்தரம், நிரதிஶய போக்யபூதனானவனைச் சொல்லவல்லீர்களாகில் சொல்லுங்கோளென்கிறார்.

என்—எனக்கு
அம்மானை—ஸ்வாமியாய்
என்னுவி—என்னாத்மாவுக்கு
ஆவிதனை—ஆத்மாவாய்
எல்லையில்—எல்லையில்லாத
சீர்-ஸௌகுமார்யாதிகுணங்களையுடைத்தான
என் கருமாணிக் கச்சுடரை — நீலரத்ந ஜ்யோதிஸ்ஸுபோலே யிருக்கிறவடிவை யென்னை யநுபவிப்பித்தவனை
சொல்லீர்—எல்லாரும்சேர்ந்து சொல்லலாமாகிற் சொல்லுங்கோள் (சொல்லவொண்ணாமைக் கடியென்னென்னில்)
நல்ல—லௌகிகாம்ருதத்தில் விலக்ஷணமான
அமுதம்—நித்யபோக்யாம்ருதமுமாய் (பரமயோகிகளுக்கும்)
பெறற்கு—பெறுதற்கு
அரிய—அரிதான
வீடுமாய்—மோக்ஷஸ்த்தாந நிர்வாஹகனுமாய்
அல்லிமலர்—தாமரைப்பூவில்
விரையொத்து-பரிமளம்போலே நிஷ்க்ருஷ்டபோக்யரூபனாய்
பெண்ணல்லன் — பும்ஸ்த்வத்தாலே ஸ்த்ரீகளில் வ்யாவ்ருத்தனானவோபாதி
ஆணல்லன்-புருஷோத்தமத்வத்தாலே ஸமஸ்தபுருஷவ்யாவ்ருத்தனாயிருக்கும்.

ஆதலாற்சொல்ல வரிதென்று கருத்து. (கூ)

ஆறு ;—(சொல்லீர்) இப்படி அவனுடையகுணங்கள் சொல்ல நிலமன்றியே யிருக்கச்செய்தேயும், தம்முடைய ஆராமையாலே அவன்குணங்களைக் காலதத்வமெல்லாம் சொன்னாலும் அவற்றுக்கொரு முடிவு காண்கிறிலேனென்று, பின்னையுமவனுடையகுணங்களைச்சொல்லி, பரமபோக்யனாய் ஸ்த்ரீபுந்நபும்ஸகாதி ஸர்வபதார்த்த விஸஜாதீயனாயிருந்து வைத்து, தன்னழகாலே எனக்கு தாரகனாய் என்னுள்ளேபுகுந்து கலந்தருளின வெம்பெருமானுடைய இந்த

ஸௌசீல்யாதிகுணங்களை நீங்களும் சொல்லிகோளென்று ஸ்ரீ வைஷ்ணவர்களைக்குறித் தருளிச்செய்கிறார். ... (க)

ஈடு ; அவ ;—(பத்தாம்பாட்டு) என்னோடுகலந்த வெம்பெருமான் படிபேசப் பெரிது மிறுக்குடைத்தென்கிறார்.

ஆணல்லன்பெண்ணல்ல னல்லாவலியுமல்லன்
காணலுமாகா னுளனல்ல னில்லையல்லன்
பேணுங்காற் பேணுமுருவாகு மல்லனுமாம்
கோணைபெரிதுடைத் தெம்பெம்மானைக்கூறுதலே. (கo)

ப;-அநந்தரம், அவன் ஸ்வபாவத்தைச்சொல்லுகை மிகவு மரிதென்கிறார்.

ஆண்—ஆணும்
அல்லன்—அன்றியே
பெண்—பெண்ணும்
அல்லன்—அன்றியே
அல்லா—ப்ரயோஜநவத்தல்லாத
அலியும்—அலியும்
அல்லன்—அன்றியே
காணலும்—அவற்றைக்காணும் ப்ரமாணத்தாற்காணவும்
ஆகான்—ஒண்ணுதே
உளனல்லன்—ப்ரதிகூலர்க்கு உளனன்றியே
இல்லையல்லன்—அநுகூலர்க்கிலனன்றியே
பேணும்—ஆஸ்ரிதராயாதரித்த
கால்—காலத்தில்
பேணும்—அவர்களாதரித்த
உருவாகும்—வடிவையுடையனாய்
அல்லனுமாம்—ஆதரமில்லாதவளவில் அப்படியல்லனாயிருக்கும்
எம்பெம்மானை—என் ஸ்வாமியை
கூறுதல் — இப்ப்ரகாரம் அவன் காட்டக்கண்ட நான்கூறுமிடத்து
பெரிது—மிகவும்
கோணை—மிறுக்கு
உடைத்து—உடைத்து.

கோணை - மிறுக்கு. ஸர்வவிதஜாதீயனாகையாலே "ஏவம்விதன்" என்று சொல்லவரிதென்று கருத்து. (கo)

ஆறு ;—(ஆணல்லன்) ஸ்த்ரீபுந்நபும்ஸகாதி ஸர்வபதார்த்தவிஸஜாதீயனாதலால் தத்கோசரப்ரமாணங்களுக்கு அகோசரனாயிருந்துவைத்து, ஆஸ்ரிதஸுலபனாய் ஆஸ்ரிதருடைய விவக்ஷாநுகுணமான திவ்யரூபசேஷ்டிதங்களை யுடையனாய், அநாஸ்ரிதருக்கு துர்லபனாயிருந்த வெம்பெருமான் என்னோடு கலந்தவிக்குணம்சொல்லநிலமன்றாகிலும் சொல்லாதொழிய முடிகிறதில்லையென்கிறார். (கo)

ஈடு ;—நிகமத்தில், இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லவருண்டாகில், அவர்கள் பரமபதத்திலேபோய் நித்யாநுபவம்பண்ணப்பெறுவரென்கிறார்.

கூறுதலொன்றாராக் குடக்கூத்தவம்மானைக்
கூறுதலேமேவிக் குருகூர்ச்சடகோபன்
கூறினவந்தாதி யோராயிரத்து ளிப்பத்தும்
கூறுதல்வல்லாருளரேல் கூடுவர்வைகுந்தமே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக பரமபதப்ராப்தியையருளிச்செய்கிறார்.

ஒன்று—ஒருகுணத்தை
கூறுதல்—சொல்லிலும்
ஆரா—சொல்லமுடியவொண்ணாத
குடக்கூத்த — குடக்கூத்துமுதலான ஸீலாதிகுணங்களையுடைய
அம்மானை—ஸ்வாமியை
கூறுதல் — உள்ளபடியே சொல்லுவதாக
மேவி—உத்யோகித்து
குருகூர்ச் சடகோபன் — அவனாலே லப்தஜ்ஞாந ப்ரேமரான ஆழ்வார்
கூறின—அருளிச்செய்த
அந்தாதி–அந்தாதியாகையாலே யடைவுகுலைக்கவொண்ணாத
ஓர்—அத்விதீயமான
ஆயிரத்துள்—ஆயிரத்தில்
இப்பத்தும்—இப்பத்தையும்
கூறுதல்—சொல்ல
வல்லார்—வல்லார்
உளரேல்—உண்டாகில்
வைகுந்தம்—பரமபதத்தை
கூடுவர்—கூடுவர். (கக)
இது கலிவிருத்தம்.

ஆறு ;—(கூறுதல்) காலதத்த்வமெல்லாஞ்சொன்னாலுமாராத குணசேஷ்டிதங்களையுடையனான வெம்பெருமானைச்சொன்ன வித்திருவாய்மொழியைச் சொல்லவல்லார், திருநாட்டிலேபோய் எம்பெருமானை யநுபவிக்கப்பெறுவாரென்கிறார். ... (கக)

முதற்பாட்டில் - இவராசைப்பட்டபடியே அடியார்கள் குழாங்களோடேவந்துகலந்தபடிசொன்னார் ; இரண்டாம்பாட்டில் - தம்மோடேகலந்தபின்பு அவன்திருமேனியும் திவ்யாவயவங்களும் திவ்யாயுதங்களும் நிறம்பெற்றதென்றார் ; மூன்றாம்பாட்டில் - தம்மோடே கலந்து தன்ஸத்தைபெறுதல், இல்லையாகில் இல்லையாம்படியாய் வந்து கலந்தானென்றார் ; நாலாம்பாட்டில்-கீழிவனுக்கு த்ருஷ்டாந்தமாகச்சொன்னவை நேரில்லாமையாலே அவற்றைசிக்ஷித்துச்சேர்த்

தநுபவித்தார்; அஞ்சாம்பாட்டில் - அதுதானுமுபமாநமாக நேர்நில்லாமையாலே, அவற்றைக்கழித்து உபமேயந்தன்னையே யநுபவித்தார்; ஆறாம்பாட்டில் - இப்படி விலக்ஷணனானவன், முக்தன்தன்னை யநுபவிக்குமாபோலே தானென்னையநுபவித்தானென்றார்; ஏழாம்பாட்டில் - தமக்காக ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணினனென்றார்; எட்டாம்பாட்டில் - அவனை என்றுப்பேசமுடியாதென்றார்; ஒன்பதாம்பாட்டில் - துணைதேடிக்கொண்டு, திரியவும் பேசுகையிலே யுபக்ரமித்தார்; பத்தாம்பாட்டில் - "இப்படிகளால் என்னோடேகலந்தவிம்மாஹாத்மகுணமொன்றையும்பேச" என்றால் சாலமிறுக்குடைத்தென்றார்; நிகமத்தில் - இதுகற்றார்க்குப் பலஞ்சொல்லித்தலைக்கட்டினார். ... ... (கக)

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்தில் ஐந்தாம்திருவாய்மொழி

முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

இரண்டாம்பத்து.

ஆறுந்திருவாய்மொழி.

வைகுந்தா - ப்ரவேசங்கள்.

ப ;— ஆறுந்திருவாய்மொழியில், தம்மோடு ஸம்ஶ்லேஷித்த ப்ரீத்யதிசயத்தாலே அத்யந்தம் ஹ்ருஷ்டனான ஸர்வேஶ்வரன், "இவர் நிகர்ஷாநுஸந்தாநத்தாலே அகலத்தேடி இத்தைக்குலைக்கிற்செய்வதென்" என்கிற அதிசங்கைபண்ணி, தன்விஶ்லேஷபீருத்வத்தை இவருடைய திருவுள்ளத்திலே ப்ரகாசிப்பிக்க, "நம்முடையவளவில் இவனபிநிவேசமிருந்தபடியென்" என்று அத்யந்தஹ்ருஷ்டராய், இவனுடைய வ்யஸநநிவ்ருத்யர்த்தமாக ; தாமவனைச் சிக்கெனப்பற்றினமையையும், அவன்றான் அநந்யபரனாய்த் தம்மோடேகலந்தபடியையும், ஸ்வாநுபவத்தைக்கொடுத்த ஔதார்யாதிசயத்தையும், அவ்வௌதார்யமடியாகத்தாம் விடமாட்டாமையையும், லப்தபோகரான தமக்குவிட யோக்யதையில்லையென்னுமிடத்தையும், இவ்வநுபவஸித்தியால் தமக்குவந்த பூர்த்தியையும், அந்தலாபம் தம்மளவில்நில்லாமல் ஸம்பந்தி ஸம்பந்தி பர்யந்தமானபடியையும், இதுக்கு விஶ்லேஷம் பிறவாமையில் தமக்குண்டான அபேக்ஷையையும், க்ருஷிபண்ணினவன்றான் இத்தைக்குலையானென்னுமிடத்தையும், அவன்குலைக்கிலும் தாம் விடக்ஷமரல்லரென்னுமிடத்தையுமருளிச்செய்து, அவனுடைய விஶ்லேஷாதிசங்கையை நிஶ்ஶேஷமாக நிவர்த்திப்பித்தருளுகிறார்.

ஆறு ;—(வைகுந்தா) ஆழ்வார், தம்மோடு கலந்தகலவியால் எம்பெருமானுக்குவந்த ப்ரீதியைப்பேசுகிறார்.

ஈடு ;—*ஆடியாடியிலார்த்திதீரவந்து ஸம்ஶ்லேஷித்தபடிசொல்லிற்று - *அந்தாமத்தன்பு ; அந்தஸம்ஶ்லேஷத்தால் பிறந்தப்ரீதி அவனதென்னுமிடஞ்சொல்லுகிறது - இத்திருவாய்மொழி. "ப்ரணயிப்ரீத்யநுஸந்தாநங்காணிது" என்று ஆளவந்தாரருளிச்செய்யும்படி-ஆழ்வார்விஷயமாக ஈஶ்வரனுக்குண்டான ப்ரீதிசொல்லுகிறது இதில்.

*ஊனில்வாழுயிரிலே - ஆழ்வார்தாம் பகவதநுபவம்பண்ணித் தமக்கவன்பக்கலிலேயுண்டான ப்ரேமம் அவனளவில் பர்யவஸி

யாதே, "அடியார்கள் குழாங்களையுடன்கூடுவதென்றுகொலோ" என்று - ததீயரளவும் சென்றபடிசொல்லிற்று ; இத்திருவாய்மொழியில் - ஸர்வேஶ்வரன் ஆழ்வார்பக்கல் பண்ணின ப்ரேமம் இவரொருவரளவன்றிக்கே, ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் வெள்ளமிடுகிறபடி சொல்லுகிறது; இரண்டுதலைக்கும் ரஸமதிஶயித்தால் ஸம்பந்திஸம்பந்திகளளவும் செல்லுமிறே ; "எமர்கீழ்மேலெழுபிறப்பும் விடியாவெந்நரகத்தென்றும் சேர்தல் மாறினர்" என்கிறாரிறே.

உபயவிபூதியுக்தனாய் ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய் ஸர்வப்ரகாரபரிபூர்ணனான தான் தன்படிகளொன்றும் குறையாதபடிவந்து இவரோடே ஸம்ஶ்லேஷித்து, அந்தஸம்ஶ்லேஷந்தான் "தன்பேறு" என்னுமிடந்தோற்ற ஹ்ருஷ்டனாய், "அநாதிகாலம் *எதிர்சூழல்புக்குத்திரிந்தவஸ்துவை ஒருபடி ப்ராபிக்கப்பெறுவோமே, இவர்தாம் இனி நம்மை விடிற்செய்வதென்" என்றதிஶங்கைபண்ணி அவனலமாக்கிறபடியைக்கண்டு, "நீயிங்ஙன்படவேண்டா" என்று அவனதிஶங்கையைப் பரிஹரித்து அவனையுளனாக்குகிறார் ; (க) "ெவெெஉஹிரஃெஸக ஹ்ஹ் ... ெடஃயாஸஹ - வைதேஹி ரமஸேகச்சிச்சித்ரகூடேமயாஸஹ" என்றாற்போலேயாயிற்று இதில் ரஸமும் ; மைதிலி, உன்னையறிந்தாயே, நம்மையறிந்தாயே, கலக்கிற தேஶமறிந்தாயே யென்றாரிறேபெருமாள்.

ஈடு ; அவ ;—(முதற்பாட்டு) முதற்பாட்டில், *அந்தாமத்தன்பிலே - ஆழ்வாருடனேவந்துகலந்து தான்பெறாப்பேறுபெற்றானாயிருக்கச்செய்தே, இவர், "அல்லாவியுள்கலந்த" என்றும், "என்முடிவுகாணாதே யென்னுள்கலந்தான்" என்றும் - தம்முடைய நைச்யத்தை யநுஸந்தித்தவாறே, "*வளவேழுலகுதலையெடுத்து இன்னமிவர் நம்மைவிடிற்செய்வதென்" என்று எம்பெருமானுக்குப் பிறந்த அதிஶங்கையை நிவர்த்திப்பிக்கிறார். *

வைகுந்தாமணிவண்ணனே யென்பொல்லாத்திருக்குறளாவென்னுள்
வைகும்வைகல்தோறு மமுதாயவானேறே [மன்னி
செய்குந்தாவருந்தீமை யுன்னடியார்க்குத் தீர்த்தசுரர்க்குத்தீமைகள்
செய்குந்தாவுன்னைநான் பிடித்தேன்கொள் சிக்கெனவே. (க)

(க) ரா - அயோ - கூச - கஅ.

ப;-முதற்பாட்டில், நிரதிசயபோக்யனாய் அநிஷ்டநிவர்த்தகனானவுன்னை நான் சிக்கெனப்பற்றியிருக்கிறேனென்று திருவுள்ளம் பற்றுகிறார்.

வைகுந்தா—பரமபத நிலயத்வத்தாலே அஸாதாரணசேஷியாய்
மணிவண்ணனே } நீலரத்நம் போன்ற வடிவையுடையனாகையாலே ஸுலபனாய்
என்பொல்லாத் திருக்குறளா } தர்சநீயமான வாமந விக்ரஹத்தை யுடையனாகையாலேபோக்யனாய்
(இவ்வாகாரத்ரயத்தையும் ப்ரகாசிப்பித்துக்கொண்டு)
என்னுள்—என்னெஞ்சுக்குள்ளே
மன்னி—ஸ்த்திரஸம்ஶ்லேஷம்பண்ணி
வைகும்—இருக்கிற
வைகல்தோறும்—காலந்தோறும்
அமுதாய—நித்ய போக்யமாய்க்கொண்டு
வானோரே—நித்யஸூரிஸமாநமாம்படியநுபவிப்பிக்கிறமேன்மையையுடையனாய்
செய்—தானே செய்துகொள்ளப்பட்டு
குந்தா—பலப்ரதாநத்தில்குந்தாதே
அரும்—பரிஹரிக்கவரிதான
தீமை—கொடியபாபங்களை
உன்னடியார்க்கு—உன்னோடு சேஷத்வஸம்பந்தமுடையார்க்கு
தீர்த்து—தீர்த்து
(அவைப்ரதிகூலரான அஸுரப்ரக்ருதிகள் பக்கலிலேயாம்படி)
அசுரர்க்கு—அவர்களுக்கு
தீமைகள்—அநர்த்தத்தை
செய்—விளைக்கும்
குந்தா—குந்தமாகிற ஆயுதத்தையுடையவனே
உன்னை—இப்படிபோக்யபூதனாய்அநிஷ்டநிவர்த்தகனாய்ஆச்ரித பக்ஷபாதியானவுன்னை
நான்—உன்னினிமையறிந்து உன்னையொழியச்செல்லாதநான் (இனி)
சிக்கென—விடாதபடி ஸ்த்திரமாக
பிடித்தேன்—பற்றினேனாகை
கொள்—திருவுள்ளம்பற்று.

"செய்கும், தாவரும்" என்றுசொல்லாய் - செய்யப்பட்டுக்கடக்கவரிய என்றுமாம். "குந்தமென்று - மரமாய், அதின் வெளுப்பையிட்டு ஶுத்தியைக் காட்டுகிறது" என்றுஞ்சொல்லுவர். பொல்லாவென்று-விபரீதலக்ஷணையாலே அழகைச்சொல்லுகிறது. என்பொல்லாவென்று - தம்மையநங்யார்ஹராக்கிற்று அவ்வழகாலே யென்றுகருத்து. (க)

ஆறு ;—ஸ்ரீவைகுண்டநிலயனாய், ஆச்ரிதஸுலபனாய், நிரவதிகஸௌந்தர்யத்தையுடையனாய், என்னுள்ளேபுகுந்திருந்து எனக்கபூர்வவத்பரமபோக்யபூதனாய், *அபர்வருமமரர்களதிபதியாய், ஆச்ரிதருடைய வநுபவைகவிநாச்யமான ஸமஸ்தபாபங்களையும்போக்கி ப்ரதிகூலர்க்கு துஃக்கங்களையும் விளைவிக்கும் ஸ்வபாவனாய், நிர்மலனாயிருந்த வுன்னைபரமப்ராப்யமாகப்பற்றினே னென்கிறார். (க)

ஈடு ; அவ ;—(இரண்டாம்பாட்டு) அவன், " இவர்நம்மை விடிற்செய்வதென் " என்றதிஸங்கைபண்ணபடியைச்சொல்லிற்று - கீழிற்பாட்டில் ; இவர், " விடேன் " என்றபின்பு அவனுக்குவடிவில் பிறந்தபௌஷ்கல்யம் சொல்லுகிறது இப்பாட்டில்.

சிக்கெனச்சிறிதோரிடமும் புறப்படாத்தன்னுள்ளேயுலகுகள்
ஒக்கவேவிழுங்கிப் புகுந்தான்புகுந்ததற்பின்
மிக்கஞானவெள்ளச்சுடர் விளக்காய்த் துளக்கற்றமுதமாயெங்கும்
பக்கம்நோக்கறியா னென்பைந்தாமரைக்கண்ணனே. (உ)

ப ;—அநந்தரம் தம்முடையபக்கல் கலந்து அவனுஜ்ஜ்வலஸ்வரூபனாய்க் கொண்டு ஓரிடத்திலந்யபரதையற்றிராநின்றானென்கிறார்.

சிறிதோர்—அல்பமான
இடமும்—தேசமும்
புறப்படா—புறம்புபோகாதபடி
உலகுகள்—உலகுகளை
தன்னுள்ளே—தன்ஸங்கல்பத்துக்குள்ளே
ஒக்கவே—ஏகப்ரகாரமாக
விழுங்கி—அடக்கி
சிக்கென — இனியொருகாலும் புறப்படாதபடி
புகுந்தான்—என்னுள்ளேபுகுந்தான்;
புகுந்ததற்பின்—புகுந்தபின்
மிக்க—மிகுத்துவருகிற
ஞானவெள்ளம்—ஜ்ஞாநபூர்த்தியாகிற
சுடர்—ப்ரபைக்காஶ்ரயமான
விளக்காய்—ஸ்வரூபமாகிற தேஜோத்ரவ்யமாய்
துளக்கு—நான் சிக்கெனப்பிடித்தபின் புவிஶ்லேஷாதிஶங்கையால் வந்தநடுக்கமும்
அற்று—தீர்ந்து
அமுதமாய் — நிரதிஶய போக்யபூதனுமாய்
என்—என்னையேபார்த்திருக்கிற
பை—அழகிய
தாமரை—தாமரைபோன்ற
கண்ணன்—கண்ணையுடையவன்
எங்கும்—ஓரிடத்திலும்
பக்கம்—பக்கத்தில்
நோக்க—நோக்க
அறியான்—அறிகிறிலன்.

என்பக்கலபிநிவேஶம் பத்நீபரிஜநாதிகள்பக்கலிலும் காண்கிறிலனென்று கருத்து; ஸ்வரூபாதிகளிலவனுக்குண்டான ஸ்ப்புரிதப்ரகாஶமும் ஸ்வஸம்ஶ்லேஷமடியாகவென்று நினைக்கிறார். (உ)

ஆறு ;—(சிக்கென) இப்படி தம்முள்ளேபுகுந்தபின்பு எம்பெருமானுக்குப்பிறந்தஸம்ருத்தியைப் பேசுகிறார்.

ஜகத்ஸ்ருஷ்ட்யாத்யந்யபரதையைப் போக்கிக்கொண்டு என்னுள்ளேபுகுந்தான்; புகுந்ததற்பின் அளவிறந்த ஜ்ஞாநாதி ஸகலகல்யாணகுணவிஶிஷ்டனாய், விஜ்வரனாய், ப்ரமுதிதனாய், ஹர்ஷாதி

ஸயத்தாலே புதுக்கணித்த திருக்கண்களையுடையனாய், என்னையல்லது எங்கும் பக்கநோக்கறியானென்கிறார். (௨)

ஈடு; அவ;—(மூன்றாம்பாட்டு) நித்யஸூரிகளுக்கு மவ்வருகானவன் தன்னை நான்தேஸிகளுமநுபவிக்கும்படி பண்ணினவிதுவும் ஔதார்யமேதானென்கிறார்.

தாமரைக்கண்ணனை விண்ணோர்பரவுந் தலைமகனைத்துழாய்விரைப்
பூமருவுகண்ணி யெம்பிரானைப் பொன்மலையை
நாமருவிநன்கேத்தி யுள்ளிவணங்கி நாமகிழ்ந்தாட நாவலர்
பாமருவிநிற்கத்தந்த பான்மையேவள்ளலே. (௩)

ப;—அநந்தரம் தன்னைக்காணத்ரயத்தாலும் நிரந்தராநுபவம் பண்ணுவித்த மஹோதாரனானவன் என்னையொழியவறிகிறிலனென்கிறார்.

தாமரை—தாமரைபோன்ற
கண்ணனை—கண்களையுடையனாய் (அவ்வழகாலே)
விண்ணோர்—நித்யஸூரிகள்
பரவும்—நிரந்தரமாகப் புகழும்படியான
தலைமகனை—மேன்மையையுடையவனாய்
விரை—விரையும்
பூ—பூவும்
மருவு—மருவின
துழாய்க் கண்ணி—துழாய்மாலையையுடையனாய்க்கொண்டு
எம்—எங்களுக்கு
பிரானை—ஸ்வாமியாய்
பொன்மலையை—எங்களோட்டைச் சேர்த்தியாலே பொன்மலைபோலேயோங்கியுஜ்வலனான தன்னை
நாம்—நாங்கள்நிகர்ஷம்பார்த்தகலாதே
மருவி—மருவி
நன்கு—ஸூரிகளோபாதி அங்குத்தைக்குத்தகுதியாம்படிநன்றாக
ஏத்தி—ஏத்தி
உள்ளி—அவர்கள்சிந்தையுள் வைக்குமாபோலே நினைத்து
வணங்கி—(௧) “வணங்கி வழிபடும்” என்றபடியேதிருவடிகளிலே விழுந்து (இப்படிகாணத்ரயத்தாலுமுண்டானவநுபவத்தாலே)
நாம்—நாங்கள்
மகிழ்ந்து—ஆநந்திகளாய்
ஆட—ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணும்படியாக
நா—நாவிலே
அலர்—அலருகிற
பா—பாவிலே
மருவி—மருவி
நிற்க—திருவாய்மொழிபாடிநிற்கும்படி
தந்த—உபகரித்த
பான்மை—ஸ்வபாவத்துக்கு
ஏய்—பொருந்தின
வள்ளல்—ஔதார்யகுணவிஶிஷ்டனானவன்.

எங்கும் பக்கநோக்கறியானென்றந்வயம். பான்மை - ஸ்வபாவம். (௩)

(௧) தி-வாய்-௧-௬-௫.

ஆறு;—(தாமரை)நிரதிஶயஸௌந்தர்யலாவண்யாதி கல்யாண குணவிஶிஷ்டனாய், நிரதிஶயஸுகந்ததிவ்யமால்யா லங்க்ருதனாய், ஶேஷஶேஷாஶநவைநதேயாதிதிவ்யபுருஷர்களாலேஸம்ஸ்துயமானனாயிருந்தவனை, நாம்மருவிநன்கேத்தியுள்ளிவணங்கி நாமகிழ்ந்தாடும்படிநம்முடைய நாவிலேயலருகிற சொற்களுக்குத் தன்னைவிஷயமாகத்தருகையே ஸ்வபாவமாயிருப்பதே!,என்னவதாந்யனோவென்கிறார்

ஈடு; அவ;—(நான்காம்பாட்டு)"நாமருவிநன்கேத்தியுள்ளி வணங்கிநாமகிழ்ந்தாட" என்று - தம்முடையநைச்யத்தை யநுஸந்தித்தவாறே, "இவர்நம்மைவிடிற்செய்வதென்" என்று, அவனதிஶங்கை பண்ண, நிர்ஹேதுகமாக வுன்வடிவழகை நீயென்னையநுபவிப்பிக்க அநுபவித்து, அத்தாலேஶிதிலனானநான் உன்னைவிட ஸம்பாவனை யுண்டோ வென்கிறார்.

வள்ளலேமதுசூதனே வென்மரதகமலையே யுனைநினைந்து
எள்கல்தந்தவெந்தா யுன்னையெங்ஙனம்விடுகேன்
வெள்ளமேபுரைநின்புகழ் குடைந்தாடிப்பாடிக்களித்துகந்துகந்து
உள்ளநோய்களெல்லாந் துரந்துய்ந்துபோந்திருந்தே. (ச)

ப;—அநந்தரம் ஸர்வப்ரகாரோபகாரகனானவுன்னை விடப்போமோவென்கிறார்.

வள்ளலே—அர்த்தித்வநிரபேக்ஷமாகவுபகரிக்கும்மஹோதாரனாய்
மதுசூதனே — உபகாரங்கொள்ளுகிறவென்விரோதியை மதுவையழித்தாற்போலேயழிக்கும விரோதிகளனவெனக்கு
மரதகமலையே—உத்துங்கமா யுஜ்ஜ்வலமானமரதகமலைபோலேயிருக்கிறவடிவையநுபவிப்பிக்குமவனாய் (க) "மாற்பான்மனஞ்சுழிப்ப மங்கையர்தோள்கைவிட்டு" என்கிறபடியே)
உனை—உன்னை
நினைந்து—அநுஸந்தித்து
எள்கல்—இதரவிஷயங்களை யிகழும்ஸ்வபாவத்தை
தந்த—தந்த
எந்தாய்—ஸ்வாமியே
வெள்ளமேபுரை—பெருங்கடல்போலே யபரிச்சிந்நமான
நின்—உன்னுடைய
புகழ்—குணங்களை
குடைந்து—அவகாஹித்தநுபவித்து
ஆடிப்பாடி—அந்தப்ரீதியாலே; ஆடுவதுபாடுவதாய்
களித்து—களித்து
உகந்துகந்து—அதோளவில்நில்லாதே மேன்மேலனவுகந்து

(க) ந - திருவ கச.

உள்ளநோய்களெல்லாம் — அஹங்காரார்த்தகாமங்கள், அநுபவவிஸ்லேஷம், நிகர்ஷாநுஸந்தாநம்முதலாக வுள்ளநோய்களையெல்லாம்
தூரந்து—தூரப்போம்படியகற்றி
உய்ந்து—லப்தஸத்தாகனாய்
போந்து — ஸம்ஸாரஸ்த்திதிகுலைந்து உன்னளவும்போந்து
இருந்து — (க) "மாயநாதெ - காயந்நாஸ்தே" என்றநுபவித்துக்கொண்டிருக்கப்பெற்றுவைத்து
உன்னை - இப்படியுபகாரகனானவுன்னை
எங்ஙனம்—எங்ஙனே
விடுகேன்—விடுவேன். (௪)

ஆறு;—(வள்ளலே) ஆஸ்ரிதர்க்கு ஆத்மதாநம்பண்ணும்ஸ்வபாவனே, தத்விரோதிநிரஸந ஸ்வபாவனே, என்னுடைய பரமபோக்யமே, உன்னைநினைந்தால் நீராயுருகும் ப்ரக்ருதியாக வென்னைப் பண்ணினவனே, உன்னுடைய ஏவம்விதமான கல்யாணகுணங்களாகிற அம்ருதவெள்ளத்தைக் குடைந்தாடிப்பாடிக்களித் துகந்துகந்து உள்ள நோய்க ளெல்லாந் தூரந்து உய்ந்துபோந்திருந்து உன்னை யெங்ஙனே விடும்படி யென்கிறார். ... ... (௪)

ஈடு ; அவ ;—(அஞ்சாம்பாட்டு) ஆத்மாந்ததாஸ்யத்திலே அதிகரித்தநான் உன்னைவிடப்ரஸங்கமுண்டோவென்கிறார்.

உய்ந்துபோந்தென்னுலப்பிலாத வெந்தீவினைகளைநாசஞ்செய்துன
தந்தமிலடிமை யடைந்தேன் விடுவேனோ
ஐந்துபைந்தலையாடரவணைமேவிப் பாற்கடல்யோகநித்திரைச்
சிந்தைசெய்தவெந்தா யுன்னைச்சிந்தைசெய்துசெய்தே. (௫)

ப;—அநந்தரம் த்வதநுபவஜநித கைங்கர்யபோகத்தைப் பெற்றநான் விடும்படியென்னென்கிறார்.

பாற்கடல்—திருப்பாற்கடலிலே
ஐந்து—ஐந்துவகையாய்
பை—விரிந்த
தலை—பணங்களையுடையவனாய்
ஆடு—அசைந்துவருகிற
அரவணை—திருவரவணையின்மேலே
மேவி—பொருந்தக்கண்வளர்ந்து
யோகம்—ஜகத்ரக்ஷணயோகத்தில் நிப்ருததையாலே
நித்திரை—உறங்குவாரைப்போலே
சிந்தைசெய்த—ரக்ஷணப்ரகார சிந்தை பண்ணின
எந்தாய்—என்ஸ்வாமியே
உன்னை—இப்படிரக்ஷகத்வத்தை ப்ரகாஸிப்பித்தவுன்னை
சிந்தைசெய்து செய்து — நிரந்தராநுஸந்தாநம் பண்ணி
உய்ந்து—லப்தஸ்வரூபனாய்
போந்து—அந்யபரானஸம்ஸாரிகளில் வ்யாவ்ருத்தனாய்

(உ) கை - ப்ரமா ...

என்—நானே யெனக்குத் தேடிக்கொண்டு	நாசஞ்செய்து—நசிக்கும்படி பண்ணி
உலப்பிலாத—அஸங்க்க்யாதமாய்	உனது— ப்ராப்தனானவுன்னுடைய
வெம்—க்ரூரமாய்	அந்தமில்—அபரிச்சிந்நமான
தீ—அக்நிகல்பமான	அடிமை—கைங்கர்யபோகத்தை
வினைகளை —பாபங்களை	அடைந்தேன்—கிட்டப்பெற்றநான்
	விடுவேனோ—விடக்ஷமனல்லன்.

ஆஸ்ரிதவிஷயத்தில் உனக்குப் பொருத்தமில்லாமல் விடுகிறேனோ; அவர்கள் ரக்ஷணத்தில் உனக்குச்சிந்தையில்லாமல் விடுகிறேனோ; உன்னநுபவத்தில் எனக்கு ஶீலநமில்லாமல் விடுகிறேனோ? என்ஸ்வரூபம் ப்ரகாசியாமல் விடுகிறேனோ? விஷயாஸக்தரான ஸம்ஸாரிகளோடு பொருத்தமுண்டாய் விடுகிறேனோ? ப்ரதிபந்தகமான பாபமுண்டாய் விடுகிறேனோ, ப்ராப்யமான கைங்கர்யத்தில் சுவடறியாமல் விடுகிறேனோ? இப்படி லப்தாபீஷ்டனான நான் விடுவேனோ வென்றுகருத்து. (ரு)

ஆறு ;—(உய்ந்து) த்வதநுபவ ஜநிதமான ப்ரீதியாலே களித்தாடுகிற திருவநந்தாழ்வான்மேலே உன்னுடைய திவ்யரூபகுணங்களையநுபவித்துக்கொண்டு கண்வளர்ந்தருளுகிற வுன்னையநுபவித்துஉய்ந்துபோந்திருந்து, என்னுடைய முடிவில்லாத மஹாதுக்கங்களைப்போக்கி உன்னந்தமிலடிமையடைந்தேன் ; இனிவிடுவேனோ வென்கிறார். ... ... (ரு)

ஈடு ; அவ ;—(ஆறும்பாட்டு) ஆஸ்ரிதனுடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே தோற்றுவானொருவனானபின்பு எனக்கொரு கர்த்தவ்யாம்ஸமுண்டோ வென்கிறார்.

உன்னைச்சிந்தைசெய்துசெய் துன்னெடுமாமொழியிசை பாடியாடியென்
முன்னைத்தீவினைகள் முழுவேரரிந்தனன்யான்
உன்னைச்சிந்தையினாலிகழ்ந்த விரணியனகல்மார்வங்கீண்டவென்
முன்னைக்கோளரியே முடியாததெதன்னெனக்கே. (சு)

ப ;—அநந்தரம் இந்தக்கைங்கர்யலாபத்தாலே தம்மடைய ஸர்வாபீஷ்ட

உன்னை—வகுத்தஸ்வாமியுமாய் உபகாரகனுமானவுன்னை
சிந்தையினால்—நெஞ்சாலே
இகழ்ந்த—அநாதரித்த
இரணியன்—ஹிரண்யனுடைய
அகல்—பேரிடமுடைத்தான
மார்வம்—மார்வை
கீண்ட—அநாயாஸேந கிழித்தவனாய்
என்—விரோதிநிவ்ருத்திக்குநிதர்ஶநபூதனாய்
முன்னை — ஆஶ்ரிதனான ப்ரஹ்லாதன் நினைவுக்குமுற்கோலின
கோளரியே—நாஸிம்ஹமானவனே!
உன்னை—இப்படி ஆபத்ஸகனாய்ப்ராப்தனாய்போக்யனானவுன்னை
சிந்தைசெய்துசெய்து—நிரந்தராநுஸந்தாநம்பண்ணி
நெடு—அந்தப்ரீதியாலேயுத்துங்கமான
உன்—உன்னுடையகுணவாசகமான
மொழி—திருவாய்மொழியை
மா—அவ்விஷயத்துக்கீடானபெருமையுடைய
இசை—இசையோடே
பாடி—பாடி
ஆடி—அப்பாட்டுக்கீடானவபிநயந்தோற்றும்படியாடி (இப்படிகரணத்ரயத்தாலுமுண்டான போகத்தாலே)
என்—என்னுடைய
முன்னைத்தீவினைகள் — அநாதிகாலார்ஜிதபாபங்களை (க) “நோபஜநꣳஸ்மரந்- நோபஜநம்ஸ்மரந்” என்னும்கணக்கிலே
யான்—நான்
முழுவேரரிந்தனன் — ஒன்றொழியாமல்வேரோடேயரிந்தேன்.

போக்த்ருத்வமித்தலையிலே யானவோபாதி, விரோதிநிவர்த்தகத்வமும் இங்கேயாகக்குறையில்லையிறே; ஸ்வரூபம்தத்ப்ரகாரமானபின்பு,
எனக்கு—எனக்கு
முடியாதது—தலைக்கட்டாதது
என்—எதுதான்.

ஸர்வாபீஷ்டமும் ஸித்தமன்றோவென்று கருத்து. (௬)

ஆறு ;—(உன்னை) இப்படியுன்னை ஸர்வகரணங்களாலுமநுபவித்து என்னுடைய ஸமஸ்தப்ரதிபந்தகங்களையும் போக்கினேன்; ஆஶ்ரிதனுன்னைக் கோலுவதற்குமுன்பு அவனுடைய இஷ்டத்தை முடித்துக்கொண்டிருக்கும் ஸ்வபாவனானவனே, எனக்கு முடியாததென்; இந்தஸம்ருத்தியெல்லாம் உன்னுடைய ப்ரஸாதத்தாலே விளைந்ததென்கிறார். ... ... (௬)

ஈடு ; அவ ;—(ஏழாம்பாட்டு) என்னளவில் விஷயீகாரம் என்னுடையஸம்பந்தி ஸம்பந்திகளளவும் சென்றதுகிடீரென்கிறார்.

(க) சாந்தோ - அ - கஉ.

முடியாததென்னெனக்கேலினி முழுவேழுலகுமுண்டானுகந்துவந்து
அடியேனுட்புகுந்தா னகல்வானுமல்லனினிச்
செடியார்நோய்களெல்லாந்துரந் தெமர்கீழ்மேலெழுபிறப்பும்
விடியாவெந்நரகத் தென்றுஞ்சேர்தல் மாறினரே. (௭)

ப ;—அநந்தரம் என்பக்கல்பண்ணினவுபகாரம் என்குலத்தில் ஸம்பந்தித்தாரெல்லாருமுஜ்ஜீவிக்கும்படியாயிற்றென்கிறார்.

முழுவேழுலகும்—ஸமஸ்தலோகமும்
உண்டான் — தன்செல்லாமையாலே தனக்குள்ளேயாம்படி அவற்றையமுதுசெய்தவன்
உகந்து — அச்செல்லாமைதனக்கென்பக்கலிலே யுண்டாய், அதுக்குமேல் ஆதராதிசயத்தை யுடையனாய்க் கொண்டு
அடியேன் —என்னுடைய ஶேஷத்வஸம்பந்தமேபற்றாசாக
உள்—உள்ளே
வந்து—வந்து
புகுந்தான்—புகுந்தான்;
இனி—இனி (அந்தலோகங்கள்போலே)
அகல்வானும்—புறம்புபோமவனும்
அல்லன்—அல்லன்; (இதடியாக)
கீழ்—கீழும்
மேல்—மேலும்
எழுபிறப்பும்—எழுபிறப்பிலும்
எமர்—என்னோடுஸம்பந்தமுடையார்
செடி—செடிபோலே
ஆர்—செறிந்த
நோய்களெல்லாம் — அவித்யாகர்மவாஸநாதிகளான ஸமஸ்தவ்யாதிகளையும்
துரந்து—கடக்கவோட்டி
விடியா—ஒருகால்முடிந்து வெளிச்சிறப்பதன்றியே
வெம்—நிரதிஶயதாபகரமான
நரகத்து —ஸம்ஸாரமாகிறநிரயத்திலே
என்றும் —யாவதாத்மபாவி
சேர்தல்—கிட்டுகை
மாறினர்—தவிர்ந்தார்கள்.
இனி — இப்படிகுலஸம்பந்திபர்யந்தமாக என்னைப்பக்ஷபதித்த பின்பு
எனக்கேல்—எனக்காகில்
முடியாதது—முடியாதது
என்—உண்டோ.

என்னோடநுபந்தித்ததாகில் எல்லாக்காரியமும்தலைக்கட்டுமென்றுகருத்து.

ஆறு ;—(முடியாததென்) ஸர்வேஶ்வரனாயிருந்த வெம்பெருமானுக்கு என்பக்கலபிநிவேஶம் என்னளவில்பர்யவஸியாதே, என்னோடுஸம்பந்தித்தார்பக்கலிலுங்கூட வெள்ளங்கோத்தது, ஆதலால் அவனென்னை யகலநினைக்கிறிலன் ; இனி முடியாததொன்றுண்டோவென்கிறார். ... ... (௭)

ஈடு; அவ;—(எட்டாம்பாட்டு) இப்படி கனத்தபேற்றுக்கு நீர் செய்த ஸூக்ருதமென்னென்ன; ஒருஸூக்ருதத்தால்வந்ததல்ல, நான்பிறந்து படைத்தேதென்கிறார். அதுவுமொன்றுண்டு, அநாதியாகப்பிறந்து போந்தேனென்கிறார்.

மாறிமாறிப்பலபிறப்பும்பிறந் தடியையடைந்துள்ளந்தேறி
ஈறிலின்பத்திருவெள்ளம் யான்மூழ்கினன்
பாறிப்பாறியசுரர்தம்பல்குழாங்கள் நீறெழப்பாய்பறவையொன்று
ஏறிவீற்றிருந்தாயுன்னை யென்னுள்நீக்கேலெந்தாய். (அ)

ப;—அநந்தரம் இப்பேறெனக்கு விச்சேதியாதொழியவேணுமென்கிறார்.

பல பிறப்பும்—தேவதிர்யங்மநுஷ்யஸ்த்தாவராதிகளான நாநாஜந்மங்களிலும்
மாறிமாறிப் பிறந்து—ஒருகால் பிறந்ததிலே மீண்டுமீண்டும் பிறந்துபோரச்செய்தே
அடியை—உன் திருவடிகளை
அடைந்து-கிட்டி-சேஷத்வஜ்ஞானத்தையுடையேனாய்
உள்ளந்தேறி—"நீயேயுபாயபூதன்" என்கிறநெஞ்சில் தோற்றத்தையுடையேனாய், உன்னுடையவநுபவத்தாலே ஜநிதமான
ஈறு—முடிவு
இல்—இல்லாத
இன்பம்—ஆநந்தமாகிற
இரு—பெரிய
வெள்ளம்—வெள்ளத்திலே
யான்—அஹமர்த்தபூதனான நான்
மூழ்கினன்—அவகாஹித்தேன்;
அசுரர்தம்—அஸுரர்களுடைய
பல்—பலவகைப்பட்ட
குழாங்கள்—குழாங்களானவை
பாறிப்பாறி—பஹுமுகமாகஶிதிலமாய்
நீறு—தூளியாய்
எழ—கிளரும்படி
பாய்—அவர்களுடைய ஸேநாமத்யத்திலேபாயக்கடவதான
ஒன்று—அத்விதீயனாயுள்ள
பறவை—பெரியதிருவடியின்மேலே
ஏறி—ஏறி
வீறு—உன்மேன்மைதோன்றும்படி
இருந்தாய்—இருந்த
எந்தாய்...என்னாதனே
உன்னை...ப்ராப்தனுமாய் ஶரண்யனுமாய் போக்யனுமாய் விரோதிநிவர்த்தகனுமானவுன்னை
என்னுள்—உனக்குஸர்வப்ரகாரபரதந்த்ரனான என்னுள்ளினின்றும்
நீக்கேல்...அகற்றாதொழியவேணும்.

ஆறு;—(மாறிமாறி) உன்னோடு ஸம்ஶ்லேஷிக்கைக்குவிரோதியான ஸம்ஸாரத்தில் வர்த்திக்கிறநான், நிர்ஹேதுகமாக வுன்திருவடிகளையே ப்ராப்யமாகப்பெற்று அதிலேயுள்ளந்தேறி, முடிவில்

லாத வழகியவின்பவெள்ளத்திலே முழுகினேன்; ஆஶ்ரிதருடைய வபேக்ஷிதங்களைச்செய்யும் ஸ்வபாவனாயிருந்த நீ யினியென்னைக்கை விடாதொழியவேணுமென்றபேக்ஷிக்கிறார். ... (அ)

ஈடு; அவ;—(ஒன்பதாம்பாட்டு) முதலிலேயுன்னை யறியாதிருக்கிறவென்னை, உன்னையும் உன்போக்யதையையு மறிவித்து உன்னாலல்லது செல்லாதபடியாக்கினநீ இனியென்னைவிட்டுப் போகாதொழியவேணுமென்கிறார்.

எந்தாய்தண் திருவேங்கடத்துள்நின்றாய் யிலங்கைசெற்றாய்மராமரம்
பைந்தாளேழுருவ வொருவாளிகோத்தவில்லா [த்தவெம்
கொந்தார் தண்ணந்துழாயினாயமுதே யுன்னையென்னுள்ளேகுழை
மைந்தா வானேறே யினியெங்குப்போகின்றதே. (௯)

ப;—அநந்தரம் நீயே க்ருஷிபண்ணிக்கலந்து இனியெங்கேறப்போவதென்கிறார்.

எந்தாய்—எனக்குநிருபாதிகஸ்வாமியாய்
தண்—ஶ்ரமஹரமான
திருவேங்கடத்துள்—திருமலையிலே
நின்றாய் — எழுந்தருளிநின்றஸுலபனாய்
இலங்கை — ஆஶ்ரிதவிரோதிகளுக்கு வாஸஸ்தாநமானலங்கையை
செற்றாய்—அழித்தவனாய்
மராமரம்—மராமரங்களினுடைய
பை—பருத்த
தாள்—அடி
ஏழு—ஏழும்
உருவ—உருவும்படி
ஒருவாளி—ஒருவாளியை
கோத்த—அநாயாஸேநகோத்த
வில்லா—வில்லையுடையவனாய்
கொந்து—கொத்தாய்
ஆர்—செறிந்து
தண்—குளிர்ந்த
அம்துழாயினாய் — திருத்துழாயாலே யலங்க்ருதனாய்
எம்அமுதே — நித்யபோக்யனாய்க்கொண்டு
உன்னை—ஏவம்விதனானவுன்னை
என்னுள்ளே—என்னுள்ளே
குழைத்த—ஏகத்ரவ்யமாம்படிகலசின
மைந்தா—நித்யயௌவநஸ்வபாவனாய் (இந்நிலையாலே)
வான்—ஸூரிகளுக்கும்
ஏறே—செருக்கனாம்படிநின்றவனே

அஸாதாரண ஸம்பந்தத்தையும், ஸௌலப்யத்தையும், விரோதிநிவர்த்தகத்வத்தையுங்காட்டி, மஹாராஜரைப் போலே யென்னையும்விஶ்வஸிப்பித்து ஒப்பனையழகைக்காட்டியெனக்கு நித்யபோக்யனாய்ப் பிரிக்கவொண்ணாதபடி கலந்து அத்தாலே இளகிப்பதித்து

இத்தாலே நித்யவிபூதிக்கும் மேலான மேன்மையையுடைய நீ [விட்டு இனி—இனி (இந்தஸம்ஸ்லேஷத்தை	எங்கு—எங்கே போகின்றது—போகிறது.

இனிப்போகாதே யென்றுகருத்து. (௯)

ஆறு;—(எந்தாய்) திருமலையிலே புகுந்து நின்றருளினபடியை யும், உன்னுடைய திருவவதாரங்களையும், உன்னுடைய திவ்யசேஷ்டிதங்களையும், உன்னுடைய வழகையும், ஸ்ரீவைகுண்டநாதனாயிருந்தருளும்படியையும், மற்றுமுள்ளபடியை யடங்கவெனக்கு போக்யமாகக்காட்டியருளி, உன்னை யென்னுள்ளே யொன்றாகக்குழைத்தருளின நீயினியெங்கேபோவது ; போவேனென்றால் தான் போகமுடியுமோ வென்கிறார். ... ... (௯)

ஈடு ; அவ ;—(பத்தாம்பாட்டு) நாம்போகாதொழிகிறோம், நீர் நம்மைவிடாதொழியவேணுமேயென்ன ; நீபண்ணின வுபகாரங்களைக்கண்டுவைத்து விட ஸம்பாவனையுண்டோவென்கிறார். காலத்ரயத்திலும் ஸர்வவிதபந்துவுமான வுன்னைவிட ஸம்பாவனையில்லை யென்கிறார்.

போகின்றகாலங்கள்போயகாலங்கள் போகுகாலங்கள்தாய்தந்தை
ராகின்றாயுன்னை நானடைந்தேன் விடுவேனோ [யுயி
பாகின்றதொல்புகழ் மூவுலகுக்கும்நாதனே பரமாதண்வேங்கட
மேகின்றாய்தண்டுழாய் விரைநாறுகண்ணியனே. (௧௦)

ப ;—அநந்தரம் உன்னுபகாரங்களைக்கண்ட நான் உன்னைப்பெற்று வைத்து விடக்ஷமனோ வென்கிறார்.

போகின்றகாலங்கள் போயகாலங்கள் போகுகாலங்கள் } வர்த்தமாநமாயும் பூதமாயும் ஆகாமியாயு முள்ளகாலத்திலும்	புகழ்—குணப்ரதையை யுடையனாய்க் கொண்டு
தாய்தந்தையுயிராகின்றாய் } தாயும்தந்தையும் தன்னுத்மாவும் தனக்குப்பண்ணும் பரிவைப்பண்ணுநிற்பானாய்	மூவுலகுக்கும்—த்ரிவிதசேதநாசேதநங்களுக்கும்
	நாதனே—நாதனாய்
	பரமா—இப்பெருமைக்குத் தனக்குமேலில்லாதவனாய் இம்மேன்மை [யன்றியே
பாகின்ற—இப்படி ஸர்வதோமுகமான ரக்ஷணத்தாலேபரக்கிற	தண்—ஸ்ரமஹரமான
	வேங்கடம்—திருமலையிலே
தொல்—அநாதிஸித்தமான	மேகின்றாய்—மேவிநிற்கிற ஸௌலப்

யத்தை யுடையனும் (இப்பரத்வஸௌலப்யங்களுக்கும் போக்யதைக்கும்ஸூசகமாய்)	நாறு—ப்ரவஹிக்கிற
தண்—குளிர்ந்த	கண்ணியனே-மாலையை யுடையவனே
துழாய்—திருத்துழாயையுடைத்தாய்	உன்னை—ஏவம்விதனான வுன்னை
விரை—பரிமளம்	அடைந்தேன் — ஸம்ஶ்லேஷிக்கப்பெற்ற
	நான்—நான்
	விடுவேனோ—விடக்ஷமனோ. (௧௦)

ஆறு ;—(போகின்ற) ஸர்வாத்மாக்களுக்கும் மாதாசெய்யும் நன்மையும் பிதாசெய்யும் நன்மையும் தான் தனக்குச்செய்யும்நன்மையும் ஸர்வகாலமுமெனக்குச்செய்தருளும் ஸ்வபாவனும், நிரவதிகநித்யஸித்த கல்யாணகுணவிஶிஷ்டனும், ஸர்வலோகேஶ்வரனும், நிரஸ்தஸமாப்யதிகனும், திருமலையிலேபுகுந்தருளி எனக்குங்கூட பரமஸுலபனும், பரமபோக்யனுமிருந்த வுன்னைநானடைந்தேன் ; இனிவிடுவேனோவென்றுகொண்டுதாம் எம்பெருமானோடு கலந்தகலவிக்குத் தம்மாலும் அவனாலும் ஹேத்வந்தரத்தாலு மொழிவில்லையென்கிறார். ... ... (௧௦)

ஈடு ; அவ ;—(பதினொன்றாம்பாட்டு) நிகமத்தில், இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லாராரேனுமாகவுமாம், அவர்களுக்கு குலசரணகோத்ராதிகள் அப்ரயோஜகம், இவ்வாகாரத்தாலே அவர்கள் பகவதீயரென்கிறார்.

கண்ணித்தண்ணந்துழாய்முடிக் கமலத்தடம்பெருங்
கண்ணனைப்புகழ்நண்ணித்தென்குருகூர்ச் சடகோபன்மாறன்சொன்ன
எண்ணிற்சோர்விலந்தாதியாயிரத்துள் ளிவையுமோர்பத்திசையொடும்
பண்ணிற்பாட வல்லாரவர் கேசவன்றமரே. (௧௧)

ப ;—அநந்தரம் இத்திருவாய்மொழிக்குப் ப்லமாக பகவச்சேஷத்வஸித்தியை யருளிச்செய்கிறார்.

கண்ணி—மாலாகாரமாய்	புகழ்—அவனுடையஆஶ்ரிதஸம்ஶ்லேஷகாரிதமான குணப்ரதையை
தண்—குளிர்ந்த	நண்ணி—கிட்டி
அம்துழாய்—திருத்துழாயாலே யலங்க்ருதமான	தென்—அழகிய
முடி—திருமுடியையும்	குருகூர்—திருநகரிக்குநிர்வாஹகராய்
கமலம்—கமலம்போலேதர்ஶநீயமாய்	மாறன்—"மாறன்" என்கிறகுடிப்பேரையுடைய
தடம்—விஶாலமாய்	சடகோபன்—ஆழ்வார்
பெரு—நீண்டவனை	சொன்ன—அருளிச்செய்த
கண்ணனை — திருக்கண்களையுடைய	

எண்ணில்—பகவதபிப்ராயத்தை
சோர்வில்—தப்பாத (வெண்ணுத
அந்தாதி—அந்தாதியாயடைவு குலைக்க
ஆயிரத்துள்—ஆயிரத்துள்
ஓர்—அத்விதீயமான
இவைபத்தும்—இவைபத்தையும்
இசையொடும்—இசையோடேகூட
பண்ணில்—பண்ணிலே
பாடவல்லாரவர் — பாடவல்லாரானவவர்கள்
கேசவன்றமர்—ஸர்வாதிகனுன ஸர்வேஶ்வரனோடே அவ்யவஹிதஸம்பந்தயுக்தராவர்கள்.

எண்ணென்று - ஜ்ஞாநமாய், தத்வஜ்ஞாநத்தைத்தப்பாத வாயிரமென்றுமாம். பண்ணென்று - ஸ்வரம். இசையென்று - கீதப்ரகாரம். இது - இரண்டாமடியும் மூன்றுமடியும் அறுசீராய், முதலடியும் ஈற்றடியும் நாற்சீரான ஆசிரியத்துறை.

(கக)

ஆறு ;—(கண்ணி) எம்பெருமானுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளையுள்ளபடியேயநுபவித்து, அநுபவித்தபடியேசொன்ன இத்திருவாய்மொழியை யிசையோடும்பண்ணிலே பாடவல்லார்க்கு, "கேசவன்றமர்" என்னுமிவ்வாகாரமில்லாதவாகாராந்தரமில்லையென்கிறார்.

ஈடு ;—முதற்பாட்டில் - எம்பெருமான் "இவர்நம்மைவிடிற்செய்வதென்" என்கிறவதி ஶங்கையைப்போக்கினார் ; இரண்டாம்பாட்டில் - அதுபோனபின்பு அவனுக்குப்பிறந்த புதுக்கணிப்பைச் சொன்னார்; மூன்றும்பாட்டில்-தமக்கவன் பண்ணின ஔதார்யத்தை யநுஸந்தித்து வித்தரானார்; நாலாம்பாட்டில் - அவன் உமக்குப்பண்ணின ஔதார்யமேதென்ன, இதரவிஷய வைராக்யமென்றார் ; அஞ்சாம்பாட்டில் - இதரவிஷய வைராக்யபூர்வகமாக ஆத்மாந்த தாஸ்யத்திலே அதிகரித்தநான் இனியொருநாளும் விடேனென்றார்; ஆறும்பாட்டில்-ஆஶ்ரிதர்க்கு உதவுவாயானபின்பு எனக்கொருகுறையுண்டோவென்றார் ; ஏழாம்பாட்டில் - என்னுடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுக்கு மொருகுறையில்லையென்றார் ; எட்டாம்பாட்டில் - இதுக்குத் தாமநுஷ்டித்த வுபாயமின்னதென்றார் ; ஒன்பதாம் பாட்டில் - "இவரகவாயறியவேணும்" என்றோரடியோரநிற்க, இனிப்போக வொண்ணாதென்றார் ; பத்தாம்பாட்டில் - நாம்போகாதொழிகிறோம், நீர்தாம்போகாதொழியவேணுமேயென்ன, காலத்ரயத்திலும் ஸர்வவிதபந்துவுமான வுன்னை விடஸம்பாவனையில்லையென்றார் ; இதில்கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்தில் ஆறுந்திருவாய்மொழி

முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

இரண்டாம்பத்து

ஏழாந் திருவாய்மொழி.

கேசவன்றமர் ப்ரவேசங்கள்.

ப ;—ஏழாந்திருவாய்மொழியில், ஸ்வஸம்பந்தி பரம்பராபர்யந்தமாக ஈஸ்வரன்பண்ணின பக்ஷபாதத்தாலே தம்மளவில் அவனுடைய அபிநிவேஸாதிஸயத்தைக்கண்டு உகந்து; ஸ்வஸாந்தாநிக விஷயத்தில் அவனுடைய ப்ரஸாதவிஸேஷத்தையும், அதுக்கடியான தம்மளவில் பக்ஷபாதத்தையும், தத்கார்யமான வுபகாரத்தையும், அவ்வுபகாரம் தங்குலத்திலுள்ளார்க்கும் ப்ராப்திபர்யந்தமான படியையும், இதடியாக ஈஸ்வரனுக்குப்பிறந்த ஔஜ்வல்யத்தையும், இதுக்கடைய ஹேதுவான க்ருபாபாரவஸ்யத்தையும், அநுபவிக்கைக் குறுப்பாக ஸத்த்வோத்தரமான சித்தப்ரதாநத்தையும், பொல்லாநெஞ்சைப்போக்கின படியையும், ப்ரேமயுக்தமான நல்லநெஞ்சிலே புகுந்தபடியையும், அந்நெஞ்சு அவனை விடாதொழியவேணுமென்கிற அபேக்ஷையையும், இன்னின்னபடியாக அவன் தன்னை முழுக்கக்கொடுத்த ஔதார்யத்தையும், இவ்வௌதார்யாதிஸயம் அதிஸயிதஜ்ஞாநர்க்கு மபரிச்சேத்யமென்னுமிடத்தையு மருளிச்செய்து, ஸ்வவிஷயத்திலாதாம் ஈஸ்வரனுக்கு ஸம்பந்தித்ரயஸந்தாநஸம்ரக்ஷணபர்யந்தமானபடியை அவனுடைய ஆஸ்ரிதரக்ஷணார்த்த குணசேஷ்டித ப்ரகாஸகங்களான திருத்வாதஸ நாமங்களோடேகூட வருளிச்செய்கிறார். *

ஆறு ;—(கேசவன்றமர்) என்பக்கலுள்ள அபிநிவேஸத்தாலே என்னோடு ஸம்பந்தித்தாரையுங்கூட விஷயீகரித்தருளினானென்று ப்ரஸ்துதமானபொருளை விஸ்தரிக்கிறது. *

ஈடு ;—* ஆடியாடியில் " வாடிவாடும் " என்கையாலே - ஒருநீர்ச்சாவியாய் வாடினபடிசொல்லிற்று ; அந்தவொரு நீர்ச்சாவியானதுதீர *காரார்கருமுகில் கலந்துவர்ஷித்தபடி சொல்லிற்று - *அந்தாமத்தன்பில் ; அப்படிவர்ஷித்தபடியாலே " ஈறிலின்பத்திருவெள்ளம் யான்மூழ்கினன் " என்று - வெள்ளமிட்டுப் பெருகினபடி சொல்லிற்று * வைகுந்தாமணிவண்ணனில் ; " எமர்கீழ்மேலெழுபிறப்பும் மாசதிரிதுபெற்று " என்கையாலே - அவ்வெள்ளமிருகரையும் புரண்டபடிசொல்லுகிறது - * கேசவன்றமரில்.

இவர் * ஆடியாடியில் பட்டவார்த்திதீரவந்து கலந்தபடிசொல்லிற்று-* அந்தாமத்தன்பு; அக்கலவியால் பிறந்தப்ரீதி அவனதானபடிசொல்லிற்று - * வைகுந்தாமணிவண்ணன்; அந்தப்ரீதிதான் ஆழ்வாரொருவரளவிலுமன்றிக்கே, † தம்மோடுபரம்பரயா ஸம்பந்தமுடையாரளவும் வெள்ளமிட்டுப் பெருகினபடியைச் சொல்லுகிறது இத்திருவாய்மொழியில். ஸர்வேஸ்வரன் ஆழ்வாரோடேவந்து ஸம்ஸ்லேஷித்து அத்தால்பிறந்தப்ரீதி தம்மொருவரளவிலுமன்றிக்கே தம்மோடுபரம்பரயா ஸம்பந்தமுடையாரளவும் பெருகினபடியைக் கண்டு, "இது இவன் என்பக்கல்பண்ணின பக்ஷபாதாதிஸயமிறே" என்று இனியராய், தம்மைவிஷயீகரிக்கைக்கீடான குணசேஷ்டிதாதிகளை யநுஸந்தித்து அவற்றுக்கு வாசகமான திருத்வாதஸநாமத்தாலே அவனைப்பேசி யநுபவிக்கிறார்.

ஸர்வேஸ்வரன் ஒருவனை விஷயீகரித்தால், அதுபின்னை அவனளவிலே நில்லாதிறே. (க) [ஊாணாந்நாநமெவொாணி - மரணாந்தாநிவைராணி] ருஷிகள் குடியிருப்பை யழித்து, மைதிலியைப் பிரித்து, நம்முயிர்நிலையிலே நலிந்தாப்போலே ஸ்ரீ ஜடாயுமஹாராஜரை நலிந்து, இவையெல்லாம் செய்யமாட்டானே இவனினி. (க) [நிரூத்தம் நஃப்ரயொஜநம் - நிர்வ்ருத்தம்நஃப்ரயோஜநம்] இவன் ஜீவிக்கிறநாளிலே "நாம்செய்யும் நன்மை இவன் விலக்காதொழிவது காண்" என்றிருந்தோம், அது அந்நாளில் பெற்றிலோம்; நாம்தேடியிருந்தது முந்தறமுன்னம் ஸித்திக்கப்பெற்றோமிறே. (க) [க்ரியதா ஸ்யஸம்ஸ்காரஃ - க்ரியதாமஸ்யஸம்ஸ்காரஃ] இவன் நாம்செய்யும் நன்மை விலக்காதானவளவு பிறந்தவின்று மிழக்கவேணுமோ, வேண்டுவன செய்யப்பாரும். (க) [மமாப்யெஷயதாதவ - மமாப்யேஷயதாதவ] நீரிருக்கிருந்தீராகில், குடற்றுடக் குடையாரிலே யொருவன் செய்யுமித்தனையன்றோ; நாமிவனுக்கு வேண்டுவன செய்ய; நீர்பின்னைக்கடக்க நில்லீரென்றாரிறே. ஸ்ரீவிபீஷணாழ்வான் பக்கலோரம் ராவணனளவுஞ்சென்றதிறே.

"மஹாராஜர்க்குஸத்ரு" என்று வாலியை நிரஸித்துவைத்து, மஹாராஜர் கண்ணநீர்பொறுக்கமாட்டாதே (உ)"ஸக்தாதவாஷ்ஃ-

(க) ரா - யு - ககச - கOக. (உ) ரா - கிஷ் - உச - உக. † அவரோடு.

ஸஞ்ஜாதபாஷ்பః '' என்று தாமும் கண்ணநீர்விழவிட்டாரிறே. (க) [[illegible] - தர்மேமஸ்சதேபத்ர] ஸ்ரீமாலாகாரர் பக்கல் விஷயீகாரம் அவர் ஸந்தாநத்தளவும் சென்றதிறே; ஸ்ரீகண்டாகர்ணன் பக்கல் பண்ணினவிஷயீகாரம் அவன்தம்பி யளவுஞ் சென்று, " நீயவனுக்கு நல்லையாகில் அவன்முன்னேகப்போ '' என்றருளிச்செய்தானிறே. எம்பாரித் திருவாய்மொழி யருளிச்செய்யப் புக்கால், " ஸ்ரீவைஷ்ணவனேனென்கிறார் '' என்பராம்; வைஷ்ணவத்வஸிந்ஹமிறே திருத்வாதசநாமம்; ஆழ்வாருடைய நெடுமாற்கடிமையும், எம்பெருமானுடைய நெடுமாற்கடிமையும் இரண்டாயிற்று நெடுமாற்கடிமை; அதில் எம்பெருமானுடைய நெடுமாற்கடிமை இத்திருவாய்மொழி. *

ஈடு ; அவ ;—(முதற்பாட்டு) ஸம்பந்தி ஸம்பந்திகள் பக்கலிலும் எம்பெருமா னபிநிவிஷ்டனானபடியைக்கண்டு, இதெல்லாம் என்பக்க லுண்டான விஷயீகாராதிஶய மிறேயென்று ஹ்ருஷ்டராகிறார்.

கேசவன்தமர்கீழ்மே லெமரேழெழுபிறப்பும்
மாசதிரிதுபெற்று நம்முடையவாழ்வு வாய்க்கின்றவா
ஈசனென்கருமாணிக்க மென்செங்கோலக்கண்ணன் விண்ணோர்
நாயகனெம்பிரா னெம்மான் நாராயணனாலே. (க)

ப ;—முதற்பாட்டில், தம்முடைய குலத்திலுள்ளார் பகவதபிமாநாந்தர்க்கதரானபடியை யருளிச்செய்கிறார்.

ஈசன்—ஸர்வஸாதாரணமான ஸ்வாமித்வத்தை யுடையனாய்

என்கருமாணிக்கம் } அப்படியேபொதுவன்றியே நீலரத்நம்போன்றவடிவையெனக்குக்காட்டி

என்செங்கோலக்கண்ணன் } அவ்வடிவுக்கு பரபாகமாம்படி சிவந்தழகிய திருக்கண்களாலே யென்னை யநந்யார்ஹனாக்கி

விண்ணோர்நாயகன்—பரமபத வாஸிகளோபாதி அங்கீகரித்து

எம்பிரான்—என்னை யநுபவிப்பித்து

எம்மான்—எனக்கு நாதபூதனானவுறவடியாக

நாராயணனாலே—நிரதிஶய வாத்ஸல்யயுக்தனானநாராயணனாலே

கீழ்மேலேழெழுபிறப்பும்— கீழ்மேலே ழேழுபிறப்பும்

(க) வி - பு - ரு - கக - உஎ.

கேசவன்தமர்—ஸர்வாதிகனான கேசவன்தமரான
எமர்—எமரானவர்கள்
இது — நிர்ஹேதுகபகவதங்கீகாரமாகிறவிந்த
மா—பெரிய
சதிர்—சதிரை
பெற்று—பெற்று (அத்தாலே)
நம்முடை—நம்முடைய
வாழ்வு—ஸ்ரீவைஷ்ணவத்வ ஸ்ரீயானது
வாய்க்கின்றவா—வளருகிறபடியே. (க)

ஆறு;—ஸர்வேஶ்வரனாய், நிரதிஶயஸௌந்தர்யாதி கல்யாண குணகனாய் *அயர்வறுமமரர்களதிபதியாய், எனக்கு ஸ்வாமியாயிருந்த நாராயணனாலே, யேநகேநாபிப்ரகாரேண ஸாக்ஷாத்வா பரம்பரயாவா என்னோடு ஸம்பந்தமுடையா ரெல்லாரும் பகவதேகபோகரானார்கள்; தத்ஸம்பந்தத்தினாலே பகவதேகபோகத்வலக்ஷணமான ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ நமக்கு விளையும்படியே யிதுவென்கிறார். (க)

ஈடு; அவ;—(இரண்டாம்பாட்டு) "நாராயணனாலே" என்று நாராயணஶப்தம் ப்ரஸ்துதமாயிற்றே; அதுக்கர்த்தமருளிச்செய்வதாக ஶப்தத்தை யுபாதாநம் பண்ணுகிறார்.

நாரணன்முழுவேழுலகுக்கும் நாதன்வேதமயன்
காரணம்கிரிசைகருமமிவை முதல்வனெந்தை
சீரணங்கமரர்பிறர்பலருந் தொழுதேத்தநின்று
வாரணத்தை மருப்பொசித்தபிரா னென்மாதவனே. (உ)

ப;—அநந்தரம் கீழுக்தமான நாராயணஶப்தார்த்தத்தை யுபபாதியாநின்றுகொண்டு ஸ்வவிஷயபக்ஷபாதத்தை யருளிச்செய்கிறார்.

நாரணன்—நாராயண ஶப்தவாச்யனாய் அதினுடைய வர்த்தமான
முழுவேழுலகுக்கும்—ஸமஸ்தலோகத்துக்கும்
நாதன்—ஸ்வாமியாய்
வேதமயன் — அந்தஶப்தத்தையே ப்ரதாநமாக ப்ரதிபாதிக்கிற வேதப்ரதிபாத்யனாய்
காரணம்—க்ரியாஹேது
கிரிசை—க்ரியை
கருமம்—க்ரியாபலமான கார்யம்
இவை—இவற்றுக்கு
முதல்வன்—காரணபூதனாய்
சீர்—குணோத்தராய்
அணங்கு—திவ்யரான
அமரர்—தேவர்களும்
பிறர்—ருஷிகளும் மநுஷ்யாதிகளுமான
பலரும்—எல்லாரும்
தொழுது—வணங்கி
ஏத்த—ஸ்தோத்ரம் பண்ணும்படியாக
நின்று—நின்று
வாரணத்தை—குவலயாபீடத்தை
மருப்பு—கொம்பை
ஒசித்த—முறித்த
பிரான்—மஹோபகாரகனாய்
என் — இப்படி நாரஶப்தார்த்தங்கள்

தனக்கு விபூதியானபடியை யெனக்கு ப்ரகாசிப் பித்த	மாதவன்—ஶ்ரிய:பதியான க்ருஷ்ணன் எந்தை—என்னை யநந்யார்ஹனுக்கின பேஷி.

சீரணங்கென்று - லக்ஷ்மியாகவுமாம். (உ)

ஆறு ;—(நாரணன்) "ஈசன்" என்று ப்ரஸ்துதமான ஈஶ்வரத்வத்தையுபபாதிக்கிறது.

ஸர்வாந்தராத்மபூதனாய், ஸர்வலோகேஶ்வரனாய், ஸர்வவேதவேத்யனாய், காரணத்துக்கும் க்ரியைக்கும் கார்யத்துக்கும் நிர்வாஹகனாயிருக்குமவைத்து, எனக்கு போக்யமாகைக்காக, பெரியபிராட்டியாரும் * அயர்வறு மமரர்களும் தொழுதேத்த, அதிலே ஸம்வர்த்திதபலனாய்நின்று வாரணத்தை மருப்பொசித்தபிரான் மாதவனாலே எமரேழெழுபிறப்பும் கேசவன்தமராயிற்றென்கிறார். (உ)

ஈடு ; அவ ;—(மூன்றும்பாட்டு) கீழே "மாசதிரிதுபெற்று" என்றார் ; இந்நன்மைக்கடியென்னென்ன ; நினைவின்றிக்கேயிருக்க அந்த:புரவாஸிகள் சொல்லும் வார்த்தையைச்சொன்னேனென்கிறார் (க) "ஜாமாதா தயித ஸ்தவேதி பவதீஸம்பந்த த்ருஷ்ட்யா ஹரிம் பஶ்யேம" என்றாரிறேபட்டர்.

மாதவனென்றதேகொண் டென்னையினியிப்பாற்பட்டது
யாதவங்களுஞ்சேர்கொடே னென்றென்னுட்புகுந்திருந்து
தீதவங்கெடுக்குமமுதஞ் செந்தாமரைக்கட்குன்றம்
கோதவமிலென்கன்னற்கட்டி யெம்மானென்கோவிந்தனே. (ரு.)

ப ;—அநந்தரம் இப்பக்ஷபாதமடியாக ஸ்வவிஷயத்திலுக்திமாத்ரத்தையே பற்றாசாகக்கொண்டுபண்ணின வுபகாரத்தை யருளிச்செய்கிறார்.

என்—எனக்காக	கொண்டு—பற்றாசாகக்கொண்டு
கோவிந்தன்—க்ருஷ்ணனாய் வந்தவதரித்த	என்னை — உக்தியில்வாசியறியாத வென்னை
எம்மான்—என்னுடைய ஸ்வாமியான	இனி—உக்த்யநந்தரமாக
மாதவன்—ஸ்ரீமான்	இப்பாற்பட்டது — மேலுள்ள காலமெல்லாம்
என்றதே—என்று நான்சொன்னவிந்த அஹ்ருதயோக்தியையே	அவங்கள்—அவித்யாதிகளான குறைகள்

(க) ஶ்ரீகுணரத்ந - ருஉ.

யாதும்—ஏதேனுமொன்றையும்
சேர்கொடேன்—சேர்கொடேன்
என்று — என்றுஸங்கல்பித்து அதுக்கிடாக
என்னுள்—என்னெஞ்சுக்குள்ளே
புகுந்து—புகுந்து
இருந்து—அநந்யபரனாயிருந்து
தீது—புத்திபூர்வகமான தீமையையும்
அவம்—ப்ராமாதிகமான அவத்தையும்
கெடுக்கும்—கெடுக்கும்படியான
அமுதம் — நித்யபோக்யபூதனாய் இஸ்ஸம்ஶ்லேஷத்தாலே
செம்—சிவந்த
தாமரை—தாமரைபோலேயிருக்கிற
கண்—திருக்கண்களையும்
குன்றம்—ஸுஸ்த்திரமாய்வளர்ந்த வடிவையு மநுபவிப்பித்து
கோது—கோதும்
அவம்—அவமும்
இல்—இல்லாத
என்கன்னற்கட்டி — கன்னற் கட்டி போலே யெனக்கினியனானான்.

கன்னற்கட்டி - கருப்புக்கட்டி. அதுக்கு, கோதும், அவமுமாவது - நீரஸமானவஸ்த்வந்தரஸம்ஸர்க்கமும், பாகதோஷமும். ஈஶ்வரனுக்கு, கோதும், அவமுமாவது - உபகாரத்தினுடைய ஹேதுஸாபேக்ஷத்வமும், ஸ்வப்ரயோஜநார்த்தத்வமும். (ங)

ஆறு ;—(மாதவன்) இப்படி எம்பெருமான் என்னோடு ஸம்பந்தித்தாரையுங்கூட விஷயீகரிக்கும்படி என்னை வைஷ்ணவனாக்குகைக்கு ஹேதுவான என்பக்கலுள்ள சதிராகிறதென்னென்னில் ; அதின்னதென்று சொல்லுகிறது.

யத்ருச்சயாபிராட்டி பரிக்ரஹித்தார் சொல்லுவதொருசொல்லைச்சொல்ல, அச்சொல்மாத்ரத்தையேகொண்டு மெய்யேபிராட்டி பரிக்ரஹமாயிருப்பாரைப்பார்த்தருளும் பார்வையாலே யென்னைப் பார்த்தருளி, “இவரையாகாதேநான் நெடுங்காலமெல்லாமிழந்தது” என்று, இழந்தகாலத்தை யநுஸந்தித்துமோஹித்து, பின்னைநெடும்போதுகூட ப்ரபுத்தனாய், “போனகாலத்தை யினிச்செய்யலாவதில்லையிறே, இனி யிப்பாலுள்ளகாலமாகிலும் என்னைவிடேன்” என்று, நிரதிஶய ஸௌந்தர்யத்தை யுடையனாய், நிரதிஶயபோக்யபூதனாய், ஆஶ்ரிதஸுலபனாய், பரமகாருணிகனா யிருந்த எம்பெருமான் என்னுள்புகுந்திருந்து, என்பக்கலுள்ள ஸ்வஸம்ஶ்லேஷ விரோதியான ஸ்வரூப ப்ரயுக்ததோஷத்தையும் ஹேதுக்ருதமான தோஷத்தையும்போக்கி, எனக்கு பரமபோக்யனானானென்கிறார். (ங)

ஈடு; அவ ;—(நான்காம்பாட்டு) என்னோடு பரம்பராஸம்பந்தமுடையாரையுங்கூட என்னைப்போலேயாக்கின னொருவனுடைய ஸாமர்த்த்யமிருக்கும்படியே! என்று விஸ்மிதராகிறார்.

கோவிந்தன்குடக்கூத்தன்கோவலனென்றென்றேகுனித்து
தேவும்தன்னையும் பாடியாடத்திருத்தியென்னைக்கொண்டென்
பாவந்தன்னையும் பாறக்கைத்தெமரேழேழ்பிறப்பும்
மேவுந்தன்மையமாக்கினான் வல்லனெம்பிரான்விட்டுவே. (ச)

ப ;—அநந்தரம் இவ்வுபகாரம் ஸ்வஸம்பந்திகுலபர்யந்தமாம்படிபண்ணின ஸாமர்த்த்யத்தை யருளிச்செய்கிறார்.

வல்லன்—நினைத்தது செய்யவல்லஶக்திமானாய்
விட்டு — ஸமஸ்த பதார்த்தங்களையும் வ்யாபித்து
எம்பிரான் - ஊரைவளைந்தொருவனைப் பிடிக்குமாபோலே யென்னை யங்கீகரித்த ஸ்வாமியானவன்
கோவிந்தன் — ஜாத்யுசிதமான கோஸம்ருத்தியையுடையவன்
குடக்கூத்தன் — அந்த ஸம்ருத்த்யுசிதமான ஹர்ஷவ்யாபாரமாயுள்ள குடக்கூத்தையுடையவன்
கோவலன்—இந்த வைஶ்வர்யசேஷ்டிதங்களுக் கநுரூபமான கோபாலஜந்மத்தையுடையவன்
என்றென்றே—என்றென் றிவற்றைத் தனித்தனியேசொல்லி
குனித்து—ப்ரீதியாலே கூத்தாடி
தேவும் — இந்த ஸௌலப்யத்துக்கடியான பரத்வத்தையும்
தன்னையும்—தனக்கஸாதாரண ஸ்வபாவமான நீர்மையையும்
பாடி-ப்ரீதிக்குப் போக்குவீடாகப்பாடி
ஆட—ஸஞ்சரிக்கும்படி
திருத்தி—இரும்பைப்பொன்னாக்குவாரைப்போலே நித்யஸூரிஸமாநனாம்படி திருத்தி
என்னை—என்னை
கொண்டு—தன்னுடையவனாகக் கைக்கொண்டு, ஸ்வாங்கீகாரவிரோதியான
என்—என்னுடைய
பாவந்தன்னையும்—பாபங்களையும்
பாற—ஓடிப்போம்படி
கைத்து—துரத்தி
எமர்—என்னோடேஸம்பந்தமுடையார்
ஏழேழ்பிறப்பும்—ஏழேழுஜந்மமும்
மேவும்—தன்னைப்ராபிக்கும்
தன்மையம்—தன்மையை யுடையோமாம்படி
ஆக்கினான்—பண்ணினான்.

இதொருஶக்தியோகமிருந்தபடி யென்னென்று கருத்து. பாற - ஓட. (ச)

ஆறு ;—(கோவிந்தன்) இப்படி யென்னுள்ளேபுகுந்திருந்து தன்னுடைய குணசேஷ்டிதங்களையேத்திக் களிக்கும்படியாகவும், தன்னுடைய ஸர்வேஶ்வரத்வத்தையும் ஆஶ்ரிதபாரதந்த்ர்யமாகிற

தன்னுடைய ஸ்வரூபத்தையும் பாடியாடும்படியாகவு மென்னைத் திருத்தி, இப்படியென்னை விஷயீகரித்து, பின்னை என்பக்கலுள்ள ப்ரதிபந்தகங்களை யெல்லாம்போக்கி அவ்வளவில் பர்யவஸியாதே, என்னோடு ஸம்பந்தித்தாரையுங்கூட என்னைப்போலே தன்திருவடிகளை ஸம்ஶ்லேஷிக்கும் ஸ்வபாவராக்கினான்; வல்லன் வல்லனெம்பிரான், வல்லனென்னையன், வல்லனென்னப்பன், வல்லனென்றென்று அவனைப்புகழுகிறார். ... ... (சு)

ஈடு; அவ;—(ஐந்தாம்பாட்டு) திருமாலையாண்டானோடே எம்பெருமானார் திருவாய்மொழிகேட்டருளுகிறநாளில், பாட்டுக்கள்தோறும் சிலவார்த்தைகளையருளிச்செய்து "இது அர்த்தமானாலோ" என்றால், "இது விஶ்வாமித்ரஸ்ருஷ்டி, ஆளவந்தாரருளிச்செய்யக் கேட்டறியேன்" என்று பணிக்குமாண்டான்; ஆண்டான் "இப்பாட்டுக்கு விஶ்வாமித்ரஸ்ருஷ்டி வேண்டாவாயிருந்ததீ" என்ன, "இப்பாட்டால் - தன்னவயவஸௌந்தர்யத்தாலே யென்னைத் தனக்காக்கினானென்கிறார்" என்றருளிச்செய்தருளினாராம்.

அதுவுங்கிடக்க, பட்டருளிச்செய்வதொன்றுண்டு - "ஆழ்வாரையுமாழ்வார்பரிகரத்தையும் விஷயீகரித்து, அத்தாலே திருமேனியிற்பிறந்த ஔஜ்ஜ்வல்யத்தைச் சொல்லுகிறது" என்று; (க) "விமோசிதஜடாஸ்நாதஸ்ஸ்நாதஸ்த்ரஸ்ததோ நக: । ஸஹாஸ-வஸநாநாக்ஷ்யஸ்த்ரஸ்யாஜ்ஞயா - விரோசிதஜடஸ்ஸ்நாதஸ்சித்ரமால்யாநுலேபந: । மஹார்ஹவஸநோராமஸ் தஸ்தௌ தத்ரஶ்ரியாஜ்வலந்" என்று நின்றாற்போலே.

விட்டிலங்குசெஞ்சோதித் தாமரைபாதங்கைகள்கண்கள்
விட்டிலங்குகருஞ்சுடர் மலையேதிருவுடம்பு
விட்டிலங்குமதியஞ்சீர் சங்குசக்கரம்பரிதி
விட்டிலங்குமுடியம்மான் மதுசூதனன்றனக்கே. (ரு)

ப;—அநந்தரம் ஸபரிகரமாகத் தம்மையங்கீகரித்தபடியாலே அவனுக்குப் பிறந்த ஔஜ்ஜ்வல்யத்தையருளிச்செய்கிறார்.

இப்பாட்டில் முதலடியில், விட்டுவென்று - திருநாமமாகப்பிரித்து, "விட்டிலங்குமுடியம்மான்" என்று நாலாமடியோடே யந்வயித்துக்கிடக்கிறது;

(க) ரா - யு - கஉக - கரு.

அல்லாதபோது; திருநாமம்முதலாயெழுகிறபாட்டுக்களின் மர்யாதைகுலையும். "விட்டு" என்னுமிவ்விடத்திலுகரம் - குற்றியலாகக்கொள்க.

விட்டு—விஷ்ணுவாய்	இலங்கு—விளங்காநிற்கிற
விட்டு—பரந்து	கரு—நீலமான
இலங்கு—விளங்குகிற	சுடர்—ப்ரபையையுடைத்தான
முடி—அபிஷேகத்தையுடையனாய்	மலையே—மலைபோன்றது
அம்மான்—ஸ்வாமியான	திரு—அழகிய
மதுசூதனன் றனக்கு— மதுஸூதநன் தனக்கு	உடம்பு—வடிவு;
இலங்கு—இலங்கி	சீர்—அழகிய
செம்—சிவந்த	சங்கு—சங்கு
சோதி—ஒளியையுடைய	விட்டு—பரம்பி
தாமரையே—தாமரைபோன்றன	இலங்கு—விளங்குகிற
பாதம்—திருவடிகளும்	மதியமே—சந்த்ரனைப்போன்றது;
கைகள்—திருக்கைகளும்	சக்கரம்—சக்ரம்
கண்கள்—திருக்கண்களும்;	விட்டிலங்கு—அப்படிப்பட்ட
விட்டு—விகஸிதமாய்	பரிதியே—ஆதித்யனைப்போன்றது.

ஸாமாநாதிகரண்யம் - உபமாநோபமேயபாவத்தாலே. (ரு)

ஆறு;—(விட்டிலங்கு) இப்படி யென்னை வைஷ்ணவனாக்கு கைக்குத் தன்னழகை யுபகரணமாகக்கொண்டு என்னுள்ளே புகுந்தருளினானென்கிறார். ... ... (ரு)

ஈடு; அவ;—(ஆறும்பாட்டு) தன்பக்கல் நான்ப்ரவணனாகைக்கு எம்பெருமான் வருந்திற்றெல்லாம் தன்க்ருபையாலே யென்கிறார்.

மதுசூதனையன்றிமற்றிலேனென் றெத்தாலுங்கருமமின்றித்
துதிசூழ்ந்தபாடல்கள்பாடியாடி நின்றூழியூழிதொறும்
எதிர்சூழல்புக்கெனைத்தோர்பிறப்பு மெனக்கேயருள்கள்செய்ய
விதிசூழ்ந்ததாலெனக்கே லம்மான் திரிவிக்கிரமனையே. (சா)

ப;—அநந்தரம் கீழ்ச்சொன்ன வுபகாரத்துக்கும் தத்க்ருதஜ்ஞதைக்கும் ஹேதுவான க்ருபாபாரவஶ்யத்தை யருளிச்செய்கிறார்

மதுசூதனையன்றி - என்விரோதியைப் போக்கின மதுசூதனையன்றி	இலேன்—உடையேனல்லேன்
	என்று—என்று
	எத்தாலும்—ஏதேனுமொருபதார்த்தத்தாலும்
மற்று—மற்றுப்ராப்யம்	கருமம்—ஒருகார்யம்

இன்றி—அற்று
துதி—ஸ்தோத்ரரூபத்தாலே
சூழ்ந்த — அவன் குணகணுதிகளைச்
பாடல்கள்—பாடல்களை சூழ்ந்த
நின்று-ப்ரயோஜநார்த்தமன்றியே ஸ்வயம்ப்ரயோஜநமாக நின்று
பாடி—பாடி
ஆட—ஆடும்படி
ஊழியூழிதொறும்-கல்பந்தோறும் கல்பந்தோறும்
எனைத்து—அநேகங்களாய்
ஓர்—அத்விதீயங்களான
பிறப்பும்—பிறப்புக்கள்தோறும்
எதிர்—எனக்கபிமுகனுகைக்கீடான
சூழல்புக்கு-சூழ்ச்சியோடேயவதரித்து
எனக்கே—எனக்கேயஸாதாரணமாக
அருள்கள்—ப்ரதம கடாக்ஷந்தொடங்கி பரபக்திபர்யந்தமானவுபகாரங்களை
செய்ய—பண்ணுகைக்கு
எனக்கு—எனக்குறுப்பான
ஏல்—என்றுகோளையுடையவனுய்
அம்மான்—ஸ்வாமியான
திரிவிக்கிரமனை—த்ரிவிக்ரமனை
விதி—தப்பவொண்ணுத விதியென்னலாம்படியான க்ருபையானது
சூழ்ந்தது—சூழ்ந்துகொண்டது.

ஏலுதல் - கொள்ளுகையாதல்; தகுதியாகவுமாம். (சு)

ஆறு;—(மதுசூதனை) அநாதிகாலந்தொடங்கி யின்றளவும்வர நான்பிறந்த பிறவிகள்தோறும் என்னைவஶீகரிக்கைக்கீடான வடிவுகளைக்கொண்டுவந்து பிறந்தருளி யென்னைவஶீகரித்து,மதுசூதனல்லது எனக்குமற்றொருப்ராப்யமில்லை யென்றத்யவஸித்து, தத்வ்யதிரிக்தங்களை யெல்லாம்விட்டு ஸர்வகாலமும்நின்று துதிசூழ்ந்தபாடல்கள் பாடியாடுகையாகிற விஸ்ஸம்ருத்தியை எனக்கேதந்தருளுகைக்காக, திரிவிக்கிரமனை யெனக்காகவே க்ருபையாகிறவிதி சூழ்ந்ததென்கிறார்

ஈடு; அவ;—(ஏழாம்பாட்டு) உன்னுடைய குணநுஸந்தாநபூர்வகமாக ஸ்துதிப்ரணுமங்களைப் பண்ணிக்கொண்டு உன்னை யநுபவிக்குமிதுவே ப்ரயோஜநமாயிருக்கும் மநஸ்ஸையெனக்குத் தந்தாயென்கிறார்.

திரிவிக்கிரமன்செந்தாமரைக்க ணெம்மானென்செங்கனிவாய்
உருவிற்பொலிந்த வெள்ளைப்பளிங்குநிறத்த னென்றென்றுள்ளிப்
பரவிப்பணிந்து பல்லூழியூழி நின்பாதபங்கயமே
மருவித்தொழும் மனமேதந்தாய் வல்லைகாணென்வாமனனே. (எ)

ப;—அநந்தரம் ஸ்வாநுபவத்துக்குறுப்பாக ஸத்வோத்தரமான மநஸ்ஸைத் தந்தாயென்கிறார்.

திரிவிக்கிரமன்—த்ரைவிக்ர மாபதாநத்தாலே லோகத்தை யாநந்யார்ஹமாக்கினவனுய் அதுபோலே
செம்—சிவந்த
தாமரை—தாமரைபோன்ற
கண்—கண்ணாலே
எம்மான்—(க) "ஜிதந்தே - ஜிதம்" என்னும்படி யென்னை யடிமைகொண்டஸ்வாமியானவன்
செம்—சிவந்த
கனி—கனிபோலேயிருக்கிற
வாய்—திருப்பவளத்தின்
உருவில்—வடிவிலே
பொலிந்த—பரம்பிவளர்ந்துவருகிற
வெள்ளை—வெளுத்த
பளிங்கு—பளிங்குபோலேயிருக்கிற
நிறத்தன்—திருமுத்தின்நிறத்தை
என்—எனக்கநுபவிப்பித்தவன்
என்றென்று — என்றென்றுதனித்தனியே
உள்ளி—சேஷ்டிதத்தையுங் கண்ணழகையும் முறுவலழகையும் நெஞ்சாலேயநுபவித்து
பரவி—அதுள் ளடங்காமையாலேயக்ரமமாகப்பரவி
பணிந்து — அந்தப்ரீதிப்ரேரிதனுய்க்கொண்டு திருவடிகளிலேவிழுந்து
பல்—பலவகைப்பட்ட
ஊழியூழி—கல்பவிபாகத்தையுடைத்தான காலதத்வமுள்ளதனையும்
நின்—ப்ராப்தனானவுன்னுடைய
பாதபங்கயமே—போக்யமான திருவடிகளிலே
மருவி — அநந்யப்ரயோஜநனுய்க்கொண்டு பொருந்தி
தொழும்—அடிமைசெய்யும்
மனமே—மநஸ்ஸையே
தந்தாய்—தந்தாய்,
என்வாமனனே—என்வாமனனே
வல்லைகாண்—வல்லைகாண்.

மஹாபலியினுடைய நெஞ்சைவஞ்சித்தநுகூலமாக்கினநீ, என்னெஞ்சையுமநுகூலிப்பிக்க ஶக்தனென்றுகருத்து. (எ)

ஆறு;—(திரிவிக்கிரமன்) ஆஶ்சர்ய திவ்யசேஷ்டிதன், ப்ரபுத்தமுக்தாம்பு ஜசாருலோசநன், அழகியதிருப்பவளத்தையுடையவன், ஸுஸ்மிதன், இவற்றாலே யென்னை யடிமையாக்கினவனென்றென்றுள்ளிப் பரவிப்பணிந்து இப்படியே ஸர்வகாலமு முன்னுடைய பாதபங்கஜமே மருவித்தொழும் மனமேதந்தாய்; வல்லைகாண் எம்பிரானே வல்லைகாண்; ஒருவர்க்குஞ்செய்ய முடியாதனவெல்லாஞ்செய்ய வல்லாயொருவனல்லையோ வென்கிறார். ... (எ)

(க) ஜிதந்தா - க - க.

ஈடு; அவ;— (எட்டாம்பாட்டு) எம்பெருமான் தந்திறத்திற் பண்ணின வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரங்காணுமல் தடுமாறுகிறார்.

வாமனனென்மரதகவண்ணன் தாமரைக்கண்ணினன்
காமனைப்பயந்தாயென்றென் றுன்கழல்பாடியேபணிந்து
தூமனத்தனனுய்ப் பிறவித்துழதிநீங்கவென்னைத்
தீமனங்கெடுத்தா யுனக்கென்செய்கே னென்சிரீதரனே. (அ)

ப;—அநந்தரம் அநுபவத்துக் குறுப்பல்லாத நெஞ்சைப்போக்கினவுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமுண்டோ வென்கிறார்.

வாமனன் - ஸர்வஸுலபனானவாமனனே
என்—எனக்கநுபாவ்யமான
மரதகவண்ணன் — மரதகம்போன்ற வடிவழகையுடையவனே
(போக்தாக்களைக்கண்டுகந்து பூர்ணமாகநோக்கும்)
தாமரை—தாமரைபோலும்
கண்ணினன்—கண்ணை யுடையவனே
காமனை—எல்லாரு மாசைப்படுமழகையுடையகாமனுக்கும்
பயந்தாய்—உத்பாதகனானவனே
என்றென்று—என்றென்றுசொல்லி
உன் கழல்—உன் திருவடிகளை
பாடியே—பாடியே
பணிந்து—பணிந்து
தூமனத்தனனுய்—ப்ரயோஜநாந்தரங்களிற்போகாத ஶுத்த மநஸ்ஸை யுடையேனுய்
பிறவி—ஜந்மப்ரயுக்தமான
துழதி— அலமாப்பு
நீங்க—தீரும்படியாக
என்னை—என்னை
தீமனங் கெடுத்தாய்— விஷயாந்தரங்களிலே யந்யபரமான தீயமனங் கெட்டுப்போம்படிபண்ணினுய்;
என்—இப்படியெனக்குபகாரகனான
சிரீதரனே—ஸ்ரீமானே
உனக்கு—பரிபூர்ணனானவுனக்கு
என்—எத்தை
செய்கேன்—செய்கேன்.

ஸர்வபதியாகையாலே பூர்ணனானவுனக்குச் செய்யலாவதொரு ப்ரத்யுபகாரமில்லையென்று கருத்து. (அ)

ஆறு;— (வாமனன்) நிரதிஶய ஸௌந்தர்ய ஜந்மபூமியாயிருந்த வுன்னுடைய வடிவையுமழகையும் அநந்யப்ரயோஜநனுய்க் கொண்டு பாடி, உன் திருவடிகளைப் பணிந்துகொண்டு ப்ரதிபந்தகங்களைப் போக்கும்படி யென்னுடைய மநஸ்ஸை உன்திருவடிகளல்லது மற்றொன்றறியாதபடி பண்ணினுய்; ஸ்ரீமானே, உனக்கு நானென்ன கைம்மாறு செய்வதென்கிறார். ... ... (அ)

ஈடு ; அவ ;—(ஒன்பதாம்பாட்டு) * ஆடியாடியிற்பிறந்த வ்யஸந மெல்லாம் நான்மறந்து மிகவும் ப்ரீதனும்படிபண்ணி, இந்த்ரியங்களைத்தானிட்டவழக்காக்கினனென்கிறார். பக்திபூர்வகமாக வுன்னை யநுபவியாநிற்கச்செய்தே, ப்ரதிபந்தகங்களும் நீங்கி நிரதிசயஹர்ஷமும் பிறக்கும்படி உன்னையென்னுள்ளே வைத்தாயென்று ப்ரீதராகிறாராகவுமாம்.

சிரீஇதரன்செய்யதாமரைக்கண்ண னென்றென்றிராப்பகல்வாய்
வெரீஇ* அலமந்துகண்கள்நீர்மல்கி வெவ்வுயிர்த்துயிர்த்து*
மரீஇயதீவினைமாளவின்பம்வளர வைகல்வைகல்
விரீஇ* உன்னையென்னுள்வைத்தனை யென்னிருடீகேசனே! (கூ)

ப;–அநந்தரம் விஶ்லேஷதுக்கந்தீரும்படி யென்னெஞ்சுக்குள்ளே புகுந்து நான் ஹ்ருஷ்டனும்படி யநுபவிப்பித்தானென்கிறார். தூமனத்திலேதோற்றுவித்தபக்திக்கு விஷயமாய்க்கொண்டு நானுகக்கும்படி புகுந்தானென்கிறுரென்றுமாம்.

சிரீஇதரன்—ஶ்ரிய:பதியானவன்
செய்ய—அவளோட்டை ஸம்ஶ்லேஷ ப்ரீதியாலே செவ்விபெற்ற
தாமரை—தாமரைபோலும்
கண்ணன்—கண்ணையுடையவன்
என்றென்று—என்றென்று "இவளிராப்பகல் வாய்வெரீஇ" என்கிறபடியே
இராப்பகல்—இரவும்பகலும்
வாய்வெரீஇ—வாய்வெருவி
அலமந்து—"எங்கும் நாடிநாடி" என்கிறபடியே யலமந்து
கண்கள்நீர்மல்கி—"குவளையொண்கண்ணநீர் கொண்டாள்" "கேழிலொண்கண்ண நீர்கொண்டாள்" என்கிறபடியே கண்ணநீர்மல்கி
வெவ்வுயிர்த்துயிர்த்து—"உள்ளம்மலங்க வெவ்வுயிர்க்கும்" "நெஞ்சம் வேவ நெடிதுயிர்க்கும்" என்கிறபடியே பலகாலும் வெவ்விதாக நெடுமூச்செறிந்து
மரீஇய—இப்படி * ஆடியாடியில் மருவின
தீவினை—தீவினை
மாள—போம்படியாக
இன்பம்வளர—* அந்தாமத்தன்புசெய்தோடங்கி யின்பம்வளரும்படி
வைகல்வைகல்—ஸர்வகாலமும்
என்னிருடீகேசனே—என்னிந்த்ரியங்களுக்கு நியாமகனுகையாலே
என்னுள்—உனக்குவிதேயமானவென்னெஞ்சிலே
உன்னை—நியந்தாவாய் போக்யனுன வுன்னை
விரீஇ—"பக்கநோக்கறியான்" என்கிறபடியே யிருத்தி
வைத்தனை—வைத்தாய்.

பக்திபாரவஶ்யத்தாலேவந்த விகாரத்தை - வெவ்வுயிர்த்துயிர்த்தறுதியாகச் சொல்லி, ப்ராப்திப்ரதிபந்தக நிவ்ருத்திபிறந்து அநுபவானந்தம் வளரும்படி ஸம்ஶ்லேஷித்தப்ரகாரத்தைச் சொல்லிற்றாகவுமாம். (௯)

ஆறு ;—(சிரீஇதரன்) ஸ்ரீதரனுகையாலே செய்யதாமரைக் கண்ணனென்றென்றிராப்பகல் வாய்வெருவி யலமந்து கண்கள்நீர் மல்கி வெவ்வுயிர்த்துயிர்த்து மருவியிருந்ததீவினைகள்மாள இன்பம் வளர எப்போதுமுன்னையென்னுள்ளேயிருத்தி வைத்தருளினாய் ; இப்படியுன்னழகாலே யென்னுடைய கரணங்களையுந் தோற்பித்தவனே, உனக்கென்செய்கேனென்கிறார். ... (௯)

ஈடு ; அவ ;—(பத்தாம்பாட்டு) நமக்கு மிகவுமுபகாரகனானவனை நீயொருகாலும் விடாதேகிடாயென்று திருவுள்ளத்தைக்குறித்தருளிச்செய்கிறாரிப்பாட்டில்.

இருடீகேசனெம்பிரா னிலங்கையரக்கர்குலம்*
முருடுதீர்த்தபிரானெம்மா னமரர்பெம்மானென்றென்று*
தெருடியாகில்நெஞ்சேவணங்கு திண்ணமறியறிந்து*
மருடியேலும் விடேல்கண்டாய் நம்பிபற்பநாபனையே. (௧௦)

ப ;—அநந்தரம் இப்படி ஸர்வப்ரகாரோபகாரகனை விடாமையிலுண்டானவபேக்ஷையை யருளிச்செய்கிறார்.

இருடீகேசன் — தமேந்த்ரியாநமான
வென்னுடையமாந ஸேந்த்
ரியத்தை நியமித்து
எம்பிரான்—எனக்குபகாரகனாய் அதுக்
குஉதாஹரணமென்னலாம்படி
இலங்கை—லங்கையில்
அரக்கர்குலம்—ராக்ஷஸகுலத்துக்கு
முருடு—முருடான ராவணனை
தீர்த்த—அழித்து
பிரான் - நாட்டுக்குபகரித்தவன்
அமரர்பெம்மான்—நித்யஸூரிகளோ
பாதி
எம்மான்—என்னை யநுபவிப்பித்த
ஸ்வாமியானவன்
என்று நெஞ்சையபேக்ஷிக்கிறார்.

என்றென்று — என்று பலபடியுமநு
நெஞ்சே—நெஞ்சே [ஸந்தித்து
தெருடியாகில்—அறிவுடையையாகில்
வணங்கு—அவனைவணங்கும்படி பார்;
திண்ணம்—சிக்கென [இத்தை
அறி—புத்திபண்ணு;
அறிந்து—இவ்வறிவுக்குமேல்
மருடியேலும்—அயோக்யதையடியான
கலக்கம்வந்ததேயாகிலும்
நம்பி—குணபரிபூர்ணனாய்
பற்பநாபனை - காரணபூதமான திருநாபி
கமலத்தையுடைய இம்
மஹோபகாரகனை
விடேல்கண்டாய்—விடாதேகிடாய்.

(௧௦)

ஆறு ;—(இருடீகேசன்) தன்னழகாலும் செயலாலுமென்னை யடிமைகொண்டவன், * அயர்வறுமமரர்க ளதிபதியென்றென்று அவனையேத்திநினைந்து வணங்கு; இத்தையழகியதாகக்கைக்கொள்ளக்கொண்டு, மறந்தும் நம்பி பற்பநாபனை விடாதேகிடாய்நெஞ்சே யென்றுகொண்டு தம்முடையநெஞ்சைக் குறைகொள்ளுகிறார். (௰)

ஈடு ; அவ ;—(பதினோராம்பாட்டு) அத்யந்தவிலக்ஷணனாயிருந்துவைத்து, அத்யந்தஸுலபனாய் என்னை யடிமைகொண்டவன் என்னையல்லதறியானானனென்கிறார்.

பற்பநாப னுயர்வறவுயரும் பெருந்திறலோன்*
எற்பரனென்னையாக்கிக் கொண்டெனக்கே தன்னைத்தந்த
கற்பகம்*என்னமுதம் கார்முகில்போலும் வேங்கடநல்
வெற்பன்*விசும்போர் பிரானெந்தை தாமோதரனே. (௧௧)

ப ;—அநந்தரம் இப்படியறிவுபிறந்த நெஞ்சையுடையவெனக்கு அவன் ஸர்வப்ரகாரோபகாரகனானனென்கிறார்.

பற்பநாபன்—ஜகதுத்பத்திஹேதுவான திருநாபிகமலத்தை யுடையனாய் (உத்பந்ந ஜகத்ரக்ஷணார்த்தமாக)
உயர்வற—மிகவும்
உயரும்—உயராநின்ற
பெரும்—அபரிச்சிந்நையான
திறலோன்—ஶக்தியை யுடையனாய்
எற்பரன்—இம்மேன்மையோடே யென்பக்கலிலே தத்பரனாய். அதடியாக
என்னை—என்னை
ஆக்கி—உண்டாக்கி
கொண்டு—அங்கீகரித்து
எனக்கே—எனக்கே யஸாதாரணமாம் (படி
தன்னை—தன்னை
தந்த—தந்த
கற்பகம்—கல்பகமாய்
என்—எனக்கு
அமுதம்—போக்யமாய்
கார்முகில்போலும்—ஸம்பாராமலுபகரிக்கும் காளமேக ஸத்ருஶனாய் (அதுக்குயோக்ய ஸ்தலமான)
வேங்கடம்—திருவேங்கடமென்று பேராய்
நல்—விலக்ஷணமான
வெற்பன்—திருமலையில்நிலையை யுடையனாய், இந்நிலையிலே
விசும்போர்—நித்யஸூரிகளை
பிரான்—அநுபவிப்பிக்கிற ஆஶ்ரிதபவ்யதையை யுடையனான,
தாமோதரன்—தாமோதரன்
எந்தை—என்னையடிமைகொண்டான்

கல்பகத்திற்காட்டிலிவனுக்குவாசி - அர்த்தியையுண்டாக்குகையும், அவனைத்தானே ஸ்வீகரிக்கையும், அவனபேக்ஷித்ததைக்கொடுக்கையன்றியே தன்னைக்கொடுக்கையும், தானே போக்யமாகையும். (௧௧)

ஆறு ;—(பற்பநாபன்) அவன் நம்மைவிடிற்செய்வதென்னென்னில் ; அளவிறந்த வழகையுடையனாய், நிரவதிகதேஜஃப்ரப்ருதிகல்யாணகுணங்களையுடையனாய், என்னைஸ்வேதரஸர்வவிஷய வைராக்யபூர்வக ஸ்வாநுபவைகபோகனாக்கிக்கொண்டு எனக்கே தன்னைத் தந்த பரமோதாரனாய், என்னுடையபோக்யமாய், நிரதிஶயஸௌந்தர்யபரிபூர்ணமான திருமலையோடுள்ள ஸம்பந்தத்தாலே லப்தமான இந்த ஔதார்யத்தையுடையனாய், திருநாட்டில் திவ்யபுருஷர்களுக்குநாதனாய், எனக்கு ஸ்வாமியாய், ஆஶ்ரிதபராதீநனான வெம்பெருமான் என்னையல்லதறியான்; ஆதலால் அவனென்னை விடானென்கிறார். (௧௧)

ஈடு ; அவ ;—(பன்னிரண்டாம்பாட்டு) "எற்பரன்" என்கிறபடியே - என்னளவில் அவன் செய்தாப்போலே செய்வார்க்கு அவனைக்காணலாமல்லது, "ஸ்வயத்நத்தாலே யறிவோம்" என்பார்க்கு அறியப்போகாதென்கிறார்.

தாமோதரனைத் தனிமுதல்வனை ஞாலமுண்டவனை*
ஆமோதரமறிய வொருவர்க்கென்றே தொழுமவர்கள்*
தாமோதரனுருவாகிய சிவற்குந் திசைமுகற்கும்*
ஆமோதரமறியவெம்மானை யென்னாழிவண்ணனையே. (௧௨)

ப ;—அநந்தரம், தம்மளவி லவன்பண்ணின வுபகாரம் அதிஶயிதஜ்ஞாநர்க்கு மளவிடவொண்ணாதென்கிறார்.

தாமோதரனை—"ஆஶ்ரிதபாரதந்த்ர்யத்தையும்	ஆமோ—போமோ."
தனிமுதல்வனை—ஸமஸ்தஜகதேக காரணத்வத்தையும்	என்று—என்று
ஞாலமுண்டவனை—ப்ரளயாபத்ஸகத்வத்தையு முடையவனை	தொழுமவர்கள்—தொழுமவர்களாய்
தாம்—பரிச்சேதித்து	தாமோதரன்—அந்த தாமோதரனுக்கு
அறிய—அறிய	உருவாகிய-ப்ரகார பூயாஶேஷபூதரான
ஒருவர்க்கு—ஒருவர்க்கும்	சிவற்கும்—ருத்ரனுக்கும்
	திசைமுகற்கும்—ப்ரஹ்மாவுக்கும் (கடுகிலேகடலை மடுத்தாற்போல)

என்—என்பக்கலிலே	எம்மானை—என்னை யடிமைகொண்ட
ஆழிவண்ணன்—தன்குணார்ணவத்தை வைத்து	தாம்—அளவிட்டு [ஸ்வாமியை
	அறியவாமோ—அறியப்போமோ.

ஸாமாந்யமான வுபகாரங்களை யறிந்தாலும், என்பக்கல் பண்ணின விசேஷோபகாரமறிய அரிதென்று கருத்து. (கஉ)

ஆறு ;—(தாமோதரனை) ஆஸ்ரிதபாரதந்த்ரனாய், ஸர்வஜகதேககாரணனாய், ஸர்வஜகத்ரக்ஷகனாயிருந்த வெம்பெருமானை, ஒருவர்க்குந் தானறியலாமோ வென்று தொழுகிற, பரமபுருஷசேஷதைகஸ்வபாவரானசிவற்கும் திசைமுகற்கும் எம்மானை யென்னாழிவண்ணனைத் தாமறியலாமோ வென்றுகொண்டு, அவனுடைய அபரிச்சேத்ய மஹத்வத்தைச்சொல்லி, ஏவம்பூதனானவன் கிடீர் எற்பரனாயிருக்கிறவனென்கிறார். ... ... (கஉ)

ஈடு ; அவ ;—(பதின்மூன்றாம்பாட்டு) நிகமத்தில் - இத்திருவாய்மொழி தானே எம்பெருமான் திருவடிகளைச் சேர்த்துவிடு மென்கிறார்.

வண்ணமாமணிச்சோதியை யமரர் தலைமகனை*
கண்ணனை நெடுமாலைத் தென்குருகூர்ச்சடகோபன்*
பண்ணிய தமிழ்மாலை யாயிரத்துள்ளிவைபன்னிரண்டும்*
பண்ணிற்பன்னிருநாமப்பாட்டண்ணல்தாளணைவிக்குமே.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக பகவத்ப்ராப்தியை யருளிச்செய்கிறார்.

வண்ணம்—நிறத்தையுடைத்தாய்	நெடுமாலை—அதுக்கடியான நிரதிசய வ்யாமோஹத்தை யுடைய
மா—பெருவிலையனான	தென்—அழகிய [னானவனைப்பற்ற
மணி—நீலமணியினுடைய	குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான
சோதியை—ஒளிபோலேயிருக்கிற தேஜஸ்ஸையுடையனாய் (இவ்வழகு)	சடகோபன்—ஆழ்வார்
அமரர்—நித்யஸூரிகளுக்கும்	பண்ணிய—செய்ததாய்
தலைமகனை - பரிச்சேதிக்கவொண்ணாத பெரியவனாய்	தமிழ்மாலை—ஸர்வாதிகாரமான த்ராவிட ஸந்தர்ப்பரூபமான
கண்ணனை—ஆஸ்ரிதரைத்தானே யநுபவிக்குமவனாய்	ஆயிரத்துள்—ஆயிரந் திருவாய்மொழிக்குள்ளும்
	பண்ணில்—பண்ணிலே வர்த்திப்பதாய்

பன்னிருநாமப் பாட்டு	திருத்வாதஸநாமத்தைப்பற்றி வருகிறபாட்டான	அண்ணல் . ஸர்வேஸ்வரன்
		தாள்—திருவடிகளை
இவைபன்னிரண்டும்	.. இவை பன்னிரண்டும்	அணைவிக்கும் .. ப்ராபிப்பிக்கும்.

இது கலித்துறை. (கக

ஆறு ;—(வண்ணமாமணி) இத்திருவாய்மொழி வல்லார் எம்பெருமானைப் பெறுவாரென்கிறார். ... ... (கக)

ஈடு ; – முதற்பாட்டில் - தம்மோடு ஸம்பந்தி ஸம்பந்திகளுமெல்லாரும் தம்மைப்போலே விஷயீக்ருத ரானார்களென்றார் ; இரண்டாம்பாட்டில் - அதுக்கடி நாராயணனுகையாலே என்றும், அந்நாராயண ஸப்தார்த்தத்தையு மருளிச்செய்தார்; மூன்றும்பாட்டில்- இப்படி விஷயீகரிக்கைக்கு ஹேதுசொன்னார் ; நாலாம்பாட்டில் - ஸர்வகாலமும் தன்னையே யநுபவிக்கும்படி பண்ணினானென்றார் ; அஞ்சாம்பாட்டில் - இப்படி தம்மை யநுபவிப்பித்ததனாலே அவன் வடிவில் புகரைச்சொன்னார் ; ஆறும்பாட்டில் - இப்படி யென்னை விஷயீகரிக்கைக்கடி நிர்ஹேதுக க்ருபையென்றார் ; ஏழாம்பாட்டில் - தன்னையே ஸர்வகாலமு மநுபவிக்கும்படியான நெஞ்சைத் தந்தானென்றார் ; எட்டாம்பாட்டில் - தந்தவளவன்றிக்கே, விரோதியான நெஞ்சையும் போக்கினானென்றார் ; ஒன்பதாம்பாட்டில் - தன்னுடைய கல்யாணகுணங்களையே நானநுபவிக்கும்படி என்ஹ்ருதயத்திலே புகுந்தானென்றார் ; பத்தாம்பாட்டில் - அநுபவவிரோதியான இந்த்ரியங்களையும் தன்வழியாக்கிக்கொண்டா னென்றார்; பதினொராம்பாட்டில் -' ஏவம்பூதனானவன் என்னையல்லதறியா னானென்றார் ; பன்னிரண்டாம்பாட்டில் - என்னைப்போலே காண்பார்க்குக் காணலாமதொழிய ஸ்வயத்நத்தாலறியப் போகாதென்றார் ; நிகமத்தில் - பலம்சொல்லித் தலைக்கட்டினார். (கக)

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்தில் ஏழாந்திருவாய்மொழி

முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

இரண்டாம்பத்து

எட்டாந் திருவாய்மொழி

அணைவதரவணை ப்ரவேஸங்கள்.

ப:.. எட்டாந்திருவாய்மொழியில், "மேவுந்தன்மையமாக்கினான்" என்று ஸ்வஸம்பந்தி ஜநங்களுக்கும் ப்ராப்திபர்யந்தபலரூப மோக்ஷப்ரதனாய்க் கொண்டு ஈஶ்வரன் நிற்கிறநிலையையும், அதுக்கடியான பரத்வத்தையு மநுஸந்தித்து, "இத்தை ஸம்ஸாரிகளிழக்க வொண்ணாது" என்றுபதேசிப்பாராகக்கோலி; அவனுடைய ஸர்வநிர்வாஹகத்வத்தையும், ஸம்ஸார நிவ்ருத்திபூர்வகமான மோக்ஷப்ரதத்வத்தையும், அதுக்குறுப்பான சேஷ்டித வைலக்ஷண்யத்தையும், இந்தவ்யாபார ப்ரகாசிதமான ஸௌலப்யாதி குணங்கள் நித்யாநுபாவ்ய மென்னுமிடத்தையும், அந்தகுண ப்ரகாஶகமான வவதாரபாஹுள்யத்தையும், அவதாரதசையிலும் பரத்வம் அதிப்ரஸித்தமென்னு மிடத்தையும், அவதீர்ணனானவன் ரக்ஷணவ்யாமோஹத்தால் பண்ணும் வ்யாபாரம் அநேகமென்னு மிடத்தையும், அவதீர்ணனுடைய பரத்வோபயுக்தமான வதிஶயிதாகாரங்கள் அறியவல்லாரில்லை யென்னு மிடத்தையும், அவனுடைய வாஶ்ரிதஸௌலப்யம் அபரிச்சிந்நமென்னுமிடத்தையும், ஏவம்விதனைத் தாமநுபவிக்கப் பெற்றமையையு மருளிச்செய்து, உபதேஶாந்நிவ்ருத்தராய் ஸ்வலாபத்தோடே தலைக்கட்டுகிறார். இதில் சொல்லுகிற பரத்வம், முதற்றிருவாய்மொழிபோலே - ஸ்வரூபகதமாயு மன்றியே, * திண்ணன் வீட்டிற்போலே - மநுஷ்யத்வே பரத்வமுமன்றியே, மோக்ஷப்ரதத்வோபயுக்தமா யிருக்கிறது. *

ஆறு ;—(அணைவது) "தாமோதரனை" என்கிறபாட்டில் ப்ரஸ்துதமான ஸர்வேஶ்வரத்வத்தைத் தம்முடைய ப்ரீத்யதிஶயத்தாலே ஸஹேதுகமாக வுபபாதித்து, இப்படி ஸர்வேஶ்வரனை யெம்பெருமானை யாஶ்ரயியுங்கோளென்று பரரைநோக்கி அருளிச்செய்கிறார். *

ஈடு ;—ஸர்வேஶ்வரன் தம்பக்கல் பண்ணின வ்யாமோஹம் தம்மொருவ ரளவிலுமன்றிக்கே, தம்மோடு ஸம்பந்தமுடையாரளவிலும் வெள்ளமிட்டபடியைச் சொன்னார் - கீழ் ; இத்திருவாய்மொழியில் - "நம்மோட்டை ஸம்பந்தமே ஹேதுவாக அவனிப்படி விஷயீகரிப்பானானபின்பு ஸம்ஸாரிகளுக்கும் நம்மோட்டையொரு ஸம்பந்தத்தை யுண்டாக்கி அவன் க்ருபைக்கு விஷயமாக்குவோம்" என்று, அவர்களுக்கு மோக்ஷப்ரதத்வத்தை யருளிச்செய்கிறார்.

இத்திருவாய்மொழிதன்னை - "ஈச்வரத்வஞ் சொல்லுகிறது" என்று நிர்வஹிப்பாருமுண்டு; "மோக்ஷப்ரதத்வஞ் சொல்லுகிறது" என்று பட்டரருளிச்செய்யும்படி. இவைதானொன்றை யொன்றுவிட்டிராது; ஈச்வரனாயிற்று மோக்ஷப்ரதனாமவன்; மோக்ஷப்ரதனாம்போது ஈச்வரனாகவேணும். இதுதன்னிற் செய்ததாகிற தென்னென்னில்; ஆழ்வார்க்கு முதல்தன்னிலே ஸர்வேச்வரன் அத்வேஷத்தைப் பிறப்பித்து, ஆபிமுக்யத்தைப் பிறப்பித்து, ருசியையுண்டாக்கி, இவர்விடிலும்தான் விடாதேவிரும்பி, இதுதான் இவர் தம்மளவிலன்றிக்கே தம்மோடு ஸம்பந்தமுடையாரளவு மிப்படியே பெருகிக் கரைபுரளுகிறபடியை யநுஸந்தித்து, "ஸர்வேச்வரன் ஸ்வபாவமிதுவானபின்பு, நாம்பெற்றபேறு எல்லாரும்பெறும்படிபண்ணுவோம்" என்று, ஸம்ஸாரிகளை யடையப்பார்த்து, அவர்களுக்கு, "மோக்ஷப்ரதன்" என்னுமிடத்தை யருளிச்செய்கிறார்.

இவர், தாம்பெற்றதாய்ப் பிறர்க்குபதேசிக்கிற பேறுதான்; பிராட்டி, திருவடி, திருவநந்தாழ்வானைப் பரிகரமாக வுடைத்தாய், எத்தனைபேனு மளவுடையார்க்கும் ஸ்வயத்நத்தாலே ப்ராபிக்கவரிதாய், அவனாலே பெறப்பார்ப்பார்க்கு வருத்தமறப்பெறலாய், ஸம்ஸாரத்தில் போகங்கள்போலே அஸ்திரமாயிருக்கை யன்றிக்கே நித்யமாய், அவிசதமாயிருக்கை யன்றிக்கே அத்யந்தம்ஸ்ப்புடமாய், து:க்கமிச்ரமா யிருக்கையன்றிக்கே ஸுகைகதாநமாய், மங்களமாய், உத்தமமாய், அபரிச்சிந்நமாய், இப்படியிருக்கிற முக்தப்ராப்ய போகத்தைத் தமக்கும் தம்பரிகரத்துக்கும் அவன் கொடுப்பானாகப் பாரிக்கிறபடியைக்கண்டு, "ஸம்ஸாரிகளையு மீத்ருசபோகிகளாம்படி பண்ணவேணும்" என்று பார்த்து அவர்களைக்குறித்து ஹிதமருளிச்செய்ய, அதுகேட்டபின்பும் அவர்கள் பழையநிலையில் நின்றும் குலையாதே, மால்யவான் தொடக்கமானார் ராவணனுக்குச் சொன்ன ஹிதம்போலே அவர்களித்தை யநாதரித்திருக்க, "நாம்நம்முடைய வநுபவத்தை விட்டு இவர்களோடே துவக்குண்கிறவிதுக்கு ப்ரயோஜநமென்" என்று, வழிபறிக்கும்நிலத்தில் தம் கைப்பொருள் கொண்டு தப்பினார் ஹ்ருஷ்டராமாபோலே, "நாம்முந்துறமுன்னம் இவர்களைப்போலே யாகாதொழியப் பெற்றோமிறே" என்று ஸ்வலாபத்தை யநுஸந்தித் தினியராகிறார்.

*

ஈடு ; அவ ;—(முதற்பாட்டு) முக்தப்ராப்யபோகத்தைச் சொல்லுகிறது. முதற்பாட்டுத்தான் இத்திருவாய்மொழிக்கு ஸங்க்ரஹமாய், மேலுள்ளபாட்டுக்களிலே ஒருபதத்தைப் பற்றிப்போருமவையும், அது தன்னைப்பற்றி பெருமவையுமா யிருக்கிறது.

* அணைவதரவணைமேற் பூம்பாவையாகம்
புணர்வது*இருவரவர் முதலுந்தானே*
இணைவனு மெப்பொருட்கும் வீடுமுதலாம்*
புணைவன் பிறவிக்கடல் நீந்துவார்க்கே. (க)

ப :—முதற்பாட்டில், இத்திருவாய்மொழியி லர்த்தத்துக்கு ஸங்க்ரஹரூபமான ஸர்வநிர்வாஹகத்வத்தை யருளிச்செய்கிறார்.

அரவு—திருவநந்தாழ்வானுகிற
அணைமேல்—அணைமேலே
அணைவது—அபிமதமாகச்சேர்வது;
பூ—பூவிலேபரிமளம்வடிவு கொண்டாற்போலே போக்யபூதையான
பாவை—பிராட்டியின்
ஆகம்—திருமேனியை
புணர்வது—போக்யமாக ஸம்ஸ்லேஷிப்பது;
(இது நித்யவிபூதிநிர்வாஹகத்வம்;
லீலாவிபூதி நிர்வஹணத்தில்)
அவர்--காரணேஸ்வராகப்ரஸித்தரான
இருவர்—ப்ரஹ்மருத்ரர்கள்
(இவருடைய வுத்பத்திஸ்த்தி
தானே—தானே [யாதிகளுக்கும்)
முதலும்—ஹேதுவாயிருக்கும் ;
எப்பொருட்கும்—ரக்ஷ்யமானஜகத்தில் ஸமஸ்தபதார்த்தங்களுக்கும்
இணைவனும்—அவதாரமுகத்தாலே ஸஜாதீயனுயிருக்கும்;
வீடு--ரக்ஷணத்துக்குமெல்லையான மோக்ஷத்துக்கு
முதலாம்—ஹேதுவாயிருக்கும்;
(இத்தால் ஸர்வமுக்தி ப்ரஸங்கியாமைக்காக)
பிறவி—ஸம்ஸாரமாகிற
கடல்—கடலை
நீந்துவார்க்கு--நீந்திக்கரையேற வேண்டுவார்க்கு
புணைவன்—தெப்பமாமவனு யிருக்கும்
புணைவன் - தெப்பமாமவன். (க)

ஆறு ;—நாகபர்யங்கஸாயி யாகையாலும், ஸ்ரிய:பதியாகையாலும், ப்ரஹ்ம ருத்ரர்களுக்கு நிர்வாஹகனுகையாலும், ஸர்வாத்ம ஸஜாதீயதயா அவதீர்ணனுய்க்கொண்டு ஸர்வஜகத்ரக்ஷகனுகையாலும், முமுக்ஷுக்களுக்கு ப்ரதிபந்தக நிவர்த்தகனுய்க் கொண்டு மோக்ஷப்ரதனுகையாலும், நாராயணனே ஸர்வேஸ்வரனென்கிறார். (க)

ஈடு ; அவ ; —(இரண்டாம்பாட்டு) "என் தனிநாயகன் புணர்ப்பு" என்கையாலே - எம்பெருமான்றான் வேணுமோ, அவனோடுள்ள ஸம்பந்தமே மோக்ஷப்ரதமென்கிறார்.

*நீந்துந்துயர்ப்பிறவியுட்பட மற்றெவ்வெவையும்**
*நீந்துந்துயரில்லா வீடுமுதலாம்**
*பூந்தண்புனற்பொய்கை யானையிடர்கடிந்த**
பூந்தண்டுழா யென்தனிநாயகன் புணர்ப்பே. (உ)

ப ;—அநந்தரம், ஸம்ஸார நிஸ்தரண பூர்வகமான மோக்ஷத்துக்கு ஹேது அவனுடைய ஸம்பந்தமென்கிறார்.

(இஸ்ஸம்ஸார நிவ்ருத்திக்கு நிதர்ஸந மென்னலாம்படி.)
பூ—பூவையுடைத்தாய்
தண் — குளிர்ந்த
புனல்—புனலையுடைய
பொய்கை—பொய்கையிலே
யானை—யானைக்கு
இடர்—முதலையால்வந்த விடரை
கடிந்த—போக்கின
பூ — செவ்வியையுடைத்தாய்
தண்—குளிர்ந்த
துழாய்—திருத்துழாயையுடையனாய் (அத்தாலே)
என்—எனக்கு
தனிநாயகன்—அத்விதீய நாயகனானவனுடைய
புணர்ப்பு—ஸம்பந்தமானது
நீந்தும்—இச்சேதநனுக்கு நீந்தா நிற்கும்படி துஸ்தரமாய்
துயர்—து:கோத்தரமான.
பிறவி—பிறவி
உட்பட—உட்பட
மற்று—மற்றும்
நீந்தும்—நீந்தும்படியான
எவ்வெவை — ஜராமரணாதிகளானவெவ்வகைப்பட்ட
துயரும்—துக்கமும்
இல்லா —ஸ்பர்ஸியாத
வீடு—மோக்ஷாநந்தத்துக்கு
முதலாம்—ஹேதுவாம்.

முதற்பாட்டில் - வீடுமுதலாமென்றத்தை விவரித்தது. (உ)

ஆறு ;—(நீந்தும்) "வீடுமுதலாம்" என்கிறபதத்தை விவரிக்கிறது. ஜந்மஜராமரணாத்ய பரிமித ஸமஸ்த து:கரஹிதமான மோக்ஷத்துக்குக் காரணம் எம்பெருமானோடுள்ள ஸம்பந்தம் ; அதெங்கே கண்டோமென்னில், ஸ்ரீகஜேந்த்ராழ்வான் பக்கலிலே கண்டோமென்கிறார். (உ)

ஈடு ; அவ ;—(மூன்றும்பாட்டு) "இருவரவர்முதலுந்தானே" என்கிறபதத்தை விவரியா நின்றுகொண்டு, ஶ்ரிய:பதி யானவனுடைய அதிமாநுஷசேஷ்டிதங்களை ப்ரத்யக்ஷிக்கலாமென்கிறார்.

புணர்க்குமயனு மழிக்குமரனும்*
புணர்த்ததன்னுந்தியோ டாகத்துமன்னி*
புணர்த்ததிருவாகித் தன்மார்வில்தான்சேர்*
புணர்ப்பன் பெரும்புணர்ப் பெங்கும்புலனே. (ரு)

ப ;—அநந்தரம், அவனுடைய திவ்யமான சேஷ்டிதங்கள் ஸர்வத்ர ப்ரஸித்தமென்கிறார்.

தன்—தன்னை
புணர்த்த—உத்பாதித்த
உந்தியோடு—திருநாபியோடேகூட
ஆகத்து—திருமேனியிலொரு பார்ஶ்வத்திலும்
மன்னி—நித்யவாஸம்பண்ணி
புணர்க்கும்—லோகஸ்ருஷ்டி பண்ணுகிற
அயனும்—அஜனுமாய்
அழிக்கும்—ஸம்ஹரிக்கிற
அரனும்—ஹரனுமாய்
(இப்படி தத்தத்தராத்மதையாலே ததாத்மகனாய்)
தன்மார்வில்—தன்மார்விலே
புணர்த்த—நிரூபகமாம்படி சேர்த்துக் கொள்ளப்பட்ட
திருவாகி—திருவுடையனாய்
தான்—தானே
சேர்—தனக்குத்தகுதியான
புணர்ப்பன்—ஸ்வாதீந சேஷ்டிதனானவனுடைய
பெரு—அபரிச்சிந்நமான
புணர்ப்பு—திவ்ய வ்யாபாரங்களானவை
எங்கும்—எங்கும்
புலன்—கண்டநுபவிக்கலாம்படி ப்ரஸித்தம்.

"இருவரவர் முதலுந்தானே" என்றதை விவரித்தது. (ரு)

ஆறு ;—(புணர்க்கும்) ஜகத்ஸ்ரஷ்டாவான ப்ரஹ்மாவுக்கும் தன்னுந்தியை யாஶ்ரயமாகக் கொடுத்துவைக்கும் ; ஜகத் ஸம்ஹர்த்தாவான ருத்ரனுக்கும் தன் திருவுடம்பை யாஶ்ரயமாகக் கொடுத்துவைக்கும் ; ஸர்வ லோகேஶ்வரியான பிராட்டிக்கும் தன் திருமார்வைக் கொடுத்துவைக்கும் ; திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளும் ; இப்படி யெம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வ ஸிந்ஹபூதமான திவ்யசேஷ்டிதங்கள் எங்கும் ப்ரத்யக்ஷிக்கலாமென்கிறார்.

ஈடு ; அவ ;—(நான்காம்பாட்டு) அவனுடைய ஈஶ்வரத்வத்தில் கண்ணழிவற்றிருந்தது, "இனியிதுக் கவ்வருகில்லை யென்று நன்மைபெறவேணும்" என்றிருப்பார் அவனைக்கடுக ஆஶ்ரயிக்கப் பாருங்கோளென்கிறார்.

புலனைந்துமேயும் பொறியைந்துநீங்கி*
நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர்*
அலமந்துவீய வசுரரைச்செற்றான்*
பலமுந்துசீரிற் படிமினோவாதே. (ச)

ப ;—அநந்தரம், ஸம்ஸாரநிவ்ருத்தி பூர்வகமான பரமபத ப்ராப்திக்கு ஏவம்விதனுடைய குணங்களிலே நித்யாவகாஹநம் பண்ணுங்கோளென்கிறார்.

புலன்—புலப்படும் விஷயங்கள்
ஐந்து—ஐந்திலும்
மேயும்—பொருந்தி
பொறி—பொறிபோலேயிவனை யகப்படுத்திக்கொள்ளும்
ஐந்து—ஐந்திந்த்ரியங்களின் வசத்தினின்றும்
நீங்கி—அகன்று
நலம்—ஆநந்தம்
அந்தமில்லது—அளவிறந்திருப்பதாய்
ஓர்—அத்வி தீயமான
நாடு—தேசத்திலே
புகுவீர் – போய்ப்புகவேண்டியிருப்பீர்!
அலமந்து—அலமந்து
வீய—நசிக்கும்படி
அசுரரை—அசுரரை
செற்றான்—கொன்றவனுடைய
முந்து—ஆரம்பமே தொடங்கி
பலம்—இனிமையாலே "பலம்" என்னலாம்படியான
சீரில்—குணங்களிலே
ஓவாதே—என்றுமொக்க
படிமின்—அவகாஹியுங்கோள்;

ரஸாயநமான பயஃபாநகைங்கர்யத்தாலே பித்தஶாந்தியும்இனிமையும் பிறக்குமாபோலே, போக்ய குணங்களிலே நிரந்தரா நுபவம்பண்ணவே அநிஷ்ட நிவ்ருத்தியு மிஷ்டப்ராப்தியுந் தன்னடையே வருமென்றுகருத்து. புலனும் பொறியுமென்கிற இவையிரண்டும் - விஷயங்களுக்கு மிந்த்ரியங்களுக்கும் கலந்து போரய்வரும். (ச)

ஆறு ;—(புலன்) ப்ரக்ருதிபந்தவிநிர்முக்தராய்க்கொண்டு நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர்; இப்படி ஸர்வேஶ்வரனாயிருந்த எம்பெருமானுடைய நிரதிஶயபோக்யமான கல்யாண குணங்களிலே ஓவாதே படியுங்களென்கிறார். ... ... (ச)

ஈடு ; அவ ;—(ஐந்தாம்பாட்டு) கீழே "இணைவனுமெப்பொருட்கும்" என்றார் ; அத்தை யுபபாதிக்கிறார்.

ஓவாத்துயர்ப்பிறவியுட்பட மற்றெவ்வெவையும்*
மூவாத்தனிமுதலாய் மூவுலகுங்காவலோன்*
மாவாகியாமையாய் மீனாகிமானிடமாம்*
தேவாதிதேவபெருமா னென்தீர்த்தனே. (ரு)

ப ;—அநந்தரம், ஸமஸ்த காரணபூதனானவன் கார்யபூத ஜகத்ரக்ஷணார்த்தமாகப் பண்ணின அவதாரங்களில் வைலக்ஷண்யத்தை யருளிச்செய்கிறார்.

ஓவா—அவிச்சிந்நமான
துயர்—து:கத்தைத் தருவதான
பிறவி — ஜந்மஸம்பந்தரூபமான ஸ்ருஷ்டி
உட்பட—அகப்பட
மற்று — மற்றுஸ்த்திதி ஸம்ஹாராதிகளான
எவ்வெவையும் — எல்லா வ்யாபாரங்களுக்கும்
மூவா—மூத்துச்சோம்பிவிடாத
தனிமுதலாய் — ஸஹாயாந்தர நிரபேக்ஷகாரணபூதனாய்க்கொண்டு
மூவுலகும் — ஸ்ருஜ்யமான லோகத்தினுடைய
காவலோன் – ரக்ஷணத்தையுடையனாய்
தேவ—ப்ரஹ்மாதிதேவதைகளுக்கும்
ஆதிதேவர்—அவ்வருகாம்படி ஆதிதேவர்களான அயர்வறுமமரர்களுக்கு
பெருமான்—அதிபதியாய்
என்—எனக்கு
தீர்த்தன்—அவகாஹிக்குந் துறையாம்படி ஸுலபனானவன்
(அந்த ஜகத்ரக்ஷணார்த்தமாக)
மாவாகி — வேதப்ரவர்த்தகனான ஹயக்ரீவனாய்
ஆமையாய் மீனாகி—ப்ராணப்ரவர்த்தக கூர்ம மத்ஸ்யரூபியாய்
மானிடமாம்—கீதோப நிஷதாசார்யனானமநுஷ்யனுமாம்.

“ இணைவனாமெப்பொருட்கும் ” என்கிற பதத்தை விவரிக்கிறது. (ரு)

ஆறு ;—(ஓவா) “ இணைவனாம் ”; என்கிற பதத்தை விவரிக்கிறது.

ஸம்ஸாரசக்ர ப்ரவர்த்தகனாகையாலும், ப்ரஹ்மேசாநாதி தேவர்களுக்குக் காரணபூதனாய் * அயர்வறுமமரர்களுக்கு ஸ்வாமியாகையாலும், அசேஷதோஷப்ரத்யநீகனாகையாலும், தேவமநுஷ்யாதி வ்யாபாரங்களைப் பண்ணிக்கொண்டு ஸர்வஜகத்ரக்ஷகனாகையாலும் அவனே ஸர்வேச்வரனென்கிறார். (ரு)

ஈடு ; அவ ;—(ஆறாம்பாட்டு) நீர் சொல்லுகிறவனுக்கு இந்த வுத்கர்ஷமெல்லாமுண்டோவென்ன ; முன்பே அர்ஜுநன் நிரூபித்து நிர்ணயித்த வர்த்தம் நாமின்றாராயும்படி குறைபட்டிருந்ததோ வென்கிறார்.

தீர்த்தனுலகளந்த சேவடிமேற்பூந்தாமம்*
சேர்த்தியவையே சிவன்முடிமேற் றான்கண்டு*
பார்த்தன்தெளிந்தொழிந்த பைந்துழாயான்பெருமை*
பேர்த்துமொருவராற் பேசக்கிடந்ததே. (௬)

ப ;—அநந்தரம், இவ்வவதாரதசையி லுண்டான பரத்வம் அதி ப்ரஸித்த மென்கிறார்.

தீர்த்தன் — பாவநபூதனான க்ருஷ்ண னுடைய (பூர்வாவதாரத்திலே)
உலகு—லோகத்ரயத்தையும்
அளந்த—அளந்துகொண்ட
செ—செவ்வையையுடைய
அடிமேல்—திருவடிகளிலே
பூ—அழகிய
தாமம்—மாலைகளை
சேர்த்தி—ஸமர்ப்பித்து
அவையே—அவற்றையே
சிவன்—சிவனுடைய
முடிமேல்—ஜடாமகுடத்திலே
தான்—தானே
கண்டு—கண்டு
பார்த்தன்—அர்ஜுநன்
தெளிந்தொழிந்த—அறுதியிட்ட (அந்த)
பை—பசுத்த
துழாயான்—திருத்துழாயை யுடையவனுடைய
பெருமை—பரத்வமானது
பேர்த்தும்—இப்பார்த்தனையொழிய
ஒருவரால்—வேறொருவராலும்
பேச—உபபாதித்துச் சொல்லவேண்டும்படி
கிடந்ததே—தெளியாதுகிடந்த அம்ஸமுண்டோ.

ஸுப்ரஸித்தமன்றோ வென்றுகருத்து. (௬)

ஆறு ;—(தீர்த்தன்) யாவனொருவனுடைய பாதோதகத்தை ஸிரஸாவஹிக்கையாலே ருத்ரன்பரிஶுத்தனானான்; யாவனொருவன் திருவடிகளிலே சாத்தின பூந்தாமம் ருத்ரன் தலையிலே காணப்பட்டது ; அங்ஙனேயிருந்த பைந்துழாயான் பெருமை ஸுப்ரஸித்த மன்றோ ; சொல்லவேணுமோ வென்கிறார். (௬)

ஈடு ; அவ ;— (ஏழாம்பாட்டு) ஒருவ னநுவர்த்தநங்கொண்டு நிஶ்சயிக்கவேணுமோ ; அவனுடைய இஷ்டஸர்வ சேஷ்டாவிஷய மாயன்றோ இஜ்ஜகத்திருக்கிறது, இதுவேபோராதோ பரத்வஹேது வென்கிறார்.

கிடந்திருந்துநின்றளந்து கேழலாய்க்கீழ்புக்
கிடந்திடும்* தன்னுள் கரக்குமுமிழும்*
தடம்பெருந்தோ ளாரத்தழுவும் பாரென்னும்
மடந்தையை * மால்செய்கின்ற மாலார்காண்பாரே. (எ)

ப ;—அநந்தரம், ரக்ஷ்யமான ஜகத்தைப்பற்றத் தன் வாத்ஸல்யத்தாலே அநேக வ்யாபாரங்களைப் பண்ணுமென்கிறார்.

(ரக்ஷணார்த்தமாக)
கிடந்து—(க) "ஸுதிஸ்ஶேத ஶோஹாஉயிட்-ப்ரதிஶ்யே மஹோததிம்" என்று சமுத்ரக்கரையிலே வழிவேண்டிக் கிடந்தும்
இருந்து—(உ) "உடஜே ராமமாஸீநம் உடஜே ராமமாஸீநம்" என்று திருச்சித்ரகூடத்திலே யிருந்தும்
நின்று—(ங) "ஸ்வவஷ்டப்ய ஸுவஷ்டப்ய அவஷ்டப்ய சதிஷ்டந்தம்" என்றும் ராவணவதாநந்தரம் தேவதா ஸந்நிதியில் வில்லை நடுக்கொத்துப் பிடித்து நின்றும், அன்றியே, (ச) "புளிங்குடிக்கிடந்து வரகுணமங்கை யிருந்து வைகுந்தத்துள்நின்று" என்கிற படியே அர்ச்சாவதாரத்தில் ஸ்தலத்தில்கிடந்துமிருந்தும் நின்றும்
அளந்து—த்ரிவிக்ரமனாய நயார்ஹமாம் படியளந்தும்
கேழலாய்—வராஹரூபியாய்
கீழ்—ப்ரளய ஜலத்துக்குக் கீழே
புக்கு—புக்கு
இடந்திடும் — அண்ட கடாஹத்தினின்று மொட்டுவிடுவித்தெடுத்தும்
(மஹா ப்ரளயத்திலே வடதளஶாயியாய்)
தன்னுள்—வயிற்றுக்குள்ளே
கரக்கும்—தெரியாதபடி கரந்தும்
உமிழும்—வெளிநாடு காணும்படி யுமிழ்ந்தும்
தடம்—இடமுடைத்தான
பெரு—பெரிய
தோள்—திருத்தோள்கள்
ஆர—நிரம்பும்படி
தழுவும்—அஸாதாரண விக்ரஹத்தோடே தழுவியும்
(இப்படி)
பாரென்னும்—பூமியென்று சொல்லப்படுகிற
மடந்தையை—மடந்தையை
மால்—ஸர்வாதிகனான ஈஶ்வரன்
செய்கின்ற—பண்ணுகிற
மால்—வ்யாமோஹத்தை
காண்பார்—அறியவல்லார்
ஆர்—ஆர்.

அதிஶயிதஜ்ஞாநர்க்குமறியவொண்ணாதென்று கருத்து. (எ)

(க) ரா - யு - உக - க (உ) ரா - அயோ - கக - உ௫
(ங) ரா - கி - கக - உ௫ (ச) தி - வாய் - க - உ - ச.

ஆறு ;—(கிடந்து) எம்பெருமான்றனக்கு இந்த ஜகத்தானது இஷ்ட ஸர்வசேஷ்டா விஷயமாயிருக்கையாலே அவனுக்கே சேஷமென்கிறார். (எ)

ஈடு ; அவ ;—(எட்டாம்பாட்டு) அவனுடைய அத்புத கர்மங்களைத் தனித்தனியும் திரளவும் பரிச்சேதிக்கப் போகாது எத்தனையேனுமளவுடையார்க்கு மென்கிறார்.

காண்பாராரெம்மீசன் கண்ணனையென்காணுமாறு*
ஊண்பேசிலெல்லா வுலகுமோர்துற்றாற்றா*
சேண்பாலவீடோ வுயிரோமற்றெப்பொருட்கும்*
ஏண்பாலுஞ்சோரான் பரந்துளனுமெங்குமே. (அ)

ப ;—அநந்தரம், அவனெனக்கு ப்ரகாசிப்பித்த அதிசயிதாகாரங்கள் துரவபோதமென்கிறார்.

எம்—எனக்கு
ஈசன்—ஸ்வாமியாய் (ணை
கண்ணனை—ஸுலபனான க்ருஷ்ண
காண்பார்—அறியவல்லார்
ஆர்—ஆர்;
(அவன்படியிதுவானால்)
காணுமாறு—அறியும்படி
என்—எங்ஙனே?
(அவனுக்கு)
ஊண்—ஊண்
பேசில்—சொல்லப்பார்க்கில்
(க)"அத்தாசராசரக்ரஹணாத்" என்கிற படியே,
எல்லாவுலகும்—சராசராத்மகமான ஸகலலோகமும்
ஓர்துற்று—ஒருபிடிக்கும்
ஆற்றா—போராது!
வீடோ—அவனுக்கிருப்பிடமான வீடானது

சேண்பால்—(உ) "விஶ்வத: ப்ருஷ்டேஷு ஸர்வத: ப்ருஷ்டேஷு" என்கிறபடியே ஸர்வலோகத்துக்கு மவ்வருகான பரமபத ப்ரதேசத்திலது;
அவனே—அவனே
மற்று—தன்னையொழிந்த (க்கும்
எப்பொருட்கும்—ஸகலபதார்த்தங்களு
உயிர்—அந்தராத்மா;
ஏண்பாலும்=ஒருரேகாமாத்ரமும்
சோரான் = சோரவிடாதவனாய்க்கொண்டு
எங்கும்—எல்லா ப்ரதேசத்திலும்
பரந்து—பரந்து
உளனும்—நில்லாநிற்கும்.

(க) ப்ரஹ்மஸூ - க - உக. (உ) சாந்தோ-ஙு-கங.

ஸர்வஜகத் க்ராஸஸீலனாய், பரமபத நிலயனாய், ஸர்வ பதார்த்தங்களிலும் அந்தர்ப்ரவிஷ்ட வ்யாப்தனானவனை யெங்ஙனே பரிச்சேதித்தறிவதென்று கருத்து.

எண் என்று—வரையாய், ரேகையைக்காட்டுகிறது. "ஓ" என்கிற அசைகள் - வினாவைக்காட்டுகிறது. (அ)

ஆறு ;—(காண்பாரார்) ஸர்வஜகந்நிகரண நியமநஸமர்த்தனான எம்பெருமானுடைய ஸர்வேஸ்வரத்வம் ஒருவர்க்கறிகைக்கு பூமியோவென்கிறார்.

ஈடு ; அவ ;— ஒன்பதாம்பாட்டு;—நீர்சொன்னது அநுபபந்நமாயிருந்ததீ!, "ஒருவஸ்துவே அநேக பதார்த்தங்களிலே குறைவற வ்யாபித்திருக்கும்" என்றால் இது கூடுமோவென்ன ; கெடுவிகாள், அவன் ஸர்வகதத்வத்தை யிசையாதவிரணியன் பட்டது படாதே கிடிகோளென்கிறார்.

எங்குமுளன்கண்ணனென்ற மகனைக்காய்ந்து*
இங்கில்லையாலென் றிரணியன்தூண்புடைப்ப*
அங்கப்பொழுதே யவன்வீயத்தோன்றிய* என்
சிங்கப்பிரான்பெருமை யாராயுஞ்சீர்மைத்தே. (கூ)

ப ;—அநந்தரம், அவனுடைய ஆஸ்ரித ஸௌஸீல்யாதிஸயம் அபரிச்சேத்யமென்கிறார்.

(க) " ஸர்வம் வ்யாப்ய ஸ்திதஃ " என்கிற படியே.	இரணியன்—ஹிரண்யன்
கண்ணன்—"ஸர்வநிர்வாஹகனானஸர்வேஸ்வரன்	புடைப்ப—தட்ட,
எங்கும்—ஸர்வத்ர	அங்கு—அத்தூணிலே
உளன்—ஸந்நிஹிதன்"	அப்பொழுதே—அக்காலந்தன்னிலே
என்ற—என்ற	அவன்—ஹிரண்யன்
மகனை—புத்ரனை	வீய—நசிக்கும்படி
காய்ந்து—கோபித்து	தோன்றிய—தோற்றின
இங்கு—"இவ்விடத்திலே	என்—என்னுடைய
இல்லை—இல்லை"	சிங்கம்—நரஸிம்ஹரூபியான
என்று—என்று	பிரான்—மஹோபகாரகனுடைய [யும்
தூண்—தானறுதியிட்ட தூணை	பெருமை—ஆஸ்ரிதபக்ஷபாதமாஹாத்ம்[யும்
	ஆராயும்—நெஞ்சால் பரிச்சேதிக்கைக்கு
	சீர்மைத்தே—தன்மைத்தோ. (கூ)

(க) தை. நாரா - கக.

ஆறு ;—(எங்கும்) ஆஶ்ரிதார்த்தமாகத் தன்னுடைய ஸர்வாந்தராத்மத்வத்தை ப்ரத்யக்ஷமாக்கியருளின எம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வ மஹிமை யொருவர்க்காராய நிலமோ, ஆனபின்பு இங்ஙனேயிருந்த இவனை யாஶ்ரயியுங்களென்கிறார். (௯)

ஈடு ; அவ ;—(பத்தாம்பாட்டு) "இவர்களைவிடீர், நாம் முந்துற முன்னம் இவர்களைப்போலே யாகாதே அவனை யநுபவிக்கப்பெற்றோமிறே" என்று ஸ்வலாபாநுஸந்தாநத்தாலே ஹ்ருஷ்டராகிறார்.

சீர்மைகொள்வீடு சுவர்க்கநரகீறா*
ஈர்மைகொள்தேவர்நடுவா மற்றெப்பொருட்கும்*
வேர்முதலாய்வித்தாய்ப் பரந்துதனிநின்ற*
கார்முகில்போல்வண்ணனென் கண்ணனைநான்கண்டேனே. ()

ப ;—அநந்தரம், இப்படி ஸர்வ ப்ரகாரோபகாரகனாய் மோக்ஷப்ரதனானவனை நானநுபவிக்கப் பெற்றேனென்று ஹ்ருஷ்டராகிறார்.

சீர்மைகொள் - புண்யபாபகாரிதமாகையன்றிக்கே பகவத்க்ருபைக ஸாத்யமான சீர்மையையுடைய
வீடு - மோக்ஷமும்
சுவர்க்கநரகு—புண்யபாப பலரூபமான ஸ்வர்க்கநரகங்களும்
ஈறா—மேலெல்லையாக
ஈர்மைகொள்—பலப்ரதத்வநிபந்தநமான வீரப்பாட்டையுடைய
தேவர்—தேவர்கள்
நடுவா-ஸாதநபலங்களுக்கு நடுவாகவும்
மற்று—ப்ரதமபாவியான
எப்பொருட்கும் — ஸாதநாதி ஸமஸ்த பதார்த்தங்களுக்கும்
வேர்—ஸஹகாரியுமாய்
முதலாய்—நிமித்தமுமாய்,
வித்தாய்—உபாதாநமுமாய்க்கொண்டு
பரந்து—ஸர்வத்ரவ்யாப்தனாய் வைத்து
தனி—வ்யாப்ய பதார்த்தங்களில் வ்யாவ்ருத்தனாய்
நின்ற—நிற்பானாய்
கார்—கார்காலத்திலே
முகில்போல்—மேகம்போன்ற
வண்ணன் — வடிவை யுடையனாய்க்கொண்டு
என் — எனக்கு ஸுலபனான
கண்ணனை—க்ருஷ்ணனை
நான்—நான்
கண்டேனே—அநுபவிக்கப் பெற்றேனென்று கொண்டு ஸ்வலாபத்துக்கு ஹ்ருஷ்டராகிறார்.

ஈர்மைகொள் தேவரென்று — உபயபாவநாநிஷ்டரென்றுமாம். (௧௦)

ஆறு ;—(சீர்மை) ஸ்வர்க்காபவர்க்காத்ய ஶேஷ புருஷார்த்தங்களுக்கும், நரகாத்ய புருஷார்த்தங்களுக்கும், இவற்றுக்கு போக்தாக்

களான தேவாதி ஸ்த்தாவராந்தமான ஸகலாத்ம வர்க்கத்துக்கும் தாரகனாய், காரணபூதனாய், நியந்தாவாய், ஸ்வேதர ஸமஸ்த விஸஜாதீயா? ப்ராக்ருத மஹாவிபூதியை யுடையனாய்நின்ற வெம்பெருமானை நான் காணப்பெற்றேனென்றுகொண்டு ஸ்வலாபத்தைப்பேசி முடிக்கிறார். (கo)

ஈடு; அவ;—(பதினோராம்பாட்டு) நிகமத்தில் - இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லார்கள் இத்திருவாய்மொழியிற்சொன்ன முக்தப்ராப்யபோகத்தைப் பெறுவரென்கிறார்.

கண்டலங்கள்செய்ய கருமேனியம்மானை*
வண்டலம்புஞ்சோலை வழுதிவளநாடன்*
பண்டலையிற்சொன்ன தமிழாயிரத்திப்பத்தும் வல்லார்*
விண்டலையில்வீற்றிருந் தாள்வரெம்மாவீடே.

ப;—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக ஸ்வாராஜ்ய நிர்வாஹகத்வத்தை யருளிச்செய்கிறார்.

கண்—கண்ணில்
தலங்கள்—பரப்பெங்கும்
செய்ய—சிவந்து
கரு — அதுக்குரபபாகமாய் ஸ்யாமளமான
மேனி—திருமேனியையுடைய
அம்மானை—ஸர்வ ஸ்வாமியை
வண்டு—வண்டுகள்
அலம்பும்—மது வெள்ளத்திலே யலைகிற
சோலை—சோலைகளையுடைய
வழுதிவளநாடன்—திருவழுதிவளநாட்டையுடைய ஆழ்வார்
பண்டலையில் — பண்டான் தாளமாம்படி அதின்மேலே.
சொன்ன—அருளிச்செய்த
தமிழாயிரத்து—ஆயிரந் திருவாய்மொழியில்
இப்பத்தும்—இப்பத்தும்
வல்லார்—வல்லார்
விண்டலையில்—பரமாகாசத்தின்மேலே
வீற்றிருந்து-(க)"ஸ ஸ்வராட் பவதி" என்கிறபடியே வ்யாவ்ருத்தமாகவிருந்து
எ—ஸர்வப்ரகாரவிஶிஷ்டமாய்
மா—நிரதிஶயபோக்யமான
வீடு—மோக்ஷாநந்தத்தை
ஆள்வர் — ஸ்வாதீனமாக அநுபவிப்பார்கள்

என்னோடு என்ன நுபந்திகளோடு வாசியற எங்களுக்குத் தருவதாகவிருக்கிற பெரிய வீடென்றுமாம்.

இது - கலிவிருத்தம். (கக)

(க) சாந்தோ ரு-உரு.

ஆறு ;—(கண்டலங்கள்) இத்திருவாய்மொழியை வல்லாரிட்ட வழக்காம் திருநாடென்கிறார். (௧௧)

முதற்பாட்டில் - இத்திருவாய்மொழியில் பரக்கச்சொல்லுகிற வர்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்யாநின்றுகொண்டு, "ஸம்ஸாரமாகிற இக்கடலைக் கடக்கவேணும்" என்றிருப்பார்க்குக் கடத்திக்கொடுக்குமென்றார்; இரண்டாம்பாட்டில் - அவன் வேணுமோ, அவனோட்டை ஸம்பந்தமே கடத்துமென்றார்; மூன்றாம்பாட்டில் - அவனுடைய அதிமாநுஷ சேஷ்டிதங்கள் ப்ரத்யக்ஷிக்கலாமென்றார்; நாலாம்பாட்டில் - * "அந்தமில் பேரின்பத்தைப் பெறவேணும்" என்றிருப்பார் அவனை யாஶ்ரயியுங்கோளென்றார்; அஞ்சாம்பாட்டில் - கீழ் "இணைவனாமெப்பொருட்கும்" என்றத்தை விவரித்தார்; ஆறாம்பாட்டில் - இவ்வுத்கர்ஷமெல்லா மவனுக்குண்டோ வென்ன, நாமாராயவேண்டாதபடி அர்ஜுநன் பண்டே தெரிந்தறுதியிட்டானென்றார்; ஏழாம்பாட்டில்-ஒருவனநுவர்த்தநங்கொண்டறியவேணுமோ, அவனுக்குஇஷ்ட ஸர்வசேஷ்டா விஷயமாயன்றோ ஜகத்திருக்கிறதென்றார்; எட்டாம்பாட்டில் - வ்யாப்தி தொடக்கமான அவனுடைய அபதாநங்களொருவரால் பரிச்சேதிக்க முடியாதென்றார்; ஒன்பதாம் பாட்டில் - அவனுடைய வ்யாப்தியை யிசையாதார் ஹிரண்யன்பட்டது படுவாரென்றார்; பத்தாம்பாட்டில் - ஏவம்பூதனானவனை நான்கண்டநுபவிக்கப் பெற்றேனென்றார்; நிகமத்தில் - இது கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

எட்டாந் திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஒன்பதாந் திருவாய்மொழி.

எம்மா வீடு - ப்ரவேசங்கள்.

ஆறு ;—(எம்மா வீடு) (க) " நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர்" என்ற ப்ராப்ய ப்ரஸங்கத்தாலே, ஸ்வாபிமதமான புருஷார்த்தத்தை நிஷ்கர்ஷித்து அத்தைப் ப்ரார்த்திக்கிறார்.

ப;—ஒன்பதாம் திருவாய்மொழியில், ஈச்வரனுடைய மோக்ஷப்ரதத்வத்தை அநுபவித்தவர், அந்த மோக்ஷப்ரகாரங்களெல்லாவற்றுக்கும் தாத்பர்ய பூமியாவது - பகவத் பாரதந்த்ர்யமேயென்று நிஷ்கர்ஷித்து ; அவன் திருவடிகளோட்டை ஸம்பந்தமே உத்தேச்யமென்னுமிடத்தையும், தத்விஷய ஜ்ஞாநத்தி லபேக்ஷையையும், ஜ்ஞாநாநுரூபமான ஸ்துத்யநுபவத்தில் ச்ரத்தையையும், அநுபாவ்யம் ததேகபாரதந்த்ர்ய மென்னுமிடத்தையும், அதினுடைய அவிஸ்மரணம் ஆநந்த ஜநகமென்னுமிடத்தையும், அந்த ஸ்ம்ருதிகாரிதமான பாஹ்யாநுபவாபேக்ஷையையும், நிரந்தரமான ஆந்தராநுபவம் அத்ருப்திகரமென்னுமிடத்தையும், அல்பகாலாநுபவத்திலும் அதிசயிதாபிநிவேசத்தையும், அநுபாவ்ய விஷயத்தோடுண்டான அப்ருதக்ஸித்தி ஸம்பந்தத்தையும், அந்த ஸம்பந்தத்தைக் குலையாமையிலுண்டான அபேக்ஷையையு மருளிச்செய்து, மோக்ஷப்ரதனான ஈச்வரன் ஸந்நிதியிலே மோக்ஷ தாத்பர்யத்தை நிஷ்கர்ஷித் தபேக்ஷித்தருளுகிறார்.

ஈடு ;—கீழ்த்திருவாய்மொழியிலே (க) "நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர்" என்று இவர்தாமுமருளிச்செய்து, ஸர்வேச்வரனும் இவர்க்கும் இவர்பரிகரத்துக்கும் மோக்ஷங்கொடுப்பானாகப் பாரிக்க, அத்தைக்கண்டு; தேவரீர் எனக்கு மோக்ஷம் தந்தருளப் பார்த்ததாகில் இங்ஙனே தரப்பார்ப்பது ; அதாகிறது " உனக்கு மோக்ஷங்கொள் " என்று எனக்காகத் தருகையன்றிக்கே, " நமக்காகக் கொள் " என்று தேவர்க்கேயாம்படியாகத் தரவேணுமென்று தாம் நினைத்திருந்தபடியை அவன் திருமுன்பே ப்ரார்த்திக்கிறார்,

ஆனாலிதுதான் பின்னை இத்தனைநாள் நிஷ்கர்ஷியா தொழிவானென்னென்னில் ; அவன் மேன்மேலென குணாநுபவத்தைப் பண்ணுவிக்கையாலே அதுக்குக் காலம்போந்ததித்தனையல்லது, இது நிஷ்கர்ஷிக்க அவஸரம் பெற்றிலர். ஆனாலு மிப்போதும் குணாநுபவமேயன்றோ பண்ணுகிறதென்னில் ; அதப்படியே ; அவன் தம்

பக்கலிலே மேன்மேலெனப்பண்ணுகிற விருப்பத்தைக் கண்டு, “இவனுக்கு இந்த வ்யாமோஹம் முடிய அநுவர்த்திப்ப தொன்றாயிருந்தது; நாமிவனை மீட்டாகிலும் நம்முடைய ப்ராப்யத்தை நிஷ்கர்ஷிப்போம்” என்று பார்த்து, “நீ இங்ஙனே நில்” என்று அவனை நிறுத்திவைத்து ப்ராப்யநிஷ்கர்ஷம்பண்ணுகிறார்.

எம்பாரித் திருவாய்மொழி யருளிச்செய்யப்புக்கால், இருந்தவர்களை “யார்” என்றுகேட்டுக் கதவுகளையு மடைப்பித்து, குஹ்யமாகவா மருளிச்செய்வது. ப்ராப்யமாகி லிப்படியன்றோ இருப்பது; இவர் நிஷ்கர்ஷிக்க வேண்டுகிற தென்னென்னில்; ஸர்வேஶ்வரன் இவ்வாத்மாவுக்கே ஶேஷியாய் இவனும்ஶேஷபூதனாய், அவனுடைய உபாயபாவமும் நித்யமாயிருக்கச் செய்தேயன்றோ இவனுக்கு இன்று ஸ்வீகாரம் வேண்டுகிறது; அப்படியே, அவன் ஸ்வதந்த்ரனாகையாலே நினைத்தபோது நினைத்தபடிகொள்வா னொருவனாகையாலே, ப்ராப்தி ஸமயத்தி லநுபவமிருக்கும்படியையும் நிஷ்கர்ஷித்துப் பெறவேணுமிறே, உத்தரார்த்தத்திலு மிவ்வர்த்தத்தைச் சொல்லாநின்றதிறே. த்வயந்தன்னில் நிஷ்கர்ஷிக்கவேண்டுகிற தென்னென்னில், பூர்வார்த்தத்தால் சொன்னஸாதநம் ஸர்வபலப்ரதமாகையாலே ப்ரயோஜநாந்தரபரராய் ஶரணம்புகுவார்க்கு மவற்றைக் கொடுத்து விடுவானொருவனிறே ஸர்வேஶ்வரன்.

இது தன்னிலோடுகிற தென்னென்னில்; “முக்தனாய் நிரதிஶய ஸுகாநுபவத்தைப் பண்ணவுமாம், ஆத்மப்ராப்தியைப் பெறவுமாம், ஆத்மவிநாஶமே யாகவுமாம், நரகாநுபவம்பண்ணவுமாம், இவற்றிலெனக்கொரு நிர்ப்பந்தமில்லை; உனக்காய்வருமன்று இவை யித்தனையும் வரவுமாம், எனக்காய்வருமன்று இவை யித்தனையும் வேண்டா; ஆனபின்பு தேவருக்குறுப்பாமிதுவே எனக்கு வடிவாம்படி பண்ணியருளவேணும்” என்று ஸ்வப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிறார்.

இப்படிப்பட்ட பரிமாற்றந்தான் லோகத்தில் பரிமாறுவதொன்றல்ல; இவ்வாழ்வார் பக்கலிலேகாணுதல்; ராமாயண புருஷர்களில் ஸ்ரீபரதாழ்வான், இளையபெருமாள், இவர்கள் பக்கலிலேகாணுதல் செய்யுமித்தனை; கைகேயி, (க) “ராஜநு — ராஜந்” என்றசொல் பொறுக்கமாட்டாமே திரளிலேவந்து கூப்பிட்டானிறே (உ) [விஜயா

(க) ரா·அயோ-எஉ உகூ. (உ) ரா·அயோ·அஉ-கo

வைஸஹாஜ்யே — ஸிலலாபஸபாமத்யே] ஒருதிரளாகவிருந்து என்னுடைய ஶேஷத்வத்தை அபஹரிப்பதே; (க) "உபஸ்ரூஹிரு - ஷிதெநெவ யாத்ராகாஹிதாமஹூயஷ் - தஸ்யுபிர்முஷிதேநேவ யுக்தமாக்ரந்திதும்ப்ருஶம்" என்னும்படி இழந்த வஸ்துவுக்குத் தக்கபடியா யிருக்குமிறே கூப்பீடும். [ஜகர்ஹ வ-ஜகர்ஹேச] ஸந்த்யாவந்தனத்துக்குப் பிற்பாடரை ஶிஷ்டகர்ஹை பண்ணுவாரைப் போலே கர்ஹித்தான். [புரோஹிதம் - புரோஹிதம்] அழகியதாக விக்குடிக்குமுன்னேடி ஹிதம்பார்த்தாய். [ஸாமர்த்யே புரோஹிதம் ஜகர்ஹ - ஸாமர்த்யே புரோஹிதம் ஜகர்ஹ] (உ) "நியமாதிக்ரமம் ரஹஸி போதயேத் - நியமாதிக்ரமம் ரஹஸி போதயேத்" என்கிற நிலையும்பார்த்திலன்; (ங) [ராஜ்யஞ்சாஹஞ்ச ராமஸ்ய - ராஜ்யஞ்சாஹஞ்ச ராமஸ்ய] ஒருவனுக்கிரண்டு வஸ்து ஶேஷமானல் ஒன்றையொன்று நிர்வஹிக்குமோ; ஆனல், ராஜ்யந் தானென்னையாண்டாலோ. [தர்மம்வக்துமிஹார்ஹஸி - தர்மம்வக்துமிஹார்ஹஸி] பெருமாள் காடேறப்போனர்; சக்ரவர்த்தி துஞ்சினர்; நாடு அராஜகமாய்க் கிடக்கவொண்ணது; நின்றரில் ப்ரதாநர் தலையிலே முடியைவைக்கவேணும்" என்று பார்த்தா யித்தனை போக்கி, இதுக்கு விஷயபூதனை யென்னைப்பார்த்து வார்த்தைசொல்விற்றில்லை. (ங) [கதம்தஶரதாஜ்ஜாதோ பவேத்ராஜ்யாபஹாரக꞉ - கதம்தஶரதாஜ்ஜாதோ பவேத்ராஜ்யாபஹாரக꞉] அவர் பொகட்டுப்போன ராஜ்யத்தை அபஹரித்து, அவரைப்பிரிந்த வநந்தரத்திலே முடிந்தவன் வயிற்றிலே பிறந்தேனும்படி எங்ஙனேநான்.

இளையபெருமாள், "நில்" என்ன, (ச) [குருஷ்வ - குருஷ்வ] என்றரிறே; அங்வபத்தாலே தரிக்கக்கடவ வஸ்துவை வ்யதிரேகித்து நிற்கச்சொல்லுகையாவது அழிக்கையிறே. "குரு" என்னதே, "குருஷ்வ" என்றரிறே - ஆருடைய ப்ரயோஜநத்துக்கு ஆர்தானிரக்கிறர்; உம்முடைய இழவுக்கு நீர் பதறுகிறதென். [அநுசரம் - அநுசரம்] பண்ணும் ப்ரகாரத்தை விதிக்கிறர். நீர்தாம் "நில்" என்றருளிச்செய்தது, நான், நிற்கச்சொல்

(க) (உ) ஆபஸ்தம்ப தர்மம்.

(ங) ரா-அயோ-கஉ-அஉ. (ச) ரா-அயோ-௩௧-௨௪.

னுகைக்கு யோக்யனும்படியிருக்கையிறே; உம்முடைய சாயையை “நில்” என்று சொல்லிற்றிலீரே, சாயையோபாதி உம்மைப்பின் செல்வேனாகவேணும். “நீரும் நிழலும் வாய்த்திருப்பதொரு ப்ரதேஶத்தைப் பார்த்துப் பர்ணஶாலையைச் சமையும்” என்ன, நந்தலையிலே ஸ்வாதந்த்ர்யத்தை வைத்தபோதே பெருமாள் நம்மைக் கைவிட்டார்” என்று வேறுபட்டார். (க) “[ஏவமுக்தஸ்து ராமேண - ஏவமுக்தஸ்து ராமேண] “இதுக்கு முன்பெல்லாம் நம் குறையாலேயிழந்தோம்’ என்றிருந்தோம்; இவர்தாமே நம் ஸ்வரூப மழியக் காரியம் பார்த்தார், இனி, ‘நம் ஸ்வரூபம்’ என்றொன்றுண்டோ” என்று வேறுபட்டார். [லக்ஷ்மண: - லக்ஷ்மண:] பாரதந்த்ர்யத்தை நிரூபகமாகவுடையவர். [ஸம்யதாஞ்ஜலி: - ஸம்யதாஞ்ஜலி:] நாம்நம் ஸ்வரூபத்தை யழித்துக்கொண்டவன்று நோக்குகையன்றிக்கே, ஶேஷிதானே யழித்தவன்றும் ஸ்வரூபத்தைத் தரவற்றாயிற்று அஞ்ஜலி. ஸர்வாபிமத ஸாதநமாயிற்று. [ஸீதாஸமக்ஷம் - ஸீதா ஸமக்ஷம்] பண்ணின அஞ்ஜலிக்கு அந்யபரதை பாவிக்க வொண்ணாதவள் ஸந்நிதியிலே. [காகுத்ஸ்தம் - காகுத்ஸ்தம்] பிராட்டி ஸந்நிதியும் மிகையாம்படியான குடிப்பிறப்பையுடையவரை. [இதம்வசநமப்ரவீத் - இதம்வசநமப்ரவீத்] “இவ்வார்த்தையைச் சொல்லுவானே” என்று கொண்டாடுகிறார் ருஷி. (உ) [பரவாநஸ்மி - பரவாநஸ்மி] உம்முடைய அஸ்மிதைபோலல்லகாணும் என்னுடைய அஸ்மிதை.

இப்படிக்கொத்த பாரதந்த்ர்யத்தை யாயிற்று இவராசைப் படுகிறது. “இது தானொருவரபேக்ஷிக்கு மதுவுமல்ல, அபேக்ஷிப்பாரில்லாமையாலே நாம் கொடுத்துப்போரு மதுவுமல்ல; அவ்வழி புல்லெழுந்துபோயிற்றுக்காணும்” என்று அவன நாதரித்திருக்க; புருஷனார்த்திக்க வருமதிறே - புருஷார்த்தமாவது; “இப்பேறித்தனையும் நான்பெற்றேனாகவேணும்” என்று இவரபேக்ஷிக்க, அவனும் தலைதுலுக்கப்பெற்றாராய்த் தலைக்கட்டுகிறார்.*

ஈடு ;—அவ ; முதற் பாட்டு. எவ்வகையாலும் விலக்ஷணமான மோக்ஷத்திலும் எனக்கபேக்ஷையில்லை, உன் திருவடிகளை யென் தலையிலே வைக்கவேணுமென்கிறார்.

(க) ரா-அயோ-ஆர-கரு-சு (உ) ரா-ஆர-கரு-எ

எம்மாவீட்டுத் திறமும்செப்பம்*நின்
செம்மாபாதபற்புத் தலைசேர்த்து*ஒல்லைக்
கைம்மாதுன்பங் கடிந்தபிரானே*
அம்மாவடியேன் வேண்டுவதீதே. (க)

ப;— முதற்பாட்டில், ஸர்வப்ரகார விஶிஷ்டமான மோக்ஷத்திலும் திருவடிகளோட்டை ஸம்பந்தமே யுத்தேஶ்யமென் றபேக்ஷிக்கிறார்.

எ—எவ்வகைப்பட்ட
மா—உத்க்ருஷ்டமான
வீட்டுத்திறமும்—மோக்ஷப்ரகாரமும்
செப்பம்—சொல்லோம்;
நின்—உன்னுடைய
செ—சிவந்த
மா—உத்தேஶ்யமான
பாதபற்பு—திருவடித்தாமரைகளை
தலை—தலையிலே
ஒல்லை—கடுக
சேர்த்து—சேர்க்கவேணும்;
கை — துதிக்கைமுழுத்தும்படி யழுத்தின
மா—ஆனையினுடைய
துன்பம்—து:க்கத்தை
கடிந்த—போக்கின
பிரானே—மஹோபகாரகனாய்
அம்மா — இவ்வபதாநத்தைக் காட்டி என்னை யடிமைகொண்ட ஸ்வாமியே
அடியேன் — உனக்கடியேனான நான்
வேண்டுவது—என் ஸ்வரூபத்துக்குத் தகுதியான பலமாக வேண்டியிருப்பது
ஈதே—இதுவே.

புருஷனர்த்திக்குமதன்றோ - புருஷார்த்தமென்று கருத்து. ஒல்லை - சடக்கென. கைம்மா - ஆனை, ஒல்லை - கைம்மாவென்று கூட்டவுமாம். செப்பம் சேப்போம். அன்றியே, செப்பமென்று - செவ்விதாமென்றாய், மோக்ஷ ப்ரகாரமெல்லாம் செவ்விதாண்டியாவது - திருவடிகளிலே சேர்த்தியென்றாகவுமாம். * (க)

ஆறு;—எத்தனையேனு முத்க்ருஷ்ட புருஷார்த்தமான ஸ்ரீ வைகுண்டத்திலும் எனக்கபேக்ஷையில்லை; மற்றெதிலே யபேக்ஷையுள்ளதென்னில்; உன்னுடைய அழகிய திருவடிமலர்களை என் தலையிலேவைத்தருளவேணும்; அது செய்தருளுமிடத்து ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுக்குச் செய்தருளினாப்போலேவந்து செய்தருளப் பற்றாது, செய்துகொண்டு நிற்கவேணும்; ஈதே அடியேன் வேண்டுவதென்கிறார். * (க)

ஈடு; அவ;—இரண்டாம்பாட்டு. முதற்பாட்டில் - காயிகமான பேற்றை யபேக்ஷித்தார்; இதிலே - மாநஸமானபேற்றை யபேக்ஷிக்கிறார்.

ஈதேயானுன்னைக்கொள்வ தெஞ்ஞான்றும்* என்
மைதோய்சோதி மணிவண்ணவெந்தாய்*
எய்தாநின்கழல் யானெய்த* ஞானக்
கைதா காலக்கழிவு செய்யேலே. (௨)

ப:—அநந்தரம், இந்த ஸம்பந்த விஷயமான ஜ்ஞாநத்தைத் தந்தருளவேணுமென்கிறார்.

என்—எனக்கிந்தருசிஜநகமான	ஈதே—இதுவே; ஏதென்னில்,
மை—கருமை	எய்தா—பெறுதற்கரிய
தோய்—செறிந்த	நின்—உன்
சோதி—ஒளியையுடைத்தான	கழல்—திருவடிகளை
மணி—மாணிக்கம்போன்ற	யான்—நான்
வண்ணம்—வடிவழகையுடைய	எய்த—பெறுதற்கீடான
எந்தாய்—என்ஸ்வாமியே	ஞானக்கை—தெளிவாகிற ஜ்ஞாநக் கையை
உன்னை—உன்னை	தா—தரவேணும்;
யான்—நான்	காலக்கழிவு—காலவிளம்பம்
எஞ்ஞான்றும்—எக்காலத்திலும்	செய்யேல்—பண்ணாதேகொள்.
கொள்வது—கொள்ளும் ப்ரயோஜநம்	

ஞானத்தை - கையென்றது, தமக்காலம்பந மாகையாலே. * (௨)

ஆறு;—(ஈதே) எற்றைக்கு மிதுவே நானுன்பக்கல் கொள்ளும் ப்ராப்யம். பக்தி யோகத்தாலல்லது ஸித்திக்குமோவென்னில்; அந்தபக்தியோகந் தன்னையும் நீயே ஈண்டெனத் தந்தருளவேணுமென்கிறார். (௨)

ஈடு; அவ;—மூன்றாம்பாட்டு. இதில் - வாசிகமான பேற்றை யபேக்ஷிக்கிறார்.

செய்யேல்தீவினையென் றருள்செய்யும்* என்
கையார்சக்கரக் கண்ணபிரானே*
ஐயார்கண்ட மடைக்கிலும்* நின்கழ
லெய்யாதேத்த வருள்செய்யெனக்கே. (௩)

ப :—அநந்தரம், அவ்வறிவுக்கீடாக ஆபத்தசையிலும் உன்னை ஸ்தோத்ரம் பண்ணும்படி பண்ணியருளவேணுமென்கிறார்.

தீவினை—"அக்ருத்ய காணாதிகளான தீவினைகளை
செய்யேல்—செய்யாதேகொள்"
என்று—என்று
என்—என் பக்கலிலே
அருள்—க்ருபாகார்யமான நியமநத்தை
செய்யும்—பண்ணுகைக் கருப்பாய்
கை—திருக்கையோடு
ஆர்—பொருந்தின
சக்கரம்—திருவாழியையுடையனாய்
கண்ணன்—க்ருஷ்ணனான ஸௌலப்யத்தாலே
பிரானே—உபகரித்தவனே
ஐ—ஐயாலே
ஆர்—நிறைந்த
கண்டம்—கண்டமானது
அடைக்கிலும்—உக்தி ஸாமர்த்யமில்லாதபடி நிர்விவரமாகிலும்
நின்—விரோதி நிவர்த்தகனாய் ஸுலபனாய் ப்ராப்யனானவுன்
கழல்—திருவடிகளை
எய்யாது—இளைப்பற்று
ஏத்த—ஏத்தும்படி
எனக்கே—எனக்கேயஸாதாரணமாக
அருள்செய்—க்ருபைபண்ணியருளவேணும்.

ஐ - ஶ்லேஷ்மா. (௩)

ஆறு ;—(செய்யேல்) உன்கையுந் திருவாழியுமாயிருக்கிற அழகைக்காட்டி வ்யதிரிக்த விஷயத்தில் ப்ராவண்யத்தைத் தவிர்த்து உன் திருவடிகளி லென்னை ப்ரவணனாக்கினவனே, உத்க்ராந்திதசையிலுங்கூட உன்திருவடிகளை நானிளையாதேத்தும்படி பிரானே க்ருபைபண்ணி யருளவேணுமென்கிறார். * (௩)

ஈடு ; அவ ;—நான்காம் பாட்டு. இத்திருவாய்மொழியில் இவர் நிஷ்கர்ஷித்த ப்ராப்யமாவது - ஸ்ரக்சந்தநாதிகளோ பாதி தனக்கேயாக வெனைக்கொளுமீதே யென்றிறே ;

இவ்விடத்திலே எம்பாரருளிச்செய்யும்படி - "ஸர்வேஶ்வரன் த்ரிவிதசேதநரையும் ஸ்வரூபாநுரூபமாக வடிமைகொள்ளா நின்றான் ; நாமு மிப்படி பெறுவோமே" என்று. முக்தரும் நித்யரும், தாங்களு மாநந்தித்து அவனையு மாநந்திப்பிப்பர்கள் ; பத்தர், தாங்களாநந்தியாதே அவனை யாநந்திப்பிப்பர்கள் ; * இன்புறு மிவ் விளையாட்டுடையானிறே. "* மயர்வறமதிநல மருளப்பெற்றவர், 'தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே' என்று ப்ரார்த்திப்பானேன்? 'திருவுள்ளமானபடி செய்கிறான்' என்றிராதே" என்று - பிள்ளை

திருநறையூரரையர் எம்பாரைக்கேட்க, "அதுகேளீர்; முன்பு பிரிந்தன்று, பின்பு பிரிவுக்கு ப்ரஸங்கமுண்டாயன்று, இரண்டுமின்றியிருக்கத் திருமார்விலே யிருக்கச்செய்தே, 'அகலகில்லேன், அகலகில்லேன்' என்னப்பண்ணுகிறது விஷய ஸ்வபாவமிறே; அப்படியே ப்ராப்யருசி ப்ரார்த்திக்கப்பண்ணுகிறது" என்றருளிச்செய்தார்.

* எம்மாவீட்டி லெம்மாவீடாய், வைஷ்ணவ ஸர்வஸ்வமுமாய், உபநிஷத் குஹ்யமுமாய், ஸர்வேஶ்வரன் பக்கலிலே அபேக்ஷித்துப் பெறுமதாய், இவ்வாத்மாவுக்கு வகுத்ததுமான பாரதந்த்ர்யத்தை அவன் பக்கலிலே யபேக்ஷிக்கிறார்.

எனக்கேயாட்செய் யெக்காலத்துமென்று * என்
மனக்கேவந் திடைவீடின்றி மன்னி *
தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே *
எனக்கேகண்ணனை யான்கொள்சிறப்பே. (ச)

ப:—அநந்தரம், காயிகமாயும், மாநஸமாயும், வாசிகமாயுமுள்ள பகவச் சேஷத்வத்தை கீழ் மூன்றுபாட்டிலு மநுஸந்தித்து, இதில் ப்ரதாநமான ததேக பாரதந்த்ர்யத்தை ப்ரயோஜநதயா நிஷ்கர்ஷிக்கிறார்.

எக்காலத்தும்—எல்லாக்காலத்திலும்
எனக்கே—எனக்கே
ஆள்—அடிமை
செய்—செய்
என்று—என்றருளிச்செய்து, அவ்வளவில் நில்லாதே
என்—என்னுடைய
மனக்கே—மநஸ்ஸுக்கே
வந்து—வந்து
இடைவீடு—விச்சேதம்
இன்றி—இல்லாதபடி
மன்னி—நிரந்தரவாஸம்பண்ணி
தனக்கே—பிறர்க்குமன்றியே, எனக்குமன்றியே, எனக்குந் தனக்குங் கூடவுமன்றியே, தனக்கே
ஆக—பாரதந்த்ரனும்படி
எனை—என்னை
கொள்ளும்—அங்கீகரிக்கும்
ஈதே—இதுவே
எனக்கே—எனக்கநுரூபமாக
கண்ணனை—க்ருஷ்ணனை
யான்—நான்
கொள்—அபேக்ஷிக்கும்
சிறப்பு—ப்ரயோஜநம்.

சிறப்பு - ப்ரயோஜநம். (ச)

ஆறு; – (எனக்கே) தம்மை யடிமை செய்வித்துக்கொள்ளும் படியை யெம்பெருமானைக் கற்பிக்கிறார்.

"ஸர்வகாலமு மெனக்கே யடிமைசெப்" என்று திருவாயாலே யருளிச்செய்தருளி, ஒருக்ஷணமாத்ர மொழியாமே என் னெஞ்சிலே புகுந்திருந்தருளி, தாம் சாத்தியருளும் சாத்து, சந்தனம், திருமாலை, திருப்பரிவட்டங்கள்போலே என்னைத் தனக்கே சேஷமாகக்கொள்ளு மிதுவே எனக்கே கண்ணனை யான்கொள் சிறப்பென்கிறார். * (ச)

ஈடு; அவ;—ஐந்தாம்பாட்டு. கீழ் - மநோவாக்காயங்கள் மூன்றாலு முண்டான பேற்றையாசைப்பட்டு, இவை மூன்றாலு முண்டான அநுபவத்தில் உன்னுடையப்ரீதியிலே யந்தர்ப்பூதனுமிதுக்கு மேற்பட எனக்காயிருக்கு மாகாரத்தைத் தவிர்க்கவேணுமென்றார்; இதுதான் ஸம்ஸாரிகள் பக்கல் பரிமாறுவதொன்றல்ல, இவர்தாம் தம்மையாராகநினைத்து இந்தப்பேற்றை யபேக்ஷிக்கிறார் என்றாராய்ந்து பார்ப்போம்" என்று, நீராராய்த்தான் நம்மை யிப்படி யபேக்ஷிக்கிறதென்ன; தேஹமே ஆத்மா" என்பார்; "கேவல தேஹத்துக்கு இந்த்ரியமொழிய அநுபவமில்லாமையாலே இந்திரியங்களே காண் ஆத்மா" என்பார்; அந்த இந்த்ரியங்களும் மநஸ்ஸஹகாரமில்லாதபோது பதார்த்த க்ரஹணம் பண்ணமாட்டாமையாலே மநஸ்ஸேகாண் ஆத்மா என்பார்; "அம்மநஸ்ஸு தனக்கும் ப்ராணங்கள் ஸஹகரிக்கவேண்டுகையாலே ப்ராணங்காண் ஆத்மா" என்பார்; "இவையெல்லா முண்டானாலும் அத்யவஸாயம்வேணுமே, அதுக்குக் கருவியான புத்திதத்வமேகாண் ஆத்மா" என்பார்; இவை யித்தனைக்கு மவ்வருகாய் ஜ்ஞாநகுணகனாய் ஜ்ஞாந ஸ்வரூபமாயிருப்பதொன்று ஆத்மா" என்பாராகா நிற்பர்கள்; அதிலெனக்கொரு நிர்ப்பந்தமில்லை, ஏதேனுமாக வுண்டானவஸ்து தேவர்க்குறுப்பாமிதுவே வேண்டுவதென்கிறார், (க) "வபுராதிஷுவாபி கோவா - வபுராதிஷுயோபிகோபிவா" என்றார்போலே.

சிறப்பில்வீடு சுவர்க்கநரகம்*
இறப்பிலெய்துக வெய்தற்க*யானும்
பிறப்பில் பல்பிறவிப் பெருமானை*
மறப்பொன்றின்றி யென்றுமகிழ்வேனே. (நி)

(க) ஸ்தோ - ர.

ப :—அநந்தரம், இப்பாரதந்த்ர்ய ப்ரகாசகனை ஈச்வரனை மறவாதொழிகையாகிற வுகப்பைப் பெறவேணுமென்கிறார்.

இறப்பில்—இச்சரீரத்தை விட்டவளவிலே
சிறப்பில்—ஆநந்தமாகிற நன்மையிலேயான
வீடு—மோக்ஷம்
சுவர்க்கம்—ஸுகாபாஸமான ஸ்வர்க்கம்
நரகம்—து:கைகதாநமான நரகமாகிற விவற்றை
எய்துக—தேஹாத்பரனாய்க் கொண்டு போய்க்கிட்டவுமாம் ;
எய்தற்க—தேஹம்தானென்று இவற்றைக்கிட்டாதே முடிந்து விடவுமாம் ;
பிறப்பு—தனக்குப்பிறவிக்கு ஹேது
இல்—இன்றியேயிருக்கச்செய்தே
பல்—பஹூதாவாக
பிறவி—பிறக்கக்கடவனான
பெருமானை—ஸர்வேச்வரனை
ஒன்று—இவ்வவதாரத்தாலே யாச்ரிதரை நித்ய பாரதந்த்ராக்கின குணசேஷ்டிதங்களொன்றையும்
மறப்பின்றி – மறவாதே
என்றும்— என்றும்
மகிழ்வேன்—அவிஸ்மரணத்தால்வந்த ஆநந்தத்தை யுடையேனாகவேணும்.

கீழ்ப்பாட்டு மிப்பாட்டும் - முன்னிலையன்றியே ஸ்வகதாநு ஸந்தாநமாயிருக்கிறது. * (ரு)

ஆறு ; - (சிறப்பில்) தேஹமே ஆத்மாவாகலாம், தேஹாதிரிக்தமாய் நித்யஸித்த ஜ்ஞாநகுணமான அஹமர்த்தமே ஆத்மாவாகலாம்; அதிலோராதரமில்லை ; கர்ம நிபந்தநமான ஜந்மரஹிதனாய்வைத்து ஆச்ரிதபரித்ராணார்த்தமாக தேவமநுஷ்யாதிரூபேண வந்து பிறந்தருளும் ஸ்வபாவனாயிருந்த எம்பெருமானுடைய ஸர்வ திவ்யாவதாரங்களையும் ஸர்வ திவ்யசேஷ்டிதங்களையும் ஸர்வகல்யாணகுணங்களையும் மறவாதே என்று மநுபவிக்கப் பெறவேணுமென்கிறார்.* ()

ஈடு ; அவ ;— ஆறாம்பாட்டு. தேவாதி பதார்த்தங்களை யுண்டாக்கினாற்போலே, என்னையு முன்னை யநுபவிப்பேனாம்படியாகப் பண்ணவேணுமென்கிறாராதல். அன்றியே, தேவாதி பதார்த்தங்களுக்கு ஒரோ ஸ்வபாவம் நியதமாம்படி பண்ணினாற்போலே, எனக்கு உன்னை யநுபவிக்குமது நியத ஸ்வபாவமாம்படி பண்ணியருளவேணுமென்கிறாராதல்.

(க) தை - ஆ.

மகிழ்கொள்தெய்வ முலோகமலோகம்*
மகிழ்கொள்சோதி மலர்ந்தவம்மானே*
மகிழ்கொள்சிந்தை சொற்செய்கை கொண்டு*என்றும்
மகிழ்வுற் றுன்னைவணங்க வாராயே, (௬)

ப :—அநந்தரம், இந்த ஆந்தராநுபவமடியாக பாஹ்யாநுபவத்தை யபேக்ஷிக்கிறார்.

மகிழ்கொள்—ஸுகப்ரசுரமான
தெய்வம்—தேவதாவர்க்கம்
உலோகம்—ஜ்ஞாநப்ரகாஶ யுக்தமான மநுஷ்யவர்க்கம்
அலோகம்—ப்ரகாஶரஹிதமான திர்யக்ஸ்த்தாவரங்கள்
மகிழ்—தேஜஸ்விதையால்வந்த வுகப்பை
கொள்—உடைத்தான
சோதி—ஜ்யோதி: பதார்த்தங்களாய்க்கொண்டு
மலர்ந்த— (௧) "ஸோகாமயத பஹுஸ்யாம்" என்கிற கணக்கிலே விஸ்த்ருதனை
அம்மானே—ஸ்வாமியானவனே
மகிழ்கொள்—உன்பக்கலாபிமுக்யத்தலே ப்ரீதியுக்தமான
சிந்தை—நினைவையும்
சொல்—உக்தியையும்
செய்கை—க்ரியையையும்
கொண்டு—கொண்டு
என்றும்—ஸர்வகாலமும்
மகிழ்வுற்று—ஆநந்தநிர்ப்பரனாய்க்கொண்டு நான்
உன்னை—இக்கரணத்ரய வ்யாபாரத்தை யுண்டாக்கித் தந்த வுன்னை
வணங்க—அநுபவிக்கும்படி
வாராய்—எழுந்தருளிவரவேணும்

உலோகமலோகமென்று - சேதநாசேதநங்களாகவுமாம். (௬)

ஆறு ;—(மகிழ்கொள்) பரமகாருண்யத்தாலே இஜ்ஜகத்தையெல்லாம் படைத்தருளினவனே, என்னுடைய ஸர்வகரணங்களாலும் ஸர்வகாலமும் த்வதநுபவைக ஸ்வபாவனாய்க்கொண்டு உன்னையநுபவிக்கும்படி வந்தருள வேணுமென்கிறார். * (௬)

ஈடு ; அவ ;—ஏழாம்பாட்டு. தம்முடைய அபிநிவேசத்தாலே, எல்லாக்காலமு மென்னை யடிமைகொள்ள வரவேணுமென்கிறார்.

வாராயுன் திருப்பாத மலர்க்கீழ்*
போராதே யான்வந் தடையும்படி
தாராதாய்*உன்னை யென்னுள்வைப்பி லென்று
மாராதாய்*எனக்கென்று மெக்காலே. (௭)

ப:—அநந்தரம், ஆந்தராநுபவ மாராமையாலே ஸவிஷாதமாக பாஹ்யா நுபவாபேக்ஷை பண்ணுகிறார்.

உன்னை—நித்யாநுபாவ்யனானவுன்னை
என்னுள்—என்னெஞ்சுக்குள்ளே
என்றும்—நிரந்தரமாக
வைப்பில்—வைக்குமிடத்தில்
எனக்காராதாய்—"அமையும்" என்ற படியெனக்கத்ருப்திகரனாய்
என்றும்—எல்லாநாளிலும்
எக்கால்—எல்லாப்போதிலும்
உன்—ப்ராப்தனானவுன்னுடைய
திரு—ஶ்லாக்யமாய்
மலர்—போக்யமான
பாதம்—திருவடிகளிலே
கீழ்—பாரதந்த்ரனாய்க்கொண்டு
போராதே—விஶ்லேஷரஹிதனாம்படி
யான்—நான்
வந்து—வந்து
அடையும்படி—கிட்டுகைக்கு
தாராதாய்—அவகாஶந்தாராதவனே
(உன் திருப்பாத மலர்க்கீழ் போராதே யான் வந்தடையும்படி—நானப்படி கிட்டும்படி.)
வாராய்—வந்தருளவேணும். (எ)

ஆறு ;—(வாராய்) உன்னுடைய நிரவதிக போக்யதையை எனக்குக் காட்டிவைத்து உன்னை புஜிக்கத்தாராதிருக்கிற நீ, ஸர்வகாலமும் உன் திருப்பாத மலர்க்கீழ் போராதேயான் வந்தடையும்படி, பிரானே வாராயென்கிறார். * (எ)

ஈடு ; அவ ;—எட்டாம்பாட்டு. அத்யல்பகாலமாகிலும் ஶேஷியாய் என்னோடே ஸம்ஶ்லேஷிக்கப்பெறில், பின்னையொருகாலமும் இதுவும் வேண்டாமென்று, தமக்கு அடிமை செய்கையிலுண்டான விடாயின் மிகுதியை யருளிச்செய்கிறார்.

எக்காலத்தெந்தையா யென்னுள் மன்னில்*மற்று
எக்காலத்திலும் யாதொன்றும் வேண்டேன்*
மிக்கார் வேதவிமலர் விழுங்கும்*என்
அக்காரக்கனியே யுன்னையானே. (அ)

ப: அநந்தரம், அத்யல்பகாலாநுபவம்பெறிலும் அதொழிய வேறொன்றும் வேண்டாவென்கிற அத்யபிநிவேஶத்தை யருளிச்செய்கிறார்.

மிக்கார்—அதிஶயித்த தஸ்வபாவராய்
வேதம்—வைதிகாக்ரேஸரரான
விமலர்—நிர்மலரானவர்கள்
விழுங்கும் – தங்களாதராதிஶயத்தாலே கபளீகரித் தநுபவிருக்குங் கணக்கிலே

என்—எனக்கு
அக்காரம்—அக்காரந்தோய்ந்த
கனியே—கனிபோலே போக்யனானவனே
எக்காலத்து—ஏதேனு மல்ப காலத்திலேயாகிலும்
எந்தையாய்—எனக்கு ஸ்வாமியான வாகாரந்தோன்றும்படி
என்னுள்—என் நெஞ்சிலே
மன்னில்—ப்ரகாசிப்பித்து நிற்கப்பெறில்
மற்று—இதொழிய
எக்காலத்திலும்— எல்லாக் காலத்திலும்
யாது—ஏதேனும்
ஒன்றும்—ஒன்றையும்
உன்னை—உன்னை
யான்—நான்
வேண்டேன்—அபேக்ஷியேன். (அ)

ஆறு ;—(எக்காலத்து) எக்காலமு மென்னை யெல்லாவடிமையுஞ் செய்வித்துக்கொண்டு என்னுள்ளே மன்னில் "உன்னைப்பின்னை யொருகாலமு மொன்று மபேக்ஷிக்கிறிலேன்" என்றுகொண்டு எம்பெருமானை யபேக்ஷித்து, பின்னையும் எம்பெருமானுக் கடிமைசெய்கையிலுள்ள ஸ்ப்ருஹையாலே, எம்பெருமானையுள்ளபடி கண்டநுபவிக்கிற மஹாத்மாக்களாரோ வென்கிறார். (அ)

கூ ; அவ ;—(ஒன்பதாம்பாட்டு) "மிக்கார் வேதவிமலர் விழுங்கும்" என்று நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணுகிறபடியையநுஸந்தித்தார் ; அவர்களோடொத்த ப்ராப்தி தமக்குண்டாயிருக்க, இழந்திருக்கிறபடியையு மநுஸந்தித்து அநர்த்தப்பட்டேனென்கிறார்.

யானே யென்னை யறியகிலாதே *
யானே யென்றனதே யென்றிருந்தேன் *
யானேநீ யென்னுடைமையும் நீயே *
வானேயேத்து மெம்வானவரேறே. (கூ)

ப ;—அநந்தரம், ஸம்பந்தம் அப்ருதக்ஸித்தமாயிருக்க அநாத்ய ஜ்ஞானத்தாலே அஹங்கார மமகாரதூஷிதனா யிழந்தேனென்கிறார்.

யானே—நான்றானே
என்னை—என் விஷயத்திலே
அறிய—யாதாத்ம்யஜ்ஞாநம்
கிலாதே—இல்லாமையாலே
யானே—நான் ஸ்வதந்த்ரனேயாகவும்
என் தனதே—என்னை யொழிந்தவை யென்னுடைமை யாகவும்
என்று — அஹங்கார மமகாரங்களைப் பண்ணி

இருந்தேன்—முடிந்துபோகாதே ஆத்ம நித்யத்வமுமநர்த்தாவஹமாம்படியிருந்தேன் ;
வானே—இவ்வறிவுகேடின்றியிலே யாதாத்ம்யஜ்ஞாநம் நடையாடும் பரமபதமாக
ஏத்தும்—உன்னுடைய ஸம்பந்தத்தையேத்தும்படி
அவ்வானவர்—அங்குள்ளார்க்கு
ஏறே—ஶேஷியான செருக்குத்தோன்றவிருக்குமவனே
(அர்த்தஸ்திதியுணர்ந்தால்)
யான்—நான்
நீயே—நீயேயென்னலாம்படி அப்ருதக்ஸித்தப்ராகாரபூதனுயிருப்பன் ;
என்னுடைமையும்—என்னுடைமையானவையும்
நீயே—உனக்கப்படி ப்ராகாரமாய்க்கொண்டு நீயேயென்னலாம்படியாயிருக்கும். (கூ)

ஆறு ;—(யானே) நானுமென்னுடைமையும் உனக்கேயடிமையா யிருக்கச்செய்தே, இதுக்குமுன்புபோன காலமெல்லாம் "உனக் கடிமை" என்னுமிடத்தை யறியாதே, நானென்றும், என்னுடைய தென்று முண்டான ஸ்வாதந்த்ர்யாபிமாநத்தாலே நஷ்டனுனே னென்று தம்முடைய இழவை யநுஸந்தித்து அத்யந்தமவஸந்நராய், ஸ்வபாவத ஏவ அஸ்க்கலித ஜ்ஞாநராய், ஒரு க்ஷணமாத்ரமு மெம்பெருமானை யிழவாதே 'திருநாட்டிலேயிருந் தநுபவிக்கிறவர்க ளாரோவென்கிறார். ... ... (கூ)

ஈடு ; அவ ;—(பத்தாம்பாட்டு) "யானே யென்றனதே யென் றிருந்தேன்" என்று நீரநுதபிக்கும்படி பண்ணினேனாகில் உமக் குச் செய்யவேண்டுவ தொன்றுண்டோ, நீரிங்ஙனே கிடந்துபடுகிற தெதுக்காகவென்ன ; இதுக்காகவென்கிறார்.

ஏறேலேழும் வென்றேர்கொ ளிலங்கையை *
நீறேசெய்த நெடுஞ்சுடர்ச்சோதி *
தேறேலென்னை யுன்பொன்னடிச்சேர்த்து * ஒல்லை
வேறேபோக வெஞ்ஞான்றும் விடலே. (கo)

ப ;—அநந்தரம், அந்த ஸம்பந்தங் குலையாதபடி யென்னைக் கைவிடா தொழியவேணுமென்கிறார்.

ஏல்—ஏன்றுகொண்ட
ஏறு—ஏறு
ஏழும்—ஏழையும்
வென்று—வென்று
ஏர்—அழகை
கொள்—உடைத்தான
இலங்கையை—லங்கையை
நீறேசெய்த-பஸ்மஸாத்கரித்ததாலே

நெடும்—மிக்க	அடி—திருவடிகளிலே
சுடர்—தேஜஸ்ஸையுடையனுன	ஒல்லை—சடக்கென
சோதி—உஜ்ஜ்வலவிக்ரஹனே	சேர்த்து—சேர்த்து
என்னை—என்னை	வேறேபோக-விஷயாந்தரங்களிலே நினைத்துவேறுபோகும்படி
தேறேல்—"எனக்குநன்மையறிவன்" என்று விஶ்வஸியாதே	எஞ்ஞான்றும்—எல்லாக்காலத்திலும்
உன்—உன்னுடைய	விடல்—விடாதொழியவேணும்.
பொன்—உஜ்ஜ்வலமான	

விதிநிர்மிதமான இந்த அந்வயத்தைப் பாலநம்பண்ணி, விடாதொழிய வேணுமென்று கருத்து. * (கO)

ஆறு ;—(ஏறேல்) இந்த ப்ராப்யத்தைப் பெறுகைக்கு ப்ரதிபந்தகங்களுளவேயென்னில் ; அவற்றை யெல்லாம், நப்பின்னைப் பிராட்டிக்கும், அபோகவநிகையில் பிராட்டிக்கும் உன்னோடு ஸம்ஶ்லேஷிக்கைக்கு ப்ரதிபந்தகங்களை நீயேபோக்கினாற்போலே போக்கியருளி, உன் திருவடிகளிலே என்னை யிண்டெனச்சேர்த்தருளி, உன் திருவடிகளில் திவ்யரேகைபோலே பின்னை யொருகாலமும் உன்னைப் பிரியாததொருபடி பண்ணியருளவேணும் ; இப்படி இக்ஷணமே செய்தருளாவிடில் ஒன்றும் தரியேனென்கிறார். (கO)

ஈடு ; அ ;—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார் இதிற் சொன்ன ப்ராப்யத்தைப் பெறுவரென்கிறார்.

> ※ விடலில் சக்கரத்தண்ணலை மேவல் *
> விடலில் வண்குருகூர்ச் சடகோபன்சொல் *
> கெடலி லாயிரத்துள்ளிவை பத்தும் *
> கெடலில் வீடுசெய்யுங் கிளர்வார்க்கே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப ;...அநந்தரம், "இத்திருவாய்மொழி மோக்ஷப்ரதம்" என்று பலத்தை யருளிச்செய்கிறார்.

விடல்—விடுதல்	விடலில்—விடக்ஷமமல்லாத
இல்—இல்லாத	வண்—மஹோதாரரான
சக்கரத்து—திருவாழியையுடைய	குருகூர்ச்சடகோபன்—ஆழ்வார்
அண்ணலை—ஸ்வாமியை (அப்படியே)	சொல்—அருளிச்செய்ததாய் (இதிலந்வயித்தார்க்கு)
மேவல்—மேவி	

கெடல்—அநர்த்தம்
இல்—வாராதபடியான
ஆயிரத்துள்—ஆயிரத்துள்
இவைபத்தும்—இவைபத்தும்
கிளர்வார்க்கு—ஸாதரமாகச் சொல்ல வல்லவர்களுக்கு (இதுதானே)
கெடலில் — அவித்யாத்யநர்த்த கந்த ரஹிதமான
வீடு—மோக்ஷாநந்தத்தை
செய்யும்—பண்ணிக்கொடுக்கும்.

கிளர்தல் = சொல்லுதல். கிளர்த்தியாய், உத்யோகமாகவுமாம்.
இது - கலிவிருத்தம், * (கக)

ஆறு;—(விடலில்) இப்படி ஆழ்வாரபேக்ஷிக்க, அபேக்ஷித்த படியே திருமலையிலே புகுந்தருளி, ஆழ்வாரோடே, திருவாழியாழ்வாரோடு ஸம்ச்லேஷித்தாற்போலே ஒருகாலும் பிரியாதபடி ஸம்ச்லேஷித்த எம்பெருமானைச்சொன்ன இத்திருவாய்மொழிவல்லார் ஆழ்வார் பெற்றபேறு பெறுவரென்கிறார். * ... ... (கக)

ஈடு;—முதற்பாட்டில் - காயிகமானபேற்றை யபேக்ஷித்தார்; இரண்டாம் பாட்டில் - மாநஸமானபேற்றை யபேக்ஷித்தார்; மூன்றும்பாட்டில்-வாசிகமானபேற்றை யபேக்ஷித்தார்; நாலாம்பாட்டில், ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யத்தை நிஷ்கர்ஷித்தார்; அஞ்சாம்பாட்டில்-நீராராய் இப்பேற்றை யபேக்ஷித்தீரென்ன, நானாராயிடுக, உன்னையநுபவித்து மகிழும்படிபண்ணியருளவேணுமென்றார்; ஆறும்பாட்டில் - த்ரிவித கரணங்களாலு முன்னைப்ரீதிபுரஸ்ஸரமாக அநுபவிக்கும்படிபண்ணி யருளவேணுமென்றார்; ஏழாம்பாட்டில் - அப்படிசடக்கெனச் செய்யாமையாலே யின்னாதானார்; எட்டாம்பாட்டில் - ஸ்வரூபாநுரூபமாக நீக்ஷணகாலமென்னோடே யநுபவிக்கப்பெறில் பின்புள்ளகாலமெல்லாம் வேண்டேனென்றார்; ஒன்பதாம்பாட்டில் - உன்னை யநுபவிக்க இட்டுப்பிறந்துவைத்து, அதுகிடையாதபடி நானே யநர்த்தத்தைச் சூழ்த்துக்கொண்டேனென்றார்; பத்தாம்பாட்டில்-எனக்கொருநாளும், "ஜ்ஞாநவிஶேஷத்தைப் பண்ணித்தந்தோமிறே" என்று என்னை யென்கையிற்காட்டித் தாராதொழியவேணுமென்றார்: இதுகற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார். *

வடக்குத்திருவீதிப் பிள்ளை திருவடிகளேசரணம்.

ஒன்பதாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

இரண்டாம்பத்து.

பத்தாந் திருவாய்மொழி.

கிளரொளி - ப்ரவேசங்கள்.

ஈடு ;—“கீழ் * எம்மாவீட்டிலே நிஷ்கர்ஷித்த ப்ராப்யம்பெறுகைக்குத் திருமலையை யாஸ்ரயிக்கிறார்” என்று ஆளவந்தாரருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான்பணிக்கும்படி; எம்பெருமானார், “அங்ஙனல்ல, இவர்பாட்டுத்தோறும் ‘ஒல்லை’ ‘ஒல்லை’ என்றும், ‘காலக்கழிவுசெய்யேல்’ என்றும் - த்வரிக்கப்புக்கவாறே, ‘நமக்குமறிவித்து நாமும் இவர்காரியஞ் செய்யக்கடவதாக வறுதியிட்டால், ஸரீரஸமநந்தரம் பேறுதப்பாது’ என்றறுதியிட்டிருக்கலாயிருக்க, இவரிப்படித்வரிக்கிறது இச்சரீரத்தோடே நாமடிமைகொள்ளவேணுமென்றுபோலே யிருந்தது; இனி இவர்க்கு நாம் நினைத்தபடி பரிமாறுகைக்கு ஏகாந்தமானதேசமேதோ’ என்று * ஞாலத்தூடே நடந்துழக்கிப்பார்த்து வரச்செய்தே ‘இவ்விடம் சால ஏகாந்த ஸ்த்தலமாயிருந்தது,’ என்று திருமலையிலே ஸந்நிதிபண்ணியருளி, ‘நாம் உமக்கு முகந்தருகைக்காகவந்துநின்றோம், நீர் இங்கேவந்துநினைத்த வகைகளெல்லாம் பரிமாறி யநுபவியும்,’ என்று தெற்குத் திருமலையிலே நிற்கிற நிலையைக் காட்டிக்கொடுக்க, இவருமத்தை யநுஸந்தித்து; பகவான் ப்ராப்யனானால் அவன் வர்த்திக்கும் தேசமும் ப்ராப்யமாகக்கடவதிறே ; அத்தாலே, திருமலையோடு, அத்தோடுசேர்ந்த அயன்மலையோடு, புறமலையோடு, திருப்பதியோடு, போம்வழியோடு, ‘போகக்கடவோம்’ என்றுதுணியும் துணிவோடுவாசியற ப்ராப்யாந்தர்க்கதமாயநுபவித்து இனியராகிறார்” என்று *

ப ;—பத்தாந்திருவாய்மொழியில், கீழ் - புருஷார்த்தத்யா நிர்ணீதமான அத்யந்த பாரதந்த்ர்யயுக்தமாயிருந்துள்ள கைங்கர்யத்தை இவரபேக்ஷித்தபடியே, காலவிளம்பம் பிறவாதபடி இங்கே கொடுத்தருளுகைக்காகத் தெற்குத்திருமலையிலே யெழுந்தருளிநிற்கிறபடியை ப்ரகாசிப்பிக்கக்கண்டு அத்யந்த ஹ்ருஷ்டராய் ; அழகருடைய ஔஜ்ஜ்வல்யத்தையும், ஆபிரூப்யத்தையும், ஔதார்யத்தையும், ரக்ஷகத்வத்தையும், ரக்ஷோபசரணத்வத்தையையும், ஆஸ்ரிதவ்யாமோஹத்தையும், ஆபத்ஸகத்வத்தையும், ஆஸ்ரிதாநுகூலதையையும், விரோதிநிரஸநஸீலதையையும், ஜ்ஞாநப்ரதத்வத்தையுமநுஸந்தித்து, “ஏவம்

விதனுன ப்ராப்யபூதன்தானும் விரும்பும்படியான திருமலேயே பரம ப்ராப்யம்' என்று நிஷ்கர்ஷித்து, முதலிட்டைந்து பாட்டாலே - திருவுள்ளத்தையும், மேலிட்டைந்து பாட்டாலே - லௌகிகரையுங்குறித்து அவன் போக்யதையை யுபதேசித்து முடித்தருளுகிறார். *

ஆறு ;—(கிளரொளி) இப்படி தம்மோடு கலந்தருளின வெம்பெருமான் நின்றருளின திருமலையை யநுபவிக்கிறார். *

ஈடு ; அவ ;—(முதற்பாட்டு) திருமலையை ப்ராபிக்கையே இவ்வாத்மாவுக்கு நிரதிஶய புருஷார்த்தமென்கிறார்.

❋ கிளரொளிபிளமை கெடுவதன்முன்னம் *
வளரொளிமாயோன் மருவியகோயில் *
வளரிளம்பொழில்சூழ் மாலிருஞ்சோலே *
தளர்விலராகிற் சார்வதுசதிரே. (க)

ப ;—முதற்பாட்டில், நிரதிஶயௌஜ்ஜ்வல்ய விஶிஷ்டனுன ஸர்வேஶ்வரன் விரும்பின திருமலேயே ப்ராப்யமென்கிறார்.

கிளர்—கிளர்ந்துவருகிற	மருவிய—பொருந்திவர்த்திக்கிற
ஒளி — ஜ்ஞாநௌஜ்ஜ்வல்யத்துக்கு யோக்யதையுண்டான	கோயில்—திவ்யஸ்த்தாநமாய்
இளமை—யௌவநாரம்பரூபமான விளமை	வளர் — வளராநிற்கச்செய்தே
கெடுவதன்முன்னம்—விஷயாந்தரகதமாய்க்கெடுவதற்கு முன்னே	இளம்— இளமையையுடைத்தான
வளர்—ஆஶ்ரிதார்த்தமாக விங்கேயெழுந்தருளின பின்பு வளர்ந்து வருகிற	பொழில்—பொழில்களாலே
ஒளி—ஶீலஸௌலப்யாதி குணௌஜ்ஜ்வல்யத்தையுடைய	சூழ்—சூழப்பட்டு
மாயோன்—ஆஶ்சர்யரூபனுன ஸர்வேஶ்வரன்	மாலிருஞ்சோலே—அத்தாலே "மாலிருஞ்சோலே" என்று திருநாமமான திருமலையை
	தளர்வு—ப்ரயோஜநாந்தர ஸம்பந்தமாகிற தளர்த்தி
	இலராகி—அற்று
	சார்வதே—ப்ராபிக்குமதுவே
	சதிர்—சதிர்.

"இதொழிய ப்ரயோஜநாந்தரமுண்டு" என்றிருக்கை - இளமையென்று கருத்து. சேதநர் * பால்யத்திலே விவேகாத்மாக்களாய்க்கொண்டு அநந்ய ப்ரயோஜநராய்ப்பற்று மிது சதிரிறேயென்று தந்திருவுள்ளத்தைக்குறித்து உரைத்தாராயிருக்கிறது. (க)

ஆறு ;—யாதொன்றிலே நின்றருளுகையாலே அங்குத்தைச் சோலைபோல எம்பெருமானுடைய திருவுடம்பு அதிஶீதளமாய் அதிவர்த்திஷ்ணுவான் ஔஜ்ஜ்வல்ய யௌவநாதி கல்யாணகுணங்களையுடைத்தாயிற்று ; அங்ஙனேயிருந்த திருமாலிருஞ்சோலையை, உங்களுக்குக் காணபாடவுமுள்ளபோதே உங்களுடைய க்லேஶமெல்லாம் தீரும்படிசென்று புஜியுங்கள் ; இது பரமப்ராப்யமென்கிறார்.()

ஈடு ; அவ ;—(இரண்டாம் பாட்டு) திருமலையோடுசேர்ந்த ஸ்ரீபதியைக்கிட்டுகையே பரம ப்ரயோஜநமென்கிறார். அன்றிக்கே, திருமலைதன்னையே சொல்லுகிறதாதல். அன்றிக்கே, திருப்பதியையாதல்.

சதிரிளமடவார் தாழ்ச்சியைமதியாது *
அதிர்குரல்சங்கத் தழகர்தங்கோயில் *
மதிதவழ்குடுமி மாலிருஞ்சோலை *
பதியதுவேத்தி யெழுவதுபயனே. (௨)

ப ;—அநந்தரம், அழகருடைய திருமலையோடுசேர்ந்த திருப்பதியையேத்துமதே ப்ரயோஜநமென்கிறார்.

சதிர்—அர்த்தாநுரூபமாகவும் ஸ்வதோஷத்துக்கீடாகவுமொதுக்கி யுடப்புகொடுக்குஞ் சதிரையுடையாராய்
இளம்—இளமையாலேமதிமயக்கி (செல்லாமை தோன்றவிருக்கும்)
மடவார்—ஸ்த்ரீகளுடைய
தாழ்ச்சியை—தாழ்ச்சிதோற்றவிருக்குமுக்திசேஷ்டிதாதிகளை
மதியாது—ப்ரீதிபண்ணாதே
அதிர்குரல்—ஸம்ஶ்லேஷ ஜநிதப்ரீதியாலே முழங்குகிற
சங்கத்து—ஸ்ரீபாஞ்சஜந்யத்தை யுடையராகையாலே நிரதிஶய ஸௌந்தர்யத்தை யுடைய
அழகர்—அழகருக்கு
தங்கோயில்—அஸாதாரணஸ்தாநமாய்
மதி—சந்த்ரனானவன்
தவழ்—தவழும்படியோங்கின
குடுமி—ஶிகாஶிகைகளையுடைத்தான
மாலிருஞ்சோலை—திருமலையில்
பதி—திருப்பதியாகிற
அது—ப்ரஸித்தஸ்தலத்தை
ஏத்தி—ஸ்தோத்ரம்பண்ணி
எழுவதே—உச்ச்ரிதராகையே
பயன்—ப்ரயோஜநம்.

இதுவும் - நெஞ்சுநோக்கியுரைத்தல். * (௨)

ஆறு ;—(சதிரிளமடவார்) ப்ராக்ருதவிஷயங்களிலே ப்ராவண்யத்தைவிட்டு, ப்ரதிகூலஹ்ருதயபேதகமான திவ்யத்வநியையுடைத்

தான ஸ்ரீபாஞ்சஜந்யத்தை யேந்துகையாலே நிரவதிகமான அழகை யுடையனாய், அத்தாலே "அழகர்" என்னுந் திருநாமத்தையுடையனான எம்பெருமானுக்குக் கோயிலாய், பரிபூர்ண சந்த்ரமண்டலத்தாலே யலங்க்ருதமான ஶிகரங்களையுடைத்தான திருமாலிருஞ்சோலைப் பதியையேத்தியெழுங்கள்; அதுவே பரமப்ரயோஜநமென்கிறார். * (உ)

ஈடு; அவ;—(மூன்றாம்பாட்டு) உத்தேஶ்யத்துக் கிதெல்லாம் வேணுமோ, திருமலையோடுசேர்ந்த அயன்மலையையடைய வமையுமென்கிறார்.

பயனல்லசெய்து பயனில்லைநெஞ்சே *
புயல்மழைவண்ணர் புரிந்துறைகோயில் *
மயல்மிகுபொழில்சூழ் மாலிருஞ்சோலை *
அயன்மலையடைவ தருமமே. (௩)

ப;—அநந்தரம், பரமோதாரன் வர்த்திக்கிற திருமலையோடுசேர்ந்த அயன்மலையை ப்ராபிக்கையே கார்யமென்கிறார்.

நெஞ்சே—நெஞ்சே
பயனல்ல-ப்ரயோஜந ஶூந்யமானவற்றை
செய்து—செய்து
பயன்—ப்ரயோஜநம்
இல்லை—இல்லை;
புயல்—தூறலுந்துளியுமான
மழை—காளமேகம்போலே
வண்ணர்-ஜலஸ்தலவிபாகமற வர்ஷிக்கும் ஸ்வபாவத்தையுடையவர்
புரிந்து—அபிமுகனாய்க்கொண்டு
உறை—நித்யவாஸம்பண்ணுகிற
கோயில்—வாஸஸ்தாநமாய்
மயல்மிகு—கண்டார்நெஞ்சு கலங்கும்படி தர்ஶநீயமான
பொழில்—பொழில்
சூழ்—சூழ்ந்த
மாலிருஞ்சோலை-திருமலையினுடைய
அயல்—அருகின
மலை—மலையை
அடைவததுவே—அடைகையாகிற வதுவே
கருமம்-கர்த்தவ்யம்-ஸ்வரூபப்ராப்தம்.

ஆறு;—(பயனல்ல) ப்ரயோஜந ஶூந்யமாயிருந்த செயல்களைச்செய்து ஒரு ப்ரயோஜநமில்லை நெஞ்சே; ஆதலால் அவற்றைத் தவிர்த்து ஆஶ்ரிதர்க்கு ஆத்மதாநம்பண்ணிக்கொண்டு நிற்கிறகோயிலாய், தன்னுடைய போக்யதையாலே ப்ரவிஷ்டரை யுந்மதிப்பியாநின்ற பொழில்களையுடைத்தான மாலிருஞ்சோலையினுடைய அயன்மலையடைவது; அதுவே நமக்குப் பரமஹிதமென்கிறார். (௩)

ஈடு ; அவ ;—கர்மபந்தத்தைப் போக்கி ஆஸ்ரிதரானவர்க ளடிமைசெய்து வாழுகைக் கிடாம்படி ஸர்வேஸ்வரன் வர்த்திக்கிற திருமலையை யாஸ்ரயிக்கையே ஸத்ருஸமென்கிறார்.

கருமவன்பாசங் கழித்துழன்றுய்யவே *
பெருமலையெடுத்தான் பீடுறைகோயில் *
வருமழைதவழும் மாலிருஞ்சோலைத் *
திருமலையதுவே யடைவதுதிறமே. (ச)

ப ;—அநந்தரம், ரக்ஷகனானவன் வர்த்திக்கிற பெரிய பொழில்சூழ்ந்த திருமலையை யாஸ்ரயிக்குமதுவே செய்யக்கடவபடி யென்கிறார்.

கருமம்—பந்தகமானகர்மங்களாகிற
வன்—கழற்றவரிய
பாசம்—பாசங்களை
கழித்து—கழற்றி
உழன்று — அடிமைசெய்து வ்யாபரித்து
உய்யவே — சேதநருஜ்ஜீவிக்கைக்காகவே (ஆர்த்தமான கோபகோபீ ஜநங்களுடையத ஆர்த்திதீரும்படி)
பெரு—பெரிய
மலை—மலையை
எடுத்தான்—எடுத்துரக்ஷித்தவன்
பீடு—தன்னுடையரக்ஷணைஸ்வர்யம்
உறை—விளங்கும்படி நித்யவாஸம் பண்ணுகிற
கோயில்—ஸ்தாநமாய்
வரு—வர்ஷோந்முகமாய்வருகிற
மழை—மேகங்கள்
தவழும்—தவழும்படி
மால்—மிகவுமுயர்ந்து
இரும்—பரந்த
சோலை—சோலையையுடைத்தான
திருமலையதுவே—திருமலைதன்னையே
அடைவதே—அடைவதே
திறம்—செய்யும்படி.

மால் - உயர்த்தி. இருமை - பரப்பு. மாலிருஞ்சோலைத் திருமலையென்கையாலே - திருமலையிற்சோலையினுடைய ப்ராப்யதை தோற்றுகிறது. (ச)

ஆறு ;—(கருமம்) நிரஸ்தப்ரதிபந்தகராய்க்கொண்டு தன் திருவடிகளிலே நாமடிமைசெய்து உஜ்ஜீவிக்கைக்காகவே பரம காருணிகனானதான் வந்துறைகின்ற ஸமஸ்த ஸந்தாபநாஸகமான திருமலையையடைகையே அடிமைசெய்கைக்கு உபாயமென்கிறார். ... (ச)

ஈடு ; அவ ;—திருமலைக்குப் புறம்பான மலையைப்ராபிக்கையே நல்விரகென்கிறார்.

திறமுடைவலத்தால் தீவினைபெருக்காது *
அறமுயலாழிப்படை யவன்கோயில் *
மறுவில்வண்சுனைசூழ் மாலிருஞ்சோலைப் *
புறமலைசாரப்போவது கிறியே. (ரு)

ப ;—அநந்தரம், ரக்ஷணோத்யுக்தமான திருவாழியை யுடையவன் வர்த்திக்கிற திருமலையின் புறமலையைக்கிட்டப்போவது நல்விரகென்கிறார்.

திறமுடை—நாநாவிதமான
வலத்தால் — பலங்களாலே,
(அக்ருதயகாருதிகளான)
தீ—கொடிய
வினை—பாபங்களை
பெருக்காது—வர்த்திப்பியாதே,
அறம்—ஆஶ்ரிதரக்ஷணமாகிற தர்மத்திலே
முயல்—உத்யோகத்தையுடைய
ஆழி—திருவாழியை
படையவன் — ஆயுதமாக வுடையவனுடைய
கோயில்—வாஸஸ்தாநமாய்
மறு — ஶைவலகர்த்தமாதிகளாகிற களங்கம்
இல்—அற்று
வண்—கிட்டினார்க்கு ஸர்வப்ரகாரோபஜீவ்யமான
சுனை—சுனைகளாலே
சூழ்—சூழப்பட்ட
மாலிருஞ்சோலை—திருமலையின்
புறமலை—புறமலையை
சார—கிட்ட
போவது—போகிறவது
கிறி—நல்விரகு.

கிட்டுமதிலும் கிட்டப்ரவர்த்திக்குமது நல் விரகென்று கருத்து. இப்பாட்டளவும் - உபதேசத்தை நெஞ்சோடே கூட்டி, மேல் - பிறரைக்குறித்து உபதேசிக்கிறார். ... ... (ரு)

ஆறு ;—(திறமுடை) விரகாலும் பலத்தாலும் தீவினைபெருக்காதே, ஆஶ்ரிதரக்ஷணைக ஸ்வபாவனை திருவாழியை திவ்யாயுதமாக வுடையவனானவன் நின்றருளுகிற, நிர்மலமாய் ஸர்வ போக்யமாயிருந்த சுனைகளையுடைத்தான மாலிருஞ் சோலைமலையினுடைய புறமலை சாரப்போவது பரமப்ராப்யமென்கிறார். ... ... (ரு)

ஈடு ; அவ ; — திருமலைக்குப் போம் மார்க்கசிந்தை பண்ணுமிதுவே இவ்வாத்மாவுக்கு நல்லதென்கிறார்.

கிறியெனநினைமின் கீழ்மைசெய்யாதே *
உறியமர்வெண்ணெ யுண்டவன்கோயில் *
மறியொடுபிணைசேர் மாலிருஞ்சோலை *
நெறிபடவதுவே நினைவதுநலமே. (சு)

ப ;—அநந்தரம், ஆஶ்ரித வ்யாமுக்தன் வர்த்திக்கிற திருமலைக்குப்போகிற வழியை யுட்பட நினைக்குமதுவே நன்மையென்கிறார்.

கீழ்மை—விஷயாந்தரங்களை நோக்கிப் போக நினைக்கும் நீசதையை
செய்யாதே—பண்ணாதே (இத்தை)
கிறி—நல்விரகு
என—என்று
நினைமின்—நினையுங்கோள்; (எதென்னில்)
உறி—உறியிலே
அமர்—பொருந்தச் சேமித்துவைத்த
வெண்ணெய்—வெண்ணெயை
உண்டவன்—அமுதுசெய்த க்ருஷ்ணனுடைய
கோயில்—கோயிலாய்
மறியொடு — தன்னுடைய கன்றுகளோடேகூட
பிணை—மான்பேடைகள்
சேர்—சேருகிற
மாலிருஞ்சோலை—திருமலையினுடைய
நெறி—வழியிலே
பட—உட்படவேணுமென்கிற
அதுவே—அத்தையே
நினைவது—நினைக்கை
நலம்—புருஷார்த்தம்.

மறி - குட்டி. பிணை - மான்பேடை. (௬)

ஆறு ;—(கிறியென) இத்தையே பரமப்ராப்யமென்று நினையுங்கள், வேறொன்றை ப்ராப்யமென்று நினையாதே; உறியமர் வெண்ணெயுண்டவன் அச்சுவடழியாமே புகுந்து நின்றருளுகிற ஸர்வ போக்யமான திருமலையை அநந்ய ப்ரயோஜநராய்க்கொண்டு நினைக்குமதுவே ப்ராப்யமென்கிறார். ... ... (௬)

ஈடு ; அவ—திருமலையைச் சென்று கிட்டி நிரந்தரவாஸம் பண்ணுகையே இவ்வாத்மாவுக்கு வெற்றியென்கிறார்.

நலமெனநினைமின் நரகழுந்தாதே *
நிலமுனமிடந்தான் நீடுறைகோயில் *
மலமறுமதிசேர் மாலிருஞ்சோலை *
வலமுறையெய்தி மருவுதல்வலமே. (௭)

ப ;—அநந்தரம், ப்ரளயாபத்ஸகன் வர்த்திக்கிற திருமலையிலாநுகூல்யமே ப்ரபலமென்கிறார்.

(பஹிஷ்டராய்,)
நரகு — ஸம்ஸாரநிரயத்தில்
அழுந்தாதே—அழுந்தாதே, (இத்தை
நலம்—பரமப்ரயோஜநம்
என—என்று
நினைமின்—புத்திபண்ணுங்கோள்;
முனம்—ப்ரளயங்கொண்ட முற்காலத்திலே

நிலம்—பூமியை
இடந்தான்—வராஹவேஷத்தைக் கொண்டு இடந்தெடுத்தவன்
நீடுறை—நித்யவாஸம்பண்ணுகிற
கோயில்—கோயிலாய்
மலமறு - சிகரங்களிலே தேய்கையாலே களங்கரஹிதனான
மதி—சந்த்ரன்
சேர்—பொருந்துகிற
மாலிருஞ்சோலை—திருமலையை
முறை—சேஷசேஷி பாவமாகிற முறைப்பாட்டாலுள்ள
வலம்—ஆநுகூல்யத்தை
எய்தி—பெற்று
மருவுதலே—பொருந்துகையே
வலம்—பலோத்தரம்.

ஆறு ; — (நலம்) இதுவே ப்ராப்யமென்று நினையுங்கள், வேறொன்றை ப்ராப்யமாக நினையாதே ; நிலமுனமிடந்தான் என்றைக்கும் தனக்குக் கோயிலாகக்கொண்ட, பரமபுருஷ நிர்மலஜ்ஞாந ஜநகமான திருமலையை அநந்ய ப்ரயோஜநராய்க்கொண்டு வலம் செய்து மருவுங்கள் ; இதுவே பரம ப்ராப்யமென்கிறார். (எ)

ஈடு ; அவ—திருமலையை நிரந்தரமாக வலஞ்செய்கையே வழக்கென்கிறார்.

வலஞ்செய்துவைகல் வலங்கழியாதே *
வலஞ்செய்யுமாய மாயவன்கோயில் *
வலஞ்செய்யும்வானோர் மாலிருஞ்சோலை *
வலஞ்செய்துநாளும் மருவுதல்வழக்கே. (அ)

ப ;—அநந்தரம், ஆஶ்ரிதாநுகூலனான க்ருஷ்ணன் வர்த்திக்கிற திருமலையிலே நிரந்தராநுகூல வ்ருத்தியே ஸ்வரூபப்ராப்தமென்கிறார்,

(காரணங்களுக்கு)
வலம்—பலத்தை
செய்து—உண்டாக்கி
வைகல்—நிரந்தரமாக
வலம்—அந்தபலத்தை
கழியாதே—இதரவிஷயமாக்கிக்கெடாதே
வலம்—ஆஶ்ரிதர்க்கு பவ்யதையாகிற ஆநுகூல்யத்தை
செய்யும்—பண்ணும்
ஆயன்—க்ருஷ்ணனான
மாயவன்—ஆஶ்சர்யபூதனுடைய
கோயில்—கோயிலான
வானோர்—பரமபதவாஸிகள்
வலம்—அநுகூலவ்ருத்தி
செய்யும்—பண்ணும்
மாலிருஞ்சோலை—திருமலையைக் குறித்து
வலம்—ப்ரதக்ஷிணாத்யநுகூல வ்ருத்தியை
செய்து—பண்ணி
நாளும்—நிரந்தரம்
மருவுதல்—ஸம்ஶ்லேஷம்பண்ணுகை
வழக்கு—ந்யாயம். (அ)

ஆறு ;—(வலம்செய்து) ஹேயவிஷயங்களிலே விநியோகித்தறுமந்த பலத்தைப்போக்காதே, ஆஶ்சர்யபூதனும் ஆஶ்ரித ஸுலபனுமிருந்த எம்பெருமானும் * அயர்வறு மமரர்களும் வலம்செய்து கொண்டநுபவிக்கிற திருமாலிருஞ் சோலைமலையை வலம்செய்து நாளும் மருவுகை வழக்காவதென்கிறார். ... ... (அ)

ஈடு ; அவ—" திருமலையைத்தொழுவோம்" என்றத்யவஸித்து நினைக்கை யமையும் விஜயஹேதுவென்கிறார்.

வழக்கெனநினைமின் வல்வினைமூழ்காது *
அழக்கொடியட்டா னமர்பெருங்கோயில் *
மழக்களிற்றினஞ்சேர் மாலிருஞ்சோலை *
தொழக்கருதுவதே துணிவதுசூதே. (கூ)

ப ;—அநந்தரம், பூதநாநிரஸநம்பண்ணினவன் வர்த்திக்கிற திருமலையைத் தொழவேணுமென்கிற நினைவில்துணிவு வெற்றிக்கடியென்கிறார்.

வல்—கடக்கவரிதாம்படி ப்ரபலமான
வினை—பாபங்களிலே
மூழ்காது—முழுகாதே
வழக்கு—இது ஸ்வரூபாநுரூபம்
என—என்று
நினைமின்—நினையுங்கோள்;
அழம்—பேயான
கொடி—பெண்ணை
அட்டான்—நமிப்பித்தவன்
அமர்—பொருந்திவர்த்திக்கும்
பெரு—அஸங்குசிதமான
கோயில்—கோயிலாய்
மழ—கன்றுகளான
களிற்றினம்—ஆனைத்திரள்
சேர்—சேருகிற
மாலிருஞ்சோலை—திருமலையை
தொழ—தொழவேணுமென்கிற
கருதுவதே—நினைவிலே
துணிவதே—துணிகையே
சூது—ஸம்ஸாரத்தை வெல்லுகைக்கு ஹேது

அழம் - பேய். கொடி - பெண். (கூ)

ஆறு ; (வழக்கென) வேறொன்றை யுக்தமென்று பாராதே இதுவே யுக்தமென்றுபார்த்து, ஆஶ்ரித விரோதி நிரஸநஸ்வபாவனுயிருந்தவனுடைய அபிமதமான திவ்யஸ்தாநமாய், ஸர்வாத்ம போக்யமாயிருந்த திருமலையைத் தொழுவோமென்றுண்டான ஸங்கல்போத்யோக மாத்ரத்தைப் பண்ணுகை அவனுக் கடிமைசெய்கைக்கு நல்ல வுபாயமென்கிறார். ... ... (கூ)

சேர்ந்த அயன்மலை யனைமயுமென்றார்; நாலாம்பாட்டில் - "திரிதந் தாகிலும்" என்கிறபடியே, திரியவும் திருமலையை யாஶ்ரயிக்கச் சொன்னார்; அஞ்சாம்பாட்டில்-அத்தோடுசேர்ந்த புறமலையை யாஶ்ரயியுங்கோளென்றார்; ஆறாம்பாட்டில் - திருமலைக்குப்போம் மார்க்க சிந்தைபண்ண வமையுமென்றார்; ஏழாம்பாட்டில் - அவ்வழியோடு சேர்ந்த திருமலையை யாஶ்ரயிக்கச்சொன்னார்; எட்டாம்பாட்டில் - நித்யஸூரிகளுக்குங்கூட ப்ராப்யமாகையாலே திருமலையே பரமப்ராப்யமென்றார்; ஒன்பதாம் பாட்டில் - "திருமலையைத் தொழக்கடவோம்" என்கிறதுணிவே வேண்டுவதென்றார்; பத்தாம்பாட்டில் - எல்லாப்படியாலும் திருமலையாழ்வாரை யாஶ்ரயிக்கையே புருஷார்த்தமென்று தலைக்கட்டினார்; நிகமத்தில் - இது கற்றார்க்குப் பலமருளிச்செய்தார். ... ... *

முதற்றிருவாய்மொழியாலே - "மணியைவானவர் கண்ணனைத் தன்னதோரணியை" என்ற - விலக்ஷணவிஷய மாகையாலே, பிரிந்தார் கண்ணுஞ்சுழலை யிடப்பண்ணுமென்றார்; இரண்டாம் திருவாய்மொழியாலே - அவ்வோபாதிகூடினாலும் மறப்பிக்குமென்றார்; மூன்றாந்திருவாய்மொழியாலே - கூடினவிஷயந்தான் நிரதிஶய ஸுகரூபமென்றார்; நாலாந் திருவாய்மொழியாலே - அவ்விஷயத்துக்கு தேஶிகரோடு அநுபவிக்கப்பெறாமையாலே மோஹங்கதரானார்; அஞ்சாந் திருவாய்மொழியாலே - தாமாசைப் பட்டபடியே வந்துகலந்தபடிசொன்னார்; ஆறாந்திருவாய்மொழியாலே - தம்மிழவுக்கும் அவனதிஶங்கை பண்ணுமென்றார்; ஏழாந்திருவாய்மொழியாலே - தம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகளையும் விஷயீகரித்தபடி சொன்னார்; எட்டாந்திருவாய்மொழியாலே - அவனுடைய மோக்ஷப்ரதத்வத்தை யருளிச்செய்தார்; ஒன்பதாந்திருவாய்மொழியாலே-ப்ராப்ய நிஷ்கர்ஷம்பண்ணினார்; பத்தாந் திருவாய்மொழியாலே - நிஷ்கர்ஷித்த ப்ராப்யத்தை லபிக்கைக்குத் திருமலையாழ்வாரை யாஶ்ரயிக்கச்சொன்னார்.

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளேசரணம்.

திருவாய்மொழி இரண்டாம்பத்தின்

வ்யாக்யாநங்கள் முற்றுபெற்றன.